# கம்பராமாயணமும் இராம சரிதமும்

## ஓர் ஒப்பாய்வு





கம்பர்



சீராமகவி

டாக்டர். ச. மீனாட்சிநாத பிள்ளை

# கம்பராமாயணமும் இராமசரிதமும் ஓர் ஒப்பாய்வு

## (யுத்த காண்டம்)

A Compartive Study of Kambaramayanam and Ramacharitham (Yuddha Kandom)


டாக்டர். ச. மீனாட்சிநாத பிள்ளை
எம்.ஏ; பி.எச்.டி.
தமிழ்ப்பேராசிரியர், திருவனந்தபுரம்.

எம். என். பதிப்பகம்
T.C. 21/436, சாந்தி நிலையம்
நெடுங்காடு, கரமனை
திருவனந்தபுரம் – 62500002.


# பதிப்பு விவரங்கள்


| | | |
|---|---|---|
| நூல் பெயர் | : | கம்பராமாயணமும் இராமசரிதமும் ஓர் ஒப்பாய்வு (யுத்த காண்டம்) |
| ஆசிரியர் | : | முனைவர். ச. மீனாட்சிநாத பிள்ளை |
| பதிப்புரிமை | : | எஸ். பகவதியம்மாள்<br>என்.எம். பதிப்பகம்<br>T.C. 21/436, சாந்தி நிலையம்<br>நெடுங்காடு ரோடு, கரமனை<br>திருவனந்தபுரம் – 695 002. |
| நூலின் அளவு | : | டெம்மி $^{1}/_{8}$ |
| தாள் | : | ஷேசாய் வெள்ளைத்தாள் |
| எழுத்து | : | 10 புள்ளிகள் |
| பதிப்பு | : | வாசகர் பதிப்பு, ஏப்ரல் 2002 |
| படிகள் | : | 1000 |
| பக்கங்கள் | : | 183 |
| வெளியிடுவோர் | : | எம். என். பதிப்பகம் |
| பொருள் | : | காப்பிய ஒப்பீடு |
| விலை | : | ரூ. 40 |
| விற்பனை | : | எம். என். பதிப்பகத்தார் |
| அட்டை ஓவியம் | : | ஓவியர் திரு. அடைக்கலம்<br>தைக்காடு, திருவனந்தபுரம். |
| அச்சிட்டோர் | | R.M.K. பிரிண்டோ கிராப்ஸ்,<br>நாகர்கோவில். போன்: 226316. |

ஸ்ரீவேங்கடேசாய நம



The Book is published with
the Financial Assistance of
**Tirumala Tirupathi Devasthanams**
under their Scheme
"Aid to Publish Religious Books".



# பொருளடக்கம்


I. முகவுரை

II. வாழ்த்துரை

III. நூல் பற்றிப் பேரறிஞர்கள் கருத்துகள்

| | | பக்கம் |
|---|---|---|
| 1. | ஒப்பாய்வின் முன்னோடிகள் | 1 |
| 2. | கம்பனும் சீராமகவியும் | 8 |
| 3. | இராமகதையின் பரப்பு | 18 |
| 4. | இராமகதை அமைப்பும் போக்கும் | 25 |
| 5. | காப்பியங்களில் யாப்பமைதி | 65 |
| 6. | போர்த்தலைமைப் பாத்திரங்கள் | 77 |
| 7. | போர் நெறிகளும் படைக்கலங்களும் | 137 |
| | முடிவுரை: | 155 |
| I. | சுருக்கக் குறியீட்டு விளக்கம் | 166 |
| II. | துணைநூற் பட்டியல் | 167 |


என்னை நெறிப்படுத்திய என் பெற்றோருக்கும் பயிற்றுவித்த ஆசிரியப் பெருமக்களுக்கும் இந்நூல் காணிக்கை

# முகவுரை

"எத்திக்கும் போற்றும் இராமன் திருக்கதையைத்
தித்திக்கும் செந்தமிழில் செய்தளித்து – நித்தமுமே
அம்புவியில் மக்கள் அமுதம் அருந்தவைத்த
கம்பன் கவியே கவி" – எனக் கவிமணி

கம்பராமாயணத்தைப் புகழ்ந்து பாடுவார். கம்பன், வான்மீகி வழிகாட்டத் தீந்தமிழில் சொல்லை இசைத்துச் சுந்தரமாம் ஒரு காப்பியம் தந்தான். எந்தக் காப்பியத்துடனும் ஒப்பிட்டுப் பார்ப்பதற்கான தகுதியும் திறனும், கம்பன் படைத்த "இராமாவதார"த்துக்கு உண்டு. மலையாள மொழியில் முதல் நூலாகக் கருதப்படும் சீராமன் என்னும் சிற்றரசன் படைத்த இராமசரிதம் பழமையானது; சிறப்புடையது; பண்டைய மலையாள மொழி நடையில் எழுதப்பட்டது. கம்பன் காப்பியத்தைப் பிறமொழி காப்பியங்களுடன் ஒப்பிட்டுக் கம்பன் ஏற்றத்தை மதிப்பிட்டோர் பலர். ஆனால், திராவிட மொழி இராமாயணங்களுடன் ஒப்பிட்டு ஆய்வு செய்தோர் ஒரு சிலரே.

கேரளப் பல்கலைக்கழகத் தமிழ்த்துறைப் பேராசிரியராகப் பணிபுரிந்த டாக்டர் மா. இளைய பெருமாள் என் நண்பர், கேரள அரசுப்பாடநூல் குழுவில் ஒன்றாகப் பணிபுரிந்தவர். அக்காலத்தே அவர் மலையாள இராமசரித நூலைப் பதிப்பிக்க மலையாளப் பேராசிரியர் இளங்குளம் குஞ்ஞன் பிள்ளைக்கு உதவிக் கொண்டிருந்தார். ஏற்கெனவே மலையாளம் கற்ற எனக்கு இராமசரிதத்தைப் படிக்க அக்காலக் கட்டம் வாய்ப்பாயிற்று. நண்பர், கம்பராமாயணத்தையும் இராமசரிதத்தையும் ஒப்பாய்வு செய்ய என்னை வேண்டிக் கொண்டார். எண்பதுகளில் திருவனந்தபுரம் அரசு ஆசிரியப் பயிற்சிக் கல்லூரியில் பணிபுரிந்த போது அதற்கான சூழ்நிலை உருவாயிற்று. நண்பரின் நெறிப்படுத்தலில் ஆய்வை மேற்கொண்டேன். ஆய்வுப் பணியை நிறைவு செய்த காலை, நண்பர் இயற்கை எய்தினார். தொடர்ந்து அங்குப் பணியாற்றிய டாக்டர் சு. சுப்பிரமணி ஆய்வை முடித்துத் தர வேண்டினார். நண்பர்களான டாக்டர். கு. குற்றாலம்பிள்ளை, டாக்டர் சி. சுப்பிரமணிய பிள்ளை ஆகியோர் ஆர்வமூட்டினர். அவர்களுக்கு என் நன்றி.

1992 இல் ஆய்வேட்டைப் பல்கலைக் கழகத்துக்கு அளிக்க முடிந்தது. முனைவர் பட்டம் கிடைத்தது. ஒய்வு பெற்றபின் கேரளத்தில் புதிதாகத் துவங்கப்பட்ட ஸ்ரீசங்கராச்சாரியா வடமொழிப் பல்கலைக்கழகம் மூன்றாண்டுக்கு ஒப்பந்த அடிப்படையில் தமிழ்ப் பேராசிரியராகவும் துறைத் தலைவராகவும் பணிபுரிய என்னை வேண்டியது. அதன் பயனாக அறுவரை முனைவர் பட்டத்துக்கு நெறிப்படுத்த இயன்றது. ஐவர் முனைவர் பட்டம் பெற்றனர்.

ஆய்வேட்டை நூலாக்கக் கருதி, திருப்பதி தேவதானத்தாரிடம் நிதி உதவி வேண்டியிருந்தேன். பல மாதங்களுக்குப் பின்னர், ஆய்வேட்டை, வாசகர் படிப்பதற்கு ஏற்றவாறு, பல பக்கங்களை விடுத்தும், சிலவற்றைச் சுருக்கியும் அச்சிட வேண்டினர். அதன்படிச் சில கட்டுரைகளைப் பகுத்தும், சில கட்டுரைகளைச் சுருக்கியும், சிலவற்றை விடுத்தும் பொருளடக்கத்தில் கூறியவாறு மாற்றி இந்நூலை அச்சாக்கியுள்ளேன். என்மொழி நடை மிக எளிது. கவிமணி, மு.வ. போன்ற அறிஞர்கள் காட்டிய நெறி. வாசகர்கள் எளிதில் படித்துப் புரிந்து கொள்ளுவார்கள் என நம்புகிறேன்.

ஆய்வேட்டைப் படித்து ஆய்ந்த பேராசிரியர் டாக்டர். வ.அய். சுப்பிரமணியம், டாக்டர். புதுச்சேரி இராமச்சந்திரன், அறிவியல் அறிஞர் அப்துல்கலாம், முதலியோர் கருத்துரைகள் வழங்கியுள்ளனர். டாக்டர் கி. நாச்சிமுத்து அவர்கள் வாழ்த்துரை தந்தார். அவற்றை வாசகர்கள் பார்வைக்குத் தனியே தந்துள்ளேன். அறிஞர் பெருமக்களுக்கு என் நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன். இந்நூலைப் படைக்கும் காலத்தும் அச்சேற்றும் காலத்தும் உதவிய அன்பர்கள் டாக்டர். தே. வேலப்பன், டாக்டர் மா. நயினார், டாக்டர். சி. சுப்பிரமணியன் ஆகியோருக்குக் கடப்பட்டுள்ளேன்.

என்னைப் பற்றிய குறிப்பு ஒன்றை நூலாசிரியர் அறிமுகம் என்ற நிலையில் எழுதிய அன்பரும், என் வழிகாட்டலில் முனைவர் பட்டம் பெற்றவருமான டாக்டர். வை. கிருஷ்ணமூர்த்தி I.P.S. (ஓய்வு) அவர்களுக்கும் என் நன்றி உரியது.

ஆய்வேட்டை வெளியிட ஒப்புதலளித்தக் கேரளப் பல்கலைக்கழகத்தாருக்கும், நிதி உதவி வழங்கிய திருமலை திருப்பதி தேவதானத்தாருக்கும், அச்சிடவும் கட்டமைத்து வெளியிட உதவியவருமான நாகர்கோவில் வருண் பதிப்பகத்தாருக்கும் என் நன்றி உரித்தாகுக.

இது போன்ற சமய இலக்கியங்களைப் பிறமொழி இலக்கியங்களுடன் ஒப்பாய்வு செய்தும், மொழிபெயர்த்தும் வெளிக்கொணர்ந்தால் தமிழுலகம் பொலிவு பெறும். இப்பணி மேலும் சிறக்க திருவேங்கடமுடையான் திருவருள் முன்னிற்பதாக என உளங்கனிந்து வணங்கி வாழ்த்துகிறேன்.

திருவனந்தபுரம்,
25.3.2002

ச. மீனாட்சிநாதபிள்ளை
தமிழ்ப் பேராசிரியர் (ஓய்வு)

**டாக்டர். கி. நாச்சிமுத்து**
பேராசிரியர், தலைவர், கீழைக்கலைப்புலம்.
தமிழ்த்துறை, கேரளப்பல்கலைக்கழகம்
திருவனந்தபுரம்.

# வாழ்த்துரை

கம்பராமாயணமும் – இராமசரிதமும் ஓர் ஒப்பாய்வு என்ற இந்நூல், கேரளத்திலுள்ள சமஸ்கிருதப் பல்கலைக் கழகத்தில் உள்ள, தமிழ்த்துறையில் தலைவராக இருந்து ஓய்வு பெற்ற பேராசிரியர் முனைவர். ச. மீனாட்சிநாத பிள்ளை அவர்கள் தம் முனைவர் பட்டத்திற்கு அளித்த ஆய்வேட்டின் அடிப்படையில் அமைந்ததாகும்.

பேராசிரியர் மீனாட்சிநாதன் அவர்கள் இந்நூலில் ஒப்பாய்வுகளில் முன்னோடிகளைப் பற்றியும், கம்பனும் இராமசரித ஆசிரியரான சீராமகவியும் வாழ்ந்த காலம், சூழல் முதலியன பற்றியும் ஆராய்ந்து விட்டு, இரண்டு காவியங்களின் பரப்பு, போக்கு, பாத்திரங்கள் இவை பற்றி வால்மீகத்தையும் முன்னிறுத்தி ஒரு முக்கோண ஆய்வு செய்கிறார். இரு காவியங்களின் பரப்பும் ஒன்று படுவது யுத்த காண்டத்திலாதலால், போர் நெறிகளையும் படைக்கலங்களையும் பற்றிய ஒரு சிறப்புப் பார்வையையும் வெளியிடுகிறார். தமிழ்ப்பாட்டு மரபை அடியொற்றிச் செல்லும் இராமசரிதம், தமிழ்ப் புறத்திணை மரபை வெளியிடவில்லை என்ற கருத்தை ஆசிரியர் கூறுவது கருதத்தக்கது. புறப்பொருள் வெண்பாமாலை எழுதிய ஐயனாரிதனாரைப் போலவே இராமசரித ஆசிரியரான சீராம கவியும் ஒரு சேரமன்னராவர் என்பதை நினைக்கும் போது இது வியப்பாக உள்ளது. ஆசிரியரின் ஒப்பீட்டு நெறிமுறைகள் தமிழ்–மலையாள இலக்கிய வரலாற்றாராய்ச்சியாளருக்கு ஒரு நல் விருந்தாகும். தமிழ்–மாலையாள உடன் பிறப்பு மொழி இலக்கியங்களின் இரத்த உறவை விளக்கிக் கொள்ளப் பேராசிரியர் ச. மீனாட்சிநாதன் ஆய்வு துணை செய்கிறது. அவர்கள் இன்னும் இந்த ஒப்பாய்வைச் சிறுசிறு இலக்கியரசனைக் கட்டுரைகளாகவும் எழுதி வெளியிட வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன். அத்துடன் இராமசரிதத் தமிழ்ப் பெயர்ப்பை வெளியிடவும் ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

பேராசிரியர் ச. மீனாட்சிநாத பிள்ளை அவர்கள் கேரளத்தில் பள்ளி, கல்லூரி, பல்கலைக்கழகம் என்று, கல்வித்துறையின் மூன்று மட்டங்களிலும் பணியாற்றிப் பழுத்த அனுபவச் செல்வமும் ஆய்வுப் புலமையும் மிக்கவர். தமிழ் மொழி இலக்கியப் பணியில் சோர்வுறாது இடையறாது பணியாற்றுபவர். அவர் நிறை நலத்துடன் நீண்ட நாள் வாழ்ந்து இன்னும் பல அரியநூல்களை வெளியிட இறையருள் கூட்டட்டும் என்று இறைஞ்சி வணங்குகிறேன். வாழ்க அவர்! வளர்க அவர் தமிழ்த் தொண்டு!

6.3.3003 — சி. நாச்சிமுத்து

## நூல் பற்றிப் பேரறிஞர்கள் கருத்துரைகள்

**1. டாக்டர் வ. அய். சுப்பிரமணியம் M.A., Ph.D., D.Lit.**
முன்னாள் துணைவேந்தர், தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சை.
மாண்புமிகு இயக்குநர், திராவிட மொழி, தேசியப் பள்ளி,
திருவனந்தபுரம். கேரள மாநிலம்.

கம்பராமாயணமும் இராமசரிதமும் – ஓர் ஒப்பாய்வு (யுத்த காண்டம்) என்னும் முனைவர் பட்ட ஆய்வேட்டைப் பார்வையிட்டேன். பேராசிரியர் ச. மீனாட்சிநாத பிள்ளையின் இந்த ஒப்பாய்வு நூல், நுணுக்கமானது; பெருமுயற்சியால் உருவானது என்று கூற எவரும் தயங்க மாட்டார்கள். ஒப்பாய்வின் முன்னோடிகள், கம்பனும் சீராம கவியும், இராமகதையின் பரப்பு, காப்பியங்களின் யாப்பமைதி, போர் தலைமைப் பாத்திரங்கள், போர் நெறிகளும் படைக்கலங்களும், முடிவுரை– என்ற தலைப்புகளில் நூல் அமைந்துள்ளது. கம்பனைப் பின்பற்றி மலையாள இராம சரிதம் பல பகுதிகளில் அமையவில்லை என்ற ஆசிரியர் கருத்து குறிப்பிடத்தக்கது. யுத்த காண்டப் பொருளையும், கதாபாத்திரங்களையும் மிக விரிவாக மீனாட்சிநாதன் கூறுகிறார். ஒப்புமைச் செய்திகளை ஒன்றுவிடாமல் தொகுத்திருப்பது பாராட்டத் தக்கது. செய்யுள் ஒப்புமையும் வேறுபாடும் கூறியுள்ளது போற்றத்தக்கது. போர் நெறிகளை வகை தொகை செய்து தருகிறார். அவர் முயற்சியைப் பாராட்டுகிறேன்.

**9.12.1999** **வ. அய். சுப்பிரமணியம்**

**2. டாக்டர். புதுசேரி இராமச்சந்திரன் M.A.Ph.D.,**
முன்னாள் மலையாளத்துறைத் தலைவர்,
கேரளப் பல்கலைக் கழகம், திருவனந்தபுரம்.

பேராசிரியர் ச. மீனாட்சிநாத பிள்ளையின் கம்பராமாயணமும் இராமசரிதமும் – ஓர் ஒப்பாய்வு என்னும் இந்நூல், தமிழ்–மலையாள இராமாயணங்களில் வந்துள்ளவற்றுள் மிக முக்கியமானதாகும். தமிழ்–மலையாளப் படைப்புகளை ஆங்கில மொழிப்படைப்புகளுடன் ஒப்பீடு செய்து, நூல்கள் பல வந்துள்ளன. ஆனால், தமிழ்–மலையாள இலக்கியங்களின் ஒப்பாய்வு மிகக் குறைவாகவே கேரளத்தில் நடைபெறுகிறது. கேரள நாட்டில் தமிழாய்வு சிறக்க 1944 ஆம் ஆண்டு, அன்றையத் திருவிதாங்கூர் பல்கலைக்கழகத்திற்கு வள்ளல் அழகப்பச் செட்டியார், ஒரு லட்சம் ரூபாயை நன்கொடை வழங்கினார். ஒரு கௌரவப் பேராசியரும், ஓர் உதவியாளரும் நியமிக்கப்பட்டனர். இராவ்பகதூர் மு. இராகவையங்கார், பேராசிரியர் எஸ். வையாபுரிப்பிள்ளை, டாக்டர். வ. அய். சுப்பிரமணியம் முதலியோர் முறையே பணியாற்றினர். பின்னவர் முயற்சியால் தமிழ்த்துறை உருவாயிற்று. சேரநாட்டுத் தமிழ் இலக்கியம்,

சேரர் பண்பாடு, கால ஆராய்ச்சி, மொழியாராய்ச்சி எனப் பலநிலைகளில் ஆய்வுகள் நடந்தேறின. டாக்டர். ச.வே. சுப்பிரமணியத்தின் பின்வந்த பேராசிரியர் மா. இளையபெருமாள், தொல்காப்பியம், நன்னூல், நேமிநாதம் ஆகிய நூல்களை மலையாள வடிவில் வெளியிட்டார். லீலா திலகம், கேரள பாணினியம் குண்டர்டின் மலையாள மொழி இலக்கணம் முதலியன தமிழில் மொழி பெயர்க்கப்பட்டன. இம்மொழி பெயர்ப்புப் பணியில் ச. மீனாட்சிநாதனின் பங்குக் குறிப்பிடத்தக்கது. இதன் பயனாக இலக்கிய ஒப்பியல் ஆய்வுக் கட்டுரைகள் மலர்ந்தன. பேராசிரியர் இளையபெருமாள் தன் நண்பரான பிள்ளைஅவர்களை இருமொழி காப்பிய ஆய்வுக்கு வழிகாட்டினார். கம்பராமாயணத்தையும் மலையாள முதல் நூலான இராம சரிதத்தையும் ஒப்பாய்வு செய்த பேராசிரியர் மீனாட்சிநாதன், தம்நூலைப் பொருளாய்வு, மொழியாய்வு என இருநிலைகளில் அமைத்திருப்பது சிறப்பிற்குரியதாகும். கி.பி. 12ம் நூற்றாண்டையக் கம்பராமாயணத்தையும், கி.பி. 13, 14 நூற்றாண்டைய இராமசரிதத்தையும், ஒப்பாய்வு செய்ய தமிழ் மலையாளப் புலமை உடையவருக்கே இயலும். பிள்ளையவர்கள் கதையில் ஒத்துச் செல்லும் இடங்களையும் வேறுபடும் இடங்களையும் கூறுவதுடன் வால்மீகியுடன் ஒப்பிடுகிறார். இரு கவிஞர்களும் கையாண்ட பாடல்களை அலகிட்டு அவை விருத்தப்பாவால் ஆனவை என்பதை வகை தொகை செய்வதுடன், ஒப்பீட்டுப் பட்டியல் ஒன்றையும் தருகிறார். போர்த்தலைமைப் பாத்திரங்களில் கம்பன் படைப்பு விரிவாகவும், சீராமகவி மிகச் சுருக்கமாகவும் முரணற்ற ஒருமைப் பாட்டுடன் செல்வதைப் புலப்படுத்துகிறார். போர்நெறிகளும் படைக்கலங்களும் என்ற தலைப்பில், போர்க் கருவிகளின் அமைப்பையும், செயலையும் வகைப்படுத்திக் காட்டுகிறார். இரு கவிஞர் படைப்புகளும் இங்கு வால்மீகியுடன் ஒத்தே அமைகின்றன என ஆய்வாளர் கருதுகிறார். தொகுப்புரையில் கம்பனும் சீராமகவியும் நாடு, மொழி, காலம், சூழலுக்கு ஏற்ப தத்தம் மரபுநிலைக்கு மாறாமல் நூலைப் படைத்துத் தம்மை இனங்காட்டிக் கொள்ளுகிறார்கள். பேராசிரியரது முயற்சியைப் பாராட்டுகிறேன். இவ்வாய்வு நூல் அப்படியே மலையாள மொழியிலும் மொழிபெயர்க்கப் படவேண்டும். இங்குப் பேராசிரியர் எஸ். வையாபுரிப்பிள்ளையின் திராவிட மொழி ஆராய்ச்சி பற்றிய கருத்துகள் நினைவு கூர்வதற்குரியதாகும். பேராசிரியர் பிள்ளையைப் போலுள்ள இருமொழி இலக்கிய அறிஞர்களின் தொண்டை ஒப்பாய்வுத் துறைக்குப் பயன்படுத்தலாம். இந்நூல் ஆய்வாளர்களுக்கும் வாசகர்களுக்கும் ஏற்ற நிலையில் அமைக்கப்பட்டுள்ளது. இது ஒரு பயனான நூல்.

10.12.1999

புதுசேரி இராமச்சந்திரன்
ராஜ்பவன், ஸ்ரீரங்கம்தெரு,
சாஸ்த மங்கலம், திருவனந்தபுரம்.

# 1. ஒப்பாய்வின் முன்னோடிகள்

**முன்னுரை:**

இராமாயணம் ஒரு பெருங்காப்பியம். இது, பல மொழிகளில் இயற்றப்பட்டிருக்கிறது. கம்பன், இதனை 'இராமாவதாரம்' என்ற பெயரால் தமிழில் படைத்தான். இது, கம்பராமாயணம் என்று அழைக்கப்படுகிறது. திராவிட மொழிக்குடும்பத்தில் தமிழும் மலையாளமும் இரட்டை மொழிகள். தமிழின் மிக நெருங்கிய அண்டைமொழியாகிய மலையாளத்தில் முதன் முதல் தோன்றிய நூல் 'இராமசரிதம்'. போர் நிகழ்ச்சிகளை விரித்துரைக்கும் நோக்குடன் 'சீராமன்' என்னும் வேணாட்டு அரசன், இதனைப் படைத்தான். இருவர்தம் படைப்புகளைப் பற்றிய ஒப்பாய்வு இங்கு நிகழ்த்தப்படுகிறது.

***நோக்கம்:***

ஏறத்தாழ ஒன்று அல்லது இரு நூற்றாண்டு கால இடைவெளியில் தோன்றியவைகளாகக் கருதப்படும் கம்பன் படைத்த இராமாயண யுத்த காண்டத்தையும், மலையாள ஆதிகவியாகக் கருதப்படும் சீராமன் படைத்த இராமசரிதத்தையும், ஒப்பிட்டு இவ்விருமொழி இலக்கியங்களின் பொதுமைக் கூறுகளையும், மாறுபாடுகளையும் இந்நூல் ஆராய்கிறது. இரு நூல்களிடையே மொழி வேறுபாடு இருப்பினும், கூறப்படும் கருத்துகளில் உறவு நிலை, தாக்கம் முதலியன இருக்க முடியும் என்பது இங்கு உணர்த்தப்படுகிறது. ஒப்பீட்டில் எந்த அளவில் ஒருமைப்பாடு உள்ளது என்றும் எந்த அளவில் வேறுபாடு உள்ளது என்றும் கண்டறிந்து, அவை மாறுபடுந் தன்மையினைச் சுட்டுகிறது இந்நூல். கதைப்போக்கில் மூல நூலோடு அவை மாறுபடுந் தன்மையையும், மாறுபட்ட இடங்களையும் வகைதொகை செய்து, அறிஞர்கள் எக்காலத்தினராயினும், எம்மொழியினராயினும், எவ்வினத்தவராயினும் கருத்தளவில் ஒன்றுபட்டவரே என்று நிறுவுவதும், வேறுபடும் இடங்களைச் சிறப்பாகச் சுட்டி அவற்றிற்கான காரணங்களை இயன்ற அளவு காண்பதும் இந்நூலின் நோக்கமாகும்.

'கம்பராமாயணமும் இராமசரிதமும்' - என்னும் இவ்வாய்வுநூல், கம்பன் படைத்த இராமாயணத்துள் அளவில் பெரியதான யுத்தகாண்டத்தையும் போர் நிகழ்ச்சிகளைப் பெரிதும் மையமாகக்கொண்டு ஆக்கப்பட்ட இராமசரிதத்தையும் அடிப்படையாகக் கொண்டது.

தமிழ் ஆய்வு நூல் வல்லார், கம்பராமாயணத்துள் யுத்த காண்டமே மிக மிடுக்கான காண்டம் என்பர். இராமபிரானுடைய

பெருமையை இராவணனுக்கு வற்புறுத்திக்காட்டி, அவன் உய்யுமாறு எடுத்துரைக்கும் நிகழ்ச்சிகளின் அமைவு, யுத்த காண்டப்பகுதியிலாகும். கம்பனைப் போல இராமசரித ஆசிரியன் கதை முழுவதையும் கூறாமல், யுத்தகாண்ட நிகழ்ச்சிகளைப் பெரிதும் விரிந்துரைக்கிறான். எனினும், இந்நூலில் ஆரண்ய, கிஷ்கிந்தா, சுந்தரகாண்ட நிகழ்ச்சிகள், அனுமனால் பரதனுக்கு மிகச்சுருக்கமாகக் கூறப்படுகின்றன. கம்பன், சீராமன் ஆகியோர் வாழ்ந்த காலச் சூழ்நிலைகள், இருவரையும் போர் நிகழ்ச்சிகளைச் சிறப்பாகப் படைக்க அடிகோலிற்று எனலாம்.

## *மேற்கோள் நூற்கள்:*

### (1) ***கம்பராமாயணம்*** (தமிழ்)

ஆய்வுக்குரிய அடிப்படைக் கருவிநூலாக, (1) ஸ்ரீகம்பராமாயணம், வை. மு. கோபாலகிருஷ்ணமாச்சாரியர் உரையுடன் யுத்தகாண்டம் தொகுதி I, II (1970, 1971) மேற்கொள்ளப் பட்டுள்ளது. மேற்கோளுக்காகக் காண்டம் படலம், பாட்டு எண்கள் இதிலிருந்து எடுத்தாளப்படுகிறது. (2) பாயிரம் மற்றும் கதைக் கருத்துகளையும் நிகழ்ச்சிகளையும் பொதுவாகத் திரட்டுவதற்காக, கம்பராமாயணம் - கம்பன் கழகம், சென்னை (1984) கையாளப்படுகிறது (3) கதை அமைப்பையும் போக்கையும் கருதற்பொருட்டு அண்ணாமலைப் பல்கலைக் கழகக் கம்பராமாயணம் - யுத்தகாண்டம் மேற்கொள்ளப்படுகிறது.

### (2) ***இராமசரிதம்*** (மலையாளம்)

(1) கேரள சாகித்ய அக்காடமி (1979) வெளியிட்டுள்ள பேராசிரியர் பி.வி. கிருஷ்ண நாயர் உரைக்குறிப்புகளுடன் ஆக்கப்பட்ட இராமசரிதம், கருவி நூலாகக் கொள்ளப்படுகிறது. 2 மேலும், அருஞ்சொற்பொருள், யாப்பமைதி இவற்றை மேற்கொள்ளச் சிறப்பு நோக்கி, (2) பேராசிரியர் இளங்குளம் குஞ்ஞன்பிள்ளை உரைக்குறிப்புகளுடன் நான்கு தொகுதிகளாகக் கோட்டயம் நேஷனல் பப்ளிஷிங் கம்பெனியார் (1972) வெளியிட்டுள்ள, இராமசரிதம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

கம்பராமாயணப் பதிப்புகள் போல, இராமசரிதத்தில் படலம், பாட்டு எண்களில் இருவர்தம் பதிப்பிலும் வேறுபாடு இல்லை. எனவே, படலம், பாட்டுஎண் இவற்றில் இடர்ப்பாடு இல்லை.

### (3) ***வால்மீகி இராமாயணம்***

யுத்த காண்டம் (உரைநடை) உ. வே. ஸ்ரீநிவாச ஐயங்கார், தி லிட்டில் பிளவர் கம்பெனி, சென்னை (1963), மூலநூல் கருத்துகளின் மேற்கோளுக்காக எடுத்தாளப்படுகிறது.

## *ஒப்பாய்வின் முன்னோடிகள்:*

இலக்கியம், பாடுபொருள், நுவல்பொருள், வடிவம் என்னும் அகக்கூறுகளையும், இலக்கியம் படைப்போரின் அகப்புற வாழ்க்கைகள், அவர் வாழ்ந்த சமூகச்சூழ்நிலைக் கூறுகள், அவரை உருவாக்கிய இலக்கிய மரபு முதலிய புறக்கூறுகளையும் கொண்டது. ஆய்வாளர்கள் இக்கூறுகளை

அடிப்படையாகக் கொண்டு ஆய்வு செய்து வருகின்றனர். ஆய்வுக் கூறுபாடுகளின் தன்மையை மேற்கொள்ளுவதற்கு ஏற்ப, அணுகுமுறைகள் மாறுபடுகின்றன.

## *ஒப்பாய்வு*

ஒரு மொழியின் இலக்கியங்களை மற்றொரு மொழியின் இலக்கியங்களோடு ஒப்பிட்டு ஆய்வு மேற்கொள்ளும் முயற்சி இந்நாள் வளர்ந்து வருகிறது. இம் முயற்சியின் பயனாக இலக்கியக் கூறுகளைப் பல்வேறு கோணங்களில் சிறப்பாகப் புரிந்து கொள்ளவியலும். ஒப்பிடுவது என்பது மனிதனின் இயல்புணர்ச்சிகளுள் ஒன்று; அது மனிதமனத்தில் ஆழப்பதிந்துள்ளது. ஒப்பாய்வு, மனங்கவரும் புதிய முடிவற்ற ஆய்வுக்களமாக இன்று பரந்து வளர்ந்து வருகின்றது.

இலக்கியங்களிடையே ஒவ்வொன்றுக்குள்ள உறவுகளை முக்கியமாக ஆய்வது ஒப்பிலக்கியக் குறிக்கோளாகும். இலக்கியங்களிடையே உணர்வு நிலை, உறவுநிலை, தாக்கம் ஏற்படுத்துதல், கொள்வினை கொடுப்புவினை போன்றவற்றைப் பற்றிய ஆய்வு ஒப்பிலக்கிய வளர்ச்சிக்குத் துணை செய்யும். டாக்டர் க. கைலாசபதி, டாக்டர். தமிழண்ணல் போன்ற பேராசிரியர்கள் மேனாட்டு முறையில் ஒப்பிலக்கியக் கருத்துகளைத் தொகுத்துத் தந்துள்ளனர்.

தமிழ் வடமொழி ஒப்பாய்வு நெறிமுறைகளைத் தமிழ் உரையாசிரியர்கள் பின்பற்றியுள்ளார்கள். தமிழும் வடமொழியும் நெடுங்காலமாகவே ஒன்றோடொன்று தொடர்புற்று, வளர்ந்து வருவன. தமிழில் இலக்கியங்கள் அமைந்த, - அமைய வேண்டிய, கொள்கைகளைத் தொல்காப்பியர் வகுத்துரைத்துள்ளார். 'காவியாதர்சனம்' என்னும் வடமொழிநூலைத் தழுவித் 'தண்டியலங்காரம்' என்னும் நூல் தமிழில் இயற்றப்பட்டுள்ளது. 'மாறனலங்காரம்' 'வீரசோழியம்' போன்ற நூற்களும் இக்கொள்கையை விளக்குவனவே. தமிழ் வடமொழி நூற்களை ஒப்பு நோக்கித் தமிழிலக்கிய உரையாசிரியார்கள் தத்தம் உரை நூற்களில் குறித்துள்ளார்கள். ஒப்பீடு ஆய்வுக்கு அடிப்படையானவை இவை.

இராமாயணக் கதைக்கு நேரான இலக்கியச் சான்றுகளில் தொன்மையானது தயரதஜாதகமே[1]. ஜாதகக்கதையின் உரைநடையை ஆய்ந்தவர்கள் வான்மீகியோடு ஒப்பிட்டு, வான்மீகம் தோன்றிய பின்பே இக்கதை எழுத்து வடிவம் பெற்றது எனக்கூறுவர். ஒப்பிலக்கிய வளர்ச்சிக்கு இது ஒரு மைல் கல்லாகும்.

ஹட்ஸன் - வில்லியம்ஸ் என்னும் பேராசிரியர் தமது 'ஒப்பு நோக்கு இலக்கணத்துக்குச் சிறிய நூல்முகம்' என்ற தலைப்பில்,

"இறுதியாக, எல்லாவற்றிலும் மேலாக, ஆராய்ச்சி மாணவர் தமது தாய்மொழியுடன் நெருங்கிய தொடர்புடைய, வழக்கிலுள்ள பிராதேசிக மொழியைக் கவனிக்கட்டும், உயிருடன் கூடிய ஜீவனுக்குரிய மதிப்பு கொடுத்து அதனைச் சிதைவினின்றும் பாதுகாத்து வரட்டும். இப்பொழுது அது எங்ஙனமிருக்கிறது என்பதையே கவனிக்கட்டும்"[2] எனக்கூறியுள்ள

செய்தியைப் பேராசிரியர் எஸ். வையாபுரிப்பிள்ளை, திராவிடமொழிகளின் ஆராய்ச்சி பற்றி விளக்கும் போது மேற்கோளாகக் காட்டுவது குறிப்பிடத்தக்கது.

"சங்கச் சான்றோர் செய்யுட்கள் ஹோமரது 'இலியாது காவியம் தோன்றுவதற்கு ஆதாரமாக இருந்த வீரக்கதைகளை ஒத்தனவாய் உள்ளன"[3] என்று தென்னிந்திய வரலாற்று நூல் ஆசிரியர் எஸ். கிருஷ்ணசாமி ஐயங்கார் குறிப்பிட்டுள்ளதைப் பிள்ளையவர்கள் எடுத்தாளுகிறார்.

பேராசிரியர் என். கே. சித்தாந்தா, தமது 'இந்திய வீரயுகம்' என்ற நூலில் "தமிழ்ப் புறத்திணைப்பாடல்கள் பிறமொழிகளில் காணப்படும் வீரப்பாடல்களுடன் ஒப்பு நோக்கி ஆராயப்படும் தகைமையுடையன"[4] என்கிறார். பேராசிரியர் எஸ். வையாபுரிப்பிள்ளை, இக்கூற்றுக்கு அரண் செய்யும் முகமாகத், தமது 'காவிய காலம்' என்ற ஆய்வு நூலில், "வீரயுகத்தைச்" சார்ந்தனவாக நமது புறப்பாடல்கள் உள்ளன"[5] என்று குறிப்பிட்டுள்ளார். ஒப்பிலக்கிய ஆராய்ச்சியின் இன்றியமையாமையை விளக்க, மேலும் அவர், "திராவிட இலக்கியங்களையும் இந்திய இலக்கியங்களையும் ஒப்பு நோக்கிக் கற்றவனுடைய கல்வியறிவு மிகவும் பரந்துள்ளதாயும் இருத்தல் ஒருதலை. இந்த ஒப்பு நோக்குக் கல்வி நமது அறிஞர்களுடைய குறுகிய மனப்பான்மை என்னும் திண்ணிய சுவரை இடித்துத் தகர்த்துவிடும் ... இவ்வகைக் கல்வியின்மேல் எழுந்த ஆராய்ச்சிக்கு ஒரு புதிய பொருண்மையும் புதிய பெருமையும் ஏற்படும்"[6] என்று கூறியுள்ளார்.

## *தமிழில் இராமாயண ஒப்பிலக்கியங்கள்*

### (1) *கம்பராமாயணம் - ஓர் ஆய்வு*

தமிழில் ஒப்பிலக்கிய வளர்ச்சிக்கு முன்னோடியாகத் திகழ்ந்தவர்களுள், வ.வே. சு. ஐயர், சிறப்பிடம் பெறுகிறார். ஐயர் அவர்கள், 'கம்பராமாயணம் - ஓர் ஆய்வு' ('Kambaramayana - A Study') என்ற தமது ஆங்கில நூலில் கம்பராமாயணத்தைக் கிரேக்க, இலத்தீன், ஆங்கிலக் காப்பியங்களுடன் ஒப்பிட்டுள்ளார். "கம்பராமாயணமானது ஹோமர் எழுதிய 'இலியாத்'தையும், விர்க்கிலியன் எழுதிய 'ஏனயிதை'யும், மில்டனுடைய 'சுவர்க்க நீக்கம்' என்ற காவியத்தையும், வியாஸபாரதத்தையும் தமக்கே முதல் நூலாக இருந்த வால்மீகி ராமாயணத்தையும் கூடப் பெருங்காப்பிய இலட்சணத்தின் அம்சங்களுள் அநேகமாய் எல்லாவற்றையும் வென்றுவிட்டது என்று சொல்லுவோம்" என்னும் கூற்றிற்குத் தக்க சான்றுகள் பலவற்றையும் அவர் தந்துள்ளார். ஒப்பிலக்கிய ஆய்வுக்கு முன்னோடியாக இன்றும் இந்நூல் திகழ்ந்து வருகிறது.

### (2) *வால்மீகரும் கம்பரும்*

... சாமி சரவணப்பிள்ளை
(விவேகபாநு - தொகுதி - 2, 1903)

பாலகாண்டத்தில் காணப்பெறும் முக்கிய வேறுபாடுகளைச் சுட்டி, காவிய நலத்தின் மேன்மையையும் புலப்படுத்துகிறார் ஆசிரியர்.

### (3) *கம்பன்புளுகும் வால்மீகி வாய்மையும்*

பா. வே. மாணிக்க நாயக்கர்
(முதல் பதிப்பு IV. 1955)

வால்மீகி காட்டும் பாத்திரங்கள், நிகழ்ச்சிகளே உண்மையானவை, கம்பன் காட்டுபவை போலியானவை என்பது ஆசிரியர் துணிபு. இதற்காகச் சான்றுகள் பல தருகிறார்.

### (4) *கம்பரும் வால்மீகியும்*

நாமக்கல் கவிஞர்
(முதல் பதிப்பு -1956. இன்ப நிலையம் மைலாப்பூர்)

ஒவ்வொரு பாத்திரமும் அதனதன் பெருமைக்குப் பழுது வராமல் நடந்து கொள்ளச் செய்து, இராமகாதையை உண்மையாகவே தெய்வமாக்கதையாக்கியிருக்கிறார்கள். தருமத்தை நிலைநாட்டி அதருமத்தை அடக்கவென்றே அவதரித்த பரமாத்மாவே தான் இராமன், என்பதைக் கம்பர் மிகவும் தெளிவாகச் சொல்லுகிறார். கருத்துகள் அனைத்தும் எடுத்துக்காட்டுகளோடு நிறுவப்படுகின்றன.

### (5) *கம்பரும் துளசியும்*

டாக்டர் எஸ். சங்கரராஜு நாயுடு எம். ஏ., பி. எச். டி.,
(முதல் பதிப்பு, சென்னைப் பல்கலைக்கழகம், சென்னை)

இந்நூல் ஏழு அதிகாரங்களைக் கொண்டது. (1) இராமாயணப் பதிப்புகள் (2) கம்பனுக்கு முன் இராமாயண நூற்கள் - துளசிக்கு முன் இராமாயண நூற்கள் - (3) கம்பரும் துளசியும் (4) கதைச் செய்தி ஒப்பாய்வு (5) கதாபாத்திரங்கள் (6) இலக்கிய நிலையும் சமூகக் கருத்துகளும் (7) முடிவுரை - சமூக அமைப்பில் இனம் குலம் ஏற்றத்தாழ்வைத் துளசி போற்றுவதையும் கம்பர் சமநிலையில் குறிப்பிடுவதையும் ஒப்பிட்டுக் காட்டுவன குறிப்படத்தக்கன.

### (6) *கம்பனும் மில்டனும் - ஒரு புதிய பார்வை*

டாக்டர் எஸ். இராமகிருஷ்ணன்

பின்புலச் செய்திகள், காவியமரபு, பாயிரம், இலக்கிய வாழ்வு, இராமகதை ஏறுமுகம், துறக்க நீக்கத்தின் தொடக்கம், திருப்புமையங்கள், இராமக்கதை இறங்குமுகம், சிக்கல் அவிழும் சிறப்பு, பின்னுரை என்னும் தலைப்புகளில் கம்பனையும் மில்டனையும் ஒப்பிட்டுக் கம்பனின் சிறப்பைச் சுட்டுகிறார். இந்நூலுக்கு ப. ஜீவானந்தம் ஒரு சிறந்த மதிப்புரை தந்துள்ளார்.

### (7) *தமிழ் - மலையாள இராமாயண ஒப்பீடு :*

மேலே எடுத்துக்காட்டியவை போன்ற ஒப்பீட்டு ஆய்வு நூற்களால், இருமொழி இலக்கிய நீர்மையையும், பல்வேறு திறன்களையும் அறிய முடிகின்றன. திராவிட மொழிக்குடும்பத்தின் மிக நெருங்கிய தொடர்புடைய தமிழ், மலையாளம் இலக்கியங்களை ஒப்பிட்டுக் கேரள மாநிலப் பல்கலைக்கழகங்களில் ஆய்வு செய்யப்பட்டுச் சில நூற்கள் வெளியாகியுள்ளன. (1) கோழிக்கோடு பல்கலைக்கழகத்தில் படைக்கப்பட்ட 'கம்பரும் கண்ணச்சரும்' (2) கேரளப் பல்கலைக்கழகத்தில் படைக்கப்பட்ட 'கம்பராமாயணமும் ஆத்யாத்மிய இராமாயணமும்' ஆகிய ஆய்வு நூற்கள் குறிப்பிடத்தக்கன.

திராவிட மொழிக் குடும்பத்தில் ஒரே காலக்கட்டத்தில் தோன்றிய தமிழ் - மலையாள இலக்கியங்களை ஒப்பிடுவதால் அக்கால ஆசிரியர்களின் தனித்திறன், அவை தோன்றிய கால அரசியல் சமுதாய நிலைகள், மொழி உறவு, பண்பாடு, மேலும், அவற்றில் கையாளும் யாப்பு, பொருள், உத்தி போல்வனவற்றையும் அறியவியலும்.

### *அறிஞர்தம் கருத்து*

பேராசிரியர் வையாபுரிப்பிள்ளை, "நம்முள் ஒவ்வொருவரும் பிற திராவிடமொழிகள் ஒவ்வொன்றிலுமுள்ள சிறந்த இலக்கியங்களையும் வடமொழி இலக்கியங்களையும் கற்று அனுபவித்து பரஸ்பரம் நன்மதிப்பைத் தேடிக்கொள்ளுதல் வேண்டும்..."[8] ஒப்புநோக்கு ஆராய்ச்சிக்கு உதாரணங்களாகத் திராவிட இலக்கிய ஆராய்ச்சி, இந்திய இலக்கிய ஆராய்ச்சி என்பனவற்றைக் கூறலாம் என்னும் அறிவுரையை, ஒப்பாய்வு செய்வோருக்குக் கூறியுள்ளார்.

அவர்தம் கருத்தை மேற்கொண்டு, திராவிட மொழிகளில் மிக நெருங்கிய தொடர்புடைய தமிழ் - மலையாள மொழிகளில் ஒரே காலக்கட்டத்தில் தோன்றிய கம்பராமாயணத்தையும் இராமசரிதத்தையும் ஒப்பிட்டுச் செய்யும் இவ்வாய்வால், தமிழ் - மலையாள ஒப்பாய்வில் மேலும் சில உண்மைகள் புலனாகும்.

### *முடிவுரை*

ஆய்வுப்பொருள் - அறிமுகம் என்ற நிலையில், 'ஒப்பாய்வின் முன்னோடிகள் என்னும் தலைப்பில் இந்த இயல் அமைந்துள்ளது. கம்பன் படைத்த இராமாயண யுத்த காண்டத்தையும், மலையாள ஆதிகவியாகக் கருதப்படும் சீராமன் படைத்த இராமசரிதத்தையும் ஒப்பிட்டு, அவற்றின் பொதுமைக் கூறுகளையும், மாறுபாடுகளையும் கண்டறிவது நோக்கமாகும் என்பது கூறப்பட்டது. இவ்வாய்வுக்கு முன்னோடியாக ஒப்பிலக்கியக் கருத்துகளும் தமிழில் ஒப்பிலக்கிய ஆய்வு நடத்திய பேரறிஞர்களின் பணிகளும் இவ்வியலில் சுட்டப்பட்டன. இருமொழி இராமாயணங்களை ஒப்பிட்டு ஆய்வின் வெளிவந்த சிறந்த நூற்கள் சிலவற்றின் பெயர்கள் பேசப்பட்டன. தமிழ் - மலையாள இராமாயண ஒப்பாய்வாகக் கேரள

பல்கலைக்கழக ஆய்வுத் துறையில் 'கம்பரும் கண்ணச்சரும்' - 'கம்பராமாயணமும் ஆத்யாத்மிய இராமாயணமும்' ஆகிய ஆய்வுநூற்கள் வெளிவந்துள்ளன என்பதும் எடுத்துரைக்கப்பட்டது. தொடர்ந்து ஒப்பாய்வு, பற்றிய பேராசிரியர் வையாபுரிப்பிள்ளையின் கருத்துச் சுட்டப்பட்டது.

## அடிக்குறிப்பு

1. J.B. Coonwell. The Jataka (1957) P.P. 461
2. எஸ். வையாபுரிப் பிள்ளை, காவியகாலம் (1985) ப. 320
3. மேலது பக். 291
4. மேலது பக் 292
5. மேலது பக். 294
6. மேலது பக். 297
7. V.V.S. Aiyer, Kambaramayana /A Study (1970), introduction P.P. 34
8. எஸ். வையாபரிப்பிள்ளை, காவியகாலம் ப. 320

## 2. கம்பனும் சீராம கவியும்

ஒரு கவிஞனையோ அவனுடைய படைப்புகளையோ ஆய்வு செய்வதற்கு, அவன் வாழ்ந்த காலம், அக்கால அரசியல்நிலை முதலியவற்றை அறியவேண்டியது இன்றியமையாததாகும். ஒவ்வொரு கவிஞனும் படைத்த இலக்கியம், அவன் வாழ்ந்த காலத்துக்கும் அரசியல் சமுதாயச் சூழ்நிலைக்கும் ஏற்ப அமையும். கம்பனும் சீராமனும் இதற்கு விதிவிலக்கு அல்லர்.

### கம்பனும் கம்பராமாயணமும்

கம்பன் வரலாற்றை ஆராய்ந்து உண்மைகளைக் கண்டு கொள்வது எளிதன்று. கம்பன் வாழ்வியலில் பல்வேறு கதைகள் கூராய்வு நெறிக்கு ஊறு செய்கின்றன. எனினும், டாக்டர் எஸ். இராமகிருஷ்ணன் அவர்கள் கம்பன் வரலாற்றைப் பற்றிக் கூறும் செய்திகள் ஓரளவு சில உண்மைகளைத் தருகின்றன. "கம்பனைப்பற்றி நாம் உறுதியாக அறியும் வரலாற்றுச் செய்திகள் மூன்றே. ஒன்று, அவன் சோழநாட்டில் காவிரியால் வளம்பெறும் திருவழுந்தூரில் தோன்றினான் என்பது. இரண்டு, வெண்ணெய் நல்லூர் சடையப்ப வள்ளலால் அவன் ஆதரிக்கப்பெற்றான் என்பது. மூன்று, அவன் இராமாவதாரத்தில் ஈடுபட்டு, ஆசைபற்றி அக்காவியத்தைப் பாடினான்"[1] என்பன அவை.

### *கம்பன் சிறப்பு*

கம்பனுக்குத் தமிழிலும் வடமொழியிலும் பெரும்புலமை இருந்தது என்பதனைக் கவிமணி,

> **"ஆரியம் நன்கு ணர்ந்தோன் - தமிழில்**
> **ஆழம் அறிந்து கண்டோன்"[2]**

என உணர்த்துவார். இனிமை, எளிமை, ஆழமுடைமை ஆகிய பண்புகள் நிறைந்த பெருநூல் கம்பராமாயணம். கம்பனின் புலமைச் சிறப்பைக் 'கல்வியில் பெரியவன் கம்பன்', 'கவிச்சக்ரவர்த்தி', 'கம்பநாடுடைய வள்ளல்' என்னும் புனைந்துரைகள் புகழ்ந்து பாராட்டுகின்றன.

பாரதியார்,

> **"யாமறிந்த புலவரிலே கம்பனைப்போல்**
> **வள்ளுவர்போல், இளங்கோ வைப்போல்**
> **பூமிதனில் யாங்கணுமே பிறந்ததில்லை"[3]**

என்றும்,

"கல்வி சிறந்த தமிழ்நாடு - புகழ்க்
கம்பன் பிறந்த தமிழ்நாடு"[4] என்றும் கூறுவார்.

நூல் தோன்றிய காலம் முதல் இன்றுவரைப் புகழ்ந்து பாராட்டப்படும் பெருமை, கம்பராமாயணத்துக்கு உண்டு. கம்பன் ஒப்பற்ற பெரும்புலவன். காலப்போக்கை அறிந்து மக்கள் மனப்பான்மையை உணர்ந்து தமிழர் பண்பாட்டைத் தழுவித் தன் காப்பியத்தைப் படைத்தான். காவியப் போக்கில் இதனைக் கண்டுகொள்ளவியலும். இயற்றப்பட்ட காலத்திலிருந்து பொதுமக்களின் உள்ளத்தைக் கவர்ந்த ஓர் பேரிலக்கியமாகக் கம்பராமாயணம் விளங்கி வந்திருக்கிறது. ஆயினும், அந்நூல் தோன்றிய காலத்தையொட்டி வாழ்ந்த அறிஞர் பெருமக்களிடம் அதன் பெருமைக்கு ஏற்றவளவு அது சிறப்பிடம் பெறவில்லை. இதற்குப் பல்வேறு வரலாற்றுக் காரணங்கள் இருந்திருத்தல் கூடும். அவற்றை நாம் இன்றுள்ள நிலையில் திட்டவட்டமாகக் கண்டறிதல் இயலாத செயலாகும். இலக்கியம் என்னும் நிலையில் கம்பராமாயணம் பெற்றுவரும் சிறப்பை, இன்றையப் புலவர்கள் வெளியிடும் ஆய்வுரைகள் அனைத்தும் தெளிவுறக்காட்டுகின்றன.

## *கம்பன் வாழ்ந்தகாலம்*

(1) கம்பன் வாழ்ந்த காலத்தைப்பற்றி மூன்று கருத்துகளை ஆராய்ச்சி அறிஞர்கள் கூறுகின்றனர். சிலர், அவன் கி.பி. - 9 ஆம் நூற்றாண்டில் வாழ்ந்தான் என்பர். வேறு சிலர், கி.பி. 10 ஆம் நூற்றாண்டென்பர். மற்று சிலர் கி.பி. 12 ஆம் நூற்றாண்டென்பர்.

(1) ஒன்பதாம் நூற்றாண்டு என்பதற்குக் கூறும் முக்கிய சான்று :

**'எண்ணிய சகாப்தம் எண்ணூற்று**
**ஏழின்மேல், சடையன் வாழ்வு**
**நண்ணிய வெண்ணெய் நல்லூர்**
**தன்னிலே, கம்ப நாடன்**
**பண்ணிய இராம காதை**
**பங்குனி அத்த நாளில்**
**கண்ணி அரங்கர் முன்னே**
**கவியரங் கேற்றினானே'**[5]

*- என்னும் தனியன் பாடலாகும்*

(சக + அப்தம் > சகாப்தம் - கிபி. 78 - இல் தொடங்கும் ஆண்டு முறை)

சக ஆண்டு 807 பங்குனி அத்தநாள் என்பது கி.பி. 886 பெப்ருவரி 23 - ஆம் நாளாகும். இதன்படி, கம்பன் காலம் கி.பி. 9 -ஆம் நூற்றாண்டு என்பர். இக்கருத்தை டாக்டர் எஸ். இராமகிருஷ்ணன் தடைவிடை கூறி ஏற்கிறார். பேராசிரியர் கு. பாலசுந்தர முதலியார், 'சடையப்ப வள்ளலும் கம்பரும்' என்னும் தமது நூலில் இக்கருத்தை முன்னரே தெரிவித்துள்ளார்.

(2) பத்தாம் நூற்றாண்டு என்னும் கொள்கைக்குச் சி.வை. சதாசிவப் பண்டாரத்தார், தெ.பொ. மீனாட்சிசுந்தரனார் ஆகியோர் மேற்குறித்த பாடலுடன், உலாவியற் படலத்தில் வரும் 47, 48, 49 ஆகிய பாடல்களை வலியுறுத்திப் பத்தாம் நூற்றாண்டின் முற்பகுதி என்று முடிவு காண்கிறார்கள்.

(3) பன்னிரண்டாம் நூற்றாண்டு என்பதற்கு, மொழியாய்வின் அடிப்படையில் கம்பன் காலம் பற்றிப் பேராசிரியர் வையாபுரிப்பிள்ளை சில கருத்துக்களை முன்வைக்கிறார். அவையாவன:

"(அ) சகாப்தம், கம்பநாடன், கவியரங்கு முதலிய சொல் நிலையால், - இவை, பிற்காலத்தே தோன்றியவை.

(ஆ) 'சென்னிநாள் தெரியல் வீரன் தியாக மாவிநோதன் தெய்வப் பொன்னி நாட்டு உவமை வைப்பைப் புலங்கொள நோக்கிப் போனான்' என்னும் செய்தியாலும்,

**"புவிபுகழ் சென்னிப்போர் அபயன் தோள்புகழ்**
**கவிகள் தம்மனையெனக் கனகராசியும்"**

என்னும் கூற்றாலும் குறிப்பிடப்பெறும் 'தியாக விநோதன்' 12 ஆம் நூற்றாண்டுக்கால மூன்றாம் குலோத்துங்கனே.

(இ) தண்டியலங்காரச் செல்வாக்கும், பாட்டியல் நூற்கள், சிற்றிலக்கியங்கள் ஆகியவற்றின் செல்வாக்கும் கம்பன் காப்பியத்தில் காணக்கிடைக்கின்றன." [6]

(ஈ) எஸ். வையாபுரிப்பிள்ளையின் கருத்தையொட்டியே டாக்டர் மா. இராசமாணிக்கனார். டாக்டர் மு. கோவிந்தசாமி போன்றோர் ஆய்வுரை அளித்துள்ளனர். வரலாற்று ஆசிரியர் கே. ஏ. நீலகண்ட சாஸ்திரி அவர்கள், 'கம்பநாடு உடைய வள்ளல்' - என்ற தொடரால் கம்பநாடு என்பது கவிஞனுக்குச் சோழன் வழங்கிய மானியம்' [7] எனக் கருதுவார். எனவே, மானியம் வழங்கிய சோழன், மூன்றாம் குலோத்துங்கனே என்பது அவர்தம் துணிபு.

(உ) மூன்றாம் கருத்தாகிய 12 - ஆம் நூற்றாண்டில் கம்பன் வாழ்ந்திருக்கலாம் என்பதற்குத் தென்னகத்தில் தோன்றிய இராமாயண நூற்களின் தோற்றங்களைப் பற்றிய ஆய்வு, துணை செய்யும். 'தமிழ் - கம்பராமாயாணம்: மலையாள - இராசரிதம்: கன்னட - தோரவேராமாயணம்: தெலுங்கு - துவிபதராமாயணம், பாஸ்கரராமாயணம் -ஆகிய இராமசரித காவியங்களெல்லாம் கி.பி.12 முதல் 15 ஆம் நூற்றாண்டுகளுக்கிடையே எழுந்தவைகள் எனக் கூறுகிறது 'இராமாயணப்பரிணாமம்' என்னும் காமல் புக்கேவின் நூல். வைணவ சமய வளர்ச்சிக்கு உதவுவனவாக அமைந்த மேற்கூறிய இந்நூற்கள் அனைத்தும் ஏறத்தாழ ஒரே காலகட்டத்தில் (காவிய வளர்ச்சிக்காலம்) வளமோடு வெளிவந்தவைகளாம்.

மேலும், தமிழ் விருத்தப்பாக்கள் வளம்பெற்ற காலத்தையும், மலையாள மொழிக்காவியத் தோற்றத்துக்குப் பற்றுக்கோடான பாட்டு

எனப்படும் விருத்தத்தின் தோற்றம் பற்றிட காலத்தையும் ஆராய்ந்தால். பாடப்படும் பாட்டும், அழகு பெறச் செய்யப்படும் விருத்தமும் வளம்பெற்ற காலம் 12 - ஆம் நூற்றாண்டு என்பது தெரியவரும்.

'விருத்தம் என்னும் ஒண்பாவிற்கு உயர்கம்பன்'[9] என்னும் தொடர் கம்பன் காலம் 12 - ஆம் நூற்றாண்டு என்பதைத் தெளிவாக்கும். மலையாளமொழியில் கவிஞன் சீராமனும் தன் காவியத்தைப் பாட்டு எனப்படும் விருத்தப்பாக்களாலேயே ஆக்கியுள்ளான். மேலும், அவற்றை அந்தாதிப்பாடல்களாகவும் படைத்துள்ளான்.

### *கம்பன் காலச்சூழல்*

கம்பராமாயணம் பாலகாண்டம் பதிப்புரையில் மர்ரே எஸ். இராஜம் என்பார், இராமகதையைப் போன்ற ஒரு காவியத்தைக் கம்பன் பாடுவதற்கு அரணாக இருந்த சூழ்நிலையை எடுத்துரைக்கிறார்.

" இவன் தோன்றிய திருவழுந்தூரும், இவனை ஆதரித்த சடையனது ஊரும், சோழநாட்டில் காவிரியால் வளம்பெற்றுத் திகழ்கின்றன. கரிகாலனது பிறப்பிடமாயும் முடியுடைச்சோழ வேந்தர்க்கு மகள் கொடைக்குரிய வேளாளர் ஆகிய வேளிர்கள் சிறப்புடன் வாழ்ந்த ஊராயும் திருவழுந்தூர் விளங்கியமை சங்கவிலக்கியத்தாலும் தொல்காப்பியம், பழமொழி நானூறு இவற்றின் உரைகளாலும் தெரியவருகின்றது. திருமங்கை மன்னன், தனது பிரபந்தத்திலும் (பெரிய திருமொழி 7,8) திருஞான சம்பந்தர், தமது தேவாரத்திலும் (2,20) இவ்வூரைப் பற்பல வகையாகச் சிறப்பித்துப்பாடியுள்ளனர். இவ்விருவரது வாழ்க்கையிலிருந்து இவ்வூர் இயற்கை வளம் நிறைந்தது என்றும், இங்கே சைவமும் வைணவமும், செந்தமிழும் வடமொழியும் சிறந்து திகழ்ந்தன என்றும், திருவிழாக்கள் நிக்ழ்ந்தனவென்றும் தெரியவருகின்றன. இவ்வூரில் சைவமும் வைணவமும் ஒரு படியாய் ஒத்தநிலையில் சிறப்புற்றிருத்தல் வேண்டும்" [10]

(1) அக்காலச் சோழப் பேரரசுக்கு அடிகோலியாக இருந்தவன் விஜயாலயச் சோழன். முத்தரையர்களைத் தோற்கடித்துத் தஞ்சையைக் கைப்பற்றினான் அவன். அதன் பின்னர் வந்த ஆதித்யன், முதல்பராந்தகன், அரிஞ்சயன், இரண்டாம் பராந்தகன், இராஜாராஜன், I.II.III. இராஜேந்திரன், I,II,III குலோத்தங்கன், I,II,III முதலிய சோழப் பேரரசர்கள் தமிழகத்தில் மட்டுமல்ல, வடக்கிலும், இந்திய நாட்டுக்குக் கிழக்கும் தெற்குமுள்ள நாடுகளிலும் அவ்வப்போது தங்கள் ஆதிக்கத்தைப் செலுத்தி வந்தனர்.

கம்பன் வாழ்ந்த காலமாக ஒரளவு கருதத்தகும் மூன்றாம் குலோத்துங்கனும் அதற்கு முன் சோழநாட்டை ஆண்ட இரண்டாம் இராசாதிராசனும்' ஈழநாட்டின் மீது தொடுத்த இரண்டு போர்கள் எண்ணிப்பார்க்கத்தக்கன. இப்பேரரசன் 'ஈழம் கொண்ட இராசகேசரி' என்னும் சிறப்புப் பெயர் பெற்றான். தொடர்ந்து, மூன்றாம் குலோத்துங்கன் காலத்தில் சோழப் பெருநாட்டில் வடக்கே சாளுக்கியர்

ஒதுங்கிவிட்டமையால், மைசூர்ப் பகுதியில் ஹொய்சளர் வன்மையுற்று, அரசியல் செல்வாக்குப் பெறலாயினர். எனவே, சோழன் தன் நாட்டுப் படையை வலிமையாக்கிக் கொண்டான். கி.பி.1178 - இல் சீன ஆசிரியர் ஒருவர் சோணாட்டுப் படையைப் பற்றி பின்வருமாறு வரைந்துள்ளார்:

(அ) "சோழர் அரசாங்கத்தில் 60 ஆயிரம் யானைகள் கொண்ட பெரும்படை இருக்கிறது. ஒவ்வொரு யானையும் 7 அல்லது 8 அடி உயரம் உடையது; போர்க்களத்தில் இந்தக் கரிகள் மீது வீரர்பலர் செல்கின்றனர். அவர் கைகளில் ஈட்டி, வில், அம்பு முதலியன கொண்டுள்ளனர்; நெடுந்தூரம் அம்பு எய்வதில் வல்லுநர்; போரில் வெற்றிபெறும் யானைகளுக்குக் சிறப்புப்பெயரிட்டு அழைக்கின்றனர்; அவற்றின் மீது, சிறப்பை அறிவிக்க உயர்தரப் போர்வைகள் விரிக்கப்படும்; நாள்தோறும் அரசன் திருமுன் யானைப்படை நிறுத்தப்படும்"[11]

(ஆ) இவ்வரசர் கல்வெட்டுகளில் தென்னாட்டுப் போரே சிறந்து காணப்படுகிறது: (1) மதுரைகொண்டது (2) பாண்டியன் முடித்தலை கொண்டது (3) ஈழம் கொண்டது (4) கருவூர் கொண்டது (5) கச்சி கொண்டது ஆகிய செயல்கள் குறிக்கப்பட்டுள்ளன.

(இ) இரண்டாம் குலோத்துங்கன் காலத்துச் செய்யப்பட்ட சைவ வைணவத் திருப்பணிகள் பல. அவற்றுள் தில்லை நடராசப்பெருமாள் திருக்கோயில் மண்டபப்பணி, வேலூர் திருமால் கோயில் திருப்பணி முதலியன குறிப்பிடத்தக்கன. குன்றத்தூர் சேக்கிழார், இப்பேரரசன் காலத்தில் திருத்தொண்டர் புராணத்தைப் பாடினார். கூத்தர் செய்த உலாக்களும் பரணிநூற்களும் இக்காலத்தே சிறந்து விளங்கிய நூற்களாகும்.

**"தண்டமிழ்க்குப் பொன்னே பொழியும் குலோத்துங்கன்"**

என்றும்,

**"முகில் ஏழுமென்னப் பொன்போத நல்கும் குலோத்துங்கன்"**

என்றும், பலபடியாகக் குலோத்துங்கனைக் கோவை ஆசிரியர் புகழ்வார். "கம்பனும் தன் காவியம் நெடுகிலும் சோழனைப் புகழ்ந்துரைக்கக் காணலாம்"[12] என்பனவற்றை டாக்டர் மா. இராசமாணிக்கனார் எடுத்துரைக்கிறார்.

மேற்கூறியவற்றால் கல்வியில் பெரியவனாகிய கம்பன் தோன்றி இராமவதாரமாகிய கலைக்கோயிலைச் சிறப்புறச் செய்வதற்கு ஏற்றகலைச் செல்வ சூழலும், போர்த்திறனை வளமுடன் பாடுவதற்கு ஏற்ற அக்காலத்திய போர் நிகழ்ச்சிகளும், சைவ வைணவச் சமரசச் சூழ்நிலையும் கொண்டு தன்னேரில்லாது திகழும் இராமாயணப் பெருங்காப்பியத்தைக் கம்பன் படைப்பதற்கு ஏற்ற காலமாக அது அமைந்திருந்தது என்று சொல்லலாம்.

## *சீராமனும் இராமசரிதமும்*

மலையாள இராமசரித நூலாசிரியராக் கருதப்படும் சீராமனையும் அவன் படைத்த நூலையும் பற்றி ஆய்வாளர்கள் பலரும் இராமசரித

இலக்கியம், மொழி இவற்றின் அடிப்படையிலேயே ஆராய்கின்றனர். கால ஆராய்ச்சி நிலையில் இன்றும் விவாதத்திற்குரியதாகவே இவை இருந்து வருகின்றன.

(1) டாக்டர் ஹெர்ம்மன் குண்டர்ட், மலையாளப் பேரறிஞர் பி. கோவிந்தப்பிள்ளை, ஏ.ஆர். இராஜராஜவர்மா, உள்ளூர் பரமேசுவர ஐயர் போன்றோர் இராமசரித மொழியின் பழமை கருதி, கி.பி. 12, 13 ஆம் நூற்றாண்டில் இராமரிதம் தோன்றிற்று என்பர். அதற்காக அவர்கள் தரும் காரணங்கள் வருமாறு:

(அ) குண்டர்ட், தாம் எழுதிய மலையாள நிகண்டில் "போர்த்துக்கீசியர் இந்நாட்டில் நுழையும் முன்னரேயுள்ள மலையாள மொழி ஆட்சி இந்நூலில் காணப்படுகிறது"[13] என்பார். 'மலையாள மொழியின் இலக்கணம், மலையாள நிகண்டு'-என்னும் அவர் தம் நூலில் இராமசரித எடுத்துக்காட்டுகளைத் தருகின்றார். அழுதல், அறம், அங்கி, அகன்று முதலிய மலையாள நிலப்பகுதியில் பழக்கமில்லாத சொல்லாட்சிக்கு இக்காவியம் மட்டுமே சான்று எனக்குறிப்பிட்டுள்ளார்.

(ஆ) வரலாற்று ஆசிரியர் பி. கோவிந்தப்பிள்ளை, "மலையாள மொழியில் மிகப்பழமையான நூல் இது" எனக்கூறி 'மலையாழ்மா' 'லீலாதிலகம்' 'கேரள பாணினியம்' முதலிய இலக்கண நூற்களில் இராமசரித எடுத்துக்காட்டுகள் தரப்படுகின்றன என்பார். "கொல்ல வருடம் 460 - 505 காலவேளையில் மத்திய திருவிதாங்கூரை ஆண்ட ஆதித்யவர்மா என்பவர், இந்நூலின் ஆசிரியர் என்பார்"[14] பிள்ளை அவர்கள். இதற்குச் சான்றாக, அவர்

**"ஆதிதேவ நிலமிழ்ந்த மனக்காம்பு டையசீ**
**ராமனன் பிறெநாடியமபின தமிழ்க்கவி வல்லோன்,**
**போதில் மாதிநிடமா வருடன் வீழ்வதினபின்**
**போகி போகசய நனன் சரணதார ணைவரோ"[15]**

(இராமசரிதம் 164 : 11)

[ஆதிதேவன் - திருமால்; நிலம் - அமிழ்ந்த நிலவுலகில் தோன்றிய; மனக்காம்பு - உள்ள ஆர்வம்; அன்பிறெநாடியம் -அன்புடன் கூடிய; தமிழ்க்கவிவல்லோன் - தமிழ்மொழிக் கவிதையில் வல்லவன்,]

[மாதின் இடமா - இலக்குமிதேவியின்; உடல் வீழ்வதினபின் - உடல் வீழ்ந்த பின் (இறந்த பிறகு); போகிபோகசயனன் - ஆழ்ந்த நித்திரை கொள்பவன்; ஸ்ரீபத்மநாபன்]

என நூல் இறுதிப்பாடலில் சுட்டப்பெறும் சீராமனே இக்காவிய ஆசிரியர் என விளக்குவார்.

(இ) மலையாள வரலாற்றுப் பேராசிரியர் உள்ளூர்பரமேசுவ்ர ஐயர் "கி.பி. 1195-1203 காலகட்டத்தில் திருவிதாங்கூரை ஆண்ட ஸ்ரீவீரராமவர்மா என்னும் அரசன் இராமசரிதத்தைப் பாடியிருக்கலாம்"

என்பார். மேலும் ஸ்ரீ என்னும் அடை, பெயரோடு சேர்ந்து வழங்கி வருதல் மரபு. "வீர" என்பது போர்ச்சிறப்பால் வந்த பெயரடையாகும். எனவே ஸ்ரீ இராமவர்மாவான சீராமனே இந்நூலை எழுதினார் என்பார். சீராமன், சீமாட்டி என்பன தற்பவ வழக்குகளாம் என்று விளக்குவார்.

"போகி போகி சயனா .." எனக்கவிஞர் நூலின் முதலில் தொடங்கி, முடிவிலும் "போகிபோக சயனன் சரணதாரணைவரே" எனப்பாடுவதால், ஸ்ரீபத்மநாபகோயில் எழுந்த காலகட்டமான 12- ஆம் நூற்றாண்டே இவ்வாசிரியர் காலமெனக் கருதலாம்"[16] என ஐயர் அவர்கள் மேலும் விளக்குவார்

(ஈ) டாக்டர் கே.எம். ஜார்ஜ், "கம்பன் கவிதைகளைக் கேட்டுப்படித்த சீராமக் கவிஞன், அன்றையக் காலச் சூழலுக்கு ஏற்ப இராமசரிதத்தைப் பாடினார்; எனவே, கம்பருக்குப் பிற்பட்டவரே சீராமன்", என்று மொழி ஆய்வுவழி முடிவுகட்டுவார். இதற்கு அரணாகக் கம்பன் கருத்துகள், இராம சரிதத்தில் இடம்பெறுவதை, இராமசரிதத்தைப் பதிப்பித்த பேராசிரியர் குஞ்சன்பிள்ளை எடுத்துக்காட்டுகள் தருகிறார்.

(உ) உள்ளூரின் கருத்தை மறுத்து, மொழியியல் துறை ஆசிரியர் கெ. உண்ணிக்கிடாவு, 'இராமசரிதத்தில் மொழி' - என்னும் கட்டுரையில் "கம்பருக்கு முன்னர் வாழ்ந்த குலசேகர ஆழ்வார் தம் திருமொழியில் இராமவதாரத்தைப் பாடிய பான்மையைக் குறிப்பிட்டு,

**"கோழியர்கோன் குடைகுல சேகரன் சொற்செய்த**
**நல்லியலில் இன்தமிழ்மாலை பத்தும்வல்லார்**
**நலந்திகழ் நாராயண னடிக்கீழ் நண்ணுவரே"** - எனும்

இக்கோட்பாட்டை இராமசரித ஆசிரியர் பின்பற்றிப் பெருமாள் திருமொழியமைப்பைப்போல படலம் ஒன்றுக்கு 10 அல்லது 11 பாடல்களாகப் பாடியுள்ளார். மேலும், நூல் இறுதியில் ஆழ்வார்கருத்தையொட்டி போகிபோக சயனன் சாரணதாரணடைவரே[17] என நிறைவு செய்வதையும் கண்டு தெளியலாம். எனவே, ஆழ்வார் காலத்தவரே சீராமன் என்பார் அவர்.

(ஊ) இராமாயணக் கதாப்பாத்திரத்திரங்களில் சில பெயர்களைக் கையாளுவதில் சீராமன் கம்பரைப் போலவே பொருளுக்கேற்பத் தற்பவமாக தமிழாக்கம் செய்யும் நெறியைப் பின்பற்றியுள்ளார். எடுத்துக்காட்டாக.

| | | |
|---|---|---|
| **வஜ்ரதம்ஷடரன்** | > | **வச்சிரத்தெயிற்றனன்** |
| **யஜ்ஞசத்ரு** | > | **வேள்விநெடும்பகை** |
| **அக்னிகேது** | > | **புகைக்கண்ணன்** |

முதலிய பெயர்களைக் கூறலாம். கம்பராமாயணம் படிக்காமல் இத்தகைய ஒரு தமிழாக்கத்தை இராமசரித ஆசிரியர் மலையாள மொழியில் செய்திருக்க முடியாது. இராமசரிதத்தைச் சுருக்கமாகப் பாடி முடிக்கச் 'சீராமன்' திருமொழியைப் பின்பற்றியிருக்கலாம். எனவே, திரு உண்ணிக்கிடாவின் கொள்கை ஏற்றுக்கொள்ளுவதற்கு உரியதாகவில்லை.

மேற்கூறிய சான்றுகளைக் கூர்ந்து நோக்கச் சீராமன், கம்பர் காலத்துக்குச் சற்று பிற்பட்ட 12- ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியிலோ அல்லது 13 - ஆம் நூற்றாண்டின் முற்பகுதியிலோ தோன்றியிருக்கலாம்.

## *இராமசரிதகாலச்சூழல்*

கொல்லமாண்டின் துவக்கமான கி.பி. 825 - இல் சேரமான் பெருமாள் இயற்கை எய்தினார். சேர நாட்டில் தமிழர்குல ஆட்சி முடிவுற்றது. பின்னர் ஆட்சி செய்து வந்த பெருமாக்கள் காலத்தே ஆங்காங்கே பல கோயில்கள் தோன்றலாயின. கண்டியூர் சிவன்கோயில், இராஜசேகரன் சேரநாட்டை ஆண்ட போது உருவானது. குலசேகரன் ஆட்சிக்காலத்தில் தோன்றிய திருவஞ்சைக்குளம் சிவாலயம் சிறப்புடையது. வைணவ சமயம் இக்கால கட்டத்தில் மேலைக்கரையில் கால்கொள்ளலாயிற்று. பதின்மூன்று வைணவத் திருப்பதிகள் உருப்பெற்றுச் சிறப்படையலாயின. ஆரியர்களின் வரவால், வடமொழி தென்மொழி உறவு சமயம்வழிப் பரவலாயிற்று. இருமொழி உறழ்வு தென்மொழிகளிலும் தோன்றலாயிற்று. அத்தாக்கம் நூற்களிலும் பரிணமிக்கலாயிற்று. குலசேகர ஆழ்வார் போன்றோரின் வைணவ சமயப் பற்றால் இராமாயணக்கதைகள் மலை நாடெங்கும் பரவலாயின. வால்மீகி, கம்பர் எழுதிய இராமாயணங்கள் வைணவப் பதிகளிலும் திருச்சபைகளிலும் நடந்தேறலாயின.

(அ) உள்ளூர் பரமேசுவர ஐயர், "கி. பி. 12 ஆம் நூற்றாண்டில் வாழ்ந்திருந்த செந்தமிழ்க்கவிச் சக்கரவர்த்தி கம்பர் மலைநாட்டில் சஞ்சரித்துத் தம் இராமாயணத்தைப் புலவர் சபைகளில் பாடிக்கேட்கச் செய்தார் என ஒரு ஐதீகம் உண்டு. கம்பரைப்போற்றிய சடையப்பவள்ளல் மகன் பிள்ளைப் பெருமாளைப் புகழ்ந்து பாடிய இரண்டு செந்தமிழ்ப்பாட்டுகள் தஞ்சாவூர் மாவட்டத்திலுள்ள மூவலூர் என்னும் கோயில் கல்வெட்டில் இடம் பெற்றுள்ளது. அதில் அகிலகலாவல்லபன் சேரமான் பெருமாள் வஞ்சிமார்த்தாண்டன் என்ற பெயரும் காணப்படுகிறது. அவர் கி.பி. 1157 முதல் 1195 வரை வேணாட்டை (வேள்நாட்டு) ஆட்சி செய்து வந்த வீர உதயமார்த்தாண்ட வர்மா எனக்கருதுகிறேன்"[18] என எடுத்துக்காட்டி, கம்பர் சேரநாட்டில் இராமாயணம் பாராயணம் செய்த நிகழ்ச்சியைக் குறிப்பிடுகின்றார். கம்பர் பாடலை இராமசரித ஆசிரியரும் கேட்டும் படித்தும் இருக்கலாம். எனவே, கம்பராமாயண ஆட்சி இராமசரிதத்தில் கதைப்போக்கிலும் சொல்லாக்கத்திலும் ஆங்காங்கே காண்ப்படுவதற்குச் சூழ்நிலைகளே காரணம் எனலாம்.

(ஆ) சேரமான் பெருமாள் ஆட்சிக்குப்பின் சேரநாடு பல பிரிவுகளாகி குறுநில மன்னர்கள் ஆட்சியின் கீழ் இயங்கலாயிற்று. கி.பி. 1018 ஐ அடுத்து, முதல் ராஜேந்திரச்சோழன், கேரள அரசனான பாஸ்கர ரவிவர்மாவைத் தோற்கடித்து நாட்டைப் பல சிற்றரசர்களுக்குப்

பங்கிட்டளித்தான் எனச் சேரர் வரலாறு கூறுகிறது. கொல்லமாண்டின் தொடக்கத்தில் இந்நாடு பன்னிரண்டு பகுதிகளாகப் பிரிக்கப்பட்டிருந்தது. கொல்லமாண்டின் தொடக்கம் கி.பி. 825 என வரலாறு கூறும். சாமோதரி கோழிக்கோட்டை அடைந்த காலமும் இதுவே. பிரிவுற்ற நாட்டை ஒருமைப்படுத்தி ஒரு பேரரசை நிலைநாட்ட, வீரகேரள வர்மா, ஸ்ரீவீரஉதயமார்த்தாண்ட வர்மா ஆகியோர் முயன்றனர். வேள் நாட்டை ஆண்ட வீரகேரளன் என்பவன் குலோத்துங்கனுடன் போர்த்தொடுத்துத் தோற்றுச் சோழனிடம் அடைக்கலம்புக வேண்டியதாயிற்று. ஸ்ரீ வீரபராக்கிரம பாண்டியன் நாஞ்சில் நாட்டைக்கைப்பற்றி, கோட்டாறு ராஜேந்திர சோழீசுவர ஆலயத்தைப் புதுப்பித்தான். இப்பராக்கிரமனை எதிர்த்துப் போரிட்ட ஸ்ரீவீர உதயமார்த்தாண்ட வர்மாவே இராமசரிதம் பாடியவர்[18] என உள்ளூர்ப்பரமேசுவர ஐயர் கருதுகிறார்.

(இ) சேரநாட்டில் ஒரு பேரரசை நிறுவமுனைந்த இப்பேரரசர் மக்களிடம் போர் உணர்ச்சியை எழுப்பக் கருதினார். சிறப்பாக எளியவரின் உள்ளத்தில் வீர உணர்வைத்தூண்டி வளர்க்கக்கருதி, இராமாயணப்போர் நிகழ்ச்சிகளை விரித்துக்கூறும் இராமகதையைப்பாடி மக்களுக்கு அளித்தார்; அதனை நாடு முழுவதும் பரவச் செய்தார் எனக்கருதலாம். இராமகதையின் பாடுபொருள் 'இராவணவதம்' கதை நிகழ்ச்சிகள் அனைத்தும் இதனை மையமாகக்கொண்டு பின்னப்படுகின்றன. கவிஞர் தம் பாயிரத்தில் நூல் பாடியதன் நோக்கத்தைத் தெளிவாகக் குறிப்பிடுகின்றார்.

## முடிவுரை

கம்பன் வளமிக்கச் சோழநாட்டுத் திருவழுந்தூரில் தோன்றியவன்; சடையப்பவள்ளலால் ஆதரிக்கப்பட்டு, இராமவதாரக் காப்பியத்தை ஆர்வமுற்றுப் பாடினான். கவிஞர்கள் பலர், கம்பராமாயணப் படைப்பைப் புகழ்ந்துரைக்கின்றனர். கம்பராமாயணத்தைப் பிற இராமாயணங்களுடனும், நூற்களுடனும் ஒப்பிட்டு ஆய்ந்து கம்பன் சிறப்பை நிறுவியுள்ளனர். கம்பன் வாழ்ந்த காலம் கி.பி. 12 ஆம் நூற்றாண்டு என்பது ஆய்வாளர்கள் முடிவு. அக்காலகட்டம், சோழர்கள் பகைப்புலத்தைப் போர் செய்து வென்ற காலமாகும், ஆதலின், காலச் சூழலில் கம்பன் யுத்தகாண்டத்தைப் பெரிதாகப் பாடினான். காப்பிய நோக்கம் ஆணவம் அழித்து அருள் புரிதலாகும். பிறமொழிகளில் கி.பி. 12 முதல் 15 வரை இராமாயண நூற்கள் தோன்றின. கம்பன் தன் காப்பியத்தை விருத்தப்பா வகையால் பாடினான்.

இராமசரிதம் தோன்றிய காலம் கேரளத்தில் குறுநில மன்னர்கள் ஆட்சிசெய்து, தம் நாட்டை ஒரு வல்லரசாக்க முனைந்த காலமான கி. பி. 12 ஆம் நூற்றாண்டின் இறுதியெனக் கொள்ளலாம். தொகுத்துக்கூறின், மலையாள முதல் காவியம் எனக்கருதப்படும் 'இராமசரிதம்' போர் நிகழ்ச்சிகளை விரிவாகக் கூறுவதற்கு ஏற்ற சூழலாக அன்றைய நாடு அமைந்திருந்தது என்று துணியலாம்.

## அடிக்குறிப்புகள்

1. டாக்டர் எஸ் இராமகிருஷ்ணன். மு.நூ.,ப. 38

2. கவிமணி தேசிகவிநாயகம் பிள்ளை, **மலரும் மாலையும்,** (1986) - பக் 21-22

3. மகாகவி சி. சுப்பிரமணிய பாரதியார், **மகாகவி பாரதியார் கவிதைகள்,** (1957), ப. 47.

4. மேற்படி ப. 44.

5. தனியன் (ஒரு நூல் அல்லது ஆக்கியோனைப் புகழ்ந்துபாடுவது)

6. எஸ். வையாபுரிப்பிள்ளை, **தமிழ்ச்சுடர்மணிகள்** (1952) - பக் 127-149

7. டாக்டர் மா. இராசமாணிக்கனார், **கம்பன் யார்?** (1958), ப. 12.

8. Fr. காமில்புல்கே **இராமகதா பரிணாமம்,** (1962) பக். 512 - 515

9. தனியன், மு.நூ.

10. மர்ரே எஸ். இராஜம் பதிப்பு, **கம்பராமாயணம் பாலகாண்டம்** முகவுரை, (1968), பக், 5-7

11. டாக்டர் எஸ். இராசமாணிக்கனார் **சோழர் வரலாறு,** தொகுதி -3 (1947) ப 81.

12. மேலது பக். 113-114.

13. ஹெல்மன் குண்டர்ட்டு, **குண்டர்ட்டு நிகண்டு,** முகவுரை (1975)

14. பி. கோவிந்தப்பிள்ளை, **மலையாளம் பாஷாசரிதம்,** (1980) ப. 112.

15. சீராமன், **இராமசரிதம்,** படலம்: 164: பாடல்: 11.

    (துன்பமென்னும் அலைகளால் அலைக்கழிக்கப்பட்டு தளர்ந்து பிறவிப் பெருங்கடலில் நீந்தி அல்லற் படுவதிலிருந்து விடு பட எது நல்ல வழி?) ஆதி தேவனான மகாவிஷ்ணுவின் மீது ஆழ்ந்து பற்றுக் கொண்டு, இக்கவிதையைப் படிப்பதே சிறந்தவழி. படிப்போர் உள்ளத்தில் இலக்குமிதேவி குடியிருப்பாள். உடல் மண்ணில் வீழந்தபின் உயிர் ஸ்ரீபத்மநாபனின் பாதக்கமலங்களைச் சரணமடையும்)

16. உள்ளூர் எஸ். பரமேசுவரை ஐயர் **கேரள சாகித்ய சரிதம்** தொகுதி 1(1974). ப. 257.

17. கெ. உண்ணிக்கிடாவு, **இராமசரிதத்தில் மொழி,** மலையாள பாஷா படலங்கள், (1974), ப. 112.

18. உள்ளூர் எஸ் பரமேசுவர ஐயர், மு.நூ.

## 3. இராம கதையின் பரப்பு

"வால்மீகி முனிவர், வடமொழியில் இயற்றிய 'ஆதிகாவியம்' வடமொழியில் தோன்றிய முதல் காப்பியமாக மதிக்கப்படுகிறது."[1] வால்மீகி இராமாயணம் என்று இது வழங்கப்படுகிறது;இந்திய மொழிகளிலெல்லாம் இக்கதை இடம் பெற்றுள்ளது. வான்மீகி இராமாயணம் வளர்ச்சிக் காப்பிய வகையைச் சார்ந்தது. கதை வளர்ந்து பெருகி, பேரிதிகாசமாக மலர்ந்துள்ளது. அதன் வளர்ச்சிப் போக்கு நின்றுவிடவில்லை. இடம், மொழி, காலம், பண்பாடு, மரபு - இவற்றையொட்டி இக்கதை பரிணமித்துக்கொண்டு வருகிறது.

கம்பன் தனது காலச்சூழலுக்கு ஏற்றவாறு தமிழ்ப் பண்பாட்டையும் மரபுகளையும், மேற்கொண்டு, வான்மீகரைப் பின்பற்றி, இராமவதாரத்தைப் பாடினான். இது 'கம்பராமாயணம்' என்று வழங்கப்படுகிறது. "பொது வகையில் வான்மீகியைப் பின்பற்றிய போதிலும், தருணங்கள் தோறும் கம்பன் இராமசரித அம்சங்களை வேறுபடுத்திப் பேரழகுபட அமைத்திருக்கிறான். இவற்றையெல்லாம் ஊன்றிநோக்குமிடத்து, கம்பனது பெருநூலை ஒரளவில் முதற்காவியம் என்றும், மற்று ஒரளவில் வழிமுறைக்காவியம் என்றும் நாம் கொள்ளுதல் வேண்டும்"[2].

சீராமன் என்னும் மலையாளக்கவிஞனும் இராம சரிதத்தை வான்மீகி முனிவரைப்பெரிதும் பின்பற்றியும் கம்பர் போன்றோரைச் சிறிது தழுவியும், தன்கால போர்ச்சூழலுக்கு ஏற்ப யுத்தகாண்ட நிகழ்ச்சிகளை விரித்தும், மற்றைய காண்ட நிகழ்ச்சிகளில் பலவற்றைச் சுருக்கியும் பாடியுள்ளான். 'இராமசரிதம்' என்னும் இந்நூல், மலையாளத்தில் ஆதிகாவியமாகப் போற்றப்படுகிறது. இராமாயணத்தின் பாடுபொருள் 'இராவணவதம்' ஆகும். காப்பிய நிகழ்ச்சிகள் அனைத்தும் இதனை மையமாகக்கொண்டே அமைந்துள்ளன. கம்பன் வகுத்துரைத்த 10, 576 பாடல்களைக் (வை.மு.கோ. பதிப்பு) கொண்ட ஆறு காண்டங்களுள், யுத்தகாண்டமே அளவில் பெரியது என்பது நினைவு கூரத்தக்கது. 37 படலங்களுடன் 4,358 விருத்தப்பாக்களால் இஃது விரிந்திருக்கிறது.

சீராமன் படைத்த இராமசரிதம் பெரிதும் யுத்தகாண்ட நிகழ்ச்சிகளைப் பாடுபொருளாகக் கொண்டுள்ளது. இஃது 164 படலங்களையும், 1,814 விருத்தப்பாக்களையும் கொண்டுள்ளது. போர்நிகழ்ச்சிகளுக்கிடையே 128 முதல் 155 வரையுள்ள 77 படலங்கள், கதையின் மிகமுக்கியமான முன்னைய காவிய நிகழ்ச்சிகளைச் சுருக்கமாகக் கூறுகின்றன.

### 1. வான்மீகத்தின் வழி நூற்கள்:

தொல்காப்பியர், பவணந்தி போன்ற தமிழ் இலக்கணச் சான்றோர்கள், நூல்கள் ஆக்கப்படும் நெறிமுறையாகப் பொதுவாக முதல்நூல், வழி நூல் என இரண்டைச் சுட்டுவர்.

முதல் நூலாவது,

**"வினையின் நீக்கி விளங்கிய அறிவின்**
**முனைவன் கண்டது முதனூ லாகும்"[3]**

வழிநூலின் இலக்கணமாகப் பவணந்தி முனிவர்,

**"முன்னோர் நூலின் முடிபொருங் கொத்து**
**பின்னோன் வேண்டும் விகற்பங் கூறி**
**அழியா மரபினது வழிநூ லாகும்"**

எனக் கூறுவார்.

கம்பரும் சீராமனும் வழிநூல் நெறிமுறைகளைப் பின்பற்றி, முதல் நூல் கருத்தையொட்டி தத்தம் மரபுக்கேற்ப இராமாயணக் கதையைப் பாடியுள்ளனர். மேலும், தமிழில் வழங்கிவந்த இராமாயணக் கருத்துகளையும் அவர்கள் ஏற்றுள்ளனர்.

வழிநூலைப் படைப்பதற்குப் பவணந்தியார் நான்கு நெறிகளைத் தருகிறார். அவை:

**"தொகுத்தல், விரித்தல், தொகைவிரி, மொழிப்பெயர்ப்**
**பெனத்தகு நூல்யாப் பீரிரண் டென்ப"[5]**

கம்பன், சீராமன் இருவர்தம் காப்பியங்களை நன்னூலாரின் இலக்கண நெறிமுறையில் ஒப்பிட்டு, கதைப்போக்கை வான்மீகி முனிவருடன் ஒப்புநோக்கி, வான்மீகியிருந்து இருவரும் மாறுபடும் இடங்கள் பொதுவாகக் காட்டப்படுகின்றன.

இவ்வியலில். இராமகதையின் பரப்பு, வடமொழி, தென்மொழி இலக்கியங்களில் இராமாயணச் செய்திகள் இடம் பெறும் பான்மையும் சிறப்பாகத் தமிழ் மலையாளம் மொழிகளில் கதைச் செய்திகள் வரும்மிடங்களும் குறிப்பாகச் சுட்டப்படுகிறது. பிற்கால இராமகதையின் வளர்ச்சியும் தரப்படுகிறது. ஒப்பாய்வுக்குப் பின்புலமாக இவை அமையும்.

### இராமகதையின் பரப்பு

இராமகதை பரதகண்டம் முழுவதும் பன்னெடுங்காலமாக மக்களிடையே பரந்துள்ளது. முழுமையாகவோ பகுதிகளாகவோ செவிவழியாக இக்கதையை மக்கள் கேட்டு இன்புற்று வந்துள்ளனர். கவிஞர்கள் இதனைப் பகுதிகளாகவும் முழுமையாகவும் தனித்தனி நூல்களாக ஆக்கியுள்ளனர்.

இந்திய மொழிகள் அனைத்திலும் இராமகதை எழுதப்பட்டுள்ளது. "சமணர் பிராகிருத மொழியிலும் வடமொழியிலும் கன்னட மொழியிலும் இராமாயண நூற்கள் பலவற்றை எழுதியுள்ளனர். இந்து சமயத்தார்

வடமொழி, தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம் முதலிய மொழிகளில் இராமாயணத்தை ஆக்கியுள்ளனர்"[6].

நெடுங்காலமாக இராமாயணக் கதை, அரசர்கள் அவைக்களங்களில் பாடப்பட்டும் நடிக்கப்பட்டும் வந்தது, நாளடைவில் காலம், இடம், சூழல் இவற்றிற்கேற்பக் கதையில் பலமாற்றங்கள் ஏற்படலாயின. "வால்மீகி உயர்ந்த நோக்கங்களை முன்னிறுத்தி அவை விளங்கும் அழகிய சரிதமொன்றினை இயற்றினார். இதுவே இராமாயணம். ஆனால், இராமசரிதத் தொடக்கம் இவ்வாறு இருப்பினும் பின்னர். கால அடைவில் சமய நூலாகவும் பக்தி நூலாகவும் பரிணமித்து விட்டது. இராமன் மனுஷ்ய நிலை கடந்து தெய்வமாகிவிட்டான். இம்மாறுதலுக்கு ஏற்பப் பிற பேதகதிகளையும் இராமாயணம் பெற்றுவிட்டது"[7]

வான்மீகி முனிவரால் வடமொழியில் படைக்கப்பட்ட இராமாயணம், காவிய நலங்கள் பலவும் பொருந்தித் தனிச்சிறப்போடு விளங்குகிறது. இதனையடியொற்றிப் பல்வேறு மொழிகளில் பரதகண்டம் முழுவதும் இராமாயண நூற்கள் தோன்றலாயின.

(1) தமிழ் நாட்டிலும் இக்கதை பரவியிருந்தது. இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே இக்கதை பரவியிருந்த பான்மையைச் சங்கப்பாடல்கள் உணர்த்துகின்றன.

> **"கடுந்தேர் இராமன் உடன்புணர் சீதையை**
> **வலித்தகை அரக்கன் வௌவிய ஞான்றை**
> **நிலம் சேர் மதரணி கண்ட குரங்கின்**
> **செம்முகப் பெருங்கிளை ................................"[8]**

எனப் புறநானூற்றிலும்,

> **"வென்வேல் கவுரியர் தொன்முது கோடி**
> **முழங்கு இரும்பௌவம் இரங்கும் முன்துறை**
> **வெல்போர் இராமன் அருமறைக்கு அவித்த**
> **பல்வீழ் ஆலம் ....................."[9]**

என அகநானூற்றிலும்,

> **"இருநிலம் கடந்த திருமறு மார்பின்,**
> **முந்நீர் வண்ணன் பிறங்கடை ..........................."[10]**

எனப் பெரும்பாணாற்றுப்படையிலும்

> **"ஐயிருதலையின் அரக்கர் கோமான்**
> **தொடிப்பொலி தடக்கையில் கீழ்புகுந்து அம்மாலை**
> **எடுக்கல் செல்லாது உழப்பவன் போல"[11]**

எனக் கலித்தொகையிலும் காணப்படும் சான்றுகள் இதற்கு அரணாக அமைகின்றன.

(2) ஐம்பெருங்காப்பியங்களிலும் மணிமேகலை, சிலப்பதிகாரம் ஆகியவற்றுள் இராமாயணத்தைப் பற்றிய குறிப்புகள் உள்ளன.

"நெடியோன் மயங்கி நிலமிசைச் தோன்றி
அடல்அரு முந்நீர் அடைத்த ஞான்று
குரங்கு கொணர்ந்து எறிந்தநெடு மலைஎல்லாம்
அணங்குடை அளக்கர் வயிறுபுக்கு"[12]

என மணிமேகலையிலும்,

"........... தம்பியொடும் கான்போந்து
சோவரணும் போர்மடியத் தொல்இலங்கை கட்டழித்த
சேவகன்சீர் கேளாத செவியென்ன செவியே
திருமால் சீர் கேளாத செவியென்ன செவியே"[13]

எனச் சிலப்பதிகாரத்திலும் கூறப்பட்டுள்ளமை காணலாம்.

(3) நாயன்மார்களும் ஆழ்வார்களும் இராமாயணச் செய்திகளை இலைமறை காய்போல் ஆங்காங்கே கூறக்காணலாம்.

"எறியார் கடல்சூழ் இலங்கைக்கோன் தன்னை
முறியார் தடக்கை அடர்த்த மூர்த்தி"[14]

எனத் திருஞானசம்பந்தரும்,

"தலை ஒருபத்தும் தடக்கையது
அரட்டிதான் உடைய அரக்கன் ஒண்கயிலை
அலைவது செய்த அவன் திறல் கெடுத்த ஆதியார்..........."[15]

என நாவுக்கரசரும்,

"திண்தேர் நெடுவீதி இலங்கையர் கோன்
திரள்தோள் இருபதும் நெரிந்தருளி"[16]

எனச் சுந்தரரும் தேவாரத்துள் கூறியவற்றைச் சான்றாகக் கொள்ளலாம்.

(4) ஆழ்வார்களுள், குலசேகராழ்வாரும் திருமங்கையாழ் வாரும் இராமசரித நிகழ்ச்சிகளைக் குறிப்பிட்டுள்ளனர்.

(1) "மன்னுபுகழ்க் கௌசலைதன் மணிவயிறு வாய்த்தவனே!
தென் இலங்கைக் கோன்முடிகள் சிந்துவித்தாய்!"
(2) "திண்திறலாள் தாடகைதன் உரம் உருவச் சிலை விளைத்தாய்"
(3) "தங்கு பெரும் புகழ்ச்சனகன் திருமருகா!"
(4) "பாராளும் படர்ச்செல்வம் பரதன் நம்பிக்கே அருளி
ஆராஅன்பு இளையவனோடு அருங்கானம் அடைந்தவனே!"
(5) "வாலியைக் கொன்று அரசு இளைய வானரத்துக்கு
அளித்தவனே!"[17]

என்னும் செய்திகள் குலசேகர ஆழ்வார்கள் திருமொழியிலும்

(1) "பைங்கண் விறல் செம்முகத்து வாலிமாளப்
படர்வனத்துக் கவந்தனொடும், படையார் திண்கை
வெண்கண் விறல் விராதன் உகவிற் குனித்த
விண்ணவர்கோன் தாள் அணைவீர்"

(2) "கலையிலங்கும் அகல்அல்குல் அரக்கர் குலக் கொடியைக்
காதொடு மூக்குடன் அரியக் கதறி அவள் ஓடி
தலையில் அங்கைவைத்து மலையிலங்கைப் புகச்செய்த
தடந்தோளான்"[18]

எனத் திருமங்கையாழ்வாரின் பாசுர அடிகளாலும் அறியலாம்.

"கி.பி.12 - ஆம் நூற்றாண்டில் வாழ்ந்தவராகக் கருதப்படும் கவிச் சக்கரவர்த்தியான கம்பர் கேரளத்தில் பயணம் செய்து தனது இராமாயணத்தைப் பல இடங்களில் புலவர் மன்றங்களில் பாடிக்கேட்பித்தார் என்றோரு ஐதீகம் உண்டு"[19]

கேரளத்தில் (மலைநாட்டில்) வைணவத்திருப்பதிகளாகக் குறிக்கப்பெறும் திருவெண்பதிசாரம் திருக்காட்கரை, திருமுழிக்குளம், திருப்புலியூர், திருச்செங்குன்றூர், திருவல்லவாழ், திருவண்வண்டூர், திருவட்டாறு, திருவாறான்புழை, திருக்கடித்தானம், திருவித்துவக்கோடு, திருநாவாய் முதலிய கோயில்களில் ஆழ்வார்கள் பாடல்கள் பாடப்பட்டும், இராமாயணக்கதைகள் நடிக்கப்பட்டும் வந்தனவென்று உள்ளூர் பரமேசுவர ஐயர் மேலும் கூறுகிறார்.

தமிழ் வடமொழிக் கலப்பால் கி.பி. 12- ஆம் நூற்றாண்டின் இறுதியில் பாட்டும் மணிப்பிரவாளமும் இருவேறு நிலைகளில் மலையாள மொழியில் இடம் பெற்றன. அதன் தோற்றுவாயாக முதன் முதலாக 'இராமசரிதம்' என்னும் முதல் காவியம் தோன்றியது. இது மலையாள மொழியில் 'ஆதிகாவியம்' எனப் போற்றப்படுகிறது.

## *கம்பனுக்கு முன் இராமாயணம்*

வடமொழியில் மகாபாரதம், தசரதஜாதகம், அற்புதராமாயணம், சேசராமாயணம், சவனராமாயாணம், வசிட்டராமாயணம், லகுராமராமாயணம் பாரத்வாஜராமாயணம், பாலராமாயணம், போதாயனராமாயணம், அக்நிவேஸ்யராமாயணம், யோக வாசிட்டராமாயணம், சங்கிரகராமாயணம் என்ற காபபியங்களிலும், பத்மபுராணம் சைவ மகாபுராணம், அக்னிபுராணம் கூர்மபுராணம், நாரதபுராணம் என்ற புராணங்களும் இராமன் கதையைப் பேசுகின்றன; பேராசிரியர் வையாபுரிப்பிள்ளை, இதனை இலக்கிய உதயத்தில் தருகிறார்.

"கம்பன் காலமான 12 - ஆம் நூற்றாண்டுக்கு முன்பே இராமாயணக்கதை நூல்வடிவிலும் இருந்தது. அது, ஆசிரியப்பாவிலும், வெண்பாவிலும் அமைந்திருந்தது. இவை இப்போது நமக்குக் கிடைக்கவில்லை. எனவே, இராமாயணக்கதை முழுவதையும் தொடர்ச்சியாகத் தெரிந்து கொள்வதற்குக் கம்பன், வால்மீகி இராமாயணக் கதையை தழுவ வேண்டியிருந்தது"[20] எனச் சாமி சிதம்பரனார் கூறுவர்.

## *பிறமொழி இராமாயணங்கள்*

இந்தி மொழியில் கி.பி. 14 ஆம் நூற்றாண்டினராகக் கருதப்படும்

துளசிதாசர் இராமசரிதமானஸ் என்ற காப்பியத்தைப் படைத்தார். அது துளசிராமாயணம் என்று வழங்கப்பட்டு வருகிறது.

கம்பராமாயணம், இராமசரிதம் இவற்றைத் தொடர்ந்து கி.பி, 14 முதல் 16 நூற்றாண்டுவரை தென்னிந்திய மொழிகளிலும் தோன்றிய இராமாயணங்களுள், கண்ணச ராமாயணம் - மலையாளம்; (15 - ஆம் நூற்றாண்டு) அத்யாத்ம இராமாயணம் - மலையாளம் (16-ஆம் நூற்றாண்டு) இராமகதாப்பாட்டு (16 - ஆம் நூ.ஆ) (2) திக்கண்ண இராமசரிதம் - தெலுங்கு (13 ஆம் நூ.ஆ துவிபதி இராமாயணம் - தெலுங்கு (14 - ஆம் நூ.ஆ) பாக்கர இராமாயணம் - தெலுங்கு (14 - ஆம் நூ.ஆ) (3) தோரவே இராமாயணம் - கன்னடம் (16 ஆம் நூ.ஆ முதலிய இராமாயண நூற்கள், கம்பராமாயணத்தைப் போலவே மக்களிடையே அந்த அந்த நாடுகளில் செல்வாக்கைப் பெற்றுள்ளன. இராமானுசரின் சமயக் கொள்கைகளைத் தென்னகம் முழுவதும் பரப்ப இந்நூற்கள் பயனாயின என்று கூறுவது பொருந்தும், இந்நூற்களுக்கு வைணவக் கோட்பாடுகள் நிறைந்த, விரிவான உரைகள் நாளடைவில் எழுதப்பட்டன. இராமாயணக்கதைகள் பல கோயில்களிலும் அரங்குகளிலும் படித்து விளக்கப்பட்டன. வடநாட்டுக்கதை தென்னகம் முழுவதும் கி.பி. 12- ஆம் நூற்றாண்டு முதல் செழித்துப் பரவலாயிற்று.

பிற்காலத்தில் தமிழ் மொழியில் இராமாயண வில்பாட்டு, குழந்தைகளுக்காக வானொலி அண்ணா அய்யாசாமி எழுதிய பாலராமாயணமும், திருவனந்தபுரம் ஐயாசுவாமிகள் எழுதிய அனுமன் பாமாலையும், இராஜாஜி. பி.ஸ்ரீ. போன்றோரின் உரைநடை இராமாயணநூற்களும் கதை பரவ வழிகோலிற்று.

மலையாளத்தில், கேரளவர்மாராமாயணம், துள்ளல் பாட்டு, கதைகள், கம்பராமாயணம் கதாமிருதம், சிந்தையில் ஆழ்ந்த சீதை, ராமசரிதவிலாசம் போன்ற நூற்கள் மலையாளக்கரையில் கதை சிறப்பிக்க காரணமாயிற்று.

### *முடிவுரை*

வான்மீகி ராமாயணத்தின் வழிநூலாகும் கம்பராமாயணம். தமிழ் இலக்கண ஆசிரியர்களின் இலக்கண நெறியைக் கம்பர், கடைபிடித்துள்ளார். கம்பராமாயணத்துக்கு முன்னரே தமிழில் இராமகதைச் செய்திகள் இடம் பெறுகின்றன. மலையாள இராமசரிதம் பொதுமக்கள் உள்ளத்தில் போர் உணர்ச்சியை உண்டு பண்ணுவதற்காக எழுதப்பட்டது. கி. பி. 12 முதல் 16 ஆம் நூற்றாண்டு வரை, இராமணக் கதைகள் தென்னக மக்களிடையே பரவி இருந்தது. பிற்காலத்திலும் இராமாயண நூற்கள் வெளிவரலாயின. இராமாயண நூற்கள், பேரிலக்கியமாகப் போற்றப்படுகின்றன.

## அடிக்குறிப்புகள்

1. C. Kunhan Raja - History of Sankrit Lliterature, p.68
2. எஸ் வையாபுரிப்பிள்ளை - கம்பன் காவியம் - பக் 319
3. தொல்காப்பியம் - பொருள் - மரபியல் - நூற்பா 66
4. நன்னூல் - பாயிரம் - நூற்பா 7
5. நன்னூல் - " "
6. மா. இராசமாணிக்கனார் - கம்பன்யார்? பக்.7.
7. எஸ்.வையாபுரிப்பிள்ளை. கம்பன்காவியம், பக்.18.
8. புறநானூறு - ஊன்பொதி பசுங்குடையார் பாடல் செய்:378
9. அகநானூறு - பாடல்:70
10. பெரும்பாணாற்றுப்படை வரி 29 - 30 கடியலூர் உருத்திரங்கண்ணனார்
11. கலித்தொகை - 38:3-4 தோழிகூற்று
12. சாத்தனார் - மணிமேகலை - உலகஅறவிபுக்க காதை வரி 9-12
13. இளங்கோவடிகள் - சிலப்பதிகாரம் - படர்கை பரவல்
14. திருஞானசம்பந்தர் - தேவாரம்
15. திருநாவுக்கரசர் - தேவாரம்
16. சுந்திரமூர்திசுவாமிகள் - தேவாரம்
17. குலசேகர ஆழ்வார் - பெருமாள் திருமொழி - 'மன்னுபுகழ்'
18. திருமங்கையாழ்வார் - பெரிய திருமொழி
19. உள்ளூர் பரமேசுவர ஐயர் - கேரளசாகித்ய சரித்திரம் பக்: 75
20. சாமி சிதம்பரனார் - கம்பன் கண்ட தமிழகம் - பக். 29 - 20
21. எஸ். வையாபுரிப்பிள்ளை - இலக்கிய உதயம் (இரண்டாம் பகுதி) பக். 121

# 4. இராமகதை அமைப்பும் போக்கும்

தமிழ், மலையாளம், இராமகதைப் படைப்புகளில் கதையின் அமைப்பையும் போக்கையும் அறிதற் பொருட்டுக் கதைக்கருத்துகள், இங்குத் தொகுத்துத் தரப்படுகிறன்றன. கம்பராமாயணம் யுத்தகாண்டம் அண்ணாமலைப் பல்கலைக் கழகப் பதிப்பை ஒட்டி, படலம், பாடல் எண்கள் மேற்கோளாக எடுத்தாளப்படுகின்றன. இராமசரிதம், பேராசிரியர் கிருஷ்ணன் நாயர் பதிப்புக்கு ஏற்பப் படலம், பாடல் எண்கள் மேற்கோளாகத் தரப்படுகின்றன. அடைப்புக்குறிக்குள் இவை சுட்டப்படுகின்றன. கருத்துகள் மிகச் சுருக்கமாகவே உரைக்கப்படுகின்றன.

வடமொழி வான்மீகம் மூலநூலாகக் கருதப்படுவதால், ஒப்பீட்டில், இருவர் தம் படைப்புகளும் ஒப்பிடப்படுகின்றன. வான்மீகி, கம்பர், சீராமன் என்னும் முப்பெரும் கவிஞர்களை ஒப்பிடும் முறை, பொருளாய்வு அடிப்படையில், மேலைநாட்டு ஆய்வுநெறி முறைகளையும் கோட்பாடுகளையும் பின் பற்றி, ஆய்வில் புலப்படுத்தப்படுகிறது.

### *அ. கம்பராமாயண (யுத்த காண்டம்) கருத்துகள்:*

**(1) இராமன் தென்கடலைக் காணல்**

எழுபது வெள்ளம் வானரச் சேனைகளுடன் இராமன் முதலியோர் தென் கடற்கரையினின்று, கடலைக் காண்கின்றனர். சுக்கிரீவன், அனுமன் முதலிய வானர வீரர்களுடன், மேல் நிகழ வேண்டிய காரியங்களைப் பற்றி, இராமன் பேசிக் கொண்டிருக்கிறான்.

**(2) இராவணனது அவை**

எளிய குரங்கினால் எரியுண்ட இலங்கையை மயன் புதுப்பிக்கிறான். இராவணன், மயனுக்கு ஏற்ற பரிசுகளை வழங்கி விடைகொடுத்து அனுப்புகிறான். இராவணன், அரியணையில் வீற்றிருக்க, முனிவர், தேவர் முதலியோரை விலக்கி, தம்பியர், சேனாதிபதிகள், அமைச்சர்கள், புதல்வர்கள் ஆகியோரைத் தன்னருகே அமரும்படிப் பணிக்கிறான். குரங்கினால் இலங்கை நகர் அழிந்தது, அக்குரங்கினைக் கொல்லாமல் விட்ட தீராத பழியை நினைத்து வருந்திக் கூறுகிறான். படைத்தலைவன், "அரசியல் அழிந்ததோ? நம் வலிமை இனி ஒய்ந்ததோ?" என்கிறான். அப்போது அமைச்சன் மகோதரன், "கட்டளை இடுங்கள், அக்குரங்கினை வதைத்து, அந்த மானிடர்களின் உயிர் குடித்துப் பகைமுடிப்பேன்" என்கிறான். பிற அமைச்சர்களான, வச்சிரதந்தன்,

துன்முகன், மாபெரும் பக்கன், பிசாசன் முதலியோர், அவர்தம் கருத்து, பகைவரை அழித்து வெற்றி கொள்வதே என்கின்றனர்.

அப்பொழுது, தம்பி கும்பகர்ணன், "வேதங்களை ஓதி உணர்ந்த தாங்கள் வேறொரு குலத்தவன் மனைவியை நயந்து சிறைவைத்த செயல் நன்றோ? அவள் காலில் வீழந்து வணங்குவது புகழைந்தருமோ? அறநெறிக்கு மாறாகச் சிறைவைத்த அன்றே அரக்கர் புகழ் அழிந்தது; சீதையை விடுத்து, நாம் அம்மனிதர்களுக்கு இளைத்துவிட வேண்டாம்; ஆகவே, போர் புரிதலே தக்கது" என்கிறான்.

இராவணன், தம்பியின் கூற்றிற்கு இசைந்து, போருக்குப் புறப்பட கும்பகர்ணனுக்கு ஆணையிடுகிறான். அது கேட்ட மகன், இந்திரசித்து, தடுத்து, "விரைவில் எனக்குக் கட்டளையிடுங்கள், குரங்குகளைக் கொன்று, அம்மானிடர் இருவரின் தலைகளையும் கொய்துக் கொண்டு வருகிறேன்" என்று சொல்கிறான். இந்திரசித்து கூறியதைக் கண்டித்து, வீடணன், மானிடனான கார்த்தவீரியார்ச்சுனனுக்குத் தோற்ற செய்திகளையும், நந்தி தேவர் சாபமான குரங்குகளை வெல்ல இயலாமையையும் எடுத்துக் கூறுகிறான். "கற்புடைய சீதையை விட்டு நம்குலத்தைக் காப்பாய்" என அறிவுறுத்துகிறான். மேலும் " வேதவல்லியே சீதையாகத் தோன்றியுள்ளாள், இந்திரன் வேண்டுகோளால் திருமாலே இராமனாகத் தோன்றியுள்ளான். மிக உயர்ந்த அம்புகளைப் பெற்றுள்ளான். நம்வாழ்வு நிலைத்திருக்க, நீர் உடனே சீதா தேவியாரை அந்த இராமனிடம் சேர்த்து விடுவது நலமாகும்" என்று அறிவுறுத்துகிறான். இராவணன் பதிலாக "போரில் எம்முடன் எழ வேண்டா" என்று கூறிய மறுமொழி கேட்டு, வீடணன் இரணியன் சரிதம் கூறுகிறான்.

## *(3) இரணியன் வதை:*

வீடணன், இராவணனிடன் நாராயணனைக் கேவலமாக நினைக்கலாகாது, அவரைப் பகைத்து அழிந்தவர்களில் இரணியன் ஒருவன். பிரம்மதேவரிடம் சாகாவரம் பெற்றும், அகந்தையால் நாராயணனை நிந்தித்து அழிந்தான், அவன் மகன் பிரகலாதன் நாராயணனைப் போற்றி திருமால் அருள்பெற்றுச் சிறப்புப் பெற்றான் - என்ற நிகழ்ச்சியை இராவணனுக்கு அறிவுறுத்துகிறான். எனவே, "திருமாலின் தோற்றமாக வந்த இராமனைப் பகைத்துக் கொள்ளலாகாது, தீங்குவிளையும்" என்று கூறுகிறான்.

## *(4) வீடணன் அடைக்கலம்:*

இராவணன் சினந்து, வீடணனைத் துரத்துகிறான். வீடணன் வானில் எழுந்து நீதிபல மொழிந்து இலங்கை விட்டுப்போகிறான். வானரத்தானையைக் கண்டு வியக்கிறான். மேல் செய்வன குறித்து அமைச்சரை வீடணன் வினவுகிறான். இராமனைக் காணுமாறு அமைச்சர்கள் கூற, வீடணன் மகிழ்ந்து போகிறான். இராமன் கடற்கரைக் காட்சிகளால் கவலை கொள்ளுகிறான். சுக்கிரீவன் ஆறுதல் கூறுகிறான். வீடணன் வர, வானரர் எதிர்க்கின்றனர். அனுமன் ஏவலால், மயிந்தனும்

துமிந்தனும் வருகின்றனர். இராமனிடம் செய்தியைக் கூறுகின்றனர். இராமன், வீடணன் அடைக்கலம் குறித்து நண்பர்களுடன் ஆராய்கின்றான். சுக்கிரீவன், சாம்பன், தானைத்தலைவன், அதனை எதிர்க்கின்றனர். அனுமன், வீடணனைப் பற்றிய உரைகளால், ஏற்கக் கோருகிறான். இராமன் அதனை உவகையுடன் ஏற்று அறிவுரை கூறுகிறான். இராமன், அடைக்கலம் அருளிய செய்தியை வீடணன் அறிந்து மகிழ்கிறான். விரைந்து சென்று இராமன் திருவடிகளில் விழுந்து வணங்குகிறான். இராமன் வீடணனுக்கு முடிசூட்ட இலக்குவனை வேண்டுகிறான். திருமுடி சூட்டு, இலக்குவனால் நடைபெறுகிறது. இராமன் வீடணனைத் தம்பியாக ஏற்கிறான். வீடணனோடு பாடிவீட்டை வலம்வர இராமன் பணிக்கிறான்.

## *(5) இலங்கை பற்றி இராமன் கேட்டல்*

இலங்கையின் அரண்மனைப் பற்றி இராமன் வினவ, வீடணன், இலங்கை அரண், வாயில் காப்போர், கோயில் காவலர், படைகள் அளவு, இராவணர் துணைவர் பெருமை, சேனைக் காவலர் பிரகத்தன் வலிமை, கும்பகர்ணனது வலிமை, இராவணன் புதல்வர்களான இந்திரசித்து, அதிகாயன், தேவராந்தகன், நராந்தகன், திரிசிரா ஆகியோரின் ஆற்றல், இராவணன் திறம், இலங்கையில் அனுமன் புரிந்த வீரச் செயல்கள் இவற்றை விரித்துரைக்கின்றான். மேலும், இலங்கை எரிந்த செய்தியையும், அதை அவன் மீண்டும் படைத்த பான்மையையும் கூறுகிறான். இலங்கையைக்காக்க அடைக்கலம் புகுந்த செய்தியைக் கூற, இராமன், அனுமனைப் புகழ்ந்துரைக்கிறான்.

## *(6) வருணனிடம் இலங்கைக்கு வழி வேண்டுதல்*

கடல் கடக்க இராமனுக்கு வீடணன் வழி கூறுகிறான். அதன்படி, இராமன் வருண மந்திரத்தைத் தியானிக்கிறான். ஏழுநாட்கள் சென்றும் வருணன் வராமையால் இராமன் சினமடைந்து கடலின்மேல் அம்பு விடுகிறான். அதனால், கடல் உயிரினங்கள் அழிகின்றன. மேலும், சதுமுகன் கணைஏவ, வருணன் தோன்றி பணிவுடன் அடைக்கலம் வேண்டுகிறான். காலந்தாழ்ந்தமைக்குக் காரணம் கூறிய வருணன், மருகாந்தாரத் தீவுபற்றிக் கூறுகிறான். இராமன் அம்பு தொடுத்து அங்குள்ள அவுணரை அழிக்கிறான். இராமன் கடல் வழிவேண்ட., வருணன் சேதுபந்தனம் கட்டப் பணிக்கிறான்.

## *(7) சேது பந்தனம்*

அனுமன் சேதுகட்ட நளனை அழைக்க, உடன்பட்ட நளன், அவரவரர்க்கு உரியன கொண்டு வர வேண்டுகிறான். கடலை அடைக்க சாம்பன் வருமாறு சேனைக்குக் கூறுகிறான். வானரச் சேனை மலைகளைக் கொண்டு வருகிறது. நளன் மலைகளை அடுக்குகிறான். சேது கட்டும் நிகழ்ச்சி மூன்று நாட்கள் நடக்கிறது. மலை சுமந்து வருகின்றன வானரங்கள்; மலைகளும் மரங்களும் கடலில் மறைகின்றன. சேதுவின்

தோற்றம், இந்திரன் வில் கிடந்தது போல விளங்கியது. சேது அமைந்த பின் சுக்கிரீவன் முதலியோர் இராமனுக்குத் தெரிவிக்கின்றனர்.

### *(8) ஒற்றுக்கேள்வி*

இராமன், சேதுகாணச் செல்லுகிறான். படையொடு அணைவழிக்கடந்து போகிறான். நகர்ப்புறத்தே சுவேல மலையில் தங்குகிறான். அங்குப் படைவீடு அமைக்குமாறு பணிக்கிறான். நளன் பாசறை அமைக்கிறான், இராவணன் ஒற்றரை வீடணன் பிணித்து இராமர் முன் நிறுத்த, அவர்களுக்கு அபயம் அளித்து, உண்மை கூற வேண்டுகிறான். உளவறியவந்த ஒற்றர், தாம் சுகன், சாரணன் என்று தம் பெயர்களைக் கூறச் செய்தி கேட்டு, முறையே ஒற்றரைத் திருப்பிச் செல்லப் பணிக்கிறான்.

இராவணன், இரவில் மந்திராலோசனை செய்கிறான், இனிச் செய்ய வேண்டிய காரியத்தை வினவப், பாட்டன் மாலியவான், பகைவர் வலிமை பற்றிக் கூறி, இனி எதுவும் செய்வதற்கில்லை என்கிறான். மாலியவானிடம் சினந்து, வீடணனைப் போல அவனையும் செல்ல வேண்டுகிறான். அப்பொழுது சேனைத் தலைவன் எழுந்து, எண்திசைக் காவலர்களை வென்ற இலங்காபதியின் வல்லமையை எண்ணிப் பார்க்க வேண்டுகிறான். அப்போது இராமனிடமிருந்து விடுபட்டு ஓடிவந்த தூதரான சுகனும் சாரணனும் தாங்கள் அங்கே கண்ட காட்சிகளையும், தங்களைக் காட்டிக்கொடுத்த செய்கையையும், இராமனது உரையையும் கூறி நிற்கின்றனர். அது கேட்ட மாலியவான்; 'சீதையை விடுதி ஆயின் தீரும் தீமை', என்கிறான். இராவணன் அவனை இகழ்ந்து பேசுகிறான்.

### *(9) இராமன் இலங்கையைக் காணல்*

இராமன் பரிவாரங்களுடன் மலைக்குமேல் ஏறுகிறான். இலங்கையின் சிறப்பை இளவலுக்குக் கூறுகிறான். தெருக்களின் ஒழுங்கு, பெருமை, மதில்கள், அகழி முதலியவற்றைக் காட்டுகின்றான். இராவணன் வானரச் சேனையைக் காண்பதற்காகப் பல அரக்கர்களுடன் கோட்டையின் வடக்குக் கோபுரத்தில் வந்து நிற்கின்றான்.

### *(10) இராவணன் வானரைத்தானையைக் காண்டல்*

இராவணன் கோபுரத்தின் மேல் ஓர் குன்று போல் நின்று, இராமனைக் காண்கிறான். இராவணன், திருமேனி நிறத்தினால், இராமனைத் தெரிந்துகொள்ள, ஒற்றனை (சாரன்) விளித்து, மற்றவர்களை இன்னின்னாரென்று காட்டுமாறு கூறுகின்றான். சாரன், தங்கையின் உறுப்பறுத்த இலக்குவன், வெய்யவன் புதல்வன் சுக்கிரீவன், அனுமன், ஜாம்பவான், சேனாதிபதி நீலன், நளன், குமுதன், கவயன் நெடுங்கேசரி, முரபன், சரபன், பசைன், இடபன், சுடேணன், தமிமகன் சங்கன் - முதலிய யாவரையும் தனித்தனி இராவணனுக்குக் காட்டி அவரவர் திறமைகளையும் தெரிவிக்கின்றான். மேலும், வானரச் சேனையின் அளவை எவராலும் கூறவியலாது என்கிறான். சினங்கொண்ட இராவணன் "அற்பக்குரங்குக்

கூட்டங்களைக் கூறுகிறாயா? மான் கூட்டம் சிங்கத்தை என்ன செய்ய முடியும்?" என இகழ்ந்து கூறுகிறான்.

### *(11) இராவணன் மகுடத்தைச் சுக்கிரீவன் பங்கப்படுத்துதல்*

இராமன், அரக்கரை இன்னின்னார் எனத் தெரிவிக்க வீடணனிடம் வேண்டுகிறான். வீடணன் புன்தொழில் இராவணனைக் காட்டுகிறான். கேட்டு வெகுண்ட சுக்கிரீவன் இராவணன் மேல் பாய்கிறான். இருவருக்கும் கைகலப்பு உண்டாகிறது. சுக்கிரீவனைக் காணாது, இராமன் வருந்தியிருக்க, அவன் இராவணன் மகுடத்துடன் இராமனை அடைகிறான். இராமன் சுக்கிரீவனைத் தழுவித் தன் அன்பை வெளிப்படுத்துகிறான். வீடணன், சுக்கிரீவன் பெற்ற வெற்றியைப் போற்றுகிறான். கதிரவன் மறைய, இராமனும் இராவணனும் தத்தம் இருக்கைகளை அடைகின்றனர்.

### *(12) இராவணன், வானரைச் சேனை அணிவகுப்பை அறிதல்*

இராவணன் மிக வருந்தி, ஒற்றர் சார்த்தூலனிடம் இராமன் சேனை பற்றிக் கேட்கிறான். சார்த்தூலன், " மாருதி 17 வெள்ளம் சேனையுடன் மேற்கு வாயிலிலும், அங்கதன், 17 வெள்ளம் சேனையுடன் தெற்கு வாயிலிலும், நீலன் 17 வெள்ளம் சேனையுடன் கிழக்கு வாயிலிலும் நிற்கின்றனர்" என்கிறான். மேலும் 17 வெள்ளம் சேனையுடன் சுக்கிரீவன், இராமர், இலக்குவன் ஆகியோர் வடக்கு வாயிலில் நிற்கின்றனர். இன்னும் இரண்டு வெள்ளம் சேனைகள் படை வீரர்களுக்குத், தம்பி வீடணன், ஒவ்வொரு கோட்டையின் வாயிலைச் சுற்றிப்பார்த்து அங்குள்ள நிலைமையைத் தெரிவிக்கின்றான்" என்று கூறுகிறான். இராவணன், சார்த்தூலன் கூற்றுக் கேட்டு, அமைச்சரோடு ஆலோசனை நிகழ்த்துகிறான். நிகும்பன், "நம்மிடம், மிக்க வலிமையுள்ள ஆயிரம் வெள்ளம் உள்ளது. குரங்குச் சேனை எழுபது வெள்ளமே உள்ளது. எழு, மழு, தண்டு, வேல், வாள், சூலம் முதலிய படைகளுடன் பொருதக், குரங்கர் என் செய்வர்?" என்கிறான்.

மாதுலத் தலைவனான மாலி, முன்னர் குரங்கு செய்த தீச்செயலைக் கூறிச் சீதையை விட்டு விட்டு, "அடைக்கலம் புகுவது அன்றி பிழைப்பில்லை" என்கிறான். இராவணன் மாலியைக் கடிந்து கூற, அவன் பதில் பேசாதிருக்கிறான். இராவணன் சேனையினை அணி வகுக்குமாறு கட்டளையிடுகிறான். கதிரவன் தோன்ற, இருள்நீங்க, வானரச் சேனை இலங்கையை வளைக்கிறது.

### *(13) அங்கதன் தூதுரைத்தல்*

இராமன், தூதுவிடுதல் பற்றி வீடணனிடம் பேசுகிறான். வீடணன் முதலியோர் வரவேற்க, இலக்குவன் மறுத்துரைக்கின்றான். 'தூதுவிடுப்பது நீதிமுறை' என்று கூறி, அங்கதனைத் தூது செல்லுமாறு இராமன் பணிக்கிறான். அங்கதன் இராவணனது இருக்கை புகுந்து, அவனது ஆற்றலை வியந்து நிற்கிறான். இராவணனும் அங்கதனும் தம்தம்

வலிமையினைக் கூறுகின்றனர். தூதாக, 'சீதா தேவியை விடுத்து, சுற்றத்தாருடன் இராமனைத் தொழுது வாழ விரும்புவாயாயின் உடனே புறப்பட' விழைகின்றான். இச்சொற்களைக் கேட்ட இராவணன், அங்கதனை எற்றப்பணிக்கிறான். தன்னைப் பிடிக்க வந்த நால்வரையும் அழித்து, எச்சரிக்கிறான் அங்கதன். இராமன் அடிபணிந்து, "இராவணன் முடித்தலை அற்றபோது அல்லாமல் ஆசை அறான்" எனக் கூறுகின்றான்.

## *(14) முதல்போர்*

வானர சேனைக்குத் தலைமை ஏற்று இராமன் போரைத் தொடங்க, இலங்கைக் கோட்டையை முற்றுகையிடக் கட்டளையிடுகிறான். வானரப்படை அகழியைத் தூர்க்கின்றது. அரக்கர் சேனை போருக்கு எழுகிறது. இருவர் சேனைகளும் ஒன்றையொன்று தாக்குகின்றன. போர்க்களம் குருதியால் நிறைகின்றது. வானரங்கள் மதிலினின்று இறங்குகின்றன. அரக்கர் சேனை ஆரவாரத்துடன் வெளி வருகின்றது. அரக்கர் சேனை நிலைகுலைய, சுக்கிரீவன் சினந்து போர் செய்கிறான். அரக்கர் சேனை அழிவு கண்டு, விச்சிரமுட்டி வந்து பொருதுகிறான். அவனைச் சுக்கிரீவன் தாக்குகிறான்; அவன் அழிகிறான்.

கீழை வாசலிலிருந்து நீலன், அரக்கனை மரம், மலைகளால் தாக்குகிறான். அரக்கன் கும்பனுக்கும் கரடி இடும்பனுக்கும் போர் நடக்கின்றது. பிரகத்தனும் நீலனும் போர் புரிகின்றனர். நீலன் தன் வாலிற்கட்டி இழுத்து நெருக்கி, அவன் உயிரைப் போக்குகிறான். தெற்கு வாயிலில் இருந்த சுபாரிசன் என்ற அரக்கர்படைத் தலைவனையும், அவன் சேனைகளையும் அங்கதன் கொன்று குவிக்கிறான். மேலை வாயிலில் நூற்றிரண்டு வெள்ளம் அரக்கர் சேனையுடன் இருந்த துன்முகனை அனுமன் கொன்றொடுக்குகிறான். வடக்கு வாயிலிலிருந்த இலக்குவன், அரக்கர்கள் படைத்தலைவனையும் சேனையையும் நாசஞ்செய்கின்றான். இராவணன் தூதர்கள், நாற்றிசையிலும் நிகழ்ந்தனவற்றைத் தெரிவிக்கின்றனர். இராவணன் பெருஞ்சினம் கொண்டு போர்க்கோலத்துடன் தானே போருக்குச் செல்லத்துணிந்து எழுகிறான். ஒற்றர் மூலம் செய்தி அறிந்து, இராமன், போர்க்கோலம் பூண்டு புறப்படுகிறான். அவன் பின்னணியில் இலக்குவன் நிற்கிறான். அரக்கர் படையும் வானரப்படையும் கைகலக்கின்றன. இருதரப்படை வீரர்களும் வீழ்கின்றனர். இராவணன் வில் நாண் ஒலி கேட்டு வானரங்கள் நடுங்குகின்றன. இராவணனுக்கும் சுக்கிரீவனுக்கும் போர் நிகழ்கிறது. சுக்கிரீவன் சலித்துவிட, அனுமன் இராவணனைத் தாக்குகிறான். அனுமன் அயர்ந்து விழ, இராவணன் வானர வீரர்களின் போர்க்கருவிகளை எள்ளிநகையாடுகிறான். இலக்குவனுக்கும் இராவணனுக்கும் போர் நடக்கிறது. இலக்குவனது நாண் ஒலி கேட்டு அரக்கர்கள் அஞ்சி ஓடுகின்றனர். அம்புமாரியைத் தொடர்ந்து, இராவணன், இலக்குவனின் அம்பறாத் தூணியை அறுத்து வீழ்த்துகிறான்.

மயக்கம் நீங்கிய அனுமன் இராவணனுடன் வீரவுரை கூறி

குத்துப்போர் செய்கின்றான். அநுமன் இராவணன் மார்பில் குத்த, அவன் சாய்கிறான். அயர்வு நீங்கி இராவணன், அநுமன் மார்பில் ஓங்கிக் குத்த, அநுமன் வீழ்கிறான். உடனே இலக்குவன் இராவணனோடு போர் செய்ய, வேலேற்று இலக்குவன் தளர்ந்து வீழ்கிறான். அவன் உடலைத் தூக்க முயன்ற இராவணன் திகைத்து நிற்கிறான். அநுமன் உடனே, இலக்குவனை எளிதில் தூக்கிக் கொண்டு இராமன் இருந்த இடத்தை அடைகிறான். இராமன் இராவணனை எதிர்க்கச் செல்லுகிறான். அநுமன் வேண்டுகோள்படி அனுமன் தோள் மீதமர்ந்து கோதண்டத்தை வளைத்து பேரொலி எழுப்புகிறான். இருவரும் தனித்து நின்று போரிடுகின்றனர். அம்பு மழைபெய்கின்றது. இராவணன் தேர், வில், வாள், கொடி, குடை ஆகியன இழந்து தன்னந்தனியாக நிற்கிறான். இராவணன் நாணி நின்ற நிலையில், இராமன் அருள்கூர்ந்து அறிவுரை கூறி " இன்று போய் போர்க்கு நாளை வா" எனக் கூறுகின்றான். இராவணன் அது கேட்டு, தலைகுனிந்து இலங்கை நோக்கி நடந்து செல்லுகிறான்.

### *(15) கும்பகர்ணன் வதை*

போர்க்களத்திலிருந்து வறிதே இலங்கைக்கு மீண்டஇராவணன், தூதரிடம் எட்டுத்திக்கிலுமுள்ள அரக்கர் சேனையைக் கொணரப் பணிக்கிறான். அமளியில் வருந்தி இருந்த இராவணனிடம், பாட்டன் மாலியவான் நிகழ்ந்ததை வினவுகிறான். செய்தியறிந்து "இனியேனும் சீதையை விட்டுவிட்டால் வாழலாம்", என்று கூறுகிறான். அவனைச் சினந்த மகோதரன், ஆறுதல் கூறி நிற்கின்றான். தூதுவர்களை அழைத்து, உறங்கும் கும்பகர்ணனை எழுப்பி அழைத்து வரப் பணிக்கின்றான். வீரர்கள் அவனைப் பல்வகையால் முயன்று துயில் எழுப்புகின்றனர். எழுந்த கும்பகர்ணன், பல்வகை உணவை உட்கொண்டு இராவணன் முன் வணங்கி நிற்கிறான். தம்பியைத் தழுவி, உணவு அளித்துப் போர்க்கோலம் செய்விக்கிறான். "போர்க்கோலம் ஏன்?" எனக் கும்பகர்ணன் வினவ, இராவணன் செய்தி கூறுகிறான். "சானகி துயர் இன்னுந் தவிர்ந்ததில்லையா? தேவியை விடுக, அறத்தை மேற்கொள்க" எனக் கும்பகர்ணன் அறிவுரை கூறுகிறான். இராவணன் சினமொழி கேட்டு, "என்னை வெல்லும் மானிடர் உன்னையும் வெல்லுவர், ஆதலின் ' யான் மாண்ட பின்னராவது "நீ சீதையை விடு" எனக் கூறிப் போர்க்கோலம் பூண்டு, செஞ்சோற்றுக்கடன் கழிக்கப் பெரும்படையுடன் போர்க்களம் புகுகிறான். கும்பகர்ணன் தன்மையை வீடணன், இராமனுக்கு எடுத்துக் கூறுகிறான். சுக்கிரீவன், கும்பகர்ணனை உடன் சேர்த்துக் கொள்ள வேண்ட, வீடணன் செல்லுகிறான். "வந்தது தகுதி அன்று" எனக் கும்பகர்ணன் கூறுகிறான். 'இராமனைச் சரண் புகுமாறு' அவனிடம் வீடணன் வேண்டுகிறான். " நீர்க்கோல வாழ்வை நச்சி நான் இராமனுடன் வந்து சேர்தல் நீதியன்று; நாங்கள் போரில் இறந்துபடுவது திண்ணம், நீர்க்கடனும் தீக்கடனும் செய்ய நீ ஒருவனாவது உயிர் பிழைத்தால் நன்றேயாம்". ஆதலின் " நீ விரைந்து சென்று இராமனுக்குத் துணையாக நின்று" பெருமை பெறுமாறுக் கூறுகின்றான். வீடணன் உரைகேட்ட

இராமன், விதிப்படி நடக்க விழைகின்றான். கும்பகர்ணன் ஆணையால், அரக்கர் சேனை வானர சேனையை வளைக்கின்றது.

கும்பகர்ணன், தன்னை எதிர்த்த நீலன், அங்கதன், அனுமன் முதலியோரை அடித்து ஓட்டுகிறான். அப்போது இலக்குவன் பல அம்புகளைத் தொடுத்து அரக்கர் படையைக் கொன்றொழிக்கிறான். இலக்குவன் வில்ஆண்மையைக் கண்டு கும்பகர்ணன் வியந்து நிற்க, அநுமன் தோள்மேல் ஏறி இலக்குவன் போர் செய்கிறான். இருவருக்கும் பெரும்போர் நடக்கிறது. இது கண்டு சுக்கிரீவன் தாக்குகிறான். அனுமனைக் கும்பகர்ணன் போருக்கு அறை கூவ, அநுமன் மறுக்கிறான். சுக்ரீவனுக்கும் கும்பகர்ணனுக்கும் போர் நடக்கிறது. சுக்கிரீவன் நினைவிழந்து வீழ்கிறான். அவனைக் கும்பகர்ணன் எடுத்துச்செல்ல, அநுமன் பின் தொடர்கிறான். கும்பகர்ணன் வாயிலை இராமன் அடைக்கிறான். கும்பகர்ணன் இராமனை இடித்துரைக்கிறான். சுக்கிரீவன் மயக்கம் தெளிந்து கும்பகர்ணனைத் தாக்கி, அவன் மூக்கையும் காதையும் கடித்துச் செல்கிறான். உணர்வுற்ற கும்பகர்ணன் வாள்போர் செய்கிறான். குரங்குச் சேனையின் அழிவைச் சாம்பன் இராமனுக்குப் புலப்படுத்துகிறான்.

இராமன் குமபகர்ணனுடன் போர் தொடுக்கிறான். இராவணன் பெரும்படையை உதவிக்கு அனுப்புகிறான். வந்த சேனையை இராமன் எதிர்த்து நிற்கிறான். கும்பகர்ணன் பெருங்கோபத்துடன் போர் செய்கிறான். இராமன் வாள்படையால் கையை அறுத்து வீழ்த்துகிறான். வானரப்படைகளைக் கும்பகர்ணன் மேலும் அடிக்கக்கண்டு, இராமன் அனல்கக்கும் அம்புகளால் அவன் இரு கால்களைத் துண்டித்து முண்டமாக்குகிறான். உள் உணர்வு பெற்ற கும்பகர்ணன், வீடணனைக் காக்குமாறும் அரக்கர்களுக்கு நற்பதவி அளிக்கவும் வேண்டி, சிறுபாணத்தால் தன் தலையைத் துணித்துக் கடலில் இடவும் வேண்டுகிறான். இராமனும் உடன்பட்டுச் செய்து முடிக்கிறான். செய்தியை அரக்கர்கள் இராவணனுக்கு உணர்த்துகின்றனர்.

### (16) *மாயாசனகன்:*

இராவணன் காமம் மிக்குற்று சீதையை அடையும் வழியை மகோதரனிடன் கேட்கிறான். "மருத்தனைச் சனகனாக உருமாற்றிச் சீதைக்குக் காட்டுக" என மகோதரன் கூறுகிறான். இராவணன் நிசி வேளையில் சீதையை நோக்கி "நாளை இரவிற்குள் அந்த மானிடர் இருவரும் என் வாளுக்கு இரையாகிவிடுவர்; என்னை ஏற்று இரங்கி என் உயிரைப் பாதுகாப்பாயாக" என்கிறான். சீதை, அங்குள்ள ஒரு துரும்பைப்பார்த்துக் கூறுவதுபோல "ஏ இராவணத்துரும்பே, என்னிடம் நெருங்குவாயாகில் நீ உடனே மடிவாய்; உன்குலம் அழியும்", எனப் பதிலுரைக்கிறாள். இராவணன் சீதையின் முன் நிலத்தில் விழுந்து வணங்குகின்றான். சீதை, இராவணனுக்குக் கற்பு, அறம்பற்றி அறிவுறுத்துகின்றாள். இராவணன், "இராமனை வெல்வது மட்டுமன்று, அயோத்திக்கும் மிதிலைக்கும் அரக்க வீரர் சென்றுள்ளார்" என்று உரைக்கின்றான்.

அப்பொழுது மாயாசனகனைமகோதரன், அங்குக்கொண்டு வருகின்றான். மாயாசனகனைக் கண்டு சீதை வாய்விட்டு அரற்றுகிறாள். 'அறத்தின் நின்றவர்க்கு விளைவு இதுதான்' எனப்பலப்படக் கூறிப் புலம்புகின்றாள். மீண்டும், இராவணன் சீதையை இணங்குமாறு வேண்டுகின்றான். இதனைக்கேட்ட சீதை சினந்து வானரப் பெருமைகளை எடுத்துக் கூறுகின்றாள். இராவணன் சினந்து சீதையிடம் விரைந்து செல்ல, மகோதரன், "தந்தை வேண்ட இவள் இணங்குவாள்" என்று கூறி அவனைத் தடுக்கின்றான். மாயாசனகன் சீதையிடம் "இராவணன் கருத்திற்கு இசைக" என்று கூற, சீதை அவனைக் கடிந்து கூறுகிறாள். இராவணன் மாயாசனகனைக் கொல்வதற்கு வாளை உருவுகின்றான். சீதை இராவணனிடம், "உன்னால் எதுவும் செய்ய இயலாது" என்கிறாள். மாயாசனகனைக் கொல்லச்சென்ற இராவணனை மகோதரன் தடுக்கிறான். அப்பொழுது கும்பகர்ணன் இறந்தமையை இராவண்ன் அறிகின்றான். இராவணன் அழுது அரற்றுகின்றான். சீதை மகிழ்ச்சியடைகிறாள். அமைச்சர்கள் இராவணனைத் தேற்ற, அவன் அகல்கின்றான். மகோதரன் மாயாசனகனைச் சிறையில் வைக்கப்பணித்துப் போகிறான். மருத்தன் மாயாசனகனாக வந்த பான்மையைத் திரிசடை கூற, சீதையின் துயரம் நீங்குகிறது.

## *(17) அதிகாயன் வதை*

இராவணன், அசோக வனத்திலிருந்து சினத்துடன், எதுவும் பேசானாய் அரண்மனையை அடைகின்றான். தன் அமைச்சர்களையும் வீரர்களையும் கடிந்து "போருக்குச் செல்லுங்கள் அல்லது இங்கேயே மடியுங்கள்" என்கிறான். அது கேட்ட இளைய புதல்வன் அதிகாயன், தனது வீரத்தை மிகுத்துக் கூறுகிறான். அதிகாயன் வஞ்சினம் கூறிப் போருக்குச் செல்லுகிறான். நால்வகைப் படைகளுடன் கும்பன், அகம்பன், நிகும்பன் முதலியோர்களுடன் செல்லுகின்றான். அதிகாயன் கும்பகர்ணனது உடலைக்கண்டு வருந்துகின்றான். "அம்மானுடரைக் கொல்வேன்" எனச் சூளுரைக்கின்றான். அதிகாயன், இலக்குவன்பால் தூது அனுப்புகிறான். மயிடன் இராமனை அடைய, வானரர் அவனைப் பற்றுகின்றனர். இராமன், வானரரை விலக்கி, வந்த காரியம் வினவ, இலக்குவனிடம் செல்ல வேண்டும் என்கின்றான்; தூது வந்த காரியத்தைக் கூறுகின்றான். இராமன், இலக்குவனைப் போர்க்குச் செல்லுமாறு பணிக்கின்றான். வீடணன் அதிகாயனது திறத்தையும் அவன் வரலாற்றையும் கூறுகின்றான். இராமன் இலக்குவனது வலிமையைத் தெரிவிக்கின்றான். வீடணன் உடன் சென்று போர்க்காண இராமன் ஏவுகின்றான். இலக்குவன், வீடணனும் உடன்வர, போர்க்களம் புகுகின்றான். இருபக்க சேனைகளும் நெருங்கிப் பொருதுகின்றன. வானரப்படை சிதறுகின்றது. சிதறிய வானரர்க்குத் தேறுதல் கூறி இலக்குவன் விற்போர் செய்கின்றான். இலக்குவன் அம்புகளால் நாற்படைகள் அழிகின்றன. தாருகன், காலன் முதலியோரைச் சூலமும் கணிச்சியும் கொண்டு அழிக்கின்றான்.

அதிகாயன் படையுடன் இலக்குவன் போர் செய்கின்றான். இராவணன் அனுப்பிய யானைப்படையைத் தாக்குகின்றான். யானைப் படைகள் நிலை குலைகின்றன. அநுமன் புகுந்து, யானைப் படையை அழிக்கின்றான். தேவதத்தன் அநுமனோடு பொருதி இறக்கின்றான். அதிகாயன் "அனுமனைக் கொல்வேன்" என வெகுண்டு வருகிறான். அநுமன் 'திரிசிரனையும் தேய்த்தே கொல்வேன்' என வீரவுரை கூறுகின்றான். திரிசிரத்தன் வரவே, அவனை எதிர்த்து அழித்த அனுமன், மேல்திசை வாயிலைச் சேர்கிறான். அதிகாயன் தேரில் நின்று இலக்குவனுடன் பொருத, அங்கதன் தோள் மேல் நின்று இலக்குவன் பொருதுகின்றான். அதிகாயன் படைகள் அழிகின்றன. தனியாக வந்த அவனிடம் "உன்படைகள் அழியத் தனியனானாய், நீ போய் விடுகிறாயா போர் செய்கிறாயா?" என்று கேட்கிறான். "உன்னைக் கொல்லமால் போகேன்" எனப் பதிலிறுக்கின்றான் அதிகாயன். இருவர் பக்கமும் அம்புகள் பாய்கின்றன. காற்றரசன் "நான்முகன் படையால் அன்றி இறவான்" என்று கூற, அப்படையால் இலக்குவன் அதிகாயன் தலையை அறுக்கின்றான். வீடணன், 'இந்திரசித்தும் இறப்பது உறுதியே' என எண்ணுகின்றான். போரில் நராந்தகன் அங்கதனுடன் பொருது வீழ்கிறான். போரில் மத்தன் நீலனுடன் பொருதுமாள்கின்றான். வயமத்தன் இடபனையும், சுக்கிரீவன் கும்பனையும், அனுமன் நிகும்பனையும் கொல்லுகின்றனர். அதிகாயனும் பிறரும் இறந்தமையைத் தூதர் இராவணனுக்கு அறிவிக்கின்றனர். இராவணன் நிலைகுலைந்து வருந்துகிறான். தானியமாலி, இராவணன் அடியில் விழுந்து அரற்றுகின்றாள். காமம் பிடித்த இராவணனை வைகின்றாள். சீதையால் வரும் அழிவைக் கூறிப் புலம்புகின்றாள். தானிய மாலியை உருப்பசியும் மேனகையும் அரண்மனைக்குக் கொண்டுபோகின்றனர். இலங்கையிலுள்ளோர் யாவரும் வருந்துகின்றனர்.

### *(18) நாகபாசச் செயல்கள்*

அரக்கியர் அழுகை கண்டு, இந்திரசித்தன் எழுகின்றான். இராவணன் இசைவுடன் போர்க்கோலம் பூண்டு களம் புகுகின்றான். "வருபவன் யார்?" என இலக்குவன் வினவ, வீடணன் அவன் வன் திறனைக் கூறுகிறான். இலக்குவனுக்குத் துணையாகச் சுக்கிரீவன் வருகிறான். இருதிறப்படைகளும் போர் செய்கின்றன. நீலன், மயிந்தன், துமிந்தன் முதலிய வானர வீரர்கள் கணக்கற்ற அரக்கர்களை அழிக்கின்றனர்.

அப்பொழுது இந்திரசித்தன் கடுஞ்சினத்துடன் பெரும்போர் புரிகின்றான். வானரப்படைகள் அழிகின்றன. அதுகண்ட சுக்கிரீவன் இந்திரசித்தனை மரத்தால் தாக்குகின்றான். இந்திரசித்தன் சுக்கிரீவன் நெற்றியிலும் மார்பிலும் பாணத்தைச் செலுத்துகின்றான். அதுகண்ட அனுமன், வெகுண்டு ஒரு பெரிய குன்றை எடுத்து எறிகின்றான். ஓராயிரம் பாணங்ளை அனுமன் மீது ஏவ, அனுமன் குருதிசோரத் தளர்ந்து விடுகின்றான். நீலன் ஒரு மலையை அரக்கன்மீது எறிகின்றான்.

வாளிகளினால் இந்திரசித்தன் நீலனை நடுங்கச் செய்கிறான். இடையே அங்கதன் நேரிட, அவன் வேகவாளியால் மயங்கி விழச்செய்கின்றான். அதுகண்ட இலக்குவனிடம் வீடணன் "இவனை நீயே கொல்வதற்ன்றி வேறொருவரால் இவனை வெல்ல முடியாது" என்கிறான். ஒற்றன் ஒருவன் இந்திரசித்தனிடம், "அதிகாயனைக் கொன்றவன் இவனே" என்கின்றான். இலக்குவனுக்கும் இந்திரசித்தனுக்கும் பெரும்போர் நடக்கின்றது. பாணங்கள் பல பாய்கின்றன. அரக்கர் படை அழிகின்றது. மறைந்து நின்று இந்திரசித்தன் நாகபாசத்தைச் செலுத்துகிறான். வீடணன் மட்டும் பிழைத்துச் செல்ல, இலக்குவன் முதலிய யாவரும் மூர்ச்சையற்று விழுகின்றனர்.

இலக்குவன் முதலியோர் நாகபாசத்தால் கட்டுண்டமை கண்டு இராமன் வருந்துகிறான். யாரும் இறந்திலர் என்று வீடணன் கூறுகிறான். தேவர்கள் கலங்க, அவர்களுள் ஒருவனான கருடாழ்வார், பறந்து வந்து இராமன் முன் நின்று, இராமனைத் துதிக்கின்றான். மும்முறை வலமாகப் பறந்து வர, அவன் காற்றுப்பட்டு வானர வீரர்கள் யாவரும் மயக்கம் தீருகின்றனர். அனுமன் ஆரவாரம் செய்கின்றான். இராவணன் அவ்வாரவாரத்தைக் கேட்கிறான். செய்தி அறிந்து இந்திரசித்தன், "நாளைப் போர் புரிவேன்" என்கிறான்.

## *(19) அரக்கர் படைத்தலைவர் வதை*

வானரர்கள் செய்த ஆரவாரத்தைக் கேட்ட அரக்கர் படைத்தலைவர் இராவணனிடம் போரிட இசைவு பெறுகின்றார். மாபெரும் பக்கனும் புகைக்கண்ணனும் சூளுரைக்கின்றனர். பெரும்படையுடன் போர்க்களம் செல்லுகின்றனர். வருபவர் பற்றி வீடணன் இராமனுக்குக் கூறுகின்றான். போர் நடக்கிறது. தம் கணவரை நாடி வந்த அரக்கியர் புலம்புகின்றனர். அனுமன் புகைக்கண்ணனையும், அங்கதன் மாபக்கனையும் அழிக்கின்றனர், மாலியை நீலன் அழிக்கின்றான். வேள்விப் பகைஞன், இடபன் முதலியோரை மாருதி அழிக்கின்றான். வானர வீரர்கள் அரக்கர்களைக் கொன்று வெற்றி முழக்கம் செய்கின்றனர்.

## *(20) மகரக்கண்ணன் வதை*

தூதுவர் இலங்கை மாநகருக்கு ஏகி, படைத்தலைவர் யாவரும் மடிந்து போனதைக் கூறுகின்றனர். கரன்மகன் மகரக்கண்ணன் போர்க்குச் செல்லுகிறான். அரக்கர்க்கும், வானரர்க்கும் போர் நடத்தி இராமனிடம், "என் தந்தை கரனைக் கொன்ற பழியைத் தீர்க்க வந்தேன்" எனச் சூளுரைக்கிறான். மகரக்கணணன் இராமன் மீது அநேக பாணங்களை விடுக்கின்றான். மாயத்தில் இடி, மழை காற்று, தீ முதலியவற்றை உண்டாக்குகின்றான். வானரங்கள் பயந்து ஓடுகின்றன. இராமன் அக்னி, வாயு, பாணத்தால் அவற்றைத் தடுக்கிறான். அவன் மறைந்துள்ள இடத்தில் இராமன் பாணத்தைச் செலுத்த மகரக்கண்ணன் தலைஅறுப்புண்டு விழுந்து இறக்கிறான். இச்சமயத்தில் குருதிக்கண்ணனும் (ரக்தாக்ஷன்) சிங்கனும் எதிர்க்கின்றனர். அவர்களை நளனும் பனசனும்

கொல்லுகின்றனர். தூதுவர்கள், மகரக்கண்ணன் இறந்த செய்தியை இராவணனுக்குக் கூறுகின்றனர்.

### *(21) பிரமாத்திர நிகழ்ச்சிகள்*

இராவணன் இந்திரசித்தை அழைத்துப் போர்வீரர்கள் பட்டதை வருந்திக் கூறுகின்றான். தந்தையைத் தேற்றி, இந்திரசித்தன் போர்க்களம் செல்லுகிறான். போர்ப்பறைகள் ஒலிக்கின்றன. போர்க்களத்தில் இந்திரசித்து தேர்மீதேறி, பெரும்படையுடன் செல்லுகின்றான். நாண் ஒலி எழுப்ப, ஒலி கேட்ட வானர சேனைப்படைகள் ஓட்டம் பிடிக்கின்றன. அனுமன். அங்கதன், தேர்களில் முறையே ஏறி நின்று இராம இலக்குவர் போர் செய்கின்றனர். அசனிமாரி பொழிகின்றனர். இருவர் தம் வெம்போரை இந்திரசித்தன் வியந்து நோக்கியவனாக, தனியாக நின்று போர் செய்கிறான். நாகபாசத்தால் பிணித்தமையால், 'இந்திரசித்தைத் தானே கொல்வேன்' என்று இலக்குவன் சூளுரைக்கிறான். இராமனைத் தொழுது இலக்குவன் போருக்கு எழுந்தான். அரக்கர் அழிகின்றனர். இந்திரசித்து தேரோடு தனியனாகின்றான். இலக்குவன் வெற்றிகண்ட வானரர் ஆர்க்கின்றனர். இலக்குவன் அயன்படையைத் தொடவே, இராமன், தடுக்கின்றான். இந்திரசித்தன் தெய்வப்படையை விட எண்ணி, மறைகிறான். இராவணனின் கருத்து உணராத இராம - இலக்குவர் போர்க் கோலம் களைகின்றனர். இந்திரசித்தன் இராவணனுக்கு வேள்வி செய்யும் திட்டத்தைக் கூறுகிறான். அப்போது மகோதரன் போர் தொடுக்கிறான். அனுமனும் சுக்கிரீவனும் நேரிடுகின்றனர். அரக்கர்க்கும் வானரர்க்கும் பெரும்போர் நிகழ்கின்றது. அனுமன் அகம்பனைத் தூக்கினான். இவ்வேளை, மகோதரன் தேவேந்திரனைப் போலவும், மற்றும் சிலரை முனிவர்கள் போலவும் வரப்பணிந்து இலக்குவனுடன் பொருதுகின்றான். இலக்குவன் சிவன் படையைத் தொடுக்கிறான். இந்திரசித்தன் பிரம்மாத்திரத்தை இலக்குவன் மேல் விடுகிறான். படைகள் இருட்டில் மூழ்கின்றன. நீலன், காலன், இடபன், பனசன், முகுதன், சுசேடணன். வினதன், கெந்தமாதனன், இடும்பன். கதிமுகன் முதலிய படைவீரர் எல்லோரும் மண்ணில் சாய்கின்றனர். இலக்குவனும் உணர்வற்று வீழ்ந்தான்.

இந்திரசித்து மகோதரனுடன் நகரை அடைந்து, இராவணனுக்கு வெற்றியைக் கூறி நிற்கின்றனர். இராமபிரான் இறக்கவில்லை என்ற செய்தியுடன் அவரவர் மாளிகை செல்லுகின்றனர். பாடிவீட்டில் தெய்வப்படைகளுக்கு வழிபாடு இயற்றிப் போர்க்களம் வருகின்றான். வீழ்ந்துகிடக்கும் சுக்கிரீவன் முதலியோரைத் தனித்தனியாக கண்டு வருந்துகின்றான். இலக்குவனைக் கண்ட இராமன் துயருற்றுப் புலம்பி மயங்கி வீழ்ந்தான். தேவர்கள் இராமனுக்கு உண்மையை உணர்த்துகின்றனர். தூதர்கள் இராவணனிடம் "உன் பகை முடிந்தது" எனக் கூறுகின்றனர்.

## (22) சீதை களம் காணடல்

அரக்கர்கள் பெற்ற வெற்றியை முரசறைந்து யாவருக்கும் தெரிவிக்கும்படி இராவணன் கட்டளை இடுகின்றான். மருந்தன் என்பவனை அழைத்து அரக்கர் உடலைக்கடலில் தள்ள ஆணையிடுகிறான். பின், சீதையைக் களத்திற்குக் கொணரப்பணிக்கிறான். அரக்கியரிடம் இராம இலக்குவரை அவளுக்குக் காட்டக் கூறுகின்றான். இராமனைக்கண்ட சீதை துயரடைந்து பல சொல்லி அழுகிறாள். "இராமன் திருமேனி மீது விழுந்து உயிர் விடுவேன்" எனப் பாய்ந்து எழுந்தாள். அது கண்ட திரிசடை, சீதை மட்டும் கேட்க, "இராமர் இறக்கவில்லை, இலக்குவர் முகத்திலும் ஒளி வீசுகின்றது. அனுமன் சிரஞ்சீவியாதலின் அவர் சாகமாட்டார். யாவரும் மூர்ச்சையுற்று இருப்பதுபோல் தெரிகிறது. மேலும், இந்த தேவ விமானம், மங்கலம் நீங்கிய பெண்டிரைத் தாங்க மாட்டாது" எனக் கூறுகின்றாள். சீதை "அன்னையே தாங்கள் உரைத்தமை ஒன்றும் ஒழிந்திலது, ஆதலால், உன்னையே தெய்வமாகக் கொண்டு இத்தனை காலம் உய்ந்தேன்" - எனக்கூறுகிறாள். சிறிது நேரத்தில், சீதையை அரக்கியர் அசோக வனத்தில் கொண்டு சேர்க்கின்றனர்.

## (23) மருந்துமலைக் கொணர்தல்

உணவு கொணர்ந்து, பாசறையில் சேர்ந்த வீடணன், களங்கண்டு மயங்கி வீழ்கின்றான். இராமன் மேனியில் வடு இன்மை கண்டு துயரம் தணிந்து துயர் தீர்க்கும் வழியை ஆராய்கின்றான். "இறவாதவர் இருப்பரோ" என வீடணன் தேட, அனுமனைக் காண்கின்றான். உணர்வுபெற்ற அனுமன், இராமனைப்பற்றி உசாவி அறிகிறான். இருவரும் சாம்பனைத் தேடிச்சென்று அடைகின்றனர். அனுமன் வருகையால் சாம்பன் மகிழ்கின்றான். சாம்பன் மருத்துமலை கொணர வழிகூறி, அனுமனை ஏவுகின்றான். "இரவு கழிவதற்குள் தான் அவற்றைக்கொண்டு வருவேன்" என வேகத்தில் செல்லுகிறான். விரைந்து செல்லும் அனுமனைக்கண்டு வானவர் வியக்கின்றனர். கயிலையை வணங்கி, எமகூடத்தைத்தாண்டி, அனுமன் மேருமலைக்குச் செல்லுகின்றான். பிரம்மன் முதலிய தேவர்களை வணங்கி, உத்தரகுருநாடு வழி, நீலமலைக்கு அப்பால் மருத்துமலையைக் காண்கின்றான். அனுமன் மருத்துமலையைப் பெயர்த்து எடுத்து கடிதில் வருகிறான். அனுப்பிய பின், சாம்பனும் வீடணனும் இராமனைச் சென்று காண்கின்றனர். இராமன் அவர்களை உசாவுகின்றான். அனுமன் மலையைக்கொண்டு வந்துநிலத்தில் வைக்கின்றான். மருத்து மலையின் காற்றால் யாவரும் உயிர்பெற்று எழுகின்றனர். இராமன், தம்பியைத் தழுவித் துயர் தீர்கின்றான். அயன்படை அகல்கின்றது. இராமன் அனுமனைப் புகழ்ந்து வாழத்துகின்றான். மருத்துமலையுடன் அனுமன் மீண்டும் போகின்றான்.

## (24) இராவணன் களியாடல்:

பகை ஒழிந்தது என்று உவந்து இராவணன், மேனகை, திலோத்தமை முதலிய அரம்பையர் களியாட்டம் காண்கின்றான். களியாட்டத்தில் அரக்கர்கள் கள்ளுண்டு ஆடிப்பாடுகின்றார்கள். அப்போது வானவர் ஆர்ப்பொலி கேட்கின்றனர். இலக்குவன் பிரமையால் ஆடுகின்ற நடன மகளிரை வானரக் கூட்டங்களாகவும், இராம இலக்குவர்களாகவும் கண்டு மிரள மிரள விழிக்கின்றான்.

## (25) மாயா சீதை நிகழ்ச்சிகள்:

தூதுவன் கூறியதைக் கேட்டவுடன், இராவணன் களியாட்டத்தை நிறுத்தி, அரசவை புகுகின்றான். மாலியவான், "இராமன் திருமாலின் கூறு" என்பதைக் கூறி சீதையை விடுவிக்க வேண்டுகின்றான். இந்திரசித்தன் நிகும்பலை வேள்வி பற்றிக் கூறுகின்றான். இராவணன் நிகும்பலை வேள்வி முடிக்கும் உபாயம் வினவுகின்றான். இந்திரசித்தன் சானகி உருவம் அமைத்து வரச் சொல்லுகின்றான். போர்க்களத்தில் சுக்கிரீவன் இராமனிடம் இலங்கையை எரியூட்ட இசைவு பெறுகின்றான். வானரங்கள் இலங்கைக்குச் செல்லுகின்றன. இலங்கையில் தீ பரவுகின்றது. மீண்டு அனுமன் ஆர்ப்பொலியால் இலங்கை நடுங்குகின்றது. அனுமன் முன்னிலையில், இந்திரசித்தன், 'மாயா சீதையைக் கொல்வேன்' என்கிறான். அனுமன் இந்திரசித்தனுக்கு நீதி கூறுகின்றான். வடக்கே மாயமாய் மறைகின்றான். மாயா சீதையின் சித்திரவதையைக் கண்டதும் அனுமன் மிக வருந்தி மூர்ச்சையடைந்து தெளிகிறான். அனுமன் இராமனிடம் செய்தி கூறுகின்றான். இராமனும் வானரர் முதலியோரும் உற்ற துயரம் கண்ட அனுமன், "இதில் ஏதோ சூது இருக்கிறது" என்கிறான். வண்டின் உருக்கொண்டு அசோகவனத்தை அடைந்து பார்க்கின்றான். சீதாபிராட்டி வருந்தியிருந்தமையைக் கண்ட வீடணன், இராமனை வணங்கி நிலைமையை எடுத்துரைக்கிறான். எல்லோரும் மகிழ்கின்றனர்.

## (26) நிகும்பலையாகம்

மாயாசீதையை உணர்ந்த இராமன் வீடணனைப் புகழ்கிறான் ... இராமன் இலக்குவனுக்கு அம்புவிடுவது பற்றி அறிவுறுத்துகிறான். திருமாலின் வில், கவசம், முதலியவற்றை இராமன் கொடுக்கிறான். நிகும்பலையில் அரக்கர் சேனையை வானரர் காண்கின்றனர். அரக்கர் சேனையுடன், வானரர் பொருதுகின்றனர். இந்திரசித்தன் யாகம் சிதைகின்றது. வேள்வித்தீ அழிதல் கண்டு இந்திரசித்தன் வெதும்புகின்றான். இந்திரசித்தன் நியமம் குலைந்து வருந்திப்புலம்புகின்றான். அனுமன் இந்திரசித்தனை எள்ளி நகையாடுகின்றான். அனுமன் முதலியோரை இந்திரசித்தன் இகழ்கின்றான். இந்திரசித்தன் போருக்குச் சங்கு முழங்கி வருகின்றான். அவனுக்கும் அனுமனுக்கும் போர் நடக்கிறது. அவன், "இலக்குவன் எங்குள்ளான்?" என வினவுகின்றான். இந்திர சித்தனுக்கும் இலக்குவனுக்கும் பெரும்போர் நடக்கிறது. வீடணன்,

இந்திரசித்தன் மெலிவினை இலக்குவனுக்குக் கூறுகின்றான். இந்திரசித்தின் அனல், புனல், கதிர், படைகளை இலக்குவன் அவற்றாலேயே விலக்குகின்றான். மாயோன் படை, இலக்குவனை விலகிப்போகிறது. சிவன்படையை இந்திரசித்து விடுகின்றான். இலக்குவனும் சிவன் படையை விடுகின்றான். வீடணனை இந்திரசித்தன் சினத்தால் இகழ்கின்றான். அதற்கு வீடணன் "அறத்தினைப் பாவம் வெல்லாது" போன்ற அறவுரைகளைக் கூறுகின்றான். போரில் தோல்வியுற்ற இந்திரசித்தன் மேலெழும்பி மேகத்தில் மறைந்து, அம்புபட்ட உடலோடு இராவணனிடம் போய்ச் சேர்கின்றான்.

## *(27) இந்திரசித்து வதை*

இராவணன், இந்திரசித்திடம் நிகழ்ந்தது உரைக்கச் சொல்லுகிறான். அவன் சீதையை விடுமாறு வேண்டுகிறான். இராவணன் இந்திரசித்தைக் கடிந்து பேசுகின்றான். இராவணன் போருக்குப் போதலைத்தடுத்து, இந்திரசித்துப் போருக்குச் செல்கிறான். இந்திரசித்தும் இலக்குவனும் பொருதுகின்றனர். "இந்திரசித்தை உடனே கொல்க" என வீடணன் இலக்குவனுக்கு உரைக்கின்றான். இந்திரசித்தன் போர்த் திறன் கண்டு தேவரும் இலக்குவனும் வியக்கின்றனர். "இந்திரசித்து இரவில் இறவான்" என இலக்குவனுக்கு வீடணன் இயம்புகிறான். "சிவன் ஈந்த தேரும் வில்லும் இருக்கும்வரை அழியான்", என வீடணன் மேலும் குறிப்பிடுகிறான். இலக்குவனும் இந்திரசித்தின் தேரைச்சிதைக்க அவன் விண்ணில் மறைந்து ஆரவாரம் செய்கின்றான். இந்திரசித்துக்கும் இலக்குவனுக்கும் பெரும்போர் நிகழ்கிறது. இலக்குவனது பிறைமுக அம்புபட்டு இந்திரசித்தன் தலை அற்று விழுகின்றது. "அறம் தலை நின்றார்க்கு அழிவு இல்லை" என்னும் சொல் வெற்றி பெற இந்திரசித்தின் தலையை ஏந்தி அங்கதன் முன் செல்ல, இலக்குவன் பின் செல்கின்றான். இராமன் திருவடிகளில் தலையை வைக்க இராமன் முதலியோர் மகிழ்ச்சி அடைகின்றனர். இராமன், "இது வீடணன் தந்த வெற்றி" எனப் புகழ்நது பேசுகின்றான்.

## *(28) இராவணன் சோகம்*

தூதர் இராவணனுக்கு இந்திரசித்து இறந்தமையைத் தெரிவிக்கின்றனர். செய்திகேட்டு சினமடைந்து, தூதரை இராவணன் வாளால் வீசி, தரையில் விழுந்து புலம்பி அழுகிறான். மைந்தன் உடலைத்தேடி இராவணன் போர்க்களம் புகுகின்றான். இந்திரசித்தின் தலை காணாது, அரற்றுகின்றான்; மகன் உடலோடு அவன் இலங்கை செல்லுகின்றான். செய்தி அறிந்த மண்டோதரி, மைந்தன் மேல் விழுந்து புலம்புகின்றாள். இராவணன் சீதையை வெட்ட வாளெடுத்துச் செல்லுகிறான். மகோதரன் இராவணனைத் தடுக்கிறான். இந்திரசித்தின் உடலைத்தைலத்தோணியில் இடப்பணிக்கின்றான்.

## (29) அரக்கர் படைக்காட்சி

இராவணன் கூறியபடி அரக்கர் சேனைகள் எல்லாம் இலங்கையில் நிறைகின்றன. அவன், மகோதரன் முதலானோருடன் சேனைகள் கூட்டமாக நிற்பதைப் பார்வையிடுகிறான். மாலியவான் இராமன் முதலிய மனிதர் வலிமையை உரைக்கின்றான். வன்னி, "சீதை என்வளை விட்டு, அம்மனிதரைச் சேர்தல் நலம் என்றால் பழியாகும்"; ஆகையால், "குலத்தொடு முடித்தல் கடமை" என, இராக்கதர் எழுந்தனர். இராவணன் "அம்மானுடரை வென்று மீளுவோம்" எனச் சூளுரைத்துப் போருக்குச் செல்கின்றான்.

## (30) இராவணன் மூலப்படை வதை

இராவணன் மனிதர்களைக் கொல்ல, படைத் தலைவர்களுக்குக் கட்டளை இடுகிறான். தானும் போர்க்கோலம் பூண்கிறான். பெரும்திரளான நால்வகைச் சேனைகளும் போர்க்களத்தில் அணி நிரக்கின்றன. வானவர் அதனைக்கண்டு குலைந்து சிவபெருமானிடம் முறையிடுகின்றனர். மூலப்படையைக் கண்டு வானரங்கள் அஞ்சி ஓடுகின்றனர். இப்புதுப்படை பற்றி இராமன் வினவ, வீடணன் மூலப்படைகளின் வலிமை பற்றிக் கூறுகின்றான். அங்கதன் ஓடி படைவீரரை அழைக்கப், படைத்தலைவர்கள் பதிலுரைக்கின்றனர். சாம்பன், மறுமொழியாக மூலப்படைப்பற்றிக் கூறுகிறான். வானரப்படை மீளவே, அரக்கர் படை பற்றி இராமன் "யான் சிலை எடுத்து அழிப்பேன்" என்கிறான். வானரச் சேனையைக்காக்குமாறு, தம்பியை அருகே இருக்குமாறு, இராமன் வேண்டுகிறான். அனுமன் முதலியோரை இலக்குவன் பின் செல்ல இராமன் ஏவுகின்றான். முன்னிலையில் வந்து இராமன் போர் செய்கின்றான். அறவோர் ஆசி கூறுகின்றனர். இராமன் தனியே நின்று போர் செய்யும் போது அவனது கோதண்டத்தின் ஒலியில் அரக்கர்கள் அஞ்சி நடுங்கினர். அம்பினால் அரக்கர்கள் அழிகின்றனர். இராமன் இடசாரி வலசாரியாகச் சுற்றி அம்பெய்து மூலப்படைகளையும் படைத்தலைவரையும் அழிக்கின்றான். அப்போது வன்னியென்பவன் வெகுண்டு பாய்ந்தான்; தேவாத்திரம் ஒன்றால் அவன் தலை கொய்யப்படுகிறது. உருத்து எழுந்த அரக்கர் படை, இராம பாணத்தால் மடிகின்றது. இராமன், சரமதில் அமைத்து அரக்கர்களை அழிக்கின்றான். அப்போது வன்னி ஒருமுகமாக இராமனை எதிர்க்குமாறு அரக்கர்களுக்குக் கூறுகின்றான். இராமன் அம்புமழை பொழிய அரக்கர் சேனை அழிந்து படுகிறது. இராமனின் வில்லாற்றலால் அரக்கர் அடியோடு பலபட அழிகின்றனர். தேவர்கள் மகிழ்ந்து இராமனை வாழ்த்துகின்றனர். இலக்குவன் இராவணனோடு பொருதும் இடத்திற்கு, இராமன் செல்லுகின்றான்.

## (31) இலக்குவன் வேலேற்றமை

குரங்குச் சேனை களத்திற்கு மீண்டும் வருகிறது. இராவணன் போர்க்களம் செல்லுகிறான். இருபடை கை கலக்கின்றன. அரக்கர்

அழிவுகண்ட இராவணன் கொதித்து எழுகிறான். இலக்குவனும் இராவணனும் போர் செய்கின்றனர். இலக்குவன் இராவணனது கணைகளை நறுக்கியமை கண்டு, இராவணன் இனி செய்வது பற்றி நினைக்கிறான். இராவணன் மோகப்படை ஏவ, இலக்குவன், வீடணன் அறிவுரைப்படி, ஆழிப்படையை ஏவுகின்றான். வீடணனால் படைவலி அழிய இராவணன் அவன் மேல் வேல் எறிகின்றான். வீடணன், "ஈது என் உயிர் அழிக்கும்" என, இலக்குவன், "அஞ்ச வேண்டாம்; போக்குவன்" என்கிறான். இலக்குவன் வேலைத்தன் மார்பில் ஏற்க எதிர்க்கவே, பலரும் முந்தி நிற்க, வேலை இறுதியில் இலக்குவன் ஏற்கிறான். இராவணன் தேர்க்குதிரையையும் சாரதியையும் வீடணன், அழிக்கின்றான். வீடணனைக் கொல்லாது விடுத்து, வெற்றியுடன் இராவணன் மீளுகின்றான். இலக்குவன் நிலைகண்ட வீடணன், ஆற்றாது அரற்றுகின்றான். அனுமன், முன்போல் மருந்து கொண்டு வந்து இலக்குவனை உயிர்ப்பிக்கின்றான். இலக்குவன் அனுமனைத் தழுவ, வீடணன் நலம் உசாவுகின்றான். வானரத்தலைவன், இராமன்பால் செல்ல, அவன் "விளைந்தது என்ன?" என்று கேட்கிறான். செய்தி கேட்டு இராமன், அனுமனை வாழத்துகின்றான். இலக்குவனை இராமன் பலவாறு பாராட்டுகிறான். பின்னர், இராமன், வில், அம்பறாத்தூணி முதலியவற்றை அனுமனிடம் கொடுத்து, அருகிருந்த குன்று மீதேறி இளைப்பாறத் தொடங்குகின்றான்.

### *(32) வானரர் களம் காண்டல்*

மூலபலப்படையின் அழிவைக் காண, சுக்கிரீவனை இராமன் ஏவுகின்றான். உயிர் இழந்து கிடக்கும் அரக்கர் சேனை குறித்து வீடணன் சொல்லி, இராமரின் வில்லாண்மையை வியந்து நிற்கிறான். இராமனை அடைந்து வணங்கி யாவரும் அமர்ந்திருக்கிறார்கள்.

### *(33) இராவணன் களம் காண்டல்*

இராவணன் போர் வீரர்க்குப் பரிசுகள் அளித்து, பெருவிருந்து அமைக்குமாறு ஆணை இடுகிறான். தூதுவர் சிலர் வந்து, மூலபலப்படையின் அழிவினைத் தெரிவிக்கின்றனர். இராவணன், "அந்த இராமன் ஒருவனே கொன்றான்? பொய்!" எனக் கூறுகின்றான். மாலியவான், "தூதர் பொய் உரையார்" என்கிறான். இராவணன், "இலக்குவனை வேலால் எறிந்து கொன்றேன்" என மறுமொழி கூறுகிறான். தூதர், இலக்குவன் உயிர்பெற்றமையை உரைக்கின்றனர். இராவணன் கோபுரத்தில் ஏறி, களத்தில் அளவற்ற பிணங்கள் கிடப்பதையும், இலக்குவன் நிற்பதையும் காண்கின்றான். மிக்க துயரத்துடன் இராவணன் அரசவை நோக்கிப் போகிறான்.

### *(34) இராவணன் தேரேறிப் புறப்படுதல்*

இராவணன், போரில் அழிந்தவர்கள் போக எஞ்சிய படையைத் திரட்டுகிறான். அவன் சிவபிரானை வணங்கிப் போர்க்கோலம் பூண்டு,

குதிரைகள் பூட்டிய தேரில் ஏறிப் புறப்படுகிறான். "சானகி கதறித் துன்பக்கடலில் விழ வேண்டும்; அன்றேல், மண்டோதரி அவ்வாறு தவிக்க வேண்டும்" என வஞ்சினம் கூறுகிறான். போர்க்களத்தில் யாவரும் நடுங்க, இராவணன் தோன்றுகிறான். உலகில் தோன்றிய கலக்கம் கண்டு சுக்கிரீவன் முதலியோர் துணுக்கமுறுகின்றனர். இராவணன் வருகையை வீடணன் இராமனுக்குக் கூறுகிறான்.

## *(35) இராமன் தேரேறி புறப்படுதல்*

இராமன் போர்க்கோலம் பூண்டு எழுகிறான். இராமனுக்குத் தேர் அனுப்புமாறு சிவபெருமான், தேவர்களிடம் கூறுகிறான். இந்திரன், மாதலிக்குக் கட்டளையிட அவன் தேர்கொண்டு வருகிறான். மாதலி கொணர்ந்த தேர் குறுகவேண்டிய பொழுது குறுகும்; உயரவேண்டிய சமயத்தில் உயரும்; வேண்டியபொழுது உயர்ந்து, வானத்தில் வட்டமிடும் தன்மையுடையது. மாதலி அத்தேரை இராமனிடம் அளித்து, "இதனை யாராலும் எவ்வகையாலும் அழிக்கமுடியாது" என்கிறான். தேர் குறித்து, இஃது அரக்கர்செய்யும் மாயமாக இருக்குமோ? என்று ஐயுற்றுக் கேட்க, தேவலோகத்தைச் சார்ந்தவையாதலின் தேர்க்குதிரைகள், மாதலி உரைத்தவை உண்மை என்கின்றன. உடனே இராமன் மாருதியிடமும் இலக்குவனிடமும் இதுபற்றிக் கேட்க, அவர்கள், "புரந்தரன் தேரே; ஐயமில்லை" என்கின்றனர். இராமன் தீவினை அழிய, நல்வினை களிப்ப, தேர்மீது ஏறுகிறான்.

## *(36) இராவணன் வதை*

இராமன் தேர் ஏறி வருவதைப்பார்த்த இராவணன், அது தெய்வத்தேர் என அறிந்து கொள்ளுகிறான். தேரை இராமன் எதிரே விடுமாறு இராவணன் சாரதிக்குக் கூறுகிறான். இராமன் கருத்துக்கு இசைய, மாதலி தேர் ஓட்டுகிறான். இராவணன் மகோதரனை இலக்குவனோடு போர் செய்ய வேண்டுகிறான். மகோதரன் போகும்பொழுது, இராமன் தேரைத்தாக்க, மகோதரன் இராமன் கணையால் கழுத்து அறுந்து, மண்ணில் சாய்கிறான்.

மகோதரன் இறந்தபின் இராவணன், இராமனோடு போர் செய்ய விரைந்து புறப்படுகிறான்; "பாஞ்சசன்யம்" என்னும் சங்கிசை முழங்குகிறது. இராமனும் இராவணனும் எதிர் எதிராக நின்று தருமமும் பாவமும் தாக்குவது போலத் தாக்கத் தொடங்கினர். இருவரும் தம்தம் வில்லினைக் கையிற்கொண்டு வளைத்து நாணோசை செய்கின்றனர். இராம இராவணப்போர் தொடங்குகிறது. பல்வேறு கணைகளை இராவணன் எய்து வானரர்கள் பலரைக் கொல்கிறான். இராமன் மிக்க கோபத்துடன் தேரில் நின்று போர்தொடுக்கின்றான். இராவணன் சினந்து, மாமன் தேவத்தச்சரால் கொடுக்கப்பெற்ற உயர்ந்த பாணத்தை இராமன் மீது செலுத்துகிறான். இராமன் அவற்றைத் தடுக்கிறான். இராமனும் இராவணனும் ஒத்துச் செருவிளைக்கின்றனர். இராமன், அரக்கர் படைக்கலன்களைத் தடுத்தல் அன்றிப், போர் செய்யாது நிற்கிறான்.

இராமன் தேர்க்கொடியை இராவணன் அறுக்கிறான். இராமனின் குதிரைகள் மீதும், மாதலி மீதும இராவணன் சரம் விடுகிறான். மாதலி மார்பில் அம்பு தைக்கக் கண்டு, இராமன் வருந்துகிறான். இராமனை இராவணனது அம்புகள் மறைக்கின்றன. இராமன் இராவணனின் தேர்க்கொடியை வீழ்த்துகிறான். இராவணன் தாமதப்படையை இராமன் மேல் விடுகிறான். இராமன் சிவன் படையை விட்டு, தாமதப்படையைத் தொலைக்கிறான். இராவணன் அசுரப்படையால் தாக்க, இராமன் அக்கினிப்படையால் அதனைப் பிளக்கிறான். அவன் மயன்படையை மேற்கொள்ள, இராமன் கந்தருவக்கணையால் அதனைத் துண்டாக்கிவிடுகிறான். பல்வேறு தண்டுகளும் அம்புகளும் போரில் இடம்பெறுகின்றன. அவை, இராமன் கணையால் அழிந்து ஒழிகின்றன. இராவணன் மாயைப்படையைவிட. இறந்த அரக்கர் எழுந்து ஆரவாரிக்கின்றனர். இராமன் ஞானக்கணையை விடுத்து மாயையை மாற்றுகிறான். இராவணன் சூலம் கொண்டு வீசுகிறான். இராமன் அம்புகள், சூலப்படையை அழிக்க முடியாமல்போக, அவன் உங்காரத்தால் அழிக்கின்றான்:: இராமனுடைய செய்கையைக் கண்டு, வீடணன் கூறியவை நினைவில் தோன்ற, "வேத முதல்வனோ?" என இராவணன் கருதுகிறான். "அந்த இராமன் யாவனாயிருந்தாலும் அவனை நானே வெல்வேன் அல்லது இறப்பேன்" எனக் கூறுகிறான். நாகக்கணை, வாயுக்கணை, தீக்கணைகளை இராவணன் விட, இராமன் மாறுபட்டப் பாணங்களால் இராவணன் மார்பில் அழுத்துமாறு போர் புரிகின்றான். இராவணன் வித்தைகள் தளர, இராமன் வீரமும் மிகுகின்றது. இராமன் இராவணனின் ஓர் தலையை அறுக்கிறான். அது கடலில் வீழ்கிறது. அவன் இராவணன் கையை அறுக்க, அது மீண்டும் முளைக்கின்றது. இராவணன், மாதலியை ஒரு கணையால் தாக்க, தோமரம் துகளாகிறது. இராவணன் தலைகள் அறுபட்டுச் சிதறி வீழ்கின்றன. இராவணன் மேனியை இராமன் முற்றும் அம்பினால் மூடுகிறான். இராவணன் தேரில் உணர்வு இழந்து கிடக்க, சாரதி தேரினை விலக்கி நிறுத்துகிறான். இத்தருணத்தில் மாதலி, இராவண்னைக் கொல்லத் தூண்டவே, இராமன் "நியதியன்று" என்கிறான். உணர்வுபெற்ற இராவணன், சாரதியைச் சினந்து, வாளை உருவ, அவன் நடுங்கி நின்றான். இராவணன் உயிரைக் காப்பாற்றவே அவ்வாறு செய்ததாக சாரதி கூறுகிறான். இராவணன் இராமன் வில்லை துண்டிக்கிறான். அவன் படையால் இராவணன் உயிர் இழக்கின்றான். இறந்த இராவணனது முகம் பொலிவுற்றுக்கிடக்க, இராமன் இராவணன் உடம்பைப் பார்க்கிறான். இராவணன் புறப்புண் கண்ட இராமன் முறுவலிக்க, வீடணன் வருந்தி, எண்திசையானைகளோடு முட்டியதால் ஏற்பட்ட வடுக்களால், "இவன் ஒரு நல்வீரனே" என்கிறான். இராமன், இராவணனுக்கு இறுதிக்கடன் செய்ய ஏவுகிறான். வீடணன், இராவணன் மேனிமேல் விழுந்து அரற்றி, பலவாறு புலம்புகிறான். வீடணன் ஒருவாறு தேற, மண்டோதரியும் அரக்கியரும் இராவணன் கிடக்கும் இடத்தை அடைகின்றனர். அரக்கியர் அழுது அரற்ற, மண்டோதரி இராவணன் மார்பில் விழுந்து புலம்புகின்றாள். இராவணனைத் தழுவிய

மண்டோதரியின் உயிர் பிரிகிறது. வீடணன் யாவர்க்கும் உரிய கடன்களை இயற்றி, இராமனை அடைகின்றான்.

### *(37) சீதையை மீட்டல்*

இராமன் ஆணைப்படி இலக்குவன் வீடணனுக்கு முடிசூட்டுகிறான். வணங்கிய வீடணனை இராமன் தழுவி, நீதிகளை உரைக்கிறான். சீதைக்குச் சொல்லிவர இராமன் அனுமனை அனுப்புகிறான். அனுமன் சீதையிடம் செய்தியைக் கூறுகிறான். சீதை மகிழ்ந்து "நல்ல செய்தி சொன்ன உனக்கு எத்தகைய பதில் உதவி செய்வது?" என மறுமொழி கூறுகிறாள். அனுமன் சீதையிடம் அரக்கியரை அழிக்க விரும்புவதாகக் கூறுகின்றான். சீதை அரக்கியர்க்கு அருளுமாறு வேண்டுகிறாள். இராமன், வீடணனை நோக்கி, "தேவியைச் சீரோடு தர"ப்பணிக்கிறான். வீடணன், சீதையிடம் கோலம் புனைந்துவர வேண்ட, அவள் அசோகவனத்தில் இருந்த தன்மையில் வருதலே தக்கது என்கிறாள். வீடணன் வற்புறுத்த, வானமாதர்கள் சீதைக்குக் கோலம் புனைகின்றனர். சீதையை இராமனிடம் வீடணன் அழைத்து வருகிறான். கோலம் கண்ட சீதை அனுமன் உதவியைப் பாராட்டுகிறாள். சீதை இராமனைத் தொழுது ஏக்கம் நீங்குகிறாள். இராமன் சீதையை அமைய நோக்குகிறான். சீதையை இராமன் "உன்னைச் சிறையிலிருந்து விடுவிப்பதற்காக நான் இச்செயலை செய்யவில்லை. தேவர்கள் துன்பத்தை நீக்கவும், எனக்கு நேர்ந்த அவமானத்தைப் போக்கவும் போர் செய்தேன். பிறர் வசமிருந்த உன் கற்பு அழிந்து பட்டிருக்கும், அலங்கரித்து வந்தனையே! என் முன் நிற்காமல் போய்விடு!" என்று கூறுகின்றான். கேட்ட அனைவரும் வருந்துகின்றனர். இராமனின் சுடுமொழி கேட்ட சீதை துயருற்றுத் தான் விழுந்து இறப்பதற்குரிய தீமூட்டித் தர வேண்டுகிறாள். தான் வேண்டியபடி, இலக்குவன் அமைத்த தீயைச் சீதை அணுகுகின்றாள். சீதை தீயிடைப்புகுகின்றாள். சீதை எரியாமல் வாட்டமுறாது விளங்குகிறாள். தீக்கடவுள், தேவியின் கற்புத்தீ தன்னைச் சுட்டமையால் இராமனைச் சரணடைந்ததாகக் கூறி, சீதையை ஏற்றருள வேண்டுகிறான். சீதையை இராமன் ஏற்றுக்கொள்ளுகிறான். பிரமன், இராமனது உண்மை நிலையான "திருமாலே இராமன், இலக்குமியே சீதை" என்பதை உணர்த்துகிறான். சிவபெருமான், இராமனுக்குத் அவதார உண்மையை உணர்த்துகிறான். இராமனைத் தெருட்டுமாறு, துறக்கத்திலுள்ள தயரதனுக்குச் சிவபெருமான் பணிக்கிறான். தயரதன் தோன்ற, சீதை வணங்குகிறாள். தேறுதல் மொழிகள் கூறுகிறான். தயரதன், இலக்குவனைத் தழுவிப் பாராட்டுகிறான். தயரதன் "வரம் கேள்" எனக்கூறவே, இராமன் "தெய்வமாகிய கைகேயியும், மகன் போன்ற பரதனும் தாயாகவும் தம்பியாகவும்" வரம் வேண்டுகிறான். கைகேயியின் மேல் தயரதன் கொண்ட கோபம் தணிகிறது. இராமன், தேவர்களிடம், மாண்டுள்ள குரங்குகளை எல்லாம் எழுப்புமாறு வேண்டி நிற்கிறான். வனவாசத்திற்கெனக் குறிப்பிட்ட பதினான்கு ஆண்டுகளும் கழியவே, ராமன் பரதனைக் காண, விரைந்து செல்லும் விமானம் வேண்டி

நிற்கிறான். இராமன், சீதை, இலக்குவன் முதலியோருடன் விமானத்தில் ஏறித் துணைவர்க்கு விடைதர விழைகின்றான். துணைவர் முடிசூட்டுவிழாக்காண அனுமதி வேண்ட, இராமன் இசைகின்றான். யாவரும் நெடும்புட்பக விமானத்தில் ஏறுகின்றனர். போகும் வழியே இராமன் சீதைக்கு ஒவ்வொன்றாகக் காட்டுகிறான். சேதுவைக் காட்டி அதன் தூய்மையை இராமன் புகழ்ந்துரைக்கிறான். பரத்துவாசன் ஆச்சிரமத்தில் இறங்குகின்றனர். பரத்துவாசர் யாவரையும் வரவேற்கிறார். அனுமனை, நந்திக் கிராமத்துள்ள பரதன்பால் அனுப்புகின்றான். நந்தியம்பதியில் பரதன் பலவாறு எண்ணி, இராமன் வரவுக்காக எதிர்நோக்கியிருக்கிறான். சோதிடர், "இராமன் வர வேண்டிய நாள் இன்று" என்கிறார். இராமன் வராமையால் பரதன் அவலமுற, சத்துருக்கனை அழைக்கிறான். பரதன் அவனிடம் "தீயில் விழுந்து இறக்கப்போகிறேன்" என்கிறான். கேட்ட சத்துருக்கன் வருந்தி நொந்து "தானும் அப்படியே" என்கிறான். பரதன் எரி அமைக்கப்பணிக்கிறான். செய்தியறிந்த கோசலையும் மற்றும் அயோத்திய மக்களும் அரற்றி விரைந்து வருகின்றனர். கோசலை உரையைப் பரதன் மறுத்துரைக்கிறான். அனுமன் பரதன் முன் தோன்றி, எரியை அவிக்கின்றான். இராமனது மோதிரத்தை அடையாளமாகக் காட்ட, மோதிரம் பெற்ற பரதன் மகிழ்கின்றான். பரதன் அனுமனைப்பாராட்டி "நீயாரென" வினவ, அனுமன் தன் வரலாற்றைக் கூறுகிறான்.

பரதன், அரக்கர் அழிவுபற்றி அனுமன் கூறக்கேட்டு, பரிசுகளை வழங்குகிறான். பரதன் அனுமனது கையைப் பற்றிக்கொண்டு கங்கையை அடைகிறான். குகன், பரத்துவாசன் இருக்கையை அடைந்து, இராமனை வணங்கி நிற்கிறான். புட்பக விமானத்தில் இராமனும் மற்றுள்ளோரும் வருகின்றனர். இராமனைப் பரதன் காண்கிறான். தொழுது நெருங்கிய பரதனை, அனுமன் இராமனுக்கு அறிவிக்க, இராமனும் தம்பியைக் கண்டு மகிழ்கிறான். புட்பக விமானம் நிலத்தைச் சார்கின்றது. இராமனது வருகையால் தாயாரும் மற்றுள்ளோரும் உணர்வு பெறுகின்றனர். இராமன் தாயை வணங்க, சீதையும் இலக்குவனும், முறையே வணங்குகின்றனர். அடியில் வீழ்ந்து வணங்கிய பரதனை இராமன் அன்புறத் தழுவுகின்றான். இலக்குவன், பரதனது பாதங்களில் விழுந்து வணங்குகின்றான். சத்துருக்கன் அனைவரையும் வணங்க, இராமன் அவனைத் தழுவுகிறான். பரத சத்துருக்கர்களைத் துணைவர்களுக்கு அறிமுகப்படுத்த, அவர்கள் அவ்விருவரையும் வணங்குகின்றனர். பின்னர் யாவரும் அயோத்தியை அடைகின்றனர்.

### *(38) இராமன் திருமுடி சூடுதல்*

இராமன் தம்பியரோடு அரசகோலம் கொள்ளுகிறான். இராமன் அரண்மனையை அடைகிறான். நகரமாந்தர் மகிழ்ச்சியடைகின்றனர். இராமன் புண்ணிய நீரில் ஆடுகின்றான். வசிட்டன் இராமனுக்குத் திருமுடி புனைகின்றான். பரதனுக்கு இளவரசுப்பட்டம் சூட்டப்படுகிறது.

### (39) இராமன்விடை கொடுத்தல்

இராமன் சீதையோடு அரியணையில் வீற்றிருக்கிறான். சுக்கிரீவன் முதலியோர் வணங்குகின்றனர். இராமன், அனைவரையும் இனிது இருக்கப் பணிக்கின்றான்; மறையவர் முதலியோருக்குத் தானம் வழங்குகின்றான்; வீடணன் சுக்கிரீவன் மற்று யாவருக்கும் பரிசுகள் வழங்கி விடை கொடுக்கிறான். மனுநெறி முறையில் இராமன் இவ்வுலகைக் காத்து வருகிறான்.

இராமவதாரக் கதையைச் சொல்லுபவர்கள், மன்னவராகிப், பின்னும் யமனையும் வெல்லுந்தன்மையைப் பெறுவார்கள். இங்ஙனம் மங்கலமாகக் கம்பன் இராமகதையை முடிக்கிறான்.

## ஒப்பீடு - கம்பராமாயணமும் இராமசரிதமும்

1) கம்பராமாயணம், நூல் மரபுப்படி, பாயிரத்துடன் தொடங்குகிறது. இதில் கடவுள் வண்க்கம், அவையடக்கம், நூல்வரலாறு முதலியன கூறப்படுகின்றன. உலகு எல்லாம் படைத்துக்காத்து அழிக்கும் தொழில்களை இடைவிடாது ஒரு விளையாட்டாகச் செய்துவரும் தலைவராகிய இறைவனிடம் கம்பன் அடைக்கலமாகிறான். தான் வழிபடும் கடவுளை இனம் சுட்டாது 'தலைவன்' என்றே குறிப்பிடுவது உணரத்தக்கது (கம். பா. பாயிரம். பா. 1)

யுத்த காண்டத்திலும் இறைவனை, மானிடர் மனம்போன போக்கில் ஒருவனாகவோ, பலராகவோ, இவனாகவோ அவனாகவோ, உளனாகவோ இலன் என்றோ கணிப்பதுடன், 'இறைவன் வாழ்க்கையே இதுவெனில் நம்வாழ்க்கை என்னவென்று சொல்வது' என வினவுகிறான் கம்பன் (கம். யு. பா.1)

இராமசரிதமும் பாயிரத்துடன் தொடங்குகிறது. இதில் கடவுள் வணக்கம், அவையடக்கம், நூல்வரலாறு முதலியன கூறப்படுகின்றன.

வணக்கம், விநாயகர் வாழ்த்துடன் தொடங்குகிறது. கலைமகள், திருமால், சிவன், உமையவள், திருமகள் மற்றும் தேவர்களை வழிபட்டு நூலைத்தொடங்கி, அவையடக்கம் கூறுகிறான் ஆசிரியன். வால்மீகி, வியாசர், அகத்தியன், நம்மாழ்வார் முதலியோரையும் சீராமன் வழிபடுகிறான். இது, சீராமக்கவியின் பல தெய்வ வழிபாட்டை உணர்த்துகிறது. (இரா. ச. ப. 1, பா. 1 முதல் 8 வரை)

(2) கம்பன், வானரவீர், இலங்கையின் அமைப்பு, காவல்மிகுதி, படைவளம் முதலியவற்றை அனுமன் கூற, மகிழ்ந்து சென்று,பன்னிரண்டு நாட்களில் தென்றிசைக் கடலைக் கண்ணுற்றமை முதலியவற்றைச் சுந்தரகாண்டத்தின் இறுதியில் கூறுவான்.

சீராமகவி, இரண்டு முதல் நான்கு படலங்களில் இச்செய்திகளைத் தருகின்றான். வானரப்படை தென்கடற்கரையில் தங்கிய, கம்பன் காப்பியச் செய்தியை, நான்காம் படல இறுதியில் இரண்டே பாடல்களில் சுருங்கவுரைக்கிறான். (இரா. ச. ப. 4 பா 10,11)

(3) அனுமனால் இலங்கை எரியுண்டபின், பிரமனுடன் போந்த தெய்வத்தச்சன் மயனால் இராவணன் இலங்கையைப் புதுப்பித்தான் எனக் கம்பன் மந்திரப்படலத்தில் கூறுகிறான். (கம். யு. ப. 2 பா.1-4)

சீராமகவி அதனை விட்டுவிடுகிறான்.

(4) மந்திராலோசனையில் இராவணன், சேனைக்காவலன் மகோதரன், வச்சிரதந்தன், துன்முகன், மகாபார்சுவன், பிசாசன், பானுகோபன், வேள்வியின் பகைவன், புகைக்கண்ணன் முதலியோர் பழிதுடைக்கும் நெறியாகத்தத்தமக்குத் தோன்றியவற்றைக் கூறுகின்றனர். கும்பகர்ணனும், இந்திரசித்தும் இராவணனுக்கு உடன்பட்டும், வீடணன் மறுத்தும் தம் கருத்தைத் தெரிவிக்கின்றனர். இவை கம்பர் அமைக்கும் பாங்கு. (கம். யு. ப. 2. பா. 22-110)

சீராமகவி தரும் மந்திராலோசனையில் பிரகத்தன், துன்முகன், விச்சிரவல்லன், விபீடணன், கும்பகருணன், மகாபார்ச்சுவன், கலர விபீடணன் முதலியோர் முறையே தத்தம் கருத்தைத் தெரிவிக்கின்றனர். இரு கவிஞர் கூற்றுகளும் பொதுவாக ஒன்றே; முறை வைப்பில் மாற்றமேற்படுகிறது. (இரா. ச. ப : 5. பா. 2-11)
(இரா. ச. ப :6 பா. 1-11)

(5) இராமனின் பெருவலிமைகூறி, நெறிதிறம்பியமையால் அழிவுற்ற இரணியன் கதையையும் எடுத்துக்கூறி, "இராமன் திருமாலாகத் தோன்றியுள்ளான்; நெறிதவறிய உனக்கு அழிவுவரும்" என விபீடணன் கூறுவான். இது கம்பர் தரும் செய்தியாகும். (கம்.யு : பா. 3)

சீராமகவி, திருமாலின் அவதாரங்களான வராகம், நரசிங்கம், வாமனன், பரசுராமன் முதலியன அரக்கர்களை அழிக்கத் தோன்றியன என்று கூறி, "அரக்கர்குலம் அழியவே இராமன் அவதரித்துள்ளான்" என விபீடணன் கூற்றாகப் பாடுவான். (இரா. ச. ப : 7, பா.6)

(6) அனலன், அனிலன், அரன், சம்பாதி ஆகிய அமைச்சர் நால்வருடன் கலந்தே விபீடணன் இராமனிடம் அடைக்கலம் புக முடிவு செய்தான் என்றும், அடைக்கலம் பற்றி சுக்கிரீவன், சாம்பவன், நீலன் முதலியோரின் கருத்தை இராமபிரான் கேட்டான் என்றும், அனுமன் "அடைக்கலமாக வந்தோரை ஏற்பதே நலம்" எனக்கூறினான் என்றும் கம்பன் விரித்துக்கூறுவான். (கம். யு. ப :4, பா.13-15)

சீராமகவி, வானரவீரர் கருத்தைக் கேட்டதாகப் பொதுவாகக் கூறி, இருபாடல்களில் விபீடணன் அடைக்கலத்தைச் சுருக்கி உரைப்பான். (இரா. ச. ப : 9 பா. 1-2). மேலும், இலங்கைபற்றி விபீடணனிடம் கேட்ட செய்தியைச் சுக்கிரீவன் வழி இராமன் அறிந்தான் எனக்கூறுவான்.

(இரா. ச. ப : 9 பா. 2)

(7) வருணனை வழிவேண்டி ஏழு நாட்கள் தருப்பைப்புல்லில் தவமிருந்தான் எனக் கம்பன் கூறுவான். (கம். யு. ப:6. பா 6-7)

சீராமன் மூன்று நாட்கள் தவம் என்று கூறுவான்

(இரா. ச. ப: பா.5)

"சேதுஅணை மூன்று நாட்களில் கட்டி முடிக்கப்படுகிறது அணை நூறு யோசனை நீளமும் பத்து யோசனை அகலமுமுடையது" - எனக் கம்பன் அமைப்பான். (கம். யு. ப:7 பா.72)

சீராமன், ஐந்து நாட்களில் 14, 20, 21, 22, 23 என - 100 யோசனை நீளத்தில் கட்டப்பட்டதாகக் கூறுகிறான். அகலம் பற்றிக் குறிப்பிடவில்லை (இரா. ச. ப. 9. பா:9,10)

(9) இராவணனால் அனுப்பப்பட்ட சுகசாரணர், இரவில் இராமனது பாடிவீட்டில் வந்ததாகக் கம்பன் கூற, சீராமன் வந்த பொழுதைச் சுட்டவில்லை. மேலும், சுகசாரணர் இராவணனிடம் இராமன் படைவலி கூறிச் சீதையை அளிப்பதே நல்லது எனக் கூறுகின்றான்.

(கம். யு. ப:8 பா 25)

(இரா. ச. ப : 10. பா. 1-2)

(இரா. ச. ப : 11. பா 8)

(10) படைவலிமை கேட்ட இராவணன், சினங்கொண்டு, ஒற்றர்களை இகழ்ந்துரைத்தான் எனக் கூறுவான் கம்பன்.

(கம். யு. ப:8 பா. 64)

சுகசாரணர்வழி பகைவர் வலிமைகேட்ட இராவணன் சீதையை அச்சுறுத்த, மாயத்தால் தயரதன் மகன் தலையையும் சிலையையும் காட்டி அச்சுறுத்தினான் எனவும், சீராமகவி சரமை உண்மையை உணர்த்தினாள் என்றும் அமைப்பான். (இரா. ச. ப : 12, பா. 132)

கம்பன் இந்தச் செய்தியை இங்கே கூறவில்லை.

(11) போர், முறையாகத் தொடங்கும் முன்னரே சுக்கிரீவன் இராவணனைக் கண்டதும் கோபமுற்று, அவன்மீது பாய்ந்து சென்று,

மகுடங்களிலிருந்து மணிகளைப் பறித்துக்கொண்டு திரும்பினான் எனக் கம்பன் உரைப்பான். (கம். யு. ப : 11 பா. 32, 33)

சீராமகவி, சுக்கிரீவன் இராவணனன் மேல் பாய்ந்து அவனைத்தாக்கி மணிமகுடத்தைப் பற்றி, இராமன் திருவடிகளில் வைத்ததாகக் கூறுவான். (இரா. ச. ப : 12, பா, 10,11)

(12) அச்செயல் தவறு என்று கூறியதையும், சுக்கிரீவன் பொறுத்தருள வேண்டியதையும் இருகவிஞர்களும் கூறுவர்.
(கம். யு. ப: 11, பா, 38) (இரா. ச. ப : 12, பா. 12)

இராவணன், சுக்கிரீவனிடம் அரக்கன் ஒருவனைத் தூதாக 'எட்டு நாட்களுள் மேற்கொள்ளும் போரில் தலை கொய்வதாகக் கூறவே, அவன் பதிலுரைகேட்டு, இராவணன் வெகுண்டான் என்று சீராமகவி கூறுகிறான் (இரா. ச. ப : 13, பா. 5,6)

கம்பன் இத்தகு ஒரு நிகழ்ச்சியைக் கூறவில்லை; வான்மீகத்திலுமில்லை.

(13) கம்பன், சார்த்தூலன் என்னும் தூதன் இராவணனிடம் இலங்கையின் மேற்றிசை வாயிலில் அனுமனும், கீழ்த்திசைவாயிலில் அங்கதனும், வடதிசை வாயிலில் இராமனும் தம்பி இலக்குவனும் காத்துநிற்க, ஒவ்வொரு வாயிலிலும் பதினேழுவெள்ளம் வானரச்சேனைகள் சூழ்ந்து நிற்க, வானர மன்னன் சுக்கிரீவன் இராமனைப் பிரியாது நிற்பதாகவும், வானர வீரர்களுக்கு உணவாக நாற்றிசைகளிலும் சென்றுப் பொருட்களைத் திரட்ட இரண்டு வெள்ளம் சேனை ஈடுபட்டதாகவும், கூறுவதாகக் குறிப்பிடுவான். (கம். யு. ப. : 12, பா.5-7)

சீராமகவி, படையின் தொகையை அளவிட்டுக் கூறாது, "பெரும்படை" என்றே சுட்டுவான் (இரா. ச. ப : 14, பா. -1-11)

(14) மேலும், கம்பன், நிகும்பன் உரையாக இராவணனிடம் ஆயிரம் வெள்ளம் சேனை இருப்பதால், அஞ்சுவது அடாது என மந்திர ஆலோசனையில் கூறுவதாக வெளிப்படுத்துவான் (கம். யு. ப: 12, பா.12). சீராமனில் இச்செய்தியில்லை.

(15) கம்பன், முதல்நாள் போரில், இந்திரசித்து வந்து கலந்துகொண்டதாகக் கூறவில்லை. கும்பகர்ணனும் அதிகாயனும் போர்செய்து இறந்தபின், இந்திரசித்தின் போர்ப்பற்றிக் கூறுவான்.

(கம். யு. ப : 18. பா 3)

சீராமகவி, முதல்நாள் போரிலேயே இராமன் இந்திரசித்தின் நாகபாசத்தால் கட்டுண்டதாகக் கூறுவான். (இரா. ச. ப.14 பா. 6-11)

இராமன், இந்திரசித்தின் நாகபாசத்தால் கட்டுண்டதாகக் கம்பன் கூறாமையால், போர்க்களம் காணச் சீதையைப் புட்பகவிமானத்தில் இராவணன் அனுப்பிய செய்தியும், அதன்பின்னுள்ள திரிசடை சீதை செயல்களும் இடம் பெறவில்லை. சீராமக்கவி இச்செய்திகளைத் தருகிறான். (இரா. ச. ப : 1-11)

(16) கம்பன், இராமன் விபீடணனை அனுப்பிக் கும்பகர்ணன் இசைவானானால், அவனைத் தம்பக்கம் அழைத்துவரும்படிக் கூறியதையும், விபீடணன் கும்பகர்ணனிடம் "இராமனைச் சேர்தலேதக்கது" எனப் பல காரணங்களால் விளக்கிக் கூறியதும், கும்பகர்ணன், "தான் இராவணனை இத்தகைய துன்பநிலையில் விடுத்துவாரேன், என்றும், அவன் பொருட்டுப் போர்செய்து செஞ்சோற்றுக்கடன் கழித்துச் சாதலே விருப்பம்" என்று கூறியதையும் நயமுற உணர்த்துவான் (கம். யு. ப : 15. பா 139, 153, 155)

இராம சரிதத்தில் இத்தகைய படைப்பு ஒன்று இல்லை.

(17) இராமன் அம்புமாரி சொரிந்து, அம்புகளாலாக்கிய மதிலால், கும்பகர்ணன் இலங்கையினுள் நுழையாத வண்ணம் தடுத்தான். கும்பகர்ணன் சுக்கிரீவனைத் தன்னுடைய இறுக்கிய பிடியால் உணர்விழக்கச் செய்து, இலங்கைக்குக்கொண்டு செல்ல முயன்றான். இராமனிடம் 'நீ என்னிடமிருந்து சுக்கிரீவனை மீட்டாயானால் சீதையையும் மீட்டனையாவாய்' எனச் சூளுரைத்தான் என்னும் நிகழ்ச்சிகளைக் கம்பன் சிறப்பாக அமைப்பான்

(கம். யு. ப:15, பா. 225-227, 286)

சீராமகவி, இத்தகைய ஒரு சூளுரையைச் சிறப்பாகத் தரவில்லை. மாறாக, இராமசரிதக் கும்பகர்ணன், இராமனிடம் உன்னால் அழிவுற்ற கரனோ வாலியோ விராதனோ அல்ல என்று கூறித் தன் வலிமையைக் கூறுவதாக அமைப்பான். (இரா. ச. ப : 34, பா.7)

(18) சுக்கிரீவனை எடுத்துச் செல்லும்போது இராமன் தன் அம்பைக் கும்பகர்ணன் நெற்றியிற் செலுத்த, அவனுக்கு மயக்கமுண்டாகவே, அவனுடைய குருதி நீர் பட்டமையால், சுக்கிரீவன் மயக்கம் தெளிந்து அவனது மூக்கையும் காதையும் கடித்து எடுத்துக்கொண்டு வானரப்படையுள்ள இடத்திற்கு மீண்டான்' - இவ்வாறு கம்பன் படைத்துக்காட்டுவான். (கம். யு. ப: 15. பா. 288-289, 290-291)

சீராமகவி, கும்பகர்ணன் சுக்கிரீவனைத் தூக்கிக்கொண்டு வெற்றியோடு வருவது கண்டு அழகிய பெண்கள் கோட்டை மேலிருந்து சந்தனம், பன்னீர் போன்றவற்றைத் தெளித்தும் பூக்களைத்தூவியும் வரவேற்றனர். இச்செயலால் உணர்வுற்று மயக்கம் தெளிந்த சுக்கிரீவன், அசுரனின் மூக்கும் காதும் பறித்துக்கொண்டு ஆகாயத்தில் உயர்ந்தான் எனப் படைத்துக்காட்டுவான். (இரா. ச. ப: 34, பா. 3, 4, 5)

(19) கும்பகர்ணன், இறுவாயில், இராமனை நோக்கி, இராவணன் விபீடணனைக் கொல்லவேண்டுமென்று கறுவிக்கொண்டிருப்பதால் சமயம் வாய்ப்பின் அவன் கொல்லத்தயங்கான்; அவனால் விபீடணனுக்கு ஒரு துன்பமும் நேராவண்ணம் காக்கவேண்டும் என்று வேண்டினான். மேலும், இறுதியாகத் தம் மூக்கிழந்த முகத்தை யாரும் காணாவண்ணம் தன் தலையை அறுத்துக் கடலினுள்ளே வீழ்த்தல் வேண்டும் என வேண்டிக்கொண்டான். கம்பன், கும்பகர்ணன் இயல்பை இவ்வாறு படைக்கிறான். (கம். யு. ப:15, பா. 356, 357, 358)

(20) இராமனிடம் கும்பகர்ணன் இத்தகைய ஒரு வேண்டுகோளை விடுத்ததாக சீராமகவி கூறவில்லை.

கம்பன், தன் காவியத்தில், இராவணனது பெருவேட்கையை நிறைவேற்றும் முகமாக, மாயசனகனைப்படைத்துக்கூற, சீராமகவி, வால்மீகியைத் தழுவி இச்செய்தியைக் கூறவில்லை. (கம். யு. ப. : 16)

(21) கும்பகர்ணன் வதைக்குப்பின்னர், இராவணன், மைந்தன் அதிகாயனை முதன்மையாக்கிப் போருக்குப்புறப்பட்டான் என்று கம்பன் கூறச் (கம்.யு.ப.17), சீராமகவி, இராவணன் மக்களான திரிசிரசு, அதிகாயன், தேவாந்தன், நராந்தகன் போன்றோர் முறையே போருக்குப் போயினர், என்று கூறுவான். (இரா. ச.ப.40)

(22) கம்பன், அதிகாயனால் தூதாக அனுப்பப்பட்ட மியிடன், இராமனை அடைந்தபொழுது, வானரவீரர் அவனைப்பற்றி வருத்த முயன்றனர் என்றும், அதுகண்ட இராமபிரான் 'தூதனைப்பற்றுதலும் துன்புறுத்தலும் தகாத செயல்' என விலக்கினான் என்றும், போர் நெறியை அமைத்துக் காட்டுவான் (கம்.யு.ப:17, பா. 45-47).

சீராமகவி, இதனைக் கூறாது விடுத்தான்,

(23) முற்காலத்தில் திருமானுடன் பொருது இறந்த மது, கைடபர் என்னும் அவுணர் இருவருமே இப்பிறவியில் முறையே கும்பகர்ணனாகவும் அதிகாயனாகவும் பிறந்தனர் என்னும் செய்தியைக் கம்பன் கூறுவான் (கம்.யு.ப:17,பா.74-75)

சீராமகவி இவ்வரலாற்றுச் செய்தியைக் கூறவில்லை.

(24) அதிகாயன் - இலக்குவன் போரின் போது, பிரம்மாவின் வரம், அத்திரம் பற்றி வாயுதேவன் கூறுவதாகக் கம்பன் அமைப்பான்: கவசம் பற்றிக் கூறாது விடுத்தான் (கம்யு.ப:18,பா.204, 205)

அதிகாயனுக்குப் பிரம்மாவின் அருளால் கிடைத்த கவசத்தை உடைக்கப், பிரம்மாத்திரம் ஏவவேண்டுமென்று, இலக்குவனிடம் சமீரணதேவன் வருகைதந்து கூறுவதாகச் சீராமகவி அமைப்பான் (இரா.சப:43, பா.8-9).

(25) இந்திரசித்து போர்க்களத்துக்குப் புறப்பட இராவணனிடம் அனுமதி பெறுகிறான். அங்கு ஒரு வேள்வி இயற்றி பிரம்மாவின் அருள் பெற்று வானரப் படையுடன் பொருதுகிறான்' எனச் சீராமகவி கூற (இரா.ச.ப:46பா.4), கம்பன் வேள்விபற்றி இங்கு எதுவும் கூறவில்லை.

(26) கம்பன், இந்திரசித்தின் நாகக்கணையால் இலக்குவனும் மற்றுள்ளோரும் கட்டுண்டனர் எனவும், இராமன் சந்தியாவந்தனத்திற்காக நீர் நிலைக்குச் சென்றிருந்ததாகவும் கூறுவான் (கம்.யு.ப:18, பா.189,190).

சீராமன், நாகக்கணையால் இராமஇலக்குவர் இருவரும் கட்டுண்டதாகக் கூறுகிறான் (இரா.ச.ப:47,பா.11).

(27) இந்திரசித்தின் பிரம்மாத்திரத்தால் இராமஇலக்குவர் மூச்சற்று வீழ்ந்து கிடக்கும் நிலையில். சீதைகண்டு புலம்புவதாகக் கம்பன்

(கம்.யு.ப:22,பா.10-11) கூற, சீராமகவி அதனைக்கூறாது, சீதையைப் போர்க்களத்தில் கொணர்ந்து, அனுமன் காணத்துன்புறுத்தியதாக அமைப்பான் (இரா. ச. ப: 49, பா. 5,6)

(28) கம்பன், சாம்பவன், வாயிலாக, இமயமலைக்கு அப்பால் உள்ள ஏமகூடம், நிடதமலை, மேருமலை, நீலகிரி, பின் மருத்துமலை இருப்பதாகவும் அவற்றின் இடையே உள்ள தூரத்தையும் கூறுவான் (கம். யு. ப: 23, பா. 21-23)

சீராமகவி, கைலாய மலைக்கு அப்பால் இரு சிகரங்களுக்குக்கிடையே மருத்துமலை இருப்பதாகவும், மூலிகைகளான சந்தானி, சமீகரணி, சஞ்சீவி விசல்யகரன் முதலியன அங்குள்ளன என்றும், சாம்பவன் கூறுவதாக விளக்குவான்(இரா. ச.ப: 49. ப. 4,5)

(29) கம்பன் கூறும் களியாட்டுப் படல நிகழ்ச்சிகள் (கம்.ப.24) சீராமனின் காவியத்தில் இடம்பெறவில்லை; வால்மீகத்திலுமில்லை.

(30) மருத்துவமலையைக் கொணர்ந்த அனுமன் முன், இந்திரசித்து மாயாசீதையின் கூந்தலை ஒரு கையில் பற்றிக்கொண்டு, மறுகையில் வாளை ஏந்திக்கொண்டு வந்து நின்று, சீதையைக் கொல்லப்போவதாகக் கூறுவதாகவும், அனுமன் அவனுக்குச்சில நீதிகளைக் கூறுவதாகவும் கம்பன் அமைத்துக்காட்டுவான் (கம்.யு.ப: 25, பா. 28-30)

சீராமன், மாயா சீதையைப் போர்க்களத்தில் கொணர்ந்து, அனுமன் காணத் துன்புறுத்திவெட்டுவதாகக் கூறுவான்.

(இரா.ச.ப: 59, பா. 5-6)

(31) இந்திரசித்து மாயாசீதையைக் கொன்றபின், புட்பகவிமானத்தில் அயோத்திக்குச் சென்று, அங்குள்ளோரை அழிப்பதாகச் சொல்லிப் புறப்பட்டுப், பின் நிகும்பலைக்குச் சென்றதாகக் கம்பன் கூறுவான் (கம்.யு.ப : 25. பா: 40, 41)

சீதை வெட்டுண்டு வீழ்வது கண்டு, மாருதி இராமனிடம் கூறச்சென்றபோது, இந்திரசித்து நிகும்பலைக்குச் சென்றதாகச் சீராமன் கூறுவான் (இரா. ச. ப ப:60, பா. 4-7)

(32) விபீடணன் வண்டின் உருவங்கொண்டு அசோகவனத்திற்குச் சென்று, சீதை உயிருடன் இருப்பதை அறிந்து வந்து, பின் இந்திரசித்தின் 'மாயைசீதை' மாயச்செயல் என்று சொல்லியதாகக் கம்பன் கூறுவான்

(கம். யு. ப : 60, பா. 88, 89)

சீராமன் இத்தகைய ஒரு நிகழ்ச்சியைக் கூறவில்லை.

(33) இனி இலங்கைப்போரில் பொரவரும் இந்திரசித்துடன் இராவணன் மட்டுமே எஞ்சியவன், என வீடணன் இராமனிடம் கூறுவதுடன், இதுவரை இறந்த அவுணர் பட்டியலையும் கூறுவான் சீராமகவி (இரா. ச. ப : 68, பா. 1-5)

கம்பனில் இச்செய்தி கூறப்படவில்லை.

(34) இந்திரசித்துடன் போர் செய்து விழுப்புண்பட்ட இலக்குவன்

உடலை இராமன் பலமுறை தழுவியதால் அப்புண்மறைந்ததாகக் கம்பன் உயர்வாகக் கூறுவான் (கம். யு. ப :47, பா. 68,69)

இலக்குவன் உடம்பில் பட்ட விழுப்புண்களைக் கண்ட இராமன், வல்ல சுடேணனை விளித்து, அப்புண்களை ஆற்றுமாறு கூறியதாகவும், சுடேணன் அவ்வாறே ஒரு மருந்து கொணர்ந்து இலக்குவன் மூக்கில் முகரச்செய்தவுடன், அவன் உடம்பிலிருந்து புண்களும் வடுக்களும் நீங்கினவென்றும், தன்மை நவிற்சியாகக் கூறுவான் சிராமகவி; வான்மீகியின் கருத்தே இது. (இரா. ச. ப :72, பா.1,2,3)

(35) கம்பன், இந்திரசித்து இறந்ததைப் போர்க்களத்திருந்த ஒற்றர்கள் நேரில் அறிந்து வருந்தி, இராவணனுக்குச் சொன்னதாகவும், அதுகேட்ட அவன் துன்பமும் சினமும் மிக்கவனாய், அச்செய்திகளைக் கூறவந்த ஒற்றர்களை வாளால் வீசியதாகவும் அமைப்பான் (கம். யு. ப. : 28, பா.5)

சீராமகவி, இந்திரசித்தின் வதையை இராவணனுக்கு அரக்கர்களே அறிந்து வந்து கூறியதாகவும், அதுகேட்ட இராவணன் துன்பத்தில் மூச்சற்று வீழ்ந்ததாகவும் கூறிச்சொல்லுவான் (இரா. ச. ப : 73, பா.2)

(36) இராவணன், தன் மகன் இந்திரசித்து இறந்ததைக் கேட்டுப் புலம்பிப் போர்க்களம் புகுந்து, இந்திரசித்தின் உடம்பை ஒரு நாளெல்லாம் தேடிப், பின் அவனது கையையும், தலையில்லா உடம்பையும் கண்டு, பல சொல்லிப் புலம்பிவிட்டு, அவ்வுடம்பைத்தூக்கிக்கொண்டு, அரண்மனைக்குள் புகுந்தான் என்பது கம்பனின் புனைவாகும். (கம். யு. ப : 28. 40,43)

சீராமனும் வால்மீகியும் இதனைக் கூறவில்லை.

(37) இந்திரசித்தின் தாயாகிய மண்டோதரி அழுதுபுலம்பியதைப் படைத்துக் காட்டுகிறான் கம்பன் (க ம். யு. ப : 28 பா. 44-53)

சீராமன் இந்நிகழ்ச்சியைக் கூறவில்லை.

(38) இந்திரசித்தின் சிரமற்ற உடலைத் தைலத்தோணியில் இட்டுக்காக்க இராவணன் பணித்தான் எனக்கம்பன் கூறுவான். (கம். யு. ப. : 28 பா.60)

சீராமனில் இச்செய்தி இல்லை.

(39) உலகில் பல்வேறிடங்களிலுமுள்ள அரக்கர் சேனைகள் இராவணன் வேண்டுகோள்படி வந்து குவிந்தன என்றும், தூதுவன் இராவணனுக்கு அச்சேனைகளின் தன்மையைக் கூறியதாவும், அச்சேனையின் அளவு ஆயிரம்வெள்ளம் என்றும், கம்பன் கூறுவான் (கம். யு ப : 29. பா. 43)

சுபாரிசுவன் சொல்லைக்கேட்டுச் சினம் தணிந்து, சீதை மேற்செல்லாது, அரண்மனை புகுந்த இராவணன், படைத்தலைவர்களை அழைத்து, எஞ்சிய படைகொண்டு, கொடிய ஆயுதங்களால் இராமன்

படையைத் தாக்குங்கள் என்று ஆணையிட்டதாக அமைப்பான் (இரா. ச. ப : 79, பா. 7,8) சீராமகவி.

(40) வேலேற்ற படல நிகழ்ச்சியில் இராவணனுக்கும் இலக்குவனுக்கும் போர் நடப்பதாகவும், இராமன் இப்போரில் கலந்து கொள்ளாமல் மூலபலவதையில் ஈடுபட்டிருப்பதாகவும், அவ்வதை முடிந்து இலக்குவனுக்குத் துணை செய்ய வரத் தொடங்கும்போது, இராவணனது வேலினால் இலக்குவன் வீழந்த செய்தியையும், அனுமன் கொணர்ந்த மருத்துமலையினால் உய்ந்த செய்தியையும் சாம்பவன் கூற அவன் அறிந்து கொண்டதாகவும் கம்பன் படைப்பான். (கம். யு. ப : 31,பா 15-19, 30-46)

சீராமகவி, இராமனும இராவணனும் போர் செய்து கொண்டிருக்கையில், இலக்குவன் இராவணனது கொடியை ஒரம்பினால் கொய்து வில்லையும் துண்டித்ததாகக் கூறுவான். (இரா. ச. ப. 86, பா. 4.5)

(41) வேல்பட்டு வீழ்ந்த இலக்குவனை உயிர்ப்பிக்கச், சாம்பவன் அனுமனை அனுப்பி, மருந்து கொணரச்செய்ததாகக் கம்பன கூறுவான் (கம். யு. ப : 31. பா.5)

சுடேணன், அனுமனை அனுப்பி அதைச் செய்தான் என்று கூறுவான் சீராமகவி (இரா. ச. ப : 488, பா. 9-10)

(42) இலக்குவன், அனுமன் கொணர்ந்த மருத்து மலையால் உயிர் பெற்றழுந்தான் எனத்தூதர் இராவணனிடம் கூற, உண்மையை அறிய, இராவணன் கோபுரத்தில் மேல் ஏறிப்போர்க்களத்தைப் பார்த்தான் எனக் கம்பன் கூறுவான் (கம். யு. ப : 33, பா. 19).

செய்தியைத் தூதுவர் வழி அறிந்ததாகச் சீராமன் கூறுவான். (இரா. ச. ப. 89, ப.8)

(43) போருக்குப்புறப்படும் முன் இராவணன், சிவபெருமானுக்கு முறைப்படி பூசனை புரிந்தான் என்றும், தன் தேரில் ஏறுவதற்குமுன் அத்தேரினை அருச்சித்தான் என்றும், கம்பன் கூறச், சீராமகவி இச்செய்தியைக் கூறவில்லை. (கம். யு. ப 34, பா. 3, 24)

(44) இராம இராவணப் போரில், ஞாயிறு திங்கள் ஐம்பெரும்பூதங்கள் என்ற எல்லாவற்றிலும் ஆற்றல் அளிக்கும் பரம்பொருளின் அம்சமாகப் பிறந்துள்ள இராமன், சூரியனை நோக்கி, அவன் மந்திரம் சொல்லி, ஆற்றல் பெற்று, இராவணனை வென்றான் எனக்கம்பன் அமைப்பான் (கம், யு. ப 36, பா. 193)

சீராமகவி, இராமனும் இராவணனும் போர் செய்வதை விண்ணிலிருந்து பார்த்துக்கொண்டிருந்த அகத்தியமுனிவர், இராமன் விட்ட அம்புகளால் இராவணன் சோர்ந்திருப்பதையும், அதனால், இராமன் வெற்றியுற, "ஆதித்திய இருதயம்" என்னும் சூரியனுக்குரிய மந்திரத்தை உபதேசித்ததாகவும், அதனை அவன் உருவிட்டுச் சூரியனை வணங்கிப் போர் செய்து வென்றான் என்றும், மூலநூலை ஒட்டிச்செய்திகளை அமைக்கிறான் (இரா. ச. ப. 94, ப.5-9)

மேலும் மந்திரத்தின் சிறப்பை விரிந்துரைக்கிறான், (இரா. ச. ப. 96, பா. 1-11) கம்பன் விரித்துக்கூறவில்லை.

(45) கம்பன், இராமன் விடுத்த அம்புகளால் இராவணனது கையை அறுத்ததாகவும், அற்ற இடத்தில் மீண்டும் புதிய கைகள் முளைத்ததாகவும் கூறுவான் (கம். யு. ப: 36, பா. 153-154)

இராவணன் தலையை இராமன் அறுக்க அறுக்க, அது மீண்டும் மீண்டும் முளைத்தாகச் சீராமன் கூறுவான் (இரா. ச. ப. 100. பா1)

(46) கம்பன், இராமன் பிரமாத்திரத்தை இராவணன் மார்பில் விடுக்க, அது சென்று இராவணன் உடலில் நுழைந்து உலாவி, அவன் உயிரை மாய்த்துப் புறம்போந்து பாற்கடலில் மூழ்கி, மீண்டுவந்து இராமனது அம்பறாத்தூணியில் நுழைந்து தங்கிற்று - எனக்கூறுவான்.

சீராமகவி, பைதாமகா அத்திரத்தை அகத்தியர் ஆசிபெற்று இராமன்விட, அது இராவணன் மார்பில் பாய்ந்து உயிரை எடுத்துவிட்டு, விரைவில் அம்பறாத்தூணியில் நுழைந்தது எனக்கூறுவான் (இரா. ச. ப. 97, பா, 9,10)

(47) மண்டோதரி இராவணனது மார்பில் மூர்ச்சித்து விழுந்து உயிர்துறந்தாள் எனக் கம்பன் (கம். யு. ப 36, பா. 246) கூற, சீராமன், அவள் மூர்ச்சித்து விழுந்து எழுந்து அரற்றினாள் என்று மட்டும் கூறுகிறான். (இரா. ச. ப. 103, பா. 2-4)

மேலும், மண்டோதரி அவலத்தைக் கவிஞன் விரித்துரைக்கிறான் (இரா. ச. ப. 104, 105, 106, 107)

(48) மீட்சிப்படலத்தில் கம்பன், சீதையைக் கண்ணுற்ற இராமன் அவளது கற்பின் திறத்தை அறியாதவன் போன்று பலவாறு கடிந்துரைத்து "நீ இறத்தலே தக்கது" என்று கடிந்துரைத்ததாகக் கம்பன் அமைப்பான். (கம். யு. ப 37, பா. 66, 67)

சீராமன், இராவணனின் மோகவலையில் வீழ்ந்த சீதையின் கற்பொழுக்கத்தினை இழித்துக்கூறி, இராமன், சீதையிடம், இனி, நல்லகணவனாக வீடணனையோ, பரதனையோ, சத்துருக்கனையோ மற்று எவரை வேண்டுமானாலும் தேர்ந்துகொள் எனக் கடுஞ்சொற்களால் கூறியதாக அமைப்பான். (இரா. ச. ப 113, பா. 5,6)

வால்மீகியின், கருத்தைச் சீராமகவி அப்படியே கூறுவது குறிப்பிடத்தக்கது.

(49) கம்பன், சீதை மீட்சியின் போது, சிவபெருமான் தயரதனை அழைத்து, சீதையின் தெய்வக் கற்பினைக் கண்டு, சீதை கற்பினுக்கரசியென்று உலகத்தார்க்குக் காட்டுதற்பொருட்டே இராமன் அவளைத் தீயில் புகச்செய்தான் என்றும், ஆதலின்அவனிடம் சினவாதிருக்க வேண்டுமென்றும் கூறுவதாகத், தக்க நெறியில் அமைப்பான். (கம். யு. ப 37, பா. 112-113)

சீராமன், சீதை களங்கமற்றவளாகையால் அவளை

ஏற்றுக்கொள்ள வேண்டுமென இராமனிடம் தயரதன் வேண்டுவதாக அமைக்கிறான் (இரா. ச. ப 120. பா. 5)

(50) கம்பன் படைத்த இராமன் தயரதனிடம் "நீ தீயவள் என்று விலக்கிய தெய்வமும் அவள் பெற்ற மகனும் எனக்குத்தாயும் தம்பியுமாகும்" படியான வரத்தினைத் தந்தருள்வாயாக என்று வேண்டுகிறான். (கம். யு. ப 47. பா. 128)

சீராமகவி வரம்பற்றிக் கூறவில்லை.

(51) நந்திக்கிராமத்தில் பரதன் முன் தோன்றிய அனுமன், இராமனது அடையாளமாக அவன் மோதிரத்தைத் தர, மோதிரம் பெற்ற பரதன், "நீ யார்?" என வினவுகிறான். அனுமன் தனது வரலாற்றை எடுத்துரைத்துத் தனது பெருவடிவத்தைக் காட்டினான். கண்டோர், அச்சமும் வியப்பும் அடைந்தனர். பரதன் வேண்ட, பெருவடிவத்தைச் சுருக்கினான். இவ்வாறு கம்பன் அமைப்பான் (கம். யு ப 37, பா. 255-257)

சீராமகவி, பரதன், அனுமனின் கைகளைப் பிடித்துப் இராமனிருக்கும் திசையைநோக்கித் தொழுது, "அரசன் இங்குவரமனமுண்டோ?" எனக்கேட்டு, வரும் செய்தியை அறிகிறான் என அமைப்பான். (இரா. ச. ப 125 . பா. 4-9)

(52) பரதன் அனுமனை நோக்கி, "இராமபிரான் தங்கியிருந்தது எங்கே? அப்பெருமானின் நிகழ்ச்சி முழுவதையும் நீ எங்களுக்கு விரித்துக்கூறுவாயாக" என வேண்டினான். அனுமன், வனம்புக்க இராமன் சித்திரகூடத்தை விட்டுப்புறப்பட்டது முதல், இராவணனைக் கொன்று மீண்டதுவரையிலும் நிகழ்ந்த செய்திகளைச் சொல்ல, அவற்றைச் சுருக்கமாக 26 விருத்தப்பாக்களால் கம்பன் பாடுவான் (கம். யு. பச 37. பா. 259-304)

சீராமகவி, இந்நிகழ்ச்சிகளை விரித்துத் தம் குறுங்காவியத்தில் 300 க்கு மேற்பட்ட விருத்தப்பாக்களால் பாடுவான்.

(53) இராமன் முதலியோர் பயணம் செய்த புட்பகவிமானம் நந்திக்கிராமத்தை அடைந்தது. அனுமன் விமானத்திலுள்ளோரைப் பரதன் முதலியோர்க்குச் சுட்டிக்காட்டினான். பின்னர் விமானம் பற்றிய வேறு எந்தச் செய்தியையும் கம்பன் தரவில்லை. (கம். யு. ப. 37. பா 346)

சீராமகவி, விமானம் பரதன் அரண்மனையை அணைந்து தரையில் இறங்கியதும், இராமன், நீ போய் முடி மன்னனாகிய குபேரனிடம் விரைந்து சென்று, அவன் வாகனமாகுக, எனப்பணித்ததும், விமானம் கைலாயத்துக்குப் பயணமாயிற்று என முடித்துக்காட்டுவார். (இரா. ச. ப. 157. பா. 4)

(54) கம்பன், வானர வீரர்கள் அறுபத்து ஏழுகோடிப்பேர் யானைகளின் மேல் ஏறிக்கொண்டு, இராமனுக்கு முன் அயோத்தி சென்றதாகக் கூறுவான் (கம். யு. ப 38, பா. 5)

சீராமகவி, இராமன் அயோத்திபுகும் போது வானர வீரர்கள் ஒன்பதாயிரம் பேர் யானைகளின் மேல் ஏறி முன் சென்றதாக கூறுவான். (இரா. ச. ப. 158. பா. 5)

(55) இராமன் திருமுடி சூட்டுவிழாவுக்கு, நாற்கடலிலிருந்து தீர்த்தம் கொணரச் சுக்கிரீவன் அனுமனைப் பணிக்க, அவன் அங்ஙனம் செய்ததாக அமைப்பான் கம்பன் (கம்யு. பா 38, பா, 37)

சீராமன், தீர்த்தம் கொணரச் சுவாக்கன், அனுமன், இருசிபன், நளன் முதலியோரை சுக்கிரீவன் ஏவியதாகப் படைப்பான்.

(இரா.சப:159 பா.5)

(56) இராமபிரான், திருமுடி சூட்டிய நிகழ்ச்சியில், பரதன் வெண்குடை கவிப்பபதாகக் கம்பன் (கம்.யு.ப:38. பா.38) கூறச், சீராமன், இலக்குவன் குடை கவிப்பதாகக் கூறுகிறான் (இரா.ச.ப:160 பா.7)

(57) மேலும், முடி சூட்டுவிழாவிக்கு மன்னவர்கட்கு ஓலை போக்கி அழைப்பின்படி சனகன், யுதாசித், காசிராசன் மற்று அரசர்களும் வந்திருந்தனர் என்று சீராமகவி கூறுகிறான் (இரா.ச.ப:160, பா,4,6).

கம்பன் இவர்கள் பெயர்களைச் கட்டவில்லை.

(58) சீராமன் முடிசூட்டு விழாவின் போது இராமபிரான் சிறப்புகள் வெளிப்படும்படியாக வாழ்த்துப் பாடல்களை அனுமன் பாடுகிறான். இருபத்திரண்டு பாடல்கள் இதில் இடம் பெறுகின்றன. கம்பனில் இந் நிகழ்ச்சி இல்லை. (இரா.ச.ப:162,163, 164 பா.1,2,3)

உத்திர காண்ட நிகழ்ச்சிகளைக் கம்பனைப் போலவே சீராமனும் கூறவில்லை.

## *கம்பராமாயணத் தாக்கம் இராமசரிதத்தில்*

கம்பன் பாயிரத்தில் அவையடக்கமாகக் கூறும் பகுதிகளில்

**1) ஓசை பெற்றுஉயர் பாற்கடல் உற்றுஒரு**
**பூசை முற்றவும் நக்குபு புக்கென,**
**ஆசைபற்றி அறைய லுற்றேன் மற்றுஇக்**
**காசில் கொற்றத்து இராமன் கதையரோ**

(கம்.பாயிரம் பா.6)

**2) வையம் என்னை இகழவும், மாசுஎனக்கு**
**எய்தவும், இதுஇயம் புவதுயாதெனில்**
**பொய்யில் கேள்வி புலமையி னோர்புகல்**
**தெய்வ மாக்கவி மாட்சி தெரிக்கவே**

(கம். பாயிரம் பா.7)

**3) முத்தமிழ்த் துறையில் முறை நோக்கிய**
**உத்தமக் கவிஞர்க் கொன்று உணர்த்துவன்**
**பித்தர் சொன்னவும், பேதையர் சொன்னவும்**
**பத்தர் சொன்னவும், பன்னப் பெறுபவோ?**

(கம். பாயிரம் பாய.8)

இம்மூன்று கவிதைகளின் சாரத்தை, இராமசரிதத் கவிஞர்

'துணையெனக்கு இதினும் மிக்கவரும் உள்க்கனம்அறச்
சுருங்கினோர் அகுதிஎன்று அறிஞ்ஞு நல்லவர் எல்லாம்,
பணி இதிற்கு இவன் எனக் கருதிநொய் யவர்களும்
பகயர் ஆவதின் அறப்பர், என்னொடு ஒப்பம் உடையோர்
பிணங்ஙவோர்இல்ல என்னும் பொழுது போய் இடயிடப்
பிழமுழுக் கிலும்எனத் தெளிஞ்ஞு அரக்கரெ முன்னம்
மணிவண்ணன் மனுசனாய் பொருதபோர்க் கொடும்தன்
வழி உரைப்பதினு கோலினது என்மேத கொடுஞான்
(இரா. ச. ப : 1 பா : 8)

(துண = துணை, இதினு = இதற்கு, கனம் = வன்மை; அகதி = அகதி; அறிஞ்ஞு = அறிந்து, அறப்பர் = அறைப்பர், நாணுவர்; இடஇட = இடையின், அரக்கரெ = அரக்கரை: கோலினது = முயன்றது, கொடு = கொண்டு, ஞான் = நான்) என்று தருகிறார்.

2. இராமபிரானின் சிறப்பை, வீடணன் இராவணனுக்கு அறுதியிட்டுக்கூற, இராவணன் மறுமொழியாகக் கூறும்,

"சிவனும் நான்முகத்து ஒருவனும், திருநெடு மாலாம்
அவனும் மற்றுள்ள அமரரும், உடன்உறைந்து அடங்க,
புவனம் மூன்றும்நான் ஆண்டுளது ஆண்ட அப்பொருஇல்
உவன் இலாமையினோ வலிஒதுங்கி யோ!உரையாய்!
(கம். யு. 2:114)

இராமசரித ஆசிரியன் சீராமன், மேற்கூறிய இராவணன் பதிலுரையை, மற்றோரிடத்தில், வீடணன் உரையாக,

'அறிவதில் அரிப்பம் இப்போழ்
அவனுடெ பொரிப்பம் நம்மால்
குறவுஅறும் வருணன் அல்ல
குஞ்சர முகனும் அல்ல
ஆறுமுகன் அல்ல பண்டே
அனல் அணிந்த அரனும் அல்ல
மறுஅறும் பவனன் அல்ல
வச்சிர தரனும் அல்லே' (இரா. ச. ப. 7: பா 5)

எனக் கூறுகின்றன,

(அறிவதின்=அறிவதற்கு, அரிப்பம் = அருமை, குறவு= குறைவு, பவனன்= காற்று, வச்சிரதரன்= இந்திரன்)

வீடணன் அறிவுறுத்தும் இரணியன் வதையை ஒப்ப, இராமசரிதத்தில் வரும் பாடல்

"அல்லல் செய்து உலகு அலய்க்கும்
அசுரரெ அறுப்பான் முன்னம்
நல்லதோர் வராகம் ஆனான்
நரசிங்க வடிவம் ஆனான்

சொல்லெழும் குறளாயத் தூய
மழுவேந்தும் முனியும் ஆனான்
மெல்ல நம்குலம் முடிப்பான்
வேந்தனாய்ப் பிறந்தான் இப்போள்"

(இரா. ச. ப 7: பா 6)

(அலய்க்கும்=அலைக்கும், அசுரரெ= அசுரரை, மெல்லெ = மெல்ல, இப்போள்= இப்போது)

- இவை, சீராமகவி, கம்பராமாயணக்கதையைக் கேட்டோ அல்லது படித்தோ இருக்க வேண்டுமென்பதை உணர்த்துகின்றன.

## *ஒப்பீடு : கம்பனும் வான்மீகியும்*

வான்மீகி விரிவாகப் பாடியனவற்றைக் கம்பன் தொகுத்துரைப்பன.

1) வானர வீரர்கள் இலங்கை நோக்கிப் பயணம் செய்வதை வான்மீகி விரித்துக் கூறக், கம்பன் அதனைச் சுருக்கிக்கூறுகிறான் (வான். யு. : 4; கம். யு.14 : 15)

2) வீடணனுக்கு அடைக்கலம் வழங்குவதை எதிர்த்துச் சுக்கிரீவன் இரண்டு இடங்களில் பேசுவதாக வான்மீகி பாடியிருப்பதைச் சுருக்கிக், கம்பன் ஒரே ஒருமுறை மட்டும் எதிர்த்துப் பேசுவதாகப் புனைகின்றான்.

(வான். யு: 17-18) கம் யு. 4:56-58)

(3) வானரப்படைகளை உளவறிந்து வருமாறு முதலில் சாத்தூலன் என்பவனையும், பின்னர் சுகன் சாரணன் என்னும் இருவரையும் இருமுறை அனுப்புவதாக வான்மீகி பாடியிருப்பதைச் சுருக்கிச், சுகசாரணர் ஒருமுறை ஒற்று அறியவந்ததாகக் கம்பன் கூறுவான் (வான்.யு. 20, 25, 29); கம். யு. 9 : 23-38)

(4) மாயாசீதையை இந்திரசித்து கொன்றதைக் கேள்வியுற்று அதனை உண்மையென நம்பிப்புலம்பும் இராமனுக்கு இலக்குவன் கூறும் ஆறுதல் உரைகள் நீண்டு செல்லுகின்றன. கம்பன் அவற்றைச் சுருக்குகின்றான் (வான். யு : 83, கம். யு. 25 : 62-69)

(5) இராவணன் போர்க்களத்தில் மாண்டு கிடப்பதைக்கண்டு, அவனுடைய உரிமை மகளிரான அரக்கியரும் மண்டோதரியும் புலம்பியழுவதை விரிவாக வான்மீகி பாடியிருப்பதைக், கம்பன் சுருக்கியுரைப்பான் (வால் : யு 113-114; கம். யு. : 36 : 12-29).

(6) வீடணன் இராவணனுக்கு இறுதிக்கடன்களைச் செய்ய விழைந்ததாகவும், செய்ய மறுப்பதாகவும், அடுத்தடுத்த முரண்படக்கூறுவதை ஒழித்துச் சுருக்கி, இராமன் ஆணையால் அவன் இறுதிக்கடன்களைச் செய்ய ஒப்புவதாகக் கம்பன் அமைப்பான். (வான். யு. 112-114; கம். யு. : 36: 215)

(7) இராமன் வெற்றிபெற்றதைச் சீதையிடம் தெரிவிப்பதற்குச் சென்ற அனுமன், அவளுக்கு இன்னல் இழைத்த அரக்கியரை அழிக்கவேண்டும்

என்று தன் ஆவலைத் தெரிவிக்கச் சீதை, அதனை மறுத்துக்கூறும் உரையாடல் வான்மீகத்தில் நீண்டு செல்வதைக் கம்பன் தொகுத்துச் சுருக்கமாக அமைக்கின்றான். (வான். யு. : 11; கம். யு. 37:18-23)

### *கம்பன் விரிந்துரைப்பன:*

(8) வான்மீகிச் சுருக்கமாகக் கூறிய அங்கதன் தூதைத் தனியொரு படலமாகக் கம்பன் விரிவாகக் கூறுவான் (வான். யு: 41; கம், யு : 13)

(9) நாகபாசத்தால் கட்டுண்டு கிடக்கும் இலக்குவன் முதலிய வீரர்களை மீட்கத் தோன்றுகின்ற கலுழன் வருகை, கம்பனால் விரிந்துரைக்கப்படுகிறது. வான்மீகி அதனைச் சுருக்குவான். (வான். யு. 50; கம். யு. 18; 243-271)

(10) மூலபலச் சேனைகளுடன் இராமன் தனியொருவனாக நடத்தியபோர் மிக விரிவாக மூலபலவதைப்படலத்திலும் விரிவாகப்பாடப்படுகின்றது. இதனை வான்மீகிச் சுருக்கமாகப் பாடியுள்ளான். (வான். யு 94; கம். யு 30)

### *கம்பன் நீக்குவன :*

(11) நாகபாசத்தாலும் பிரமாத்திரத்தாலும் இலக்குவனுடன் இராமனும் கட்டுண்டதாக வான்மீகி படைத்திருப்பதை மாற்றி, இராமன் தெய்வப்படைகளுக்கு பூசனை இயற்றச் செல்லுவதாகக், களத்திலிருந்து அவனைக் கம்பன் அப்புறப்படுத்துவான் (கம். யு. : 18 : 185)

(12) இராமன், ஆதித்தனைத் துதித்து, அவனருள்பெற்று இராவணனைக் கொன்றான் என்பது பரத்துவத்தை மாசுபடுத்துவதால் அதனை அடியோடு கம்பர் ஒதுக்கி, இராவணன் எறிந்த சூலத்தை இந்திரன் அனுப்பிய சக்தியால் இராமன் அழித்தான் என முடிப்பான். (வான் யு : 104)

(13) இதே காரணத்தால்; இராமனுடைய உங்காரத்தொனியால் இராவணன் சூலம் நீறாயிற்று என்று அமைப்பான் கம்பன் (கம். யு. ப : 36 : 131)

### *கம்பன் மாற்றுவன :*

(14) போர், முறையாகத் தொடங்கு முன்னரே, இராவணனைக் கண்டதும் சுக்கிரீவன் பாய்ந்து சென்று, அவனுடன் போர் செய்து மீண்டதாக வான்மீகி படைப்பான். கம்பன், இதனைச்சற்று மாற்றி, அவனுடைய பெருமைக்கேற்ப, இராவணன் மகுடங்களிலிருந்து மணிகளைப் பறித்துக் கொண்டு திரும்புவான் என அமைப்பான் (வான். யு. : 40; கம். யு. 11:32-34)

(15) போரின் தொடக்கநிலையிலேயே இந்திரசித்து நாகபாசத்தை ஏகினான் என வான்மீகி அமைத்திருப்பதை மாற்றிக், கும்பகர்ணன், அதிகாயன் போன்ற பெருவீரர்கள் மடிந்தபிறகு, இராவணன் வேண்டுகோளின்படி நாகபாசத்தை இலக்குவன் மேல் இந்திரசித்து விடுத்தான் என மாற்றியமைப்பான். (வான். யு. 45-46 கம். யு. 18: 14)

(16) நாகபாசத்தால் கட்டுண்டுகிடக்கும் இராம இலக்குவரைச் சீதை காணும்படியாகச் செய்தான் இராவணன், என வான்மீகி படைப்பான். கம்பன் அதனைப் பிரம்மாத்திரப் படலத்துக்குப்பின் அமைக்கிறான். (வாய். யு:47, கம். யு: 22-3)

(17) வீடணன், இராமனைச் சரணடைந்ததும், -இராவணனுடன் போர்ப்படைகளைப் பற்றிய உளவுச் செய்திகளை உள்ளவாறு தெரிவிக்குமாறு இராமன் வேண்டுவதாக வான்மீகி புனைகின்றான். இவ்வாறு, அமைந்தால் இராமனின் பெருமைக்கு இழிவு எனக்கருதி அதனைப் பின்னர் வருமாறு மாற்றுகின்றான் (வான்.யு.19:கம் யு :4:15) கம்பன்.

(18) இந்திரசித்து இறந்ததும் சோகத்தால் துடிக்கும் இராவணன், சீதையைக் கொல்வேன் என்று புறப்பட்ட பொழுது, சுபார்சுவன் அதனைத் தடுத்ததாக வான்மீகி படைத்திருப்பதை மாற்றி, மகோதரன் தடுப்பதாகக் கம்பன் புனைவான் (வான். யு: 93; கம்.யு: 28:54)

## *ஒப்பீடு - வால்மீகியும் சீராமகவியும்: தொகுத்தலும் சுருக்கலும்*

(1) சிறையிருந்த சீதையின் நிலையைக் கண்டு அனுமன் இராமனிடம் கூறுவதை, வான்மீகி, பதினொரு கவிதைகளில் அனுமனைப் புகழ்ந்து, விரித்துரைக்கின்றான். இச்செயலை இராமசரித ஆசிரியன், 'நீ செய்தது நன்று' என சுக்கிரீவன் கூறுவதாக ஒரே பாடலில் அமைக்கின்றான் (வான்.யு.1, இரா.ச. 2 ச (1)

(2) இலங்கைப் போருக்குப் புறப்படும் முன் இராமனின் உளச்சோர்வை அகற்றிப் போருக்கு ஆர்வமூட்டுகிறான் சுக்கிரீவன். இச்செயலை வான்மீகி இரண்டாம் சர்க்கம் முழுவதுமாக விரித்துக் கூறுவான்.

இக்கருத்தை இராமசரித ஆசிரியன்,. மேல்மேல் வரும் துயரத்தை விட்டு இலங்கை அதிபனுடன் பொருத, ஆர்வமூட்டும் நிலையில் இருபாடல்களாகத் தொகுத்து உரைப்பான் (வான.யு:2; இரா.ச.2:2-3)

(3) அசோகவனத்திலிருந்து இராவணன் போனபின், அரக்கியர் சூழலில் வருந்தும் சீதையைச் சமாதானப்படுத்தத் திரிசடை முயல்வதை, சுந்தரகாண்டத்தில் இரு சர்க்கங்களில் வான்மீகி விரித்துக் கூறுவான். 'பிரியாதிருந்த நீ, பிரிவால் வருந்துகின்றாய்' என்று திரிசடைகூறும் நிகழ்ச்சி, சீராமகவியால் ஒரு பாடலில் தொகுக்கப்படுகிறது. (வான்.சு/27 27:இரா.ச.4:1)

(4) சீதை பற்றி நினைந்து சோர்ந்த இராமனை ஆறுதல் படுத்த, வான்மீகி, போர்ப்பகுதியில் ஐந்தாம் சருக்கத்தில், பெரும்பகுதியைக் கையாளுகிறான். சீராமகவி, 'அலகடலோடு முட்டினவீரன்' எனத் தொடங்கும் ஒரே பாடலில் அதனைச் சுருக்கியுரைப்பான் (வான்.யு: இரா.ச.பச 7)

(5) இராவணன் ஏவலால் வித்யுஜ்ஜிஉறவன் என்னும் மாயாவி கொணர்ந்த இராமன் தலையையும் கோதண்டத்தையும் கண்டு சீதை

வருந்த, அவளைச் சமாதனப்படுத்துமுகமாக 'சரமை' என்ற அரக்கன் மனைவி கூறும் தேறுதல் மொழிகள் வான்மீகியின், முப்பத்தாறு பாடல்களில் விரித்துரைக்கப் படுகின்றன.

சீராமகவி, 'இயலெப்பேசித்தேற்றி அடுத்து இடர் போக்கினாள்' (இயலெ= உண்மை) என்ற ஒரேவரியில் சுருக்கியுரைப்பான்(வான்.யு:36; இரா.ச.12:4)

### *சீராமகவி விரிந்துரைப்பன:*

(6) இராமபிரானின் பொய்த்தலையைக்கண்ட சீதை, மன்னர் இறந்தார் என்று நினைத்து அரற்றும் அவலத்தை வான்மீகி ஒரு பாடலில் கூற, சீராகவி ஒன்றரைப் பாடல்களில், மூலத்தைவிட இதயம் தொடும்படியாகக் கூறுவார். (வான்.யு: 36 இரா.ச 12 ச 34)

(7) சீதையிடம் காமுற்று அவளைத் தன்வயப்படுத்தும் இராவணனை வான்மீகி வருணிக்கும் பாகத்தை, சீராமகவி 'கரந்துமடத்துவார் துதிசெயக்கனிவில் வந்தான்' என்னும் தொடரால் நயமுறக்கூறுவான் (வான்.சு. 3: இராச3:1).

(8) இராவணன் மந்திராலோசனை நிகழ்ச்சியில், விபீடணன் செய்த அறிவுரை கேட்டு, இந்திரசித்து குலப்பெருமை மற்றும் கூறுவதை, வான்மீகிக் சுருக்கிக் கூற, சீராமகவி அதனை விரித்து நகைச்சுவை வெளிப்படக் கூறுவான். (வான.யு.14 இரா.ச 8:1-2)

இராமனைச் சரணடைந்த விபீடணனின் மூடிசூட்டு நிகழ்ச்சியை வான்மீகி சுருக்கியுரைக்க. சீராமகவி முடிசூட்டுவிழாவை விரித்துக் கூறுவான் (வான்.யு.19; இரா.ச.9:2,3).

(9) வான்மீகி, போர்களத்தில் கும்பகர்ணனின் வரவைக்கண்டவானவர் செயலைச் சுருக்கி உரைக்கச், சீராமகவி அவன் வருகையை வருணிப்பது மூன்று பாடல்களில் அமைகிறது. புராணக்கதைக்குரிய புகழும் சுட்டப்பட்டு, விரித்துரைக்கப்படுகிறது.

(வான்.யு.65,இரா.ச. 311:1-3)

(10) சித்திரகூடவாசம் முதல் சீதை மீட்சிவரையுள்ள இராமாயண நிகழ்ச்சிகளை அனுமன் பரதனுக்குக் கூறுவதை, வான்மீகி 48 பாடல்களிலும், இராமசரித ஆசிரியன் விரித்து 28 படலங்களில் 308 பாடல்களிலும் கூறுவான் (வான்.129: 9-56; இரா.ச.128-155)

### *சீராமகவி படைப்பன:*

(11) அனுமன் சீதையைப் பற்றிக் கூறிய செய்தியைக் கேட்டபின். இலங்கைக்குச் செல்லும் வழி இதுவெனக் கூறும் செய்தி வான்மீகியில் இல்லை (இரா/ச.2:10).

(12) சீதையின் மறுப்புரை கேட்டுக் கோபமடைந்த இராவணன். 'உனது உடலைப்பிளந்து இரத்தம் குடித்து, இனியெனது துன்பம் தீர்ப்பேன்'என்று கூறி சீதையை அணுகினான். இப்பகுதி வான்மீகியில் இல்லை (இரா.ச.3:3,4)

(13) இராவணன் மந்திரப்படலத்தில், அமைச்சரவையில், கும்பகர்ணன் இராமனுடன் போர் செய்து தலையையெடுப்பதாகக் கூறும் பகுதி வான்மீகத்தில் இல்லை; இராமசரிதத்தில் காணப்படுகிறது (இரா.ச.6:10)

(14) இராமனின் அவதாரத்தை விபீடணன், இராவணனின் மந்திரசபையில் கூறும்பொழுது, வராகம், நரசிங்கம், வாமனன், பரசுராமன் முதலியவற்றைப் படைத்துக்கூறுவான். வான்மீகத்தில் இச்செய்தி இல்லை (இரா.ச.:4-7).

(15) சீராமகவி, இந்திரசித்தின் உரையில் ' விபீடணனைப் போல ஒப்புமையுடையவர் உலகில் யாருமில்லை' எனப்புகழ்வது போலட் பழித்தமையைக் கூறுகின்றான். வான்மீகத்தில் பரிகாசவுரை இல்லை (இரா.ச8:2-4)

(16) இராமனது இலங்கை முற்றுகையின்போது, இராவணன் சுக்கிரீவனிடம் ஓர் அரக்கனைத் தூதாக அனுப்பும் செய்தியும், சுக்கிரீவன் பதிலுரையும் வான்மீகத்திலில்லை. (இரா.ச 133:5-6).

(17) முதற்போரில், இந்திரசித்து மாயப்போர் புரிகிறபோது, பகற்பொழுது மறைய இரவுபோர் நடக்கிறது. வாலறுபட்ட வீரரை, கையால் தடவும் பல்லைப்பார்த்தும் அறிந்துகொண்டனர் என இராமசரிதம் கூறுவன வால்மீகியில் இல்லை (இரா.ச.15:4-5)

(18) இராமன் ஏவலில் தீக்குளித்த சீதையின் சிறப்பைப் புகழ்வது, மேனகை போன்றோர், பாதாதி கேசவருணனையாகக் கூறும் பகுதி, இராமசரிதப்படைப்பாகும். வான்மீகியோ கம்பனோ இதனைக் கூறவில்லை (இரா.ச.47,48,49).

(19) இராமபிரான் முடிசூட்டுவிழாவில், நாரதர் தோன்றி, இராமனை வணங்கி, வாழ்த்துரைக்கிறான். அவ்வாழ்த்துப் பாடல்கள் இராமன் பெருமையைக் கூறுகின்றன இது சீராமகவியின் படைப்பாகும். வான்மீகத்திலும் கம்பனிலும் இது இடம் பெற வில்லை (இரா.ச.162-163).

(19) இராமன் முடிசூட்டுவிழாவில் அரசர்கள் பரிசு பெற்றுச் செல்லும் போது இராமன் சீதைக்கென அளித்தமாலையைக் கையில் வைத்திருக்க, அனுமனின் முகத்தைப் பார்க்க, அவன் அனுமனுக்கு மாலை கொடுக்க இசைகிறான். அவனுக்குச் சிரஞ்சீவி பதமும் அளிக்கிறான் - இது இராம சரிதப் படைப்பாகும். மூலநூலில் இச்செய்தியில்லை (இரா.ச.161-3).

*முடிவுரை:*

1) வால்மீகி முனிவர் வடமொழியில் படைத்த இராமாயணத்தை அடியொற்றி, கம்பனும் சீராமகவியும் தங்கள் இராமாயண நூற்களைப் பாடியுள்ளனர். அவை கம்பராமாயாணம், இராமசரிதம் என முறையே வழங்கப்படுகின்றன.

(2) வால்மீகி இராமாயண யுத்தகாண்ட நிகழ்ச்சிகளை அடியொற்றியே கம்பனும் சீராமனும் தங்கள் போர்ப்பகுதிகளைப் பாடுகின்றனர்.

(3) கம்பராமாயண யுத்தகாண்டப்பகுதியும் இராமசரித போர்ப்பகுதிகளும் வான்மீகி இராமாயண யுத்தகாண்ட நிகழ்ச்சிகளைக் கூறினும், அவற்றைத் தொகுத்தும், விரித்தும் நீக்கியும், மாற்றியும் கதைப்போக்குக்கு ஊறு வராதபடி தத்தம் காவியத்தைப் படைத்தளிக்கின்றனர்.

(4) கம்பனின் பாயிர அமைப்பையோட்டி சீராமகவியும் பாயிரம் படைக்கிறான். கம்பன் கடவுளரைப் பொதுவாகச் சுட்ட, சீராமன் பலராகச் சுட்டுகிறான்.

(5) வான்மீகத்தில் விரிவாகக் கூறிய சில நிகழ்ச்சிகளைக் கம்பனும் சீராமனும் தொகுத்துரைக்கின்றனர்.

(6) கதையோட்டத்திற்குத் தடையாக இருப்பனவற்றை இருவரும் சுருக்கியுரைக்கின்றனர். எனினும் சீராமன் கம்பனைவிடவும் சுருக்கிக் கூறுவான்.

(7) வான்மீகி, சீராமகவி கூறும் சில பகுதிகளைக் கம்பன் விரித்துக் கூறுவான்

(8) இரணியன் வதைப்படலம், அங்கதன்தூது, களியாட்டுப் படலம் முதலியன கம்பராமாணத்தில் சிறப்பாகப் படைக்கப்பட்டுள்ளன.

(9) கம்பனும் சீராமனும் கதைச் சூழ்நிலைகள், காலம், இடம், இவற்றைச் சில இடங்களில் மாற்றுகின்றனர். கதை மாந்தர்கள் செயல்களும் சில இடங்களில் மாற்றப்படுகின்றன

10) காப்பிய நிகழ்ச்சிக்கு இடையூறான பகுதிகளையும் முரணாக அமையும் பகுதிகளையும் மாற்றி விடுவதைக் காணமுடிகிறது.

11) கம்பனும் சீராமனும் இராமபிரானை அவதாரமென்றே கூறிப் போகின்றனர்.

12) கம்பன், காப்பிய அளவுக்கு ஏற்பத். துணைப்பாத்திரங்களின் போர்ப்பகுதிகளுக்குத் தனித்தனி இடங்களை ஒதுக்குகின்றான்.

(13) சீராமகவி அவற்றைத் தொகுத்துக் கூறுவான்.

(14) கம்பனும், சீராமனும் கற்பனையாகச் சிலவற்றைக் கதைக்கு ஊறுவராது கற்போர் இன்புறப் படைத்தளிக்கின்றனர்.

(15) கம்பனின், முடிசூட்டுவிழா அமைப்பு அவன் காவியத்துக்கு ஒரு ஓவியமாகக் காட்சியளிக்கிறது.

(16) கம்பன் கருத்தின் சில சாயல். சீராமகவியிடம் காணப்படுகிறது.

(17) சீராமகவி, அனுமன் பரதனுக்குக் கூறுமுகமாகச் சித்திர கூடம் முதல் உள்ள நிகழ்ச்சிகளைக் கூறும் பான்மை, இராமாயண முன்நிகழ்ச்சிகளைநினைவு கூர்வதாக அமைகிறது.

(18) முடிசூட்டுவிழாவில் நாரதன் வாழ்த்துரை, சீராமகவிக்கு ஏற்றத்தைத் தருகிறது.

(19) வான்மீகி, கம்பன் சீராமன் இவர்தம் கருத்தை ஒப்பிடும் போது வான்மீகியைப் பெரும்பாலும் ஒத்து விளங்குபவன் சீராமனே. கம்பன் அடுத்த நிலையிலேயே இடம் பெறுகின்றான்.

(20) கம்பனின் தனித்திறன் சீராமனைவிடப் பன்மடங்கு வெளிப்படுகிறது.

கம்ப இராமாயணச் சிறப்பு - கம்பராமாயணம் இராமசரிதம் பொது - இராமசரித்தச் சிறப்பு என மூவகைப்படுத்தி ஒப்பீட்டு அட்டவணை கீழே தப்படுகிறது.

## 5. காப்பியங்களின் யாப்பமைதி

### *முன்னுரை*

ஒவ்வொரு கலைக்கும் வடிவம் உண்டு; பொருள் உண்டு இலக்கியக் கலைக்கும் வடிவமும் பொருளும் பலவகையாக உண்டு. இவை கவிஞர் தம் மனநிலைக்கு ஏற்ப அமைவன. இலக்கியம், நோக்கத்தை அடிப்படையாகக் கொண்டு ஒலி வாயிலாக உணர்த்தப் பெறுகிறது. உள்ளத்தூய்மையும், உயர்ந்த பண்பும் கொண்ட கவிஞன், உணர்ச்சிப் பெருக்கின் வயப்பட்டு இலக்கியத்தைப் படைப்பான், இலக்கியவடிவம் (Literary Form) வாயிலாகத் தம் கருத்தையும், உணர்ச்சியும் விளக்க முயல்கிறான். அது காலக்கண்ணாடியாக ஒளிரவல்லது. மக்களின் அகவாழ்வில் ஒன்றிய உணர்வுகளால் முகிழ்ப்பது, இவ்விலக்கியப் படைப்பினுள் 'செய்யுள்' என்பது சொல்லோவியமாக நடமாடுகிறது. இத்தகு செய்யுளின் இலக்கணத்தை நன்னூலார்.

> **"பல்வகைத் தாதுவின் உயிர்க்குடல் போற்பல**
> **சொல்லால் பொருட்கிட னாக உணர்வினின்**
> **வல்லோர் அணிபெறச் செய்வன செய்யுள்"[1]**

என்று கூறுவார். கம்பர், கவிதையின் இலக்கணத்தை,

> **"புவியினுக்கு அணியாய் ஆன்ற பொருள் தந்து புலத்திற்றாகி**
> **அவியகத் துறைகள் தாங்கி ஐந்திணை நெறிய ளாவிச்**
> **சவிவுறத் தெளிந்து தண்ணென் றொழுக்கமும் தழுவிச்**
> **சான்றோர்**
> **கவியெனக் கிடந்த கோதா வரியினை வீரர் கண்டார்"[2]**

என்று கூறுதலைக் காணலாம். கவிஞனின் உணர்ச்சிக் கேற்பவும் பொருளுக் கேற்பவும் யாப்பு வடிவங்கள் மாறுபடுகின்றன.

செய்யுளியலில் இலக்கியத்தின் புறவடிவை உணர்த்திய தொல்காப்பியம், 'யாப்பு', 'வனப்பு' என்னும் செய்யுள் உறுப்புக்களின் விளக்கத்தில் சில இலக்கிய வகைகளைச் சுட்டுகிறது. பாட்டு, உரை, நூல், வாய்மொழி, பிசி, அங்கதம், முதுசொல் என்று யாப்பின்கீழ் தரப்பட்ட ஏழு வகைகளில், பாட்டுதவிர ஏனைய, அளவியல் பற்றிய பகுதிகளில் விளக்கம் பெறுகின்றன. தொல்காப்பியர், இலக்கிய வகைகளுள் பாட்டையே முதன்மையாகச் சிறப்பித்துக் கூறுகிறார். செய்யுளியலில் பாட்டைப் பற்றிய இலக்கணங்களே மிகுதியாகவும் விளக்கமாகவும் உள்ளன. "பாட்டே இலக்கியத்தின் சாரம்; பாட்டில் தான் இலக்கியத்தின்

முழுத்தன்மையும், அனுபவத்தை உணர்த்தும் ஆற்றலும் மிகவும் செறிவாக உள்ளன"[3] என்று ஆபர்கிரோம்பி பாட்டின் ஆற்றல் மிக்க தன்மையை எடுத்துக் கூறுகிறார். பாட்டின் ஒவ்வோரடியும் சிறப்பாக அமைய வேண்டும் என்பார் தொல்காப்பியர். சிறப்பான அடிகளையுடையதே ' பாட்டு' என்று அவர் இலக்கணம் கூறியுள்ளார்.

"அடியின் சிறப்பே பாட்டெனப்படுமே"[4]

பாட்டுக்குரிய அடிகளை அவர் ஐந்து வகைகளாகக் கொள்ளுகிறார். அவையாவன; "குறளடி, சிந்தடி, அளவடி, நெடிலடி, கழிநெடிலடி" என்பனவாம். நான்கிலிருந்து ஆறெழுத்துக்களைக் கொண்ட அடி குறளடி; ஏழிலிருந்து ஒன்பது எழுத்துகளை உடையது சிந்தடி; பத்திலிருந்து பதினான்கு எழுத்துக்களை உடையது அளவடி, பதினைந்திலிருந்து பதினேழு எழுத்துகளை உடையது அளவடி; பதினைந்திலிருந்து பதினேழு எழுத்துகளை உடையது நெடிலடி; பதினெட்டிலிருந்து இருபது எழுத்துகளை உடையது கழி நெடிலடி"[5]. இவ்விதிகளுக்குப் பொருந்திய அடிகளால் ஆயதே பாட்டு எனப்படும் என்பதும் தொல்காப்பியருடைய கருத்தாகும்.

## *தமிழ்ப்பாட்டு வடிவங்கள்*

"தமிழ்ப்பாட்டு வடிவங்களின் வரலாறு கூர்ந்து உணரத்தக்கது. முதல் முதலில் அகவல் என்னும் பாவகையே தோன்றியதாகும். இசையோடு பாடுவதற்கு இப்பாவகைச் சிறந்ததன்று. அகவலுக்குப் பின்னர் தோன்றியது வெண்பா என்று கொள்ளலாம். இதற்குரியது செப்பலோசை. இசையோடு சேர்த்துப் பாடுவற்குப் பெரிதும் ஏற்புடையது. வெண்பாவின் பின்வந்த கலிப்பாவின் ஒரு பகுப்பாகிய தாழிசை பாடுவதற்கெனவே அமைந்தது என்று கூறலாம். தாழிசை என்ற பெயரே இதனை விளக்குகிறது. செய்யுளின் அமைப்பு பாடுவதற்கு ஒத்ததாகவே மேற்கூறிய அகவலொழிந்த ஏனையவற்றில் காணப்படுகிறது என்றும்,

"தேவாரம் முதலிய திருப்பாட்டுகள் அனைத்தும் பண்களுக்கு எனப் பாடப்பெற்றனவே. பிற செய்யுள் வகைகளும் கூட இசையோடு இனிமையாகப் பாடுவதற்கு ஒத்தனவாக இருக்க வேண்டும் என்று ஆசிரியர்கள் கொண்டார்கள். இதன் விளைவாக ' ஆசிரிய விருத்தம்' முதலிய செய்யுள் வகைகள் தமிழாசிரியர்களால் கையாளப்பட்டன. சிந்தாமணி முதலிய காவியங்களில் விருத்தங்கள் இதற்குச்சான்று" என்றும்,.

"இசையின் இனிமைக்கும் செய்யுளின் இனிமைக்கும், பொருளின் இனிமைக்கும் பேரெல்லையாக உள்ளது கம்பராமாயணம். அதில் உள்ள விருத்தப்பாக்கள் செம்பாக நடையில் சென்று தமிழ்மக்களுடைய பேச்சில் இயற்கையாகவுள்ள ஒத்திசையோடு அமைந்திருக்கின்றன. அக்காலத்துப் பெரும்பான்மை மக்கள் வழங்கிய சொற்களை இவ்விருத்தங்களில் மிகுதியாகக் காணலாம்"[6] என்றும் பேராசிரியர் வையாபுரிப்பிள்ளை விளக்குவார்.

எனவே, இன்ன பாவினத்தைப் பாடுவதில் மிகவும் வல்லவர்

என்று புகழ்ந்து அவரை அந்தப் பாவுடன் இணைத்துப் பேசும் சிறப்புக் காணப்படுகிறது.

"வெண்பாவில் புகழேந்தி; பரணிக்கோர்
சயங்கொண்டான்; விருத்த மெனும்
ஒண்பாவிற்கு உயர்கம்பன்; கோவைஉலா
அந்தாதிக்கு ஒட்டக் கூத்தன்
கண்பாய கலம்பகத்திற்கு இரட்டையர்கள்
வசைபாடக் காள மேகம்
பண்பாகப் பகர்சந்தம் படிக்காசலால்
ஒருவர் பகரொ ணாதே"[7]

இதனால், பா வகைகளைப் புனைவதில் வல்லவர்தம் சிறப்பு பெறப்பட்டது.

## கம்பன், சீராமன் கையாண்ட யாப்பு வடிவங்கள்

கம்பனும், சீராமனும் இராமகதையைப் பாடிப் பரவுவதற்கு விருத்தப்பா வடிவங்களையே கையாண்டனர். இருவரும் கதைப் போக்கில், ஒரே பாவகையிலும் கூட வெவ்வேறு உணர்ச்சிக்கேற்ப அசைகளையும், சீர்களையும் மாற்றியமைத்து நூல் முழுமையும் கொண்டு செல்லும் திறன் கூராய்வுக்குரியது.

கம்பன் பாடிய யாப்பு வகைகள் பற்றி, புலவர் இரா. திருமுருகன் 'கம்பன் பாடிய வண்ணங்கள்' (1987) என்னும் நூலில் கம்பராமாயணப் பாடல்கள் எப்படியெல்லாம் யாப்பு நெறியில் அமைந்திருக்கின்றன என ஆராய்கின்றார்.

இராமசரித ஆசிரியன் சீராமன் பாடிய யாப்பு வகைகள் பற்றிப் பேராசிரியர் இளங்குளம் குஞ்சன் பிள்ளையவர்களும் (இராமசரிதம் பதிப்புரை, 1971) நாகர்கோவில் பேராசிரியர் டாக்டர் சி. சுப்பிரமணியனும், 'மலையாள யாப்பு வடிவங்களில்' இராமசரித யாப்பமைதியைத் தொகுத்து ஆய்வு செய்து தருகின்றனர். நெடுவட்டம் கோபலகிருஷ்ணன் (1976) இராமசரித மொழி பற்றியும், என்.வி. கிருஷ்ணவாரியார், மலையாளச் செய்யுள் பற்றியும் ஆராய்ந்துள்ளனர்.

இக்கட்டுரையில், இருபெருங் கவிஞர்களும், மேற்கொள்ளும் யாப்பு வடிவங்களை வகைதொகை செய்து, கவிஞர்தம் உணர்ச்சிக் கேற்ப அசைகளையும் சீர்களையும் மாற்றியமைக்கும் திறத்தினை ஒப்பியல் நோக்கில் ஆராயப்படுகின்றது. ஒப்புமை சுட்டப்பெற்று, அட்டவணைகள் மூலம் காட்டப் பெறுகின்றன.

## கம்பன் காவியப் போர்ப்பகுதியில் யாப்பமைதி:

பாவினங்களான தாழிசை, துறை, விருத்தம் ஆகியவற்றுள், கம்பன், ஆசிரிய விருத்தம், கலித்துறை, கலிவிருத்தம், வஞ்சித்துறை, வஞ்சிவிருத்தம் ஆகிய ஐந்துவகைகளை மட்டுமே கையாண்டுள்ளான்.

"துறையடுத்த விருத்தத் தொகைக்கவி"[8] எனக் கம்பனே பாடுவதால் துறையையும் விருத்தத்தையும் கொண்டமை புலப்படும். கம்பராமாயணப் பாடல்கள் அனைத்தும் அளவொத்த நான்கடிப் பாடல்களேயாம்.

***1. அளவொத்த பாடல்களாவன***

இருசீரடி நான்காய் வரும் வஞ்சித்துறை
முச்சீரடி நான்காய் வரும் வஞ்சிவிருத்தம்
நாற்சீரடி நான்காய் வரும் கலிவிருத்தம்
ஐஞ்சீரடி நான்காய் வரும் கலித்துறை
அறுசீரடி முதல் அதற்கு மேற்பட்ட சீரால்
அமைந்து நான்கடியாய் வரும் ஆசிரிய விருத்தம்.

***2. கம்பன் கையாண்ட விருத்த வகைகளுள் யுத்த காண்டத்தில் பயின்று வந்தமை வருமாறு!***

| | | |
|---|---|---|
| 1. | முச்சீர் வஞ்சிவிருத்தம் | 11 |
| 2. | நாற்சீர் கலி விருத்தம் | 1843 |
| 3. | ஐஞ்சீர் கலிவிருத்தம் (துறை) | 748 |
| 4. | அறுசீர்ஆசிரிய விருத்தம் | 1676 |
| 5. | எழுசீர் ஆசிரியவிருத்தம் | 80 |
| | ஆக | 4358 |

***3. வஞ்சிவிருத்தம் (11)***

முச்சீரடி நான்காய் வருவது வஞ்சிவிருத்தமாகும்.

**'.............. சிந்தடி நான்கு**
**அறைதரு காலை அமுதே விருத்தம்[9]'**

யுத்த காண்டத்துள் 11 பாடல்கள் வஞ்சி விருத்தமாக அமைந்துள்ளன.

***4. கலிவிருத்தம் (1843)***

நாற்சீரடி நான்காய் வருவது கலிவிருத்தமாகும்

**'அளவடி நான்கின கலிவிருத் தம்மே'**

நாற்சீரடி நர்ன்கு கொண்டு மூவகைச்சீர்களால் பயின்றுவரும் கொச்சகக்கலிப் பாவும் இதனுள் அடங்கும், இக்கலிவிருத்தம் யுத்த காண்டத்துள் 11 வகையாக வந்துள்ளன கம்பன் பாவகைகளில் கலிவிருத்தமே மிகுதி

***5. கலித்துறை (748)***

இது ஐஞ்சீரடி (நெடிலடி நான்காய் வருவது)

**'கலித்துறையே நெடிலடி நான்காய் நிகழ்வது'[11]**

கம்பன் தரும் போர்ப்பகுதியில் 4 வகையான கலித்துறைப் பாடல்கள் அமைந்துள்ளன;

***6. அறுசீர் ஆசிரிய விருத்தம் (1676)***

அறுசீரடி (கழி நெடிலடி) நான்காய் வருவது

**'...குறைவில் தொல்சீர் அகவல்**
**விருத்தம் கழிநெடில் நான்கு ஒத்து இறுவது'[12]**

கம்பனின் அறுசீர் ஆசிரியவிருத்த அமைப்பில் ஏழு இன வேறுபாடுகள் உள்ளன.

### *7. எழுசீர் ஆசிரிய விருத்தம் (80)*

இது எழுசீர்க்கழி நெடிலடி நான்கால் வருவது, மூன்று வகை அமைப்பில் இவை இடம் பெறுகின்றன.

கம்பன் பாவமைப்பை ஆராய்ந்தால், விருத்த அமைப்பை மாற்றியமைப்பதில், கீழ்க்கண்ட உத்தியைக் கையாளுவதில் ஈடுபடுகிறான் என்பது தெரியவரும். உரையாசிரியர்களும், பதிப்பாசிரியர்களும் மாறுபடும் இடங்களைத் தெளிவாகச் சுட்டுகின்றனர்.

மாறுபாடுக்குரியன:

1. வருணைகள்
2. போர் வருணனைகள்
3. போர் நிகழ்ச்சிகள்
4. இருவர் உரை
5. தனியன் உரை
6. செய்திகளைக் கூறுதல்
7. வருவது உரைத்தல்
8. கவிகூற்று - முதலியன

மாறுபாடுகளுக்குக் சில எடுத்துக்காட்டுகள் தரப்படுகின்றன:

சில எடுத்துக்காட்டுகள்:

1. யுத்த காண்டம், இறைவணக்கப்பாடலுடன் கடல் காண் படலம் துவங்குகின்றது. பரம்பொருளின் இயல்பை அறுசீர் ஆசிரிய விருத்தத்தில் தருகிறார் கவிஞர். தொடர்ந்து படலம் முழுவதும் வருணனை, செய்திகள் கூறும் முகமாக அறுசீர் ஆசிரிய விருத்தமாகச் செல்லுகிறது.
2. அடுத்து, மந்திரப் படலத்தில் இராவணனது அரச சபையில் அவையோர் உரை, நாற்சீர் கலிவிருத்தமாக அமைகிறது, ஆனால், மகோதரன், கும்பகர்ணன் உரைகளைச் சிறப்பு நோக்கி இனம் காண்பதற்காக ஆசிரியர் வாய்பாட்டை மாற்றியமைக்கிறார். தொடர்ந்து இந்திரசித்தன் உரை முன்னவர்களுக்கு ஏற்றாற்போல, தொடந்து கலிவிருத்தமாக அமைகிறது. விபீடணன் உரையின்போது முரண்கருத்தைக் கூறுமுகமாக மாறுபட்ட கலிவிருத்தம் கையாளப்படுகிறது. அவனது தொடர்வுரை அறுசீர் ஆசிரிய விருத்தமாக அமையக்காணலாம். தயரதன் வரலாற்றைக் கூறுமுகமாக இது அமைகிறது. தொடர்ந்துள்ள வீடணன் உரை கலிவிருத்தமாகவே அமைகிறது.
3. இரணியன் வரலாறு கலிவிருத்தமாக அமையப் பிரகலாதன் உரை கலித்துறையாக அமைகிறது, இறைவனைப்புகழும் அவனது உரை, கலிவிருத்தமாகவே பெறப்படுகிறது.

4. விபீடணன் அடைக்கலப்பகுதியில், இராவணன்- வானரர் உரையாடல் அறுசீர் ஆசிரிய விருத்தமாகப் பல்வேறு முறைகளில் மாற்றி மாற்றி ஆசிரியரால் கையாளப்படுகிறது,. வீடணன் இராவணனது படைத்திறம் பற்றிக் கூறுவன கலித்துறைப் பாடல்களாக விளங்குகின்றன.

## *9. மலையாள யாப்பு*

கி.பி.10 - ஆம் நூற்றாண்டு வரை மலையாளம், தமிழ் ஆகிய இரு மொழிகளும் ஒன்றாக வழங்கி வந்தன. பிற்காலத்தே சேரநாடு, வட்டாரமொழிக்கு வளம் தரலாயிற்று, மேலைக் கடற்கரை முதல் கிழக்கு மலை வரையுள்ள பகுதிகளில் மலையாள மொழி வழங்கி வரலாயிற்று, தொடக்க நிலையில் தமிழ்த் தாக்கமும் பிராகிருதமும் பிற்காலத்தே வடமொழிக் கலப்பும் மலையாள மொழியில் இடம்பெற்று 'மணிப்பிரவாள மொழி' என்னும் ஒரு மொழிநடை தோன்றலாயிற்று, 'லீலா திலகம்' என்னும் மலையாள இலக்கண நூல் இதனை விளக்கிக்கூறும்.

## *10. இராமசரித மொழி*

இராமசரிதம் மலையாளமொழியில் முதன் முதலில் தோன்றிய பெருங்காவியம். 164 படலங்களையும் 1814 பாடல்களையும் கொண்ட இந்நூலில் தமிழ், மலையாளம், வடமொழி ஆகியவற்றின் சொற்கள் இடம் பெறுகின்றன. அரும், அழைத்து, இகல், இயல் இனிய, உவரி, உறுதி, எழில், ஒன்னார், குறள், கொடுமை, சீற்றம், திண்மை, நலம், நாடுதல், புகழ், புனைந்த, மாற்றம், மீன், வினை - போன்ற தமிழ்ச் சொற்களும், இடஞ்ஞு. எந்து. களி, தக்கம், தொலி போன்ற தனி மலையாளச் சொற்களும், பல தமிழ் மலையாளப் பொதுச் சொற்களும், அவிரதம், வியதி, வாக், வாசா, போன்ற வடமொழிச் சொற்களும், பல தற்பவச் சொற்களும் உள்ளன. இவற்றாலான இந்நூலால், அக்காலச் சாதாரண மக்களுக்குப் புரிந்துகொள்ளுமாறு, அக்காலச் சூழலுக்கேற்ப மொழிவளம் அமைந்தமை அறியலாம். விருத்தப்பாட்டுகளால் எழுதப்பட்ட இராமசரிதம் பாடிப்பரவுதற்கு ஏற்றவாறு அமைந்திருந்தது என்றும் கூறலாம்.

### *மலையாளப்பாட்டும் விருத்தமும்*

திராவிட மொழிகளுக்குரிய உடைமையாகும் பாட்டு. லீலா திலகத்தில் பாட்டின் இலக்கணத்தை

> **"திராமிட சம்காதாட்சர நிகபந்தமெதுக**
> **மோன விருத்த விசேச யுக்தம் பாட்டு"[13]**

(திராவிட எழுத்துக்களால் நிபந்தனைகளால் நிருமிக்கப்பட்டு எதுகை, மோனையுடன் விருத்தச் சிறப்போடு பொருந்துமாறு அமைவது பாட்டு)

விருத்தம் அல்லது பாட்டின் இலக்கணத்தைத் தழுவி, ஏ.ஆர். இராஜராஜவர்மா மலையாள விருத்த மஞ்சரியில்,

"பத்தியம் வார்க்குன்ன தோதல்லோ
விருத்த மென்னிக சொல்வது
சந்தச் சென்னால் அட்சரங்களில்
எந்தரயென்னுள்ள கில்பதியாம்"[14]

(சொற் கோவைகளின் ஒருங்கிணைப்பை விருத்தமென்று சொல்லுகிறோம். ஒரு பாட்டில் ஒரு அடியில் எத்தனை எழுத்துக்கள் வேண்டுமென்ற நிபந்தனை வரையறையுண்டு)

தொல்காப்பியர் குறிப்பிடும் அடியின் சிறப்பை இராஜராஜவர்மாவும் மேற்கொள்கிறார். ஆனால் 20 எழுத்துக்களுக்கும் மேலாக 26 வரையுள்ள எழுத்துக்கள் வரலாமென்பது அவர் கொள்கை. அதற்கு மேல் ஓர் அடியில் வருவது பாட்டல்ல என்பது அவர் கருத்து. தொல்காப்பியர் 20 எழுத்துக்களை உடைய கழி நெடிலடிகளுக்கு மேலாக வரலாகாது என்று குறிப்பிடுவது நினைவிற்குரியது. செய்யுளுக்கு எழுத்து எண்ணும் போது மெய்கள் எண்ணப்படாவாம். இது பொதுவிதியாகும்.

## *இராமசரிதத்தில் விருத்த வகைகள்:*

மலையாள மொழியில் யாப்பின் உறுப்புக்களான சீர், தளை வரம்பு இல்லை. 'மாறாக நேர், நிரை அசை போலக் கணங்களின் கோவை இடம் பெறுகின்றன. தொல்காப்பியம், விருத்த மஞ்சரி (மலையாளம்) நெறிகளில் விருத்தப்பாட்டுகள் எழுத்தெண்ணி அடிகள் அளவிடப்படுகின்றன.'[15] "இராமசரிதத்தில் உள்ள, 164 படலங்களில் 146 படலங்கள் 11 பாட்டுகள் வீதமும், 14 படலங்கள் 12 பாட்டுகள் வீதமும், 4 படலங்கள் 10 பாட்டுகள் வீதமுமாக, மொத்தம் 181 விருத்தப்பாக்கள் இடம் பெறுகின்றன"[15] அந்தாதிப் பாடல்களாக அமை அமைகின்றன.

### *1. நாற்சீர் கலிவிருத்தம் (66)*

நாற்சீரடி நான்கினால் வருவது. 14 எழுத்துக்கள் வரையுள் அளவடிகளால் ஆனவை இவை. படலங்கள் 3,6,11,15,21,28 ( படலங்கள்)

### *2. ஐஞ்சீர் கலிவிருத்தம் (11)*

பதினேழு வரையுள்ள எழுத்துக்கள் கொண்டு நெடிலடி நான்கா வருவன

படலம் : 105 இதில் கட்டளைக் கலித்துறையாக 11- ஆம் பாட் அமைந்துள்ளது.

### *3. அறுசீர் ஆசிரியவிருத்தம் (777)*

அ) 20 எழுத்துக்கள் வரை பெற்று வருவன, அறுசீர்க்கழி நெடிலடி நான்கால் வரும்; இவை ஈரசைச்சீர் பெற்று வருவன (499)

2, 7, 10, 14, 18, 20, 22, 25, 26, 27, 29, 34, 36, 38, 40, 43, 45, 49,

52, 56, 61, 65, 68, 70, 73, 75, 78, 82, 95, 102, 107, 111, 114, 120, 123, 126, 129, 132, 136, 142, 145, 148, 151, 155, 160 (ஆக: 45 படலங்கள்)

ஆ) ஈரசையும் மூவசையும் கலந்து வருவன. சிறப்பாக மூவசை மூன்றும் ஆறுமாக வருவன உள்ளன (278).

***4. எண்சீர் ஆசிரிய விருத்தம் (310)***

5, 8, 9, 12, 19, 24, 32, 46, 47, 60, 62, 64, 66, 71, 72, 74, 76, 86, 88, 104, 106, 122, 140, 149, 156, 163 (ஆக 26 படலங்கள்)

***5. எண்சீர் ஆசிரிய விருத்தம் (519)***

22 வரையுள்ள எழுத்துகளால் ஆகி எண்சீர்க்கழிநெடிலடி நான்கினால் வருவன. அவற்றுள்,

1) எட்டு ஈரசைச் சீர்களால் வருவன : 12 பாடல்கள்

2) ஈரசைச்சீரும் மூவசைச்சீரும் கலந்து வருவன :34 பாடல்கள்

***6. பதின்சீர் ஆசிரிய விருத்தம் (131)***

24 வரையுள்ள எழுத்துக்களைப் பெற்றுப் பதின்சீர்கழிநெடிலடி நான்கினால் வருவன: 12 படலங்கள்

சீராமன் கையாண்ட விருத்த வகைகளைப் பின் வருமாறு வகைப்படுத்தலாம். அவையாவன:

| | | |
|---|---|---|
| 1) | **நாற்சீர்க் கலிவிருத்தம்** | **66** |
| 2) | **ஐஞ்சீர்க் கலிவிருந்தம்** | **10** |
| | **(கட்டளைக் கலித்துறை)** | **1** |
| 3) | **அறுசீர் ஆசிரியவிருத்தம்** | **777** |
| 4) | **எழுசீர் ஆசிரியவிருத்தம்** | **310** |
| 5) | **எண்சீர் ஆசிரியவிருத்தம்** | **519** |
| 6) | **பதின்சீர் ஆசிரிய விருத்தம்** | **131** |
| | **ஆக...** | **1814** |

சீராமன் பெரும்பாலும் கதையைக்கூறிச் செல்லும் பாங்கில் வருணனைகள், செய்திகளைத் தொகுத்துரைத்தல், போர் நிகழ்ச்சிகள், பாத்திரங்களின் உரையாடல் முதலியவற்றை அமைப்பதில் விருத்த வகைகளை மாற்றியமைக்கிறான்.

**சில எடுத்துக்காட்டுகள்:**

1) முதல் படலம், இறைவணக்கம், அவையடக்கமாக அமைகிறது. இதிலுள்ள 11 பாடல்களும் செய்திகளைத் தெரிவிக்கும் முகமாகப் பதின்சீர்க்கழிநெடிலடி ஆசிரிய விருத்தமாக அமைகிறது. இவற்றில் ஈரசைச்சீரும். மூவசைச்சீரும் கலந்து வருவதைக் காணலாம்.

2) இரண்டாம் படலம், அனுமனால், சீதையின் அசோக வன வாழ்க்கை பற்றிய செய்தியைக் கேட்ட சுக்கிரீவன், இராமனைச் சமாதானப்படுத்தும் கூற்றாகவும், அனுமன் இலங்கை பற்றிக் கூறும் செய்தியாகவும் இடம்பெறுகின்றன. இப்படலத்தில் 11 பாட்டுகளும் ஆறு ஈரசைச்சீர் பெற்று வரக்காணலாம்.

3) நூற்றி ஐந்தாம் படலம், இந்திரசித்து, இராமன் முதலியோரை வெற்றிபெற்ற நிலையில் இலங்கை வருணனை, சீதையை விமானத்தில் கொண்டுவருதல் முதலியன ஐஞ்சீர் கலிவிருத்தமாக முதல் 10 பாடல்களிலும், 11 ஆம் பாடல், திரிசடை, சீதையைச் சமாதானப்படுத்தும் முகமாகக் கட்டளைக் கலித்துறைப் பாடலாகவும் அமைகின்றது.

4) மூன்றாம்படலம், அசோகவனத்தில் இராவணன், சீதை உரையாடலாக, நாற்சீர் கலிவிருத்தமாக 11 பாடல்களும் அமைகின்றன.

5) இருபத்தி மூன்றாம் படலம், மைந்தன் கும்பன் போன்ற நான்கு அமைச்சர்கள் போரில் தோற்கவே, பிரகத்தன் வீரவுரையாற்றிப் போர் தொடுக்கும் முகமாக எண்சீர் ஆசிரியவிருத்தம் இடம்பெறுகிறது.

இராம சரிதத்திலுள்ள படலங்கள் ஏறத்தாழ 11 பாடல்களாகவே அமைவதால், ஆசிரியருக்கு விருத்தப்பாக்களைக் கையாள எளிதாகிறது. முடிந்த ஒரு கருத்து ஒரு படலத்தில் இடம்பெறுவதால், ஆசிரியர் ஒரே வகையான விருத்தங்களையே படலம் முழுவதும் தருகிறார். படலத்துக்குப் படலம் விருத்த வகைகள் மாறுபடுகின்றன. மேல் சுட்டிக்காட்டப்பட்ட இராமசரித யாப்பமைதியால், அவற்றை அறியலாம்.

## *ஒப்பீடு*

கம்பராமாயணம், இராமசரிதம் - இவையிரண்டும் விருத்தப் பாக்களாலேயே இயன்றவை. முன்னையது தமிழிலக்கண வரம்புகளுக்கும், பின்னையது மலையாள இலக்கண வரம்புகளுக்கும் உள்பட்டு அமைகின்றன.

1) கம்பராமாயணம் யுத்தகாண்டம் 4358 விருத்தப்பாக்களால் அமைய, இராமசரிதம் 1814 விருத்தப்பாக்களால் அமைகிறது.

2) யுத்தகாண்ட இறைவணக்கப்பாடல், கம்பனில் அறுசீர் ஆசிரிய விருத்தத்தில் துவங்க, இராமாசரிதத்தில், பதின்சீர் ஆசிரிய விருத்தத்தில் இறைவணக்கமும், தொடர்ந்து அவையடக்கமும் துவங்கி முடிகிறது.

3) கம்பன் கலிவிருத்தப்பாக்களையே மிகுதியாகக் கையாளச் (43%) சீராமன் அறுசீர் ஆசிரிய விருத்தப்பாக்களை மிகுதியாகக் (43%) கையாளுகிறான்; கலிவிருத்தம் (4%) மிக்குறைவாகவே இடம்பெறுகிறது.

4) கம்பன் எண்சீர் விருத்தங்களைப் பாடாது ஒழியச், சீராமன் அவ்வகைப் பாக்களை இரண்டாம் நிலையில் (28%) கையாளுகிறான். மேலும் பதின்சீர் விருத்தங்கள் (7%) இடம் பெறுகின்றன.

5) கம்பன் முச்சீர் வஞ்சி விருத்தத்தைப் பதினொரு பாடல்களில் தர, சீராமன் அவற்றைக் கையாளாது விட்டுவிடுகிறான்.

6) இருவரும் ஓரளவு அறுசீர் ஆசிரிய விருத்தத்தைச் சிறப்பாகக் கையாளுகின்றனர் (கம்பன் 38%; சீராமன் 42%)

7) சீராமன் அந்தாதிப்பாடல்களாகப் படலங்களில் கையாளுகிறான். பதினொரு பாடல்களால் படலம் அமைவதால் பாடுபவரின் நினைவாற்றலுக்கு இம்முறை உரனாகிறது. கம்பனில் இவ்வமைப்பு இல்லை. மேலும் படலங்கள் பல்வேறு எண்ணிக்கையுள்ள பாடல்களால் இயன்றவை.

அட்டவணைகள், மூலம் இருவர்தம் நூற்களில் பயின்ற விருத்தவகைகள் தரப்படுகின்றன.

## *முடிவுரை*

இலக்கியம் வடிவமும் பொருளுமுடையது. அவ்விலக்கிய வடிவங்களுள் விருத்தமென்னும் பாட்டு ஆற்றல் மிக்கது. அது பல வகைப்படும். கம்பன், சீராமன் இருவரும் இராமகதையைப் பாடுவதற்கு விருத்தத்தையே கருவியாகக் கொண்டுள்ளனர். கம்பன், வஞ்சிவிருத்தம், கலிவிருத்தம், கலித்துறை (ஐஞ்சீர் விருத்தம்) அறுசீர் ஆசிரிய விருத்தம், எழுசீர் ஆசிரிய விருத்தம் ஆகியவற்றைக் கையாளுகிறான். கலிவிருத்தம் மிகுதியாக இடம்பெறுகின்றது. பண்டைய மலையாள மொழியில் விருத்தம், என்னும் பாட்டு முதலிடத்தைப் பெறுகிறது. இராமசரிதத்தில், கலிவிருத்தம், அறுசீர் ஆசிரிய விருத்தம், எழுசீர், எண்சீர் பதின்சீர் ஆசிரிய விருத்தங்கள் இடம் பெறுகின்றன. அறுசீர் ஆசிரிய விருத்தம் மிகுதியாக இடம்பெறுகின்றது.

இருவரும், அக்கால மக்கள் படித்து இன்புறுவதற்கு ஏற்ப மாறுபட்ட விருத்தங்களைத் தம் காவியத்தில் கையாளுகின்றனர். கவிஞர் தம் உணர்வு, பொருளுக்கேற்ப இவை மாறுபடுகின்றன. அட்டவணைகள் விருத்த வகைகளைத் தெளிவாகக் காட்டுகின்றன.

**யாப்பமைதி**

## ஒப்பீடு அட்டவணை

| வ. வ. எண் | விருத்தவகை | கம்பராமாயணம் (யுத்த காண்டம்) | | இராமசரிதம் | | மிகையானவை | |
|---|---|---|---|---|---|---|---|
| | | பாடல்களின் எண்ணிக்கை | விழுக்காடு (சதவீதம்) | பாடல்களின் எண்ணிக்கை | விழுக்காடு (சதவீதம்) | கம்பனில் (விழுக்காடு) | இராமசரிதத்தில் (விழுக்காடு) |
| 1. | முச்சீர் வஞ்சி விருத்தம் | 11 | 0.3 | – | – | + .3 | – |
| 2. | நாற்சீர்க் கலிவிருத்தம் | 1843 | 43.0 | 66 | 4 | +39.0 | – |
| 3. | ஐஞ்சீர்க் கலிவிருத்தம் (கலித்துறை) | 748 | 17.0 | 11 | 1 | +16.0 | – |
| 4. | அறுசீர் ஆசிரிய விருத்தம் | 1676 | 38.0 | 777 | 42 | – | +4 |
| 5. | எழுசீர் ஆசிரிய விருத்தம் | 80 | 2.0 | 310 | 17 | | +15 |
| 6. | எண்சீர் ஆசிரிய விருத்தம் | – | – | 519 | 28 | | +28.0 |
| 7. | பதின்சீர் ஆசிரிய விருத்தம் | – | – | 131 | 7 | | +& |
| | ஆக | 4358 | | 1814 | | | |

குறிப்பு : 0.5 - க்கு மேல் முழு எண்ணாகத் தரப்படுகின்றன.

## அடிக்குறிப்புகள்

1. நன்னூல், பாயிரம், நூற்பா 18. பக் 9 பவானந்தம் பிள்ளை உரை
2. கம்பராமாயணம் - ஆரணிய காண்டம் படலம், 5 பாடல். 1
3. Abar Gromphy - Principles of Literary criticism -pp. 44-5
4. தொல்காப்பியம் - நூற்பா - 1292, செய்யுளியல் - 34.
5. தொல்காப்பியம் - நூற்பா - 1293 -97 கருத்துக்கள்
6. எஸ். வையாபுரிப்பிள்ளை, 'தமிழ்ப்பாட்டும் இசையும், பக். 113-114.
7. கம்பராமாயணம், தனியன் பாடல், கம்பன் கழகப் பதிப்பு, சென்னை.
8. கம்பராமாயணம், பாயிரம், பாடல் -7, கம்பன் கழகப் பதிப்பு, சென்னை.
9. யாப்பருங்காலக் காரிகை - நூற்பா, 35, சைவசித்தாந்தக் கழக வெளியீடு
10. மேலது - நூற்பா. 89 "
11. மேலது - நூற்பா. 34 "
12. மேலது - நூற்பா -30 "
13. லீலாதிலகம், (இளங்குளம் குஞ்ஞன்பிள்ளை பதிப்பு) நேஷனல் புக் ஸ்டோர், கோட்டயம் வெளியீடு.
14. விருத்த மஞ்சரி, எஸ். ஆர் - இராஜராஜவர்மா நூற்பா -3 நேஷனல் புக் ஸ்டோர் வெளியீடு,
15. இராமசரிதம் - ஒரு விமரிசனப் படலம், பேராசிரியர் பி.வி. கிருஷ்ணன் நாயர். நேஷனல் புக் ஸ்டோர் வெளியீடு, ப. 9

## 6. போர்த் தலைமைப் பாத்திரங்கள்

*முகவுரை*

(1) காப்பியக் கவிஞன் அரிய பல உண்மைகளையும் நீதிகளையும் உலகிற்கு உணர்த்த விரும்புவான். கவிஞன், தான் உணர்த்த விரும்பும் கருத்துக்களை வெளியிடப் பாத்திரங்களைப் படைத்துக் காட்டுவான். காப்பியத்தின் உயிர்நிலைப் பண்பாகப் பாத்திரப்படைப்பு அமைகின்றது. பாத்திரங்களின் தலைமைப்பண்பு, அவற்றின் மனம், சொல், செயல்களைச் சார்ந்தது. உயர்பாத்திரச் செயல், உள்ளம், சொல், செயலால் உயர்ந்து நிற்கும். தன்னல நோக்குடைய பாத்திரச் செயல்கள் துவக்கத்தில் ஆக்கம் போலத்தோன்றினாலும், இறுதியில் அழிவிலேயே கொண்டு செலுத்தும்.

காப்பியத்தில் இடம்பெறும் ஒவ்வொரு பாத்திரப்படைப்பிலும் தனித்தனிப் பண்பும் தனித்தனித்திறனும் நன்றாகப் புலப்படவேண்டும். "பாத்திரங்களின் இயல்புகள் கதை நிகழ்ச்சியோடு சேர்ந்து வளர்ந்து முதிர்ந்து தெளிவாதல் வேண்டும். கதையமைப்பு, பாத்திரங்களின் தனிப்பட்ட இயல்பு சூழ்நிலை - இவை தம்மில் ஒரு தொடர்பும், ஓர் ஒற்றுமையும் இருத்தல் வேண்டும். நமது வாழ்க்கையோடும் மக்கள் இயல்போடும் பொருந்தியனவாகப் பாத்திரங்கள் இயற்றப்படல்வேண்டும்[1] எனப்பாத்திர படைப்பு பற்றிப் பேராசிரியர் எஸ். வையாபுரிப்பிள்ளை கூறுவார்.

(2) கம்பன், 'அறம்வாழ மறம் தேயும்' என்ற இராமாயணக் கொள்கையை நிலைநாட்டத் தமிழில் காவியம் செய்தான். அறத்தின் நாயகனாக ஒருவனைப் படைத்து அவனைச்சுற்றிலும் அறம்வாழ உதவிய பல பாத்திரங்களைப் படைத்துக்காட்டுவான். அறம்திறம்பிய அரசன் ஒருவனைப் படைத்து, அவனைச்சுற்றி அறச்சார்பற்ற பல திறப்பட்ட பாத்திரங்களையும் அமைத்துத் தருகின்றான். அன்பு நிறைந்த அறத்தினையும், அறம் திறம்பிய மறத்தினையும் மோதவிடுகிறான். மோதலின் பயனாய் உருவான பெரும்பகுதியே இலங்கைப்போர் நிகழ்ச்சிகளைத் தரும் யுத்தகாண்டம்.

(3) போரில் தலைமையேற்கும் பாத்திரங்கள் போரில் உறுதியும், தோல்வியில் அறைகூவலுடன் கூடிய எதிர்ப்பும், வெற்றியில் பெருந்தன்மையும், அமைதியில் நல்லெண்ணமும் கொண்டு விளங்க வேண்டும். "அமைதியே இறுதியில் அடையவிரும்பும் மிகச்சிறந்த பரிசாகக் கருதவேண்டும்"[2]. மேலும், "வினையில் வீறுபெற, வாகைசூடத், தக்க இடத்தில், உரிய காலத்தில், வினையாற்றத் தகுந்த ஆளை அமர்த்தப்

போர்த்தலைவர் ஆள் அறி மாண்பினராக விளங்கல் வேண்டும்"[3] என இக்காலப்போரியல் நெறிகளைக் கூறும், போர் அறிஞர்கள் கூறுவார்கள்.

(4) கம்பன் போர்ப்பகுதிகளில் இடம்பெறும் பாத்திரங்கள் ஒவ்வொரு வரும் தமக்கே உரித்தான தனித்துவத்தைக் காத்துப் போற்றுபவர்கள். அவர்கள் சொற்களாலும் செயல்களாலும் அவர்களுடைய தனித்தன்மை வெளிப்படும். யுத்த காண்டத்தில் பாத்திரங்கள் அளவில் மிகுந்துள்ளன. அவை அனைத்தும் ஒரே வகையானவை அல்ல. மனிதவியல்புள்ள பாத்திரங்கள் உள்ளன. மீவியல்புள்ள அரக்கர் வானரர் முதலிய பாத்திரங்களும் உள்ளன. யுத்தகாண்ட நெடுகிலும் தோன்றிப் பங்கேற்கும் முதன்மைப் பாத்திரங்களும், இடையில் தோன்றி இடையில் மறையும் துணைப்பாத்திரங்களும் உள்ளன. முதன்மைப் பாத்திரங்களாக இராமனையும் இராவணனையும் சுட்டலாம். காப்பியத்தலைவன் இராமன் தன்னேரில்லாத தலைவன்; வீரர்களுக்குள் வீரன், அவன் பரம்பொருள் ஆயினும், மனிதனாகத் தோன்றி, மனிதனாகவே நடந்துகொள்ளுபவன். இராவணன் எதிர்நிலைத் தலைவன். இராமனுக்கு ஒத்த வகையில் எதிர்நிலைத்தலைவனாக இராவணனையும் படைத்துக்காட்டுவான் கம்பன்.

(5) இராமனுக்குத் துணையாக நின்று போரில் தலைமை ஏற்றுப் போர்புரியும் பாத்திரங்களுள் மிகச் சிறப்புடையவன் இலக்குவன். அடுத்தபடியாக விளங்குபவன் அனுமன்; இவன் இன்றியமையாத பாத்திரமாக விளங்குபவன். இப்பாத்திரங்களுக்கு உறுதுணையாக நின்று வழிகாட்டுபவன் விபீடணன். இராவணனுக்குத் துணையாக நின்று, போரில் தலைமை ஏற்றுப் போர்புரிபவர்களுள் இன்றியமையாதவராகக் கருதப்படுவோர் கும்பகர்ணன், அதிகாயன், இந்திரசித்து ஆகியோராவர். இப்பாத்திரங்கள் ஒவ்வொன்றும் கற்போர் மனத்தில் பதிந்து வியக்கச் செய்கிறது.

(6) போர்ச் செயல்களை மேற்கொண்டு நடத்தும் இராமன், இலக்குவன், அனுமன், விபீடணன், ஆகிய அறச்செயல் பாத்திரங்களும், இராவணன், கும்பகர்ணன், அதிகாயன், இந்திரசித்து ஆகிய மறச்செயல் பாத்திரங்களும் இவ்வியலில் இடம்பெறுகின்றன. பாத்திரங்கள் மேற்கொள்ளும் போர்ச்செயல்கள் ஆராயப்படுகின்றன. கம்பன் காட்டும் பாத்திரங்களை முதலில் விளக்கிக்காட்டியும், சீராமகவி, கம்பனிலிருந்து வேறுபடும் இடங்களைச் சுட்டிக்காட்டியும் வரையறுக்கப்படுகின்றன. ஒப்புமைப்படுத்தும் அட்டவணையும் தரப்பட்டுள்ளது. பின்னிணைப்பாக இப்பாத்திரங்கள் மேற்கொள்ளும் போர்ப்பட்டியல் சேர்க்கப்பட்டுள்ளது.

## *கம்பன் காட்டும் போர்த்தலைமைப் பாத்திரங்கள்*

## I. *நேரிய பாத்திரங்கள்*

### *இராமன்*

இராமாயணப் போர்த்தலைமை ஏற்கும் பாத்திரங்களில் இராமனே தலைமையானவன். "தன்னேரில்லாத் தலைவனையுடைத்தாய்" காப்பியம்

அமையவேண்டுமென்பது இலக்கணம். கம்பன், தன்காலச்சூழலில் இராமனைக் கடவுளின் அவதாரமாகவே கொண்டான். ஆயினும் இராமனுடைய சொல்லும் செயலும் ஒரு மனிதனுடைய சொல்லும் செயலுமாகவே அமைந்து விடுகின்றன. இறைத்தன்மைக்கும் மனிதத் தன்மைக்கும் இடையே முரண்பாடோ சிக்கலோ ஏற்படாமல் கதையைக் கொண்டு செல்லும் கம்பன் கவித்திறன் போற்றுதற்குரியது. அன்பும் அருளும் அறமும் வாய்ந்த இராமனின் போர் நெறியை யுத்தகாண்டப் போர் நிகழ்ச்சிகளின் வழி காண்போம்.

(1) சீதையை மீட்பதற்கு இலங்கை நோக்கிச் செல்லுகின்ற இராமனை யுத்தகாண்டத் துவக்கத்தில் நாம் காண்கிறோம். மாசற்ற அன்பும் வலிமையும் உடைய அனுமன் வழி இலங்கைபற்றி அறிந்த இராமன், தென்திசைக் கடலைக் காண, எழுபது வெள்ளம் படைசூழ வருகின்றான். அண்ணன் சொல்லுக்குக் கட்டுப்படும் இலக்குவன், அச்சத்தாலும் அன்பினாலும் இராமன் தலைமைக்குத் தன் குலத்தோடு கீழ்ப்படிந்து நடக்கும் சுக்கிரீவன், மற்றும் அங்கதன், அனுமன் ஆகியோர் படையுடன் செல்கின்றனர். கடலின் தோற்றம், பரப்பு இவற்றைக்கண்டு துயருறும், சீதைபால் காதலும் மிக, இராமன் படையுடன் கடற்கரையில் தங்குகின்றான்.

(2) இராவணன் கூட்டும் மந்திர ஆலோசனையில், சீதையைவிட்டு விடுவதே உயிருக்கு உறுதி என விபீடணன் அறவுரை கூறுகிறான்; அரக்கர்கோன் கருத்தை மறுத்த தம்பி விபீடணனை நாடுகடத்துகிறான். இராமனிடம் அடைக்கலமடைகிறான் அவன். பகைவனிடமிருந்து வந்தவனைத் தம்மோடு சேர்த்தக்கொள்ளலாமா? கூடாதா? என்பதை ஆராய்கின்றான். அனுமன் ஒருவனே, விபீடணனைச் சேர்த்துக் கொள்ளலாமென்கின்றான். இராமன், அடைக்கலச் சிறப்பைக்கூறி, "மாருதி வடித்துச் சொன்ன பெற்றியே பெற்றி" (vi: 4: 105) எனக்கொண்டு அடைக்கலமளிக்கின்றான். அவனையும் தம்பியாக ஏற்று, இந்திரற்குரிய இலங்கையின் அரசனாக்குகிறான். வேள்வியாலும் தவத்தாலும் ஞானத்தாலும் பெறவியலாத பேற்றை விபீடணன் எளிதாகப் பெற்றுவிடுகிறான். இந்நிகழ்ச்சியால் இராமபிரானின் அருள் உள்ளம் விளங்கும்.

(3) இராமன், இலங்கையின் இயல்பு, ஒன்னார் படைவலி முதலியவற்றை வீடணனிடமிருந்து கேட்டறிகிறான். அனுமன் முன்னைய ஆற்றலையும் உணர்கிறான் தொடர்ந்து வானரப்படையோடு இலங்கை செல்ல வழி வேண்டி வருணனை வழிபடுகிறான். தருப்பைப்புல்லை விதிப்படி பரப்பி, அதன்மேல் கிடந்து, ஏழுநாள் வரை வருண மந்திரத்தை ஓதியும், அவன் வராத நிலையில், வெகுண்டு வில்லில் நாணொலி செய்து, பிரம்மாத்திரம் விடுகின்றான். உலகமே கலங்க வெந்த உடலோடு, அழுத கண்களோடு தொழுதகையோடு, வருணன், இராமன் திருவடிகளில் அடைக்கலம் புகுந்தான். இராமனைச் 'சுருதி மூர்த்தி' என்று விளித்து.

'ஆழி நீ; அனலும் நீயே; அல்லவை எல்லாம் நீயே;
ஊழி நீ; உலகும் நீயே ; அவற்று உரையும் உயிரும் நீயே,
(Vi : 5 : 68)

என்று கூறி வாழ்த்துகின்றான். இதனால், இராமனின் வெஞ்சினமும் அடைக்கலத் திறனும் போதரும்.

(4) இராமன், நளன் உதவியுடன் தன் படைகளுடன் மூன்றே நாட்களில் கடலில், 'சேதுபந்தனம்' செய்கிறான். சுவேல மலைமீது நின்று நகரை அவன் நோக்கியபோது, இலங்கை வடதிசை வாயிற்கோபுரத்தின் மீது ஏறி நின்ற இராவணனை இராமனுக்கு வீடணன் சுட்டிக்காட்டுகிறான். உடனின்ற வானரவரசன் சுக்கிரீவன், வெகுண்டு, இராவணன் மீது பாய்கிறான். இருவரும் போரிடுகின்றனர். துணைவனின் வரவு காணாத இராமன் "உன்னியகருமம் எல்லாம் உன்னோடு முடிந்த" என்று இயம்பி உணர்வு அழிகின்றான். இந்தநேரத்தில், அரக்கர்கோனின் மௌலிமணிகளைப் பறித்துக்கொண்டு வருகின்றான் சுக்கிரீவன். இராமன்,

"அன்பனை அமரப்புல்லி மஞ்சனம் ஆட்டிவிட்டான்
தன்பெரு நயனம் என்னும் தாமரை சொரியும் நீரால்"
(vi: 11:34)

எனத் தன் அன்பை வெளிப்படுத்தி, அவனது வெற்றித் திறனைப் பாராட்டுகிறான். மனிதத்தன்மைத்தான அன்பையும் வீரத்தையும் பாராட்டும் பண்பை இராமன்பால் இங்குக் காண்கிறோம்.

(5) இராமன், இராவணனை வென்று அழித்தற்பொருட்டு இலங்கை முற்றுகையிடுகிறான்; வானரர் படையும் அரக்கர் படையும் அணி அணியாக நிற்கின்றன. இராவணனைப் போருக்கு எதிர்பார்த்தும், வாராத நிலையில், அங்கதனைத் தூதாக அனுப்புகிறான். தூதுவன், "உறுதி பயக்கும் செயலை நோக்குவாயாயின் சீதையை விடுத்து இராமனைத் தொழுது வாழ்வாயாக" என்று இராமனிடம் தூதுரைக்கிறான். அவனது மாறுபட்ட செயலால், இராமனிடம் மீண்டான். செய்தி அறிந்து, "மூர்க்கன், முடித்தலை அற்றபோது அன்றி ஆசை அறான்" (Vi:13:43) என்று நின்றான். போர் மூள்கின்றது.

(6) முதல் நாள் போரில் வானரைப்படையும் அரக்கர் படையும் எதிர்த்துப் போரிடுகின்றன. இராமனும் இராவணனும் தும்பைப்பூவைச் சூடிப் போருக்குப் புறப்படுகின்றனர். இராவணன் "நெடுந்தும்பையும் சூடினான்" (vi: 15:97) இராமன், "இளவரிக் கட்டிலை ஆரொடு ஏர் பெறத்துளவொடு தும்பையும் சுழியச் சூட்டினான்" (Vk:15:115) எனத் தமிழ்ப்போர்நெறிக்கு ஏற்ப இதனைக் கம்பன் படைப்பான். போரில், அரக்கர் படைத் தலைவர்களாக வச்சிரமுட்டி, கும்பானு, பிரகத்தன், சுபாரிசன் முதலியோர் இறந்துபடுகின்றனர். செய்தி அறிந்த இராவணன், சுக்கிரீவுன். அனுமன், இலக்குவன் ஆகியோருடன் போரிடுகின்றான், இராவணனுக்கு இவர் நால்வரும் பின்னடைகின்றனர். ஆயினும், இவர்கள்

வன்திறனை அறிய இராவணனுக்கு வாய்ப்புக்கிடைக்கிறது. அனுமன் வேண்டுகோள்படி இராமன், அவன் தோள்மீதேறிக் கொண்டு கடும்போர் செய்கின்றான். இராவணன் தேர்மீதிருந்து போர் செய்கின்றான். அவன் விடுத்த வெஞ்சரங்களை இராமன் தன்கணைகளால் அழிக்கின்றான். அவன் விட்ட அம்புகள் பலவாகப் பெருக, இராவணன் விட்ட அம்புகள் பயனற்றுப் போகின்றன. இராவணன், இராமனுடன் தனித்து நின்று போர் செய்ய, அவனது தேர், வில், வாள், முதலியவற்றை இழந்து, மணிமுடி உருளத் தரையில் சாய்கின்றான். அவன் வலிமையற்ற, படைக்கலமின்றி நிற்கக்கண்டு, பகைவர்க்கு அருளும் நன்னெஞ்சுடைய இராமன், அவனுக்குச் சில நல்லுரை கூறி "இன்று போய், போருக்கு நாளைவா" என உயிர் நல்குகிறான் (Vi:14:255)

(7) இராவணன், போர்க்களம் செல்லுமாறு கும்பகர்ணனைப் பணிக்கிறான். "சீதையை விடுவதே சிறந்தது" - என்று தமையனிடம் அறிவுரை கூறியபோதிலும், நன்றிக்கடனாக, அண்ணனைக் கைவிடாது போருக்குப் புறப்படுகின்றான். நீலன், அங்கதன், அனுமன், இலக்குவன் முதலியோர்களுடன் கடும்போர் புரிகின்றான். கும்பகர்ணன் சுக்கிரீவனை இறுக்கப்பிடித்து உணர்விழக்கச் செய்து இலங்கைக்குக் கொண்டு செல்லவே, இராமன் அம்புமாரி பொழிந்து திசைகளை எல்லாம் மறைத்து, அம்பாலாக்கிய மதிலால் இலங்கையில், நுழையாவண்ணம் செய்துவிடுகிறான். அப்போது கும்பகர்ணன் இராமனை நோக்கி, "சுக்கிரீவனை என்னிடமிருந்து மீட்டனையாயின், சீதையையும் மீட்டாய்," என்று வீரவுரை பகர்கின்றான். அது கேட்ட இராமன் அம்பொன்றை அவன் நெற்றியில் செலுத்துகின்றான். அதனால் மயக்கமுறவே, அவன் செங்குருதி பட்டமையால், சுக்கிரீவன் மயக்கம் தெளிந்து கும்பகர்ணன் மூக்கையும் காதையும் கடித்து எடுத்துக் கொண்டு மீளுகிறான். உணர்வுபெற்ற கும்பகர்ணன் மூக்கும் காதும் இழந்தமை கண்டு வெகுண்டு இராமனுடன் போர் தொடுத்து, வாளினை இழந்து தனியனாகிறான். இந்நேரம், இராவணன் அனுப்பிய பெரும்படை, உதவியாக இருக்கிறது. நால்வகைப் படைகளுக்கும் அழிவு ஏற்படுகிறது. இராமனால் சூலப்படை அழிக்கப்பட்டவுடன் கும்பகர்ணன் வாளேந்திப் போர் செய்கிறான். இராமன் அவனது கைகளைத் துணிக்கிறான். கைகள் இழந்த நிலையிலும் அவன் வானரைச்சேனைகளைத் துகைக்கிறான். இராமன் அவன் இரு கால்களையும் துணிக்கிறான். இந்நிலையிலும் கும்பகர்ணன் உடற்றும் போர் திறன் கண்டு இராமன் வியக்கின்றான்; வீடணனுக்கு ஒரு துன்பம் நேரா வண்ணம் காக்க வேண்டியும், மூக்கிழந்த முகத்தை யாரும் காணாவண்ணம் தன் தலையை அறுத்துக் கடலில் வீழ்த்தவும் வேண்டுகிறான். இராமன், வேண்டியவாறு செய்து அருளுகின்றான். அரக்கர்கள், செய்தியை இராவணனிடம் அறிவிக்கின்றனர். இராமபிரானின் போர்த்திறனும் அன்பின் பெற்றியும் வெளிப்படுவதுடன், கும்பகர்ணனது செய்நன்றித் திறனையும் நாம் அறிந்து கொள்ளுகிறோம்.

(8) பின், மாயாசனக நாடகம் நடக்கின்றது. தொடர்ந்து,

இலக்குவன் - அதிகாயன் போர் நடக்கிறது; தூய வீரத்துக்கு இலக்கணமாக நடக்கிறது. அவ்வீரத்திக்கு விளக்கமாக அது அமைகிறது. படைத்தலைவர் பலர் வதைக்கப்படுகின்றனர். இதன் பின்பே இந்திரசித்து போர்க்களத்துக்கு வருகின்றான். இலக்குவனைக் கொல்வேன் என்று வஞ்சினம் கூறி, அவனை வெல்ல இயலாத நிலையில், நாகபாசத்தை விடுகிறான். இலக்குவனோடு தானையரும் சேனைத்தலைவர்களும் கட்டுண்டு விழுகின்றனர். செய்தி அறிந்து களம்புகுந்த இராமன் பெருந்துயருறுகின்றான் 'தம்பி இறப்பின் தானும் உயிர் தரியேன்' எனக்கருதிய அவன், விபீடணன் வழி உண்மை அறிகிறான். கருடன் வரவே, நாகபாசம் நீங்குகின்றது. பின்னர், இந்திரசித்து, மாயையால் எவரும் அறியாவண்ணம், பிரமாத்திரத்தை விடுகிறான். இலக்குவனும், வானரத் தலைவர்களும் அயர்ந்து தளர்ந்து மூர்ச்சிக்கின்றனர். களம் வந்த இராமன், "தமியனான நான், தம்பிமாள இனி நான் வாழேன்; உன்னுடன் வந்தேன்" என்று அரற்றுகிறான். உயிர்பெற்ற அனுமனும், மருந்து மலையைக் கொணர. யாவரும் உயிர் பெற்று எழுகின்றனர். இறுதியில். இலக்குவன் விடுத்த வாளிக்கு இந்திரசித்து இரையாகின்றான். தன் தம்பிபால் உள்ள உணர்வையும், சீதைபால் உள்ள அன்பையும், இராமன் வெளிக்காட்டும் செயல், இராமனை மனிதனாகவே காட்டுகின்றனது.

(9) தொடர்ந்து, கரன் மகனாகிய மகரக்கண்ணன் ஐந்து வெள்ளம் சேனையுடன், 'தன் தந்தையைக் கொன்ற இராமனைப் பழிதீர்ப்பேன்' எனக்கூறிப் போருக்குப் புறப்படுகிறான். அவன் மாயையால் இடி, காற்று, நெருப்பு முதலியவற்றை உண்டாக்கி, உண்மை உருவம் தோன்றாவண்ணம் போர் செய்து மறைந்து கொண்டு நிற்கிறான். இராமன் அம்புபட்டமையால் குருதி ஒழுகும் உண்மை உருவம் தெரிய வருகிறது. இராமன் ஒரம்பால் அவனைக் கொல்லுகிறான். மாயையை உணர்திறனால் இராமன் வெல்லும் பான்மை இதனால் புலப்படுகிறது.

(10) இந்திரசித்தின் வதம் இராவணனைப் புத்திரசோகத்தால் மனமுடையச் செய்கிறது. இதற்குக் காரணமாகச் சீதையைக் கொல்வேன் என மூண்டெழுகின்றான் இராவணன். மகோதரன் தடுக்கிறான். இராவணன் போர்க்களம் புகுந்து பொருத. இலக்குவன் வேல் ஏற்கிறான். மூர்ச்சித்த அவனை, மீண்டும் மருந்து மலையைக் கொணர்ந்து உயிர்ப்பிக்கிறான்.

(11) அடுத்து, போரின் உயிர்நிலையான மூலபலப்படை போர் செய்கிறது. "சீதையை அடைவேன் அல்லது இறப்பேன்" என்று வஞ்சினம் கூறி இராவணன் போர்க்களம் செல்லத்துணிகிறான். இம்மை மறுமைக்கு ஏற்ற பூசனையை முறையாகச் செய்து போர்த் தொழிற்குச் செல்லுகிறான். அவன் விடுத்த கணைகள் விண்ணையும் மண்ணையும் மறைக்கின்றன. அம்புகளால் அறத்தின் நாயகன் கட்புலனாகாது மறைகின்றான். விரைவில் அம்புக்கூட்டை அறுத்தெறிந்து அரக்கனையே வருத்துகின்றான். இராவணன் விடுத்த தாமதாத்திரத்தைச். சிவன் படையால்

தொலைக்கிறான் இராமன், அடுத்து விட்ட ஆசுரப்படையை அக்கினிப்படையால் அறுக்கின்றான். தசமுகன் தொடுத்த மயன் படையைக் காந்தர்ப்பக் கணையால் போக்குகிறான். தண்டாயுதத்தையும் பொடிசெய்கிறான், அரக்கன் விடுத்த மாயாத்திரம் ஞானக்கணையால் ஒழிகிறது, சூலம் உங்காரத்தால் பொடியாகிறது. இச்செயலைக் கண்ட இராவணன், "இராமன் வேத முதல்வனோ?" எனக்கருதுகின்றான். கடும் போருக்குப்பின்னர், இராமன், அரக்கன் மேனியை முற்றும் அம்பினால் மூடுகிறான். நிலைகலங்கித் தேரின் மேல் வீழ்கிறான் அரக்கர் கோமான், அதுகண்ட சாரதி தேரை விலக்கி நிறுத்த, இராமன் அம்பு எய்தலைத் தவிர்க்கிறான். மாதலி இராவணனைக் கொல்ல வேண்ட, அது நீதி அன்று என்று உணர்த்துகிறான் இராமன்.

> **"படைதுறந்து மயங்கிய பண்பினான்**
> **இடைதெறும் படி பார்த்துதிகில் நீதியின்**
> **நடைது றந்துஉயிர் கோடலும் நன்மையே?**
> **கடைது றந்துபோர் என்கருத்து என்றான்** (Vi : 36 : 173)

இதனால், இராமபிரானின் தூய வீரம் விளங்கும்.

(12) உணர்வு பெற்ற இராவணனோ, தேரைத் திருப்பிய சாரதியைக் கடிந்து வாளை ஓங்குகின்றான். "மாய்வதைத் தவிர்க்கத் தேரைத் திருப்பினேன்" எனக் கூறிய பாகன்பால் இரக்கங்கொண்டு, மன்னிக்கிறான். மீண்டும் இராமனோடு போர் நடக்கிறது. இராவணன் விடுத்த அம்புகள், எறிந்த இரும்புலக்கை முதலியவற்றையெல்லாம் அழித்த இராமன், முடிவில் அவன் மேல் அயன்படையை விடுக்கிறான். அப்படை இராவணன் உயிர்பருகிப் புறம்போகின்றது; பரம்பொருளின் புனிதவாளியினாலாயே மாள்கின்றான். அப்பொழுது இராவணன் முதுகில் காணப்பட்ட தழும்புகளைப் பார்த்து இராமன், தன் வெற்றியும் வீரமும் பழுதுபட்டன என்று எண்ணுகிறான். போர் யானைகளுடன் முன்பு போரிட்டதால் ஏற்பட்ட போர் வடுவென விபீடணன் கூற, இராமனுடைய ஐயம் நீங்குகிறது.

சீதையை மீட்டபின், இராமன் அயோத்திக்குச் செல்கிறான். முடிசூட்டுவிழாவில், அனுமன் புண்ணிய நீர் கொணர, மஞ்சனநீராட்டி, விழாவில் இராமன் படைக்கு உதவிய அனைவருக்கும் பரிசுகள் வழங்குகின்றான். இராமன் இனிது அரசு புரிகின்றான்.

மேற்கூறியவற்றால், இராமபிரானின் அருள் உள்ளம், அடைக்கலத்திறன், செய்நன்றியதல், மாயையை உணர்திறன், தூயவீரம், பிறர்க்குதவி முதலியன பெறப்படும்.

### *இலக்குவன்*

இராமனோடு உடன்பிறந்தோர், பரதன், இலக்குவன், சத்துருக்கனன் இம்மூவரும் இராமனிடம் எல்லையில்லாத அன்பு கொண்டிருந்தனர். ஆயினும், இராமனுக்கு அனைத்தையும் இலக்குவன் முன்னின்று முடிக்கிறான். அவனது அறிவுத்திறன் உயர்ந்தது. அவன்

அறிவுத் தெளிவோடு பேசுவதை நாம் காண்கிறோம். உணர்ச்சி, அறிவு, தெளிவு என்று வளர்ச்சிபெறும் பாத்திரம் அவனுடையது. உடன்பிறந்த மூவருள் இலக்குவன், தன் காலமனைத்தையும் இராமனோடு உடன்கழித்தவன். பதினான்கு வருடம் காட்டில் ஏற்பட்ட இராமனது துன்பங்களைப் பகிர்ந்து கொண்டவன். இராமனைக் காப்பதே கடனெனக் கொண்டவன். 'உறங்காவில்லி' என்ற பெயரினன். அன்பினுக்கு எல்லையற்ற அவனிடம் வீரமும் சிறந்து விளங்கியது. வில்லின் வல்லன். அவன் ஆற்றிய போர்கள் பல. அவற்றுள், யுத்தகாண்டம் வழி அவனது ஆற்றலையும் பண்பையும் காண்போம்.

(1) வானரப்படைகள் சூழ்ந்து நிற்க இராமனோடு தம்பி இலக்குவன் தென்கடற்கரையை அடைகின்றான். இராமன் படையொடு இலங்கை சேருதற்குக் கடலில் அணை கட்டுகிறான். தென் கரையில் சுவேலமலையில் பாடிவீட்டில் படை தங்குகிறது. அங்கு, அடைக்கலம் புகுந்த விபீடணனை இராமன் அருட்திறத்தால் ஏற்கிறான். "இந்த உலகமும் என் பெயரும் நிற்கும் வரையில் இலங்கைச் செல்வம் நின்னதே தந்தேன்" என உறுதிகூறுகிறான். இலக்குவனை விளித்து, "நம்மையடைந்த நற்றுணைவனாகிய விபீடணனுக்கு மகுடம் சூட்டுக" எனப் பணிக்கின்றான். அண்ணல் சொல்லை ஏற்கும் இலக்குவனை நாம் போர்ப்பகுதியில் இங்கே காண்கிறோம். இராமன், இலக்குவனோடு வானரப்படை புடைசூழ சுவேல மலையின் மேல் ஏறி நின்று இலங்கையைக் காண்பிக்கிறான். இலங்கையின் சிறப்பை இராமன் இளவலுக்குக் கூறுகின்றான். இராவணன், ஒற்றர்வழி இராம - இலக்குவரை அறிகின்றான்.

(2) பகைவர் போர் தொடுக்க இராமன் படைகளை அணி அணியாக நிறுத்துகிறான். இராவணனிருக்கும் வடதிசை வாயிலில் இராமரும் இலக்குவனும் காத்து நிற்கின்றனர் இராவணன் வராமையால், தூது விடுவதுபற்றி விபீடணன் முதலியோரிடம் பேசுகின்றான். விபீடணன், சுக்கிரீவன் முதலியோர் இசைகின்றனர். இலக்குவன், "இன்னல் பல இழைத்த கொடியோனாகிய இராவணன் பால் தூது விடுதல் தவறு; விபீடணனுக்குக் கொடுத்த சொல்லைக்காக்கவேண்டும்" எனக்கூறி அக்கருத்தை மறுக்கிறான். இராமன், "அறநெறிப்படி நடத்தலே சிறந்தது" எனப் பதிலுரைக்கிறான், இலக்குவனும் ஏற்கிறான்.

(3) இராமனும் இராவணனும், வானரப்படையும் அரக்கர் படையும், முதல் நாளில் எதிர்த்துப் போர் செய்கின்றன. அரக்கர்படையிலுள்ள நாற்றிசைக் காவலரும் அழிந்துபடவே, இராவணன் வெகுண்டு போர் தொடுக்கிறான். எதிர்த்த சுக்கிரீவன் அனுமனைக் கடுமையாகப் போர்செய்து மெலிவடையச் செய்கின்றான். இராவணன் பொருதவே, வரிசிலை இலக்குவன் வில்லில் நாண் ஒலி செய்கிறான். "என் கைவாளிக்கு இலக்கு இவன்; இவனை இன்று விலக்குவேன்?" (vi : 14 : 141) எனக்கூறி போர் தொடுக்கிறான். இலக்குவனுக்கும் இராவணனுக்கும் கடும்போர் நடக்கிறது. களிறு, தேர், புரவி மற்றும் அரக்கர்தானை

இருகோடியை இலக்குவன் வீசுகிறான். இராவணன் இலக்குவனது போர்த்திறமையை "வில்லினால் இவன் வெல்லப்படான்" எனச் சினம் பொங்க, "கொல்லும் நாளும் இன்று இது" (Vi : 14 : 205) என வியந்து எண்ணி, நான்முகன் வேலால் இலக்குவனை எறிகிறான். அதனால், உணர்விழந்த இலக்குவனைத் தூக்கிக்கொண்டு போக இராவணன் முயன்றும், தூக்க முடியவில்லை. இது கண்ட அனுமன் விரைந்து பாய்ந்து, இலக்குவனை எளிமையாக எடுத்துச் சென்று இராமன்பால் சேர்க்கிறான். இதனால், வீரமும் தீரமும் வெளிப்படும்.

(4) கும்பகருணன் போரில், வானரருக்கும் அரக்கர்க்கும் பெரும்போர் நடக்கிறது. இலக்குவனும் போரில் குதிக்கிறான். இலக்குவன் கணைக்கு அரக்கர் பலர் அழிகின்றனர். கும்பகருணன், இவன் வில் ஆண்மையைத், "திரிபுரஞ் செற்ற தேவனும் இவனுமே செருவின் ஒரு விலாளன்" என்று பாராட்டுகின்றான். அனுமன் தோள் மேல் இலக்குவன் ஏறிச்சென்று, கும்பகர்ணனுடைய சேனைகளை அழித்து தேரினையும் அழிக்கிறான். இதனைக்கம்பர், "கொற்றவாள், எழு தண்டு, வேல், கோல், மழு குலிசன், மற்றும் வேறுள படைக்கலம் இலக்குவன் வாளி துணித்தது" (VI:15:251) என்பார். தொடர்ந்து, இராவணனால் அனுப்பப்பட்ட துணைப்படை வரவே, அப்படையுடன் இலக்குவன் போர் செய்து கொண்டிருந்தான், இராமனால் கும்பகர்ணனும் வீழ்கிறான். வல்வில்லாளன் என்பதை இதனால் அறிகிறோம்.

(5) மாயாசனக நாடகத்தின் பின், அதிகாயன் கும்பகர்ணனது உடல்கண்டு வருந்துகிறான், தன் தந்தையாகிய இராவணனை இடித்துரைத்து, அதிகாயன் "உன் தம்பியைக் கொன்றவனது தம்பியைக் கொன்று, நீயுற்ற பெருந்துயரத்தினைச் செய்திலேனாயின் நான் உன் மகன் என்று சொல்லத்தக்கவனல்லன்." என வஞ்சினம் கூறி மூவாயிரம் கோடிப்படையுடன் போர்மேல் செல்லுகிறான். இராமன் ஏவ, இலக்குவன் போர்க்களம் செல்கிறான். அதிகாயனது திறத்தை விபீடணன் வழி இலக்குவன் அறிகிறான். இராமனும் இலக்குவனது வலிமையை, "எண்ணாயிரங் கோடி இராவணன்", "விண் நாடரும், வேறு உலகத்து எவரும் நண்ணா ஒரு மூவரும், நண்ணிடினும் கண்ணால் இவன்வில் தொழில் காணுதியால்" (vi:17:77) எனக் கூறுகின்றான். இலக்குவன் வீடணனுடன் போர்க்களத்தில் நிற்கின்றான். அப்போது தனியே போர் செய்யக்கோரி மயிடன் என்றும் அரக்கனைத் தூதாகவிடுத்தான் அதிகாயன். இராமனும் தூதை ஏற்று, "இலக்குவன் ஒருவனே அதிகாயனைத் தனிநின்று பொருதி அழிப்பான்." எனப் பதிலிறுக்கிறான். காலன், குலிசன், காலசங்கன், அமாலி, மருத்தன், என்போர் இலக்குவனால் களத்தில் இறந்துபடுகின்றனர். அவர்கள் படைக்கலங்களாகிய சூலம், கணிச்சி, பிண்டிபாலம், பாசம், அயில் முதலியன இலக்குவன் கணையால் அறுபடுகின்றன. அரக்கர் கொணர்ந்த நூறாயிரம் யானைகளையும் இலக்குவன் அம்புகளால் கொன்றொழிக்கிறான். பின்னரும், பங்குபெற்ற கோடி யானைகளும் அழிகின்றன. பின், அங்கதன் தோள் மீது நின்று

இலக்குவன் போர் செய்கிறான். "தனியாக நின்று என்னுடன் பொருகின்றாயோ?" என வினவிய இலக்குவனுக்கு, அதிகாயன், "எதிர்த்துள யானும் நீயும் தேவரும் பிறரும் காண, செருவது, செய்வதெல்லாம்" (Vi:17:188) எனப்பதிலிறுத்து, தனித்து நின்று போர் செய்கிறான். இருவரும் அரிய படைக்கலங்களைக் கொண்டு பெரும்போர் செய்கின்றனர். அந்நிலையில் வாயுதேவன் இலக்குவன் அருகே தோன்றி "இவ்வதிகாயன் பிரம்மாத்திரத் தாலன்றி இறவான்" எனக் கூறுகின்றான். அதனைக்கேட்ட அவன்; பிரம்மாத்திரத்தை அதிகாயன் மேல் ஏவுகிறான். அஃது அதிகாயனது தலையைக் துணித்து எடுத்துக்கொண்டு வானத்தின் வழியாகச் சென்றது. இலக்குவனது ஆற்றலை நேரில் கண்டு வியந்து வீடணன், "ஐயன் மந்திரசித்து அன்ன சிலைத்தொழில் வலி இது ஆயின் இந்திரசித்தனார்க்கும் இறுதியே இயைவது" (Vi:17:207) என்கிறான். தன் தமையன் அதிகாயன் கொல்லப்பட்டமை அறிந்த நராந்தகன் வெகுண்டு, இலக்குவனைத் தொடர்ந்து பொருதற்கு முற்படுகிறான். நராந்தகன் ஓங்கிய வாளினைப் பற்றி வாங்கி, அதனாலேயே இலக்குவன் அவனைக் கொல்கிறான். போர்மத்தன், வயமத்தான், கும்பன், நிகும்பன் முதலியோரை முறையே நீலன், இடபன், சுக்கிரீவன், அனுமன் கொன்று ஒழிக்கின்றனர். அரக்கர் படை சிதறுண்டு ஓடுகின்ற - அதிகாயன் முதலியோர் இறந்த - செய்தியைத் தூதர்கள் இராவணனுக்குக் கூறுகின்றனர். மைந்தனை இழந்த இராவணன், பெருந்துயருள் வீழ்கிறான். பெரும்போர் முடற்றி வெற்றி காணும் இலக்குவனை நாம் காண்கிறோம்.

(6) 'தன் தம்பியைக் கொன்ற இலக்குவனைக் கொல்வதாகச்' சூள் உரைத்து இந்திரசித்து போர்க்களம் புகுகின்றான். பல்லாயிரம் கோடிப்படைக்கலம் உடன் செல்கிறது. வருபவனை விபீடணன் வழி இலக்குவன் அறிகின்றான். இருதிறச்சேனைகளுக்கும் பெரும்போர் நடக்கிறது. இந்திரசித்து குரங்குச் சேனையைப்பொருது, நிலை குலையச் செய்கிறான். இலக்குவன், 'குரங்குச்சேனையை முன்னே அனுப்பியது பிழை' எனக்கூறுகிறான். அனுமன் தோள்மீது ஏறிக் கொண்டு, இலக்குவன், தேர்மீது வந்த இந்திரசித்துடன் போர் செய்கிறான். இருவரும் மும்மரமாகப் போர் செய்கின்றனர். இலக்குவனது போர்த் திறனை இந்திரசித்து. "மன்னர், நம்பதியில் வந்து, வரிசிலை பிடித்த கல்வி, இந்நரன் தன்னொடு ஒப்பார் யார் உளர். ஒருவர்?" (VI:I27I120) எனக்கூறி வியக்கிறான். இலக்குவன், தன் சிறந்த கணையொன்றால் இந்திரசித்தின் கவசத்தைப் பிளக்கிறான். அம்புபட்டு இந்திரசித்து மூர்ச்சையுறுகிறான். அப்போது, துமிராக்கனும், மகாபாரிசவனும் வந்து இலக்குவனோடு பொருது தோல்வியுறுகின்றனர். விபீடணன் சொற்படி இலக்குவன் இந்திரசித்தைக் கொல்ல முயன்று அவன் தேரை அழிக்கின்றான். தேரை இழந்து தளர்ந்த இந்திரசித்து, தன் மாயையினால் விண்ணில் மறைந்து, நாகாத்திரம் எய்து இலக்குவனையும் வானரவர்களையும் கட்டி வீழ்த்திவிட்டு, மாளிகை அடைகின்றான். நாகக்கணையால் இலக்குவனுக்கு நேர்ந்த துன்பநிலைக் கண்டு இராமன் பல படக்கூறி

வருந்துகிறான். இவ்வேளை, கருடன் இராமனைத் துதித்துத் தன் சிறகுகளை விரித்துப் பறக்கிறான். நாகபாசம் நீங்கி அழிகின்றது. இராமன் மகிழ்கின்றான். பகைவரும் மலைக்கும் வீரன் இலக்குவன் என்பதை இங்கு அறியமுடிகிறது.

(7) அனுமன் உரைப்படி, வானவர் போர் ஆராவாரம் செய்கின்றனர். போர் மேலிட்டு இலக்குவன் நாணொலி எழுப்புகிறான். இராவணன் உண்மையறிந்து, கருடனை இகழ்ந்து கூறி, அப்பகைவரை அழிக்க மீண்டும் இந்திரசித்தையே ஏவுகிறான். அம்புபட்ட புண்களின் துயர்தீர ஓய்வெடுத்து மறுநாள் போருக்குப் புறப்படுகின்றான் அவன்.

(8) அரக்கர் படைத்தலைவர்களான புகைக் கண்ணன், மாபெரும் பக்கன், மாலி, வேள்விப் பகைவன், சூரியன், பகைவன், வச்சிரத்தெயிற்றன், பிசாசன் ஆகிய படைத்தலைவர்கள், வானரப்படைத்தலைவர்கள் அனுமன், அங்கதன், மாலி, இலக்குவன், சுக்கிரீவன், இடபன், பனசன் ஆகியோருடன் நேருக்குநேர் போர் செய்கின்றனர். எதிர்த்து வந்த பத்து வெள்ளஞ்சேனைகளில், இராமனுடன் ஆறு வெள்ளஞ்சேனையும், இலக்குவனுடன் நான்கு வெள்ளஞ்சேனையும் போர் செய்கின்றன. வீரர்கள்- யாவரும் இலக்குவனுடைய மறனிழுக்கா மானத்தினை இராமனிடம் புகழ்ந்து கூறுகின்றனர். வேள்விப்பகைவனை இலக்குவன் கொன்றான். தொடர்ந்து தசுரன் மகனாகிய மகரக்கண்ணனை இராமன் கொல்லுகிறான். மகரக்கண்ணன் இறந்த செய்தியைத் தூதர்கள் இராவணனிடம் தெரிவிக்கின்றனர். இராவணன் தொடர்ந்து தன்மகன் இந்திரசித்தைப் போருக்கு அனுப்புகிறான்.

(9) இருபடையும் அணிவகுத்து ஆரவாரம் செய்கின்றன. தேரின் நடுவே இந்திரச்சித்து நிற்கிறான். நாணொலி எழுகிறது. நீலன் முதலியோரைத் தனக்கும் தம்பிக்கும் பின் வரிசையில் நிற்குமாறு இராமன் பணித்தான். கடும்போர் நடக்கிறது. இலக்குவன், இராமனிடம், வஞ்சனையில் வல்ல இந்திரசித்தின் தலையினைத் தானே வீழ்த்துவதாக வஞ்சினம் கூறுகிறான். அரக்கவீரர்கள் இலக்குவன் மேல் படைக்கலங்களை ஏவ, அவன் எய்த அம்புகளால் படைக்கலங்கள் அழிகின்றன. இலக்குவன் இந்திரசித்தின் வீரவுரைப்படி, தனியே அவனுடன் பொருதுகிறான். கடும்போர் நிகழ்கிறது. இலக்குவன் இந்திரசித்தின் கங்கணத்தையும் மார்பிற்கவசத்தையும் சிதைத்து, வில் நாணொலி செய்கிறான். இலக்குவன் "அயன்படையைவிடுப்பேன்" என்று கூற, இராமன், உலகப் பாதுகாப்பு, கருதி, அச்செயலைத்தடுத்து நிறுத்துகிறான், தோல்வியுற்ற இந்திரசித்து மறைந்து இலங்கை அடைகிறான். மறுநாள், மகோதரன், நூறுவெள்ளம் சேனையுடன் போர்க்களம் வருகிறான். இலக்குவன் போர்தொடுக்கிறான், பகைவர்மேல் பிரம்மாத்திரத்தை ஏவுவதற்கு இந்திரவேள்வி செய்து, விசும்பிற்சென்று மறைந்து நிற்கிறான். பிரம்மாத்திரத்தை இந்திரசித்து ஏவ, ஒளிமிக்க அம்புகள் இலக்குவன் மேனியில்தைத்து ஊன்றிநிற்கின்றன. அனுமனும் மற்று வானரப்படைத் தலைவர்களும் அடிப்படையில் தாக்குண்டு,

உயிரொடுங்கிச் சாய்கின்றனர். வானரங்கள் யாவும் இறந்துகிடக்கின்றன. இந்திரசித்து வெற்றிச்சங்கினை ஊதுகின்றான். இராமன் தெய்வப் படைக்கலங்கட்கு வழிபாடுசெய்து வேற்றிடத்திருக்கிறான். படைக்களத்தில் தம்படையின் நிலைகண்ட இராமன், பெருந்துயரடைகின்றான். தம்பி இலக்குவனை மார்புடன் தழுவ, அவனும் உடன் இறந்தொழிவதாகக் கூறித்துயரடைகிறான்; மூர்ச்சித்து வீழ்கிறான்.

பிரம்மாத்திரத்தால் வீழ்ந்து கிடைக்கும் இராம இலக்குவனைக் காண சீதை இராவணன் ஏவலால் கொண்டுவரப்படுகிறாள். இராமனைக் கண்ட சீதை நஞ்சுண்டவள் போலச் சோர்ந்து விழுகிறாள். பலபலச்சொல்லி அரற்றுகின்றாள். அசோகவனத்தில், திரிசடை கூற, உண்மை அறிகிறாள், உணர்வுபெற்ற அனுமன், மருந்துமலையைக் கொண்ர்ந்து, இராமன்படையினர் யாவரையும் உயிர்வுறச் செய்கிறான்.

(10) இந்திரசித்து போரில் வெற்றிபெறுதல் குறித்து நிகும்பலை வேள்வி இயற்றி பகைவரை ஒழிக்க முயலுகின்றான். வானரச்சேனைகளுடன் விபீடணன் வர, நிகும்பலை நோக்கிச் சென்ற இலக்குவன் சக்கரவியூகமாக ஆரவாரமின்றி யாகத்தைக் காவல் புரியும் அரக்கர் சேனையைக் காண்கின்றான். வானரவீரர்கள் ஆரவாரிக்கின்றனர். இலக்குவன் சேனையுட் புகுந்து, பகைவர் யானை, குதிரை, தேர்காலாள் என நூறாயிரவரைக் கொன்று குவிக்கின்றான். இதனைக் கண்ணுற்ற இந்திரச்சித்து வெகுண்டு பொருதுகிறான். இலக்குவன், அனுமன் தோள்மீதமர்ந்து போர் செய்கிறான். விபீடணன், "இனி இவன் வாழான்" என இலக்குவனுக்குக் கூறி ஊக்குவிக்கிறான். சினமிக்க இந்திரசித்து காற்று, தீ, நீர் முதலிய தெய்வப்படைக்கலங்களை இலக்குவன் மேல் செலுத்த, இலக்குவன் அவ்வற்றைச் சிதைக்கிறான். இந்திரசித்து பிரம்மாத்திரத்தை ஏவுகிறான். இலக்குவன் அப்படையினைத் தொடுத்து "இப்படையினால் உலகுக்கு எத்தகைய நீங்கும் நேராது, அப்படையினை மாய்க்க!" எனக்கூறி விடுவிக்கிறான். இந்திரசித்தின் அத்திரமழிகின்றது. தேவர்கள் ஆர்ப்பரிக்கின்றனர். இந்திரசித்து நாராயண அத்திரத்தை இலக்குவன் மேல் விடுகின்றான். இலக்குவன் தன்னைத் திருமாலாகத் தியானித்து அதன் எதிர் நடக்கிறான். படை ஒழிந்து மறைகிறது. 'இலக்குவன் திருமாலாகவே இருந்தல் வேண்டும்' என நினைந்து பாசுபதத்தால் அவனைக் கொல்ல ஏவுகின்றான். வானரர்கள் பயப்படுகின்றனர். இலக்குவன் அத்தெய்வப்படையைத் தியானித்து "ஏவியபடையினை அழிப்பாயாக; மற்றொன்றும் செய்யற்க" என்று அன்புடன் இணைந்து நிற்கிறான். தெய்வப்படை பழுதுறுகிறது. தன் கைவண்மையால், இலக்குவன் தோள்களிலும் நெற்றியிலும் சில அம்புகளை எய்கிறான். இலக்குவன் அவற்றைத் தவிர்க்கிறான். இந்திரசித்து மறைகின்றான்.

(11) இந்திரசித்து வருந்தி, நிகும்பலை அழிவின் காரணம் கூற, இராவணன் "என்னையே நோக்கி இந்த நெடும்பகை தேடிக்கொண்டேன்; நின்பேதைமையினால் சீதையை விட்டுவிடு" என்று சொல்லுகிறாய்! நானே

போருக்கு எழுவேன் என்று கூறுகிறான். போரில், இந்திரசித்தின் தேர்ப்பாகனது தலையை இலக்குவன் கொய்கின்றான். இரவு போர் நிகழ்கின்றது. பொழுதுவிடிய, விபீடணன், சிவன் கொடுத்த வில்லையும் தேரையும் அழிக்க வேண்டுகிறான். இலக்குவன் அவற்றை அம்பினால் அழிக்கிறான். தேரிழந்த இந்திரசித்து விண்ணில் எழுந்த மேகத்தில் மறைந்து, கல்மழை பொழிந்து வானர வீரர்களை அழிக்கிறான். இலக்குவனை நோக்கி, "நின்னைக் கொன்றாலன்றி யான் இறவேன்", எனக்கூறி, மாயப்போர் பல செய்து, சூலத்தால் கொல்ல முற்படுகின்றான். அப்போது இலக்குவன், "வேதங்கள் தெளிந்து கூறும் கடவுள் இராமனே என்பது உண்மையானால் இந்திரசித்தினைக் கொல்க" என்று சொல்லி, ஒரு பிறைவாய் அம்பினை விடுகின்றான். இந்திரசித்தின் தலை அற்று மேற்சென்று தரையில் விழுகின்றது. அதுகண்ட அரக்கர்கள் விரண்டோடி இலங்கை புகுகின்றனர். அறுபட்டு விழுந்த இந்திரசித்தின் தலையை அங்கதன் அங்கையில் ஏந்திச்செல்ல, அனுமனது தோள்மீது இலக்குவன் அமர்ந்து செல்லுகிறான். அங்கதன் இராமன் திருவடிகளில் தலையை வைக்கிறான். இராமன் மகிழ்கின்றான். இலக்குவனது வீரத்தையும் அனுமனின் வலியையும் நோக்கி மகிழ்ந்து புகழ்கிறான். இலக்குவனைத் தழுவி, விழுப்புண்களைப் போக்குகின்றான்.

(12) மூலப்படைப்போரில் சுக்கிரீவன் அனுமன் முதலியோரைத் துணையாகக் கொண்டு இலக்குவன் போர் செய்கிறான். அரக்கர் பலரை அழிக்கின்றான். இராவணன் வதையில், இலக்குவன் பொதுப்படையில் பங்கேற்கிறான். இத்தகைய அண்ணன் சொற்படி நடந்த இலக்குவனுக்கு, அன்று அவன் தாய் சொன்ன, "மகனே இவன் பின்செல் தம்பி என்னும் படியன்று; அடியாரினில் ஏவல் செய்தி; மன்னும் நகர்க்கே இவன் வந்திடின் வா; அதன்றேல் முன்னம்முடி" (II : 4 : 141) என்னும் சொல், நம் நினைவுக்கு வருகிறது. தாய் சொல்லைக்காக்கிறான் தனையன்.

இராமனுக்கு யாரினும் இனிய பேரன்பினனாகவும், உலகோர்க்கு அறம் காக்கும் பெருவீரனாகவும், தனிப்பெரும் கடமையாற்றிச் சிறந்தவனாகவும் விளங்கிய இலக்குவன் வெல்திறன் போற்றிப் பேறுதற்குரியது. அறநெறியும், மறம்முடிக்கும் பாங்கும் இலக்குவனுக்கு வெற்றியைத் தந்து பாத்திரத்திற்கு ஏற்றத்தைக் கொடுக்கிறது.

*அனுமன்*

இராமகதையில் ஓர் இன்றியமையாத பாத்திரப்படைப்பாக இலங்குபவன் அனுமன். இவன் இராமாயணம் என்னும் எழில்தேர்க்கு அச்சாணி போன்றவன்; சீதையைத் தேடிக்கண்டு மீண்டும் வருவதற்கு, சுக்கிரீவன் துணையை நாடச் செய்வதற்கு உதவியவன்; சுக்கிரீவன் துணையுடன் சீதையைத் தேட இலங்கை சென்று, சிறையிருந்த சீதையைத் தேற்றியவன்; இராவணனைக்கண்டு வாதாடியவன்; அரக்கர் கொடுமைக்கு ஆளாகி, வாலில் தீயால் இலங்கையை அழித்து தன் வலியைக் காட்டியவன். மேலும், இராவணனைக் கதிகலங்கச் செய்து, பகைவரை

வெல்ல அமைச்சரவையைக் கூட்டச் செய்வதற்குக் காரணமானவன்; வலிமைக்கு வரம்பான வாயுவின் புதல்வன்; ஞாயிற்றின் மாணவனாக உலகியல் இலக்கணம் அருங்கலைகள் யாவும் கற்றுத் தேர்ந்த பண்டிதன். ஐம்புலவேட்கைகளும் அவிந்தடங்கிய ஒழுக்கமேம்பாடு உடையவன்; சொல்லின் செல்வன்; அறிவும் ஆற்றலுமுள்ள பெரியோன்; இருசியமுக மலையில் தங்கியிருந்த சுக்கிரீவனுக்குத் தொண்டு செய்து கொண்டிருந்த நீலன் முதலியோருள் ஒருவன். அனுமனது வீரமும் தொண்டும் தன்னலமற்றவை. இராமனைக்கொண்டு, வாலியைக் கொல்வித்து, அவன்பாலிருந்து சுக்கிரீவனது இல்லாளை மீட்டு அவனுக்குக் கொடுத்தவன். பின்னர், சுக்கிரீவனது படைத்துணையால் இராவணனைக் கொல்வித்து இராமனது இல்லாளை அவன்பால் சேர்ப்பித்தவன். சிறையிருந்த சீதையை மீட்பதற்கு அவன் ஆற்றிய வீரச் செயல்கள் அவனது அறிவையும் ஆற்றலையும் வெளிப்படுத்தும். அவ்வீரனின் செயல்களை யுத்தகாண்ட நிகழ்ச்சிகள் வழிக்காண்போம்.

(1) இராமன், எழுபது வெள்ளம் சேனைசூழ தென் கடலைக் காண்கிறான். அதன் கடற்கரையில் தங்கியகாலை, இலங்கையில் இராவணன் அமைச்சரவையைக் கூட்டுகின்றான். அனுமனால் எற்பட்ட துன்பங்களையும் தனக்கு நேர்ந்த இழிவுகுறித்தும் வருந்தி உரையாடுகிறான்; மேல், இராமன்பால் போர்த்தொடுக்கத் தயாராகின்றான். வீடணன் இரணியன் கதைகூறியும், இராமவதாரச் சிறப்பை உணர்த்தியும், இராவணன் தன் கொள்கையை மாற்ற மறுக்கிறான். அறிவுரை கூறிய விபீடணனை இராவணன் துரத்தவே, அவன் இராமனிடம் அடைக்கலமாக வருகிறான். அவனை ஏற்பதில், அனுமனைத்தவிர மற்றையோர் மறுப்புக் கூறுகின்றனர். அனுமன் பேருரை நிகழ்த்துகிறான். அனுமனின் அறிவுடைமையை இங்கே நாம் காண்கிறோம். அனுமன், இராமனிடம், கூறிய யாவும் நீதிகளையே தருகின்றன. "முன்பு இலங்கையில் நேரில் கண்டவற்றைக் கூறவிழைகின்றேன்" எனக்கூறி, "தூதனாகச் சென்ற என்னைக் கொல்லும்படி அரக்கர் கட்டளையிட்டான்; அப்போது இவ்விபீடணன் தூதரைக் கொல்லலாகாது எனக்கூறிப் பல நீதிகளைச் சொல்வான். இவனது மாளிகை ஓர் அந்தணர் இருப்பிடமாகத் தோற்றமளிக்கிறது. வஞ்சனையற்றவன்; பல நூல்களைக் கற்றவன்; இவன் மகள் திரிசடை நற்குணம் நிறைந்தவள்; சீதையைக் காப்பவள். அரக்கர்கள் மாயாவிகள்; இவர்கள் மாயச்செயலை அறிய இவன் உதவியாவான்" என்றிவ்வாறு அனுமன் கூறிய உரைகளைக் கேட்ட இராமன், "மாருதி வடித்துச்சொன்ன பெற்றியே பெற்றி" (Vi : 4:105) - எனக்கூறி, அங்குற்ற விபீடணனை அடைக்கலமாக ஏற்கின்றான். இதனால், அனுமனது நுண்ணறிவு புலப்படும். விபீடணன் வழி, இலங்கையைப் பற்றிக் கேட்டு அறிகிறான். கடலில் அணைகட்டி இலங்கை எல்லையில் சுவேலமலையில் தங்குகின்றது வானரப்படை. ஒற்றர்கள் வழி வானரப்படை வரவுபற்றி, இராவணன் அறிகிறான். வடகோபுரத்தினின்றும் வானரத்தானையைக்

காண்கிறான். வெகுண்ட சுக்கிரீவன் மல்போர் நடத்தி, இராவணன் மகுட மணிகளைப்பறித்து இராமன் திருமுன் வைக்கிறான். போருக்கு இருபடைகளும் அணிவகுக்கின்றன.

(2) அங்கதன் தூதின் பின்னர், முதல்போர் நடக்கிறது. அரக்கர் படையும் வானரர்படையும் பெரும்போர் செய்கின்றன. இராவணனுக்கும் சுக்கிரீவனுக்கும் போர் நடக்கிறது. சுக்கிரீவன் எறிந்த குலிசத்தை இராவணன் ஓர் அம்பால் தூளாக்குகிறான். பின்னர், இருவரும் நெடுநேரம் போர் புரிகின்றனர் இறுதியில் சுக்கிரீவன் சலிக்கவே, அனுமன் தோன்றிப் பொருகின்றான். இராவ்ணன் நூறம்பை ஒரே சமயத்தில் அனுமன் மீது எய்கிறான். அனுமன் குருதிமல்க அலக்கணுற்று அயர்கிறான். இராவணன் வானரவீரர்களைப் பரிகசிக்கிறான். இலக்குவன் வஞ்சினம் கூறிப்போர் செய்கிறான். அப்போது, அனுமன் மயக்கம் நீங்கி எழுந்து வந்து போரைத் தடுத்துத் தனது பேருருவைக்காட்டி நெருப்பென மூச்சுவிடுகிறான். இராவணனை நோக்கி, "இளைக்காத தோள்களையுடையவனே, என் கரவலிமையைத் தாங்குவையோ? நான் இப்போது உன் மார்பில் குத்துகிறேன் குத்துப்பட்ட பின்பும் உயிருடன் இருப்பாயாயின் உன் கைகளால் நீ என் மார்பில் குத்துவாய் அதனால்பொன்றாது நிற்பேனெனில் உன்னோடு மேலும் போர் செய்யேன்" (Vi:14:166) எனச்சூளுரைக்கிறான் அனுமன். இராவணன் ஏற்றுக்கொள்கிறான். அனுமன் வச்சிரமுட்டியால் அவனை ஓங்கிக் குத்துகிறான். இராவணன் தள்ளாடி வடமேரு சலித்ததே போல் சலித்து விழுகிறான். மூர்ச்சை தெளிந்த இராவணன், "வலிமை என்பது நின்னிடந்தான் உளது; மெலிவு என்பதை இன்றுதான் நான் உணர்ந்தேன்" (Vi:14:191) எனக்கூறுகிறான். அதுபோலவே, இராவணனும் அனுமன் மார்பில் ஓங்கிக்குத்துகின்றான். அனுமன் வெள்ளியங்கிரி நிலை குலைந்து விழுவது போலச்சலித்து விழுகிறான். ஒருவர் வலிமையை ஒருவர் அறிகின்றனர். வானரவீரர்கள் பெரிய மலைகளைப் பெயர்த்து வீசி எறிகின்றனர். இராவணன் அவற்றைத் தடுக்கிறான். அவன், இலக்குவன் மார்பில் வேற்படை ஒன்றைவிட, நெடுங்களத்தில் வீழ்கிறான் அவன்.

(4) கீழே விழுந்த இலக்குவனை இராவணன் கண்டு "இவனுடலை எடுத்துச் செல்வேன்" எனக்கூறி முயன்று தூக்குகிறான். ஆனால், இயலாது திகைக்கவே, அனுமன் விரைந்து தோன்றி, எளிதில் மகவைத்தூக்கும் மந்திபோல, இலக்குவனைத் தூக்கிச்சென்று இராமன் இருப்பிடம் சேர்க்கின்றான். இராமனிடம் "இராவணன் தேரில் மீது நின்றுப் போர் செய்யத் தாங்கள் தரைமீது நிற்கலாகாது; என் தோள்மீது அமர்ந்து போர் செய்க" என்றான்; அவ்வாறே செய்கிறான். இராம - இராவணப்போரில் இராவணன் தோற்க, இராமன் "இன்று போய் நாளை வா" என்கிறான். இவற்றால், அனுமனின் பங்கும் பேராற்றலும் வெளிப்படும்.

(5) தொடர்ந்து, கும்பகருணன் போர்க்களம் வருகிறான். வானரப்படை வீரர்களான நீலன், அங்கதன் முதலியோர் போர் செய்கின்றனர். அங்கதன் தோல்வியுற, அனுமன் போர் செய்கிறான். கும்பகர்ணன் சூலம் எடுத்து எறியவே, அனுமன் ஒரு குன்றால் தடுக்கிறான். கும்பகர்ணன் நெற்றியில் அது வீழ்கிறது. மேலும் ஒரு மலை எடுத்து எறிகிறான். அனுமன் வஞ்சினம் கொண்டு, மலையெடுத்து எறிய, "இதனைத்தாங்கினால் அமர்புரியேன்" (Vi:15:200) என்கிறான். கும்பகர்ணனும், "நீ கொணர்ந்த குன்றை ஏற்றேன் இல்லையேல் தோற்றவன் உனக்கு" (Vi:15:21) என்கிறான். கும்பகர்ணன் வலிமை கண்ட அனுமன் அப்பால் போகிறான். அனுமன் வேண்ட, இலக்குவன் அவன் தோள்மீதமர்ந்து போர் செய்கிறான். இருவரும் போர் செய்கின்றனர். பின்னர் சுக்கிரீவன் போரிடுகிறான். அவன் மேல் எறிந்த சூலத்தை அனுமன் முறிக்கிறான். கும்பகர்ணன், அனுமனைப் போருக்கு அறைகூவ, அனுமன், "முன், இனி எதிர்க்கிலேன்" என்று முற்றியபின், "இகல்பழுது" எனக்கூறிப் போகிறான் (Vi:15:263). போரில், தலையில் அம்புபட்டுக் குருதிசோரநின்ற சுக்கிரீவனைக் கும்பகருணன் எடுத்துச் செல்ல, அனுமன் பின் தொடர்ந்து, அதனை இராமனுக்குக் கூறுகிறான். இச்செயல்களால் அனுமனின் வலிமையும் சொல்லறமும் இனிது விளக்கும். இராமன் கும்பகர்ணப்போரில் கும்பகர்ணன் வீழ்கிறான்.

(6) மாயாசனக நாடகத்தின்பின், அதிகாயன் போர்நிகழ்ச்சியில் அனுமன் தோன்றுகிறான். இராவணன் அனுப்பிய யானைப்படையை இலக்குவன் அழிக்கிறான். அரக்கர்தலைகள் இலக்குவன் கணையால் அறுபடுகின்றன. இப்பொழுது அனுமன் ஒரு பெரிய மராமரத்தைப் பிடுங்கிக் கையிற்கொண்டு, யானைக்கூட்டங்களில் புகுந்து சாடி. வாலினால் வளைத்துக்கட்டி மோதியடித்து எல்லா யானைகளையும் கொன்று விடுகிறான். இதனைக்கண்ட தேவாந்தகன் என்னும் அரக்கன், அனுமன்மீது அநேக பாணங்களைச் செலுத்தி, அதன் உடலைச் சல்லடைக்கண்களால் துளைக்கிறான். அனுமன், மாமரத்தில் அவனை அடிக்க, தேவாந்தகன் மரத்தைத் துண்டாக்குகிறான். உடனே, அனுமன் அவன்மீது பாயந்துக், கழுத்தைப்பிடித்துத் திருகிக் கீழே தள்ளிக்கொல்கிறான். அதுகண்ட அதிகாயன், "உண்டேன் இவன் உயிர் இப்பொழுது; ஒழியேன்" (Vi:17:171) எனக்கனன்று வீரவுரை கூறுகிறான். அனுமனும் "முழைவாள் அரி அனையானையும் எனையும் மிக முனியாய் அழையாய் திரிசிரத் தோனையும் நிலத்தொடும் இட்டு அரைப்பான்" (Vi:17:175) எனப் பதில் விடுகிறான். "திரிசிரன் சீறிப்பொருத, கணத்தில் அவனைக்காலன் உலகினுக்கு அனுப்பி, அனுமன் மேற்குவாயிலை அடைகின்றான். பின்னர், நான்முகன்படையால் அதிகாயன் தலையை அறுக்கிறான். அனுமனின் வெந்திறல் ஆண்மையையும் வெற்றியையும் இவற்றால் அறிகிறோம்.

(7) அதிகாயன் இறந்தபின், இந்திரசித்து போருக்கு எழுகிறான். இலக்குவன் விபீடணன் வழி, அவன் வலியை அறிகிறான். இலக்குவன், அனுமன், சுக்கிரீவன், அங்கதன், நீலன் முதலியோர்களுடன்

போருக்குவருகிறான். இந்திரசித்து சுக்கிரீவன் நெற்றியிலும் மார்பிலும் பாணங்களைச் செலுத்தி, அவன் கை மாமரத்தைத் தூளாக்குகிறான். அதுகண்ட அனுமன் வெகுண்டு ஒரு பெரிய குன்றினை எடுத்து இந்திரசித்தின் மேல் எறிகிறான். அவன் அதனையும் துகளாக்கி, "குரங்கே, உன்னையே கொல்ல வேண்டும் என்று வந்தேன், நீ, மலைகளையும் மரங்களையும் கொண்டா வெற்றியடையப் போகிறாய்?" என எள்ளி உரைக்க, அனுமன், "அடா, பேதாய்! வில்லை எடுத்துப்போர் செய்ய வேறு இரண்டு வீரர்கள் உள்ளனர். அவர்கள் வரும்வரைப் பொறுத்திருக்க முடியுமானால், இதோ இம்மலையைத் தடுத்துக்காத்துக்கொள்!" என்று கூறி, ஒரு குன்றை இந்திரசித்தின் மீது ஏறிகிறான். அது அவ்வரக்கன் மார்பில் பட்டுப் பொடியாகிறது. இந்திரசித்து அனுமன்மீது ஓராயிரம் பாணங்களை ஏவி, அவன் உடலில் பதிக்கிறான். அனுமன், உடல்முழுவதும் குருதிசோர, இளைத்துத் தளர்ந்துவிழுகிறான். இலக்குவன் - இந்திரசித்தன் போர் கடுமையாக நடக்கிறது. பின், அனுமன் இந்திரசித்துடன் கொடும்போர் செய்கிறான். யானை, தேர், குதிரை, வீரர் என்ற பாகுபாடே அற்றுப்போகின்றது. வில், அம்பு, தண்டு இவை பொடியாகின்றன. இவ்வாறு, அனுமன், தான் தோன்றுமிடமெல்லாம் அரக்கர்களைத் திணற அடிக்கின்றான். இந்திரசித்து நாகபாசத்தால், இலக்குவன், அனுமன் மற்று வானரர் பிணிக்கப்படுகின்றனர்.

(8) இராமன் போர்க்களம் செல்ல, தம்பியையும் மற்றும் கண்டு துயருகின்றான். விபீடணன் நிகழ்ந்தவற்றைக் கூற, துயர்துடைக்கக் கருடன் வருகிறான. கருடன் நிழல்பட்ட உடன் பாசம் நீங்குகிறது. வீரர்கள் போர் ஒலி எழுப்புகின்றனர். தொடர்ந்து, படைத்தலைவர்கள் பலர் இறந்து படுகின்றனர். கரன் மகன் மகரக்கண்ணன் போருக்குவரவே, இராமனால் அவன் அழிகிறான். மீண்டும் இந்திரசித்து போருக்கு வரவே, இலக்குவனுடன் பெரும் போர்நடக்கிறது. அரக்கர்க்கும் வானவர்க்கும் கடும்போர் நிகழ்கிறது. கரி, பரி, தேர் பல வீழ்கின்றன. போர்க்கருவிகள் பல அழிகின்றன. கும்பகருணன் களத்தில் அன்று இட்டிருந்த தண்டைக் கொண்டு அனுமன் பொருதுகிறான். படை வீரர்கள் விசும்பிடை ஏறிட, கதையால் அடித்து நெரிக்கிறான் அவன். அனுமனுக்கும், அகம்பனுக்கும் போர் நடக்கிறது. போரில் அனுமன் முதலியோர் ஒருவரை ஒருவர் காணாது திகைக்கின்றார். இலக்குவன் அனுமனிடம் நிலைமை பற்றிக் கேட்க, மாயப்போர் செய்யும் இந்திரசித்தின் மேல் சிவன் படையை விடுக்கக் கூறுகிறான். இந்திரசித்தன் பிராமத்திரம் விட, யாவரும் மூர்ச்சித்து விழுகின்றனர். இது கண்ட இராமன் மூர்ச்சித்து விழுகிறான். சீதை களம் கண்டு அரற்றுகிறாள். திரிசடை உண்மையுரைக்கின்றாள்.

(9) போர்க்களத்தில், உணவுப் பொருளுக்குச் சென்றிருந்த விபீடணன் அனுமனைக் காண்கிறான். உணர்வு பெற்ற அனுமன் சாம்பவனைக்காண்கிறான். சாம்பவன் மருந்துமலை, கொணர வழி கூறி அனுமனை ஏவுகிறான். சாம்பவன் சொன்ன வழியே அனுமன் பேருருக் கொண்டு விரைக்கின்றான். இமயம், ஏமகூடம், நிடதம் கடந்து,

மேருமலையில் தங்கி, இறையை வணங்குகிறான். நீலமலைக்கு அப்பாலுள்ள மருந்துமலையைத் திருமால் அருளால் வேரொடும் பறித்து விரைந்து செல்லுகிறான்.

(10) விபீடணனும் சாம்பவனும் அனுமன் வரவை எதிர்பார்த்து இருக்கின்றனர். இராமன் வருந்துகிறான். மருந்துமலை வஞ்சகஅரக்கர் ஊர்வர அஞ்சுகிறது. அனுமன் மட்டும் தரைக்கு வருகின்றான். அம்மருந்துகளின் காற்றுப்பட்டவுடன் இறந்தவர்கள் எல்லாம், அயன்படையால், உயிர்பெற்று எழுகின்றனர். இராமன் அனுமனைப் "பழியும் காத்து, அரும்பகையும் காத்து, எமைவழியும் காத்தனை: நம் மறையும் காத்தனை" (VI :12:111) எனப்புகழ்கின்றான். மருந்துமலையுடன் அனுமன் மீண்டும் போகிறான்.

(11) இலங்கையில் பகை ஒழிந்தது என்று உவந்த இராவணன் களியாட்டம் காண்கிறான். மாயாசீதை அமைக்கிறான் இந்திரசித்து, இலங்கையை வானரர் எரியூட்டுகின்றனர். மீண்ட அனுமனின் ஆர்ப்பொலியால் இலங்கை நடுங்கின்றது. அனுமன் முன்னிலையில் இந்திரசித்து "மாயாசீதையைக் கொல்வேன்" என்கிறான். அனுமன் இந்திரசித்துக்கு நீதிகூறுகின்றான். "புன்மை தொடங்கல்: புகழ்க்கு அழிவு" (VI : 25:35) என்று சொன்ன அனுமனுக்கு "அயோத்தி அண்மி, காமின்; அது இன்று கனல் கரி ஆகவேம்; அது செய்து, இனி மீள்குவேன்" (VI:25:37) எனக்கூறி, மாயாசீதையை வெட்டி, படையுடன் வடக்கு நோக்கி எழுகின்றான். இந்திரசித்து நிகும்பலைபுக, அனுமனோ சீதையின் நிலைகண்டு அரற்றுகின்றான். விபீடணன், மாயை அறிந்து, சீதாபிராட்டி உயிருடன் இருப்பதைக்கூறுகிறான். நிகும்பலை வேள்விக்கு இந்திரசித்து செல்கிறான். அயோத்தி செல்லவில்லை என்பதை அறிகிறான் விபீடணன், " இந்திரசித்து செய்யும் நிகும்பலை யாகத்தை அழிக்கவேண்டும்" என்றான். இலக்குவனை அவனுடன் அனுப்புமாறு வேண்டுகிறான்; யாகம் அழிகிறது. "நிகும்பலையில், கடும்போர் நடக்கிறது. இலக்குவன் அரக்கர் பலரை அழிக்கிறான். அனுமன் இந்திரசித்தை அணுகி, அவனுடைய அயோத்தி செல்லும் வஞ்சினவுரைகளை நினைவுப்படுத்திப், புகழ்வது போலப் பழித்துரைக்கிறான். இந்திரசித்து இகழ்ந்துரைத்து அனுமனோடு பொருதுகிறான். பின், இலக்குவன் அனுமன் தோள்மீது அமர்ந்து இந்திரசித்தனோடு போர் புரிகின்றான். இலக்குவன் பிறைமுக அம்பெய்து, இந்திரசித்தின் தலையை அறுத்தெறிகிறான்.

(12) சோகமடைந்த இராவணன் மூலபலப்படையை அனுப்புகிறான். நால்வகைப்படைகளும் இராமன்படையால் அழிகின்றன. விபீடணனைக் கொல்லக் கருதி விடுத்த அம்பை இலக்குவன் ஏற்கிறான். அனுமன், மருந்துகொண்டுவந்து இலக்குவனைக் காப்பாற்றுகிறான் இலக்குவன் அனுமனைத் தழுவுகிறான். இவ்வீரச் செயலை அனுமனிடம் "கொழுந்தியும் மீண்டாள்; பட்டான் அரக்கன்" (vi31:34) என்கிறான். இராமனும் அனுமனைத்தழுவி "பெற்றனென் உன்னை; என்னைபெறதன்!" என்றும், "அற்ற இடையூறு செல்லா ஆயுளை ஆக" (Vi:31:36) என்றும்

வாழ்த்துகிறான். வானரர் மூலப்படையின் அழிவைக் காண்கின்றனர். இராவணன் கோபுரத்தில் ஏறிக்களம் காண்கிறான். அவன் வெகுண்டு, எஞ்சிய படையைத் திரட்டிப் போர்க்கோலம் பூணுகிறான். மகோதரன் இராமனுடன் பொருதுமடிகிறான்.

(13) இராம இராவணப்போர் தொடங்குகிறது. கடும்போர் நடக்கிறது. அரக்கரும் படையும் அழிய, அயன்படையால் இராவணன் உயிர் இழக்கிறான். விபீடணன் வருந்துகிறான். மண்டோதரி புலம்புகின்றாள். இராமன் ஆணைப்படி, இலக்குவன் விபீடணனுக்கு முடி சூட்டுகிறன்றான். அனுமன் சீதையிடம் நடந்த செய்தியைக் கூறுகிறான். சீதையிடம் நல்ல செய்தி கூறியமைக்காக, "தாயாகக்கொள்ளும்படியான பெருமையைப் பெறுகிறான்" அனுமன். சீதை, அனுமன் செய்த உதவியைப் பாராட்டுகிறாள். சீதை இராமனைத் தொழுது ஏக்கம் நீங்குகிறாள்; கற்பின் திண்மையால் தீயிடைப்புகுந்து, இராமன் கட்டளையை நிறைவேற்றுகிறாள். புட்பகவிமானத்தில் யாவரும் அயோத்தி செல்லுகின்றனர். பரத்துவாசர் ஆசிரமத்தில் இராமன் இறங்குகிறான். உடனே அனுமனைப் பரதன்பால் அனுப்புகிறான், இராமன். நந்தியம்கரையில் இருந்த பரதன், குறித்த காலத்தில் இராமன் வராமையால் எரி அமைக்கப் பணிக்கிறான். கோசலை தடுக்கிறாள். அனுமன் பரதன் முன் தோன்றி, "அய்யன் வந்தனன்; ஆரியன் வந்தனன்" (Vi:37:238) எனக்கூறி கையினால் எரியைக் கரியாக்குகிறான். இராமனது மோதிரத்தை அடையாளம் காட்டி நிற்கிறான், அனுமன். பரதன் அவனைப் பாராட்டுகிறான். அனுமன் தன் வரலாற்றைக் கூறுகிறான். சித்திரகூடத்தின் பின் நடந்த செய்திகளை அனுமன் பரதனுக்குக் கூறுகிறான். பரதன், அன்புமிக, அனுமனது கையைப்பற்றிக்கொண்டு கங்கை சார்கிறான். புட்பக விமானத்தில் வந்த இராமனைப் பரதனும் மற்றோரும் கண்டு தொழுகின்றனர். இராமன் தம்பியரோடு அரசகோலம் மேற்கொள்ளுகிறான். அரியணையை அனுமன் தாங்க, முடி புனைகின்றான் இராமன். பின்னர், இராமன் அனுமனுக்கு விலையுயர்ந்த மணியாரங்களையும் ஆடைகளையும் அளிக்கிறான். அத்துடன் சீதையை நோக்கி, இயன்றன கொடுக்கக் கூறுகிறான். சீதை, கலைமகள் அவளுக்குக் கொடுத்திருந்த முத்தாரத்தை இன்முகத்துடன் அளிக்கிறாள். இராமன் கட்டளைப்படி அனுமன் தன் வாழிடப்பகுதியான கிட்கிந்தைக்குச் சென்றாலும், அடிக்கடி அயோத்திக்கு வந்து இராம சேவையில் ஈடுபடுகிறான்.

மனித வாழ்க்கைக்கு வேண்டிய அனைத்துப் பண்புகளின் உறைவிடமாக அனுமன் விளங்குகின்றான். அடக்கம், அருள், அறிவு, நீதி, வாய்மை, தூய்மை, தொண்டு, கடமையுணர்வு, தொண்டு பக்தி இவற்றையெல்லாம் மேற்கொண்ட அனுமன் இராமாயணப் பாத்திரங்களில் ஓர் உயிர்நிலைப்பாத்திரமாக - ஒப்பில்லாத பாத்திரமாக அமைகின்றான்.

### *விபீடணன்*

இராவணன், உடன் பிறந்தோர் கும்பகர்ணன், விபீடணன்,

சூர்ப்பனகை ஆகியோராவர், விபீடணனோ அன்பைக்காட்டிலும் அறத்தின் மேல் பக்தியுள்ளவன், சூர்ப்பனகை, இராமன் -இராவணன் போருக்குக் காரணமானவள். ஆக மூவரும் முரண்நிலைப் பாத்திரங்கள். இராமனின் துணைவி சீதையைத் தேடவந்த அனுமனை இராவணன் கொல்ல நினைக்கும் பொழுது விபீடணன் தடுக்கிறான்; தம்பியின் கருத்தை ஏற்று அனுமனைக் கொல்லாது விடுகிறான். இலங்கை மந்திராலோசனையில் நாம் விபீடணனைக் காண்கிறோம். போர் நிகழ்ச்சிகளில் விபீடணனின் செயலையும் போர்த்திறனையும் காண்போம்.

(1) இராமனின் எழுபது வெள்ள வானரப்படை தென்கடற்கரையில் தங்குகிறது. அனுமனால் எரியுண்ட பின், தெய்வத்தச்சனால் இலங்கைப் புதுப்பிக்கப்படுகிறது. இராவணன், ஒரு குரங்கால் இலங்கை அழிந்த இழிவு குறித்து வருந்தி உரையாடுகின்றான். மாலியவான், மகோதரன், கும்பகர்ணன், இந்திரசித்து போன்றோர், படையோடு போர்க்கு எழ உடன்படுகின்றனர். விபீடணன், சீதையின் கற்பும், இராமன் பேராற்றலும், நந்தி முதலியோரிட்ட சாப வரலாறும் கூறிச் சீதையை இராமன்பால் விடுதலே" செய்யத்தக்கது" எனக் கூறுகின்றான். இராவணன் சினந்து நகைத்து, விபீடணனைக்கடிந்து பேசுகிறான். இருமுறை பேசியும் பயனுறாமல், விபீடணன் இரணியன் வரலாற்றைக்கூறி, "தீதாய் விளைதல் நனி திண்ணம்" (Vi:4:100) எனக்கூறுகிறான். இராவணன் சினந்து, விபீடணனை நாட்டைவிட்டுத் துரத்துகிறான் "அழிவு எய்துவான் அறிவு நீக்கினான்" (Vi:4:102) எனக்கூறி விபீடணன் வானில் எழுந்து மேலும் நீதிகள் பல மொழிந்து இலங்கைவிட்டுத் தம் அமைச்சர்களுடன் இராமன் தங்குமிடம் அடைகின்றான்.

(2) இராமனை அணுகுமாறு அமைச்சர்கள் அறவுரை கூறுகின்றனர். விபீடணன், அமைச்சர்களான அனலன், அணிலன், அரசன், சம்மாதி கூற்றை ஏற்று, இராமன்பால் அடைக்கலம்புக முடிவு செய்கின்றான். பொழுதுபுலரத் தன் அமைச்சர் துணைவருடன் வானரச்சேனையை அடைகின்றான். அவ்வரக்கர் உருவங்களைக்கண்ட வானரர், இராவணனே துணைவருடன் பொருதற் பொருட்டு வந்திருக்க வேண்டுமென்று கருதி அவர்களைப்பற்றிச் சிறைவைக்க ஆரவாரம் செய்கின்றனர். விபீடணனை அணுகி "யார்?" என வினவ, அனலன், தான் அமைச்சன் என்ற செய்தியையும் தன் வரலாற்றையும் கூறி, விபீடணனைக் காட்டி 'இவர் இராவணன் தம்பியாகிய விபீடணன்; அண்ணனுக்குச் சீதையை விடுமாறு அறிவுரை கூறி வற்புறுத்தியும் ஏற்றுக்கொள்ளாமல் சினந்து அச்சுறுத்தி விலக்கினமையால், இராமனை அடைந்து உய்ய வந்துள்ளான். என விளக்கிக்கூறுகின்றான். மயிந்தன் என்னும் வானரன் இராமனிடம் சென்று செய்தியைத் தெரிவிக்கிறான். இராமன், விபீடணன் அடைக்கலம் குறித்து சுக்கிரீவன், அனுமன் முதலியோரை உசாவுகின்றான். அனுமனைத் தவிர மற்றையோர் விபீடணனை ஏற்றுக்கொள்ள மறுக்கின்றனர். வஞ்சனையற்றவன், பல

நூல்களைக் கற்றறிந்தவன். இவன் மகள் திரிசடை நற்குணம் வாய்ந்தவள். அவளே அரக்கியரிகளிடமிருந்து சீதையைக் காத்து வருகிறாள் போன்ற அவன் இயல்புகளைக் கூறுகிறான். "மேலும் வில்லின் வன்மையையும், வாலிபுரத்து வளநாட்டை அவன் தம்பிக்கு வழங்கிய வண்மையையும் அறிந்த இவ்வரக்கன், நின்னைச் சேர்ந்து மேலரசு எய்தும் விருப்பால் வந்துள்ளான்" என நுணுகி ஆய்ந்து இராமனிடம் கூறுகிறான்.

(3) இவ்வுரை கேட்ட இராமன், அடைக்கலச் சிறப்பைக் கூறி "மாருதி வடித்துச் சொன்ன பெற்றியே பெற்றி" (VI4:105) எனக்கூறி, விபீடணனை அடைக்கலமாக ஏற்கிறான். சுக்கிரீவன் விபீடணனை அழைத்து வருகிறான்.

விபீடணன் அளவிலா மகிழ்ச்சி கொண்டு சுக்கிரீவனோடு சென்று சிரமேற்குவித்த கரத்தனாய், கல்லையும் உருக்கும் கனிந்தநோக்கத்தானாய் வந்து இராமன் திருவடிகளில் வீழ்கின்றான். வணங்கிய விபீடணனை, இராமன் அருளோடு நோக்கி, இருக்கையில் இருக்குமாறு பணிக்கிறான். இருந்த விபீடணனிடம், "இந்த உலகமும் என் பெயரும் நிற்கும் வரையில் இலங்கைச் செல்வம். நின்னதே தந்தேன்" (VI:4:139) எனக் கூறுகின்றான். உலகு மகிழ்கிறது. இலக்குவனை விளித்து, "தஞ்ச நல்துணைவன் ஆனத் தவறிலாப் புகழான் தன்னை துஞ்சல் - இல் நயனத்து ஐய சூட்டுதிமகுடம்" *(VI:4:141) என்றான். விபீடணன், பரதனுக்குக் கவித்த மகுடத்தை எனக்கும் கவிக்க வேண்டும் என வேண்டுகிறான். ஒரு தம்பியாக இவனையும் ஏற்றுக் கொண்ட இராமனிடம், "என்னைத் தம்பியாக ஏற்றுக் கொண்டமையால் நினக்கு அடிமைத்தோழில் செய்வதில் சிறப்புரிமை பெற்று விட்டேன்" என்று கூறிக்கொண்டே, இராமன் திருவடி நிலைகளைச் சூடிக்கொள்ளுகிறான். இலங்கை வேந்தனாய் மகுடம் சூட்டிக்கொண்ட விபீடணனைப் பாடிவீட்டை வலம் வருமாறு செய்க, என இலக்குவனையும் சுக்கிரீவனையும் இராமன் ஏவுகிறான். "இந்திரற்கு உரிய செல்வம் எய்தினான் இவன்" (VI:4:149) என்பதைப்பலரும் கேட்குமாறு கூறிப்பாராட்டிக் கொண்டு, பாடிவீட்டை வலம் செய்விக்கிறான். பெரியோர்கள் விபீடணன் பெற்ற பேறைப் பாராட்டுகின்றனர்.

(4) இராமன் விபீடணனுக்குத் தனியே தக்கதோர் இருப்பிடம் தருகின்றான். சுக்கிரீவன் ஏவலால் வீடணன் இராமன் அருகில் இருக்கிறான். இலங்கை அரண்மனை, அரக்கர்களின் வலிமை, இராவணன் சேனை அளவை, அச்சேனைகளின் இயல்பு, பற்றிக் கேட்கிறான். விபீடணன், கூறலுற்றான்; "வாயுதேவன் மோதிய மேருமலையில் சிகரம் ஒன்று தென்கடலில் வீழ்ந்தது. அதுவே இலங்கையாயிற்று. அந்த இலங்கை நகரம் ஏழுநூறு யோசனை அகலம் உடையது; அதைச் சுற்றிலுமுள்ள கோட்டை மதில் நூறுயோசனை ஆழ்ந்து, சூரிய மண்டலத்தையும் எட்டத்தக்க உயரத்தினையுடையது. கோட்டையில் வடக்குவாயிலில் பதினாறு கோடி அரக்கர்களும் மேற்குவாயிலில் பதினெட்டு கோடியும், தெற்குவாயிலில் பதினாறுகோடியும்

கிழக்கு வாயிலில் பதினாறு கோடி அரக்கர்களும் காவல்புரிகின்றனர். இவர்கள் அன்றி, ஆகாயத்தில் முப்பத்திரண்டுகோடி அரக்கர்கள் காவலாக இருக்கிறார்கள். பூமிக்குள் பதுங்கியுள்ளவர்களுக்குக் கணக்கே இல்லை. இதுபோன்ற மூன்று கோட்டைகள் இலங்கைக்கு உள்ளன. அவற்றைக்காத்து வருவோர் தொண்ணூறு கோடிப்பேர்களாவர். இராவணன் படை.யில் உள்ளோர் ஆயிரத்தி நூறுகோடியாம். மூலபலப்படைகளின் தொகை ஆயிரம் வெள்ளமாகும். இவற்றுடன் தேர்கள் பதினாயிரம், யானைகள் இருபதினாயிரம், குதிரைகள் நாற்பதினாயிரம், ஒட்டகங்கள் எண்பதினாயிரம் அவனிடம் இருக்கின்றன. இராவணன் தவத்தில் மிக்கவன்; சிவனிடத்தில் வாளாயுதம் பெற்றிருக்கிறான்; எண்திசை யானைகளின் கொம்புகளைத் தன் இருகைகளால் பற்றிப் பிடுங்கியிருக்கிறான். தேவர்களைப் புறங்கண்டவனுமான கும்பகர்ணன் இவன் தம்பி. இந்திரனை வென்று சூரியனையும் சந்திரனையும் சிறைவைத்த இந்திரசித்து இவன் மகன். இவன் தம்பி அதிகாயன்; அவன் இந்திரசித்தையும் வெல்லக்கூடியவன். இந்த இருவருமன்றி தேவாந்தகன், நராந்தகன், திரிசூரர். என்னும் மூன்று புதல்வர்களும் உளர். இராவணன் வன்மை அளவிடுதற்கரியது. பிரம்மதேவர் குமாரரான புத்திய முனிவரின் பெயரன் அவன் காலகேயர்களைக் கொன்றவன்; தேவர்களை அடங்கும்படிச் செய்தவன்; குபேரன் அவன் எதிர் நில்லான்; யமனும் அஞ்சுவன். சூரியனும் அவனுக்குப்பயந்து இலங்கைக்கு நேராக வரான். வருணனை வென்று, அவனது பாசத்தைப் பிடுங்கிக் கொண்டான்" இவ்வாறு விபீடணன் கூறுகின்றான். தங்கள் சிறப்புகளை உணர்ந்து, 'இராவணன் அழிந்து போகத்தவனே' என உளம் கொண்டு தங்களை நாடிவந்தேன்" என்கிறான்.

(5) இத்தகைய ஆற்றல் மிக்க இராவணன் படைவலியும் துணைவலியும் இலங்கை வந்த அனுமன் ஆற்றலுக்குத் தோற்று அழிந்தமையும் பொன்மயமான இலங்கை மாநகர் அனுமனால் எரியுண்டமையும் கூறி, விபீடணன் அனுமனைப் புகழ்கின்றான் இராமன், அனுமனுடைய வீரச்செயல்களைக் கேட்டு மகிழ்ந்து பாராட்டிப் 'பிரம்மபதத்தினையே' அத்தொண்டிற்குப் பரிசாகத் தருகின்றான். சுக்கிரீவன், சாம்பவான் முதலியோர் புகழ்ந்து பாராட்டுகின்றானர்.

(6) வீடணன், கடல்கடக்க உபாயம் கூறுகிறான். "கடல் நும்குலத்தொடு தொடர்புடையது ஆதலின், நீ கேட்ட வரத்தைக் கொடுக்கும்; அதனை இரந்து வழியை வேண்டுக" என்று இராமனிடம் வேண்டுகிறான். அதன் பயனாக வருணனை வழிபட. சேதுபந்தனம் நடக்கிறது. இராவணனால் அனுப்பப்பட்ட ஒற்றர், குரங்கு உருவோடு சுவேல மலையில் இராமன் பாடி வீட்டினை அடைந்து இராமன் முதலியோர் ஆற்றலும் வானரப்படையின் அளவும் ஆற்றலும் கூற, இராவணன் கேட்கிறான்.

(7) இராமன், இலக்குவன் முதலியோருடன் மலைமேல் ஏறிநின்று, இலங்கையைக் காண்கிறான். இராவணன் வடக்குக் கோபுரத்தின் மீதேறி

வானரப்படையினைக் காண்கிறான். சுவேலமலையில் நின்ற இராமபிரான், வானரசேனைகளைக் காணும் இராவணனையும் அவனுடைய படைத்தலைவர் முதலியோரையும் இன்னின்னார். என்று தெரிவிக்கும்படி விபீடணனை வேண்டுகிறான். விபீடணன், அவ்வாறே இராவணனைச் சுட்டிக்காட்டி, "தேவமாதர்கள் சிலர் நடுவே நிற்பவன் 'புன்தொழில் இராவணன்' (VI:11:2)" என்றான். உடனே, சினமடைந்த சுக்கிரீவன் இராவணனைத்தாக்கி, மகுடமணியைப் பறித்துத் திரும்புகின்றான். விபீடணன் சுக்கிரீவன் வீரத்தினைப் பாராட்டுகிறான். இராமன் படைகளை அணிவகுந்து, இலங்கையின் நாற்றிசை வாயில்களிலும் நிறுத்துகிறான் அங்கதனை இராவணன்பால் தூதுவிடுத்தல் பற்றி விபீடணனிடம் உரைக்கிறான். விபீடணன் "அழகிற்றே; கொற்றவர்க்கு உற்றது" (VI:13:3) என்கிறான். இலக்குவன் மறுக்க, இராமன், "தூது விடுப்பது நீதிநூல் முறை" என்கிறான்.

(8) அங்கதன் தூதுக்குப் பின்னர் இராமனும் இராவணனும், வானரப் படையும் அரக்கர்படையும், முதல் நாளில் எதிர்த்துப்போர் செய்கின்றன. இராவணன் தோற்றுப்போகிறான். தொடர்ந்து, கும்பகர்ணன் போருக்கு வருகிறான். "போர்க்களத்தில் தோன்றிய அரக்கனான இவன் யார்?" என இராமன் விபீடணனிடம் வினவுகிறான். விபீடணன் கும்பகர்ணனது தன்மையை எடுத்துரைக்கின்றான். "மாள்வது மெய்", என்று துணிந்தே போர்க்களம் வந்துள்ளான் எனக் கூறுகிறான். கும்பகர்ணனது வீரத்தைக் கேட்ட சுக்கிரீவன், இவனை நம்முடன் சேர்த்துக் கொள்ளுதல் நலம் என்கிறான். கும்பர்ணன் விபீடணனிடம் இராமனை அடைவதால் உண்டாகும் நன்மைகளை எல்லாம் எடுத்துக்கூறி, இராமனைச் சேர்ந்து உய்யுமாறு வேண்டினன். அதனைக் கேட்ட கும்பகர்ணன், "தன்னை நெடிதுநாள் வளர்த்த அண்ணனுக்காகப் போர் செய்து உயிர்விடுதலே தனக்குத்தக்கது" என்கிறான். கம்பர், "பின்னைப் போர்க்கோலம் செய்து விட்டாற்கு உயிர்கொடாது, அங்குப்போகேன்" (VI:15:155) என்றுரைப்பார். விபீடணன் கும்பகர்ணன் கருத்தைக் கூறினான். "விதியை யார் தீர்க்ககிற்பார்?" (VI:15:171) என்றான் இராமன், போரில் கும்பகர்ணனை இராமன் வதைக்கிறான். மாயாசனக நிகழ்ச்சியின் பின், அதிகாயன் போருக்கு வருகிறான். விபீடணன் அதிகாயனது திறத்தை எடுத்துக்கூறுகிறான். அவனது வரலாற்றைக் கூறக்கேட்ட பின்னர் இராம - இலக்குவனது வலிமையை விபீடணன் அதிகாயனுக்குத் தெரிவிக்கிறான். போர்க் களத்தில் அதிகாயனும் இலக்குவனும் போர் புரிகின்றனர். விபீடணன் போரை நின்று பார்க்கின்றான். இலக்குவன் நான்முகன் படையால் அதிகாயன் தலையை அறுக்கிறான். விபீடணன், போர் நிலைக்கண்டு "இந்திரசித்தும் இறப்பது உறுதியே" என்று எண்ணுகிறான். இலங்கையிலுள்ளார் யாவரும் வருந்துகின்றனர்.

(9) இந்திரசித்து வெகுண்டு தந்தையாணைப்படி போருக்கு வருகிறான். "வருபவன் யார்?" என இலக்குவன் வினவ, விபீடணன் "பல்லாயிரம் தேவர்களை எதிர்த்து, இந்திரனையும் ஒல்லையில்

உடைத்தனன்" V:18:31) என்கிறான். பெரும்போரில், இந்திரசித்தின் நாகக்கணையால் இலக்குவனும் மற்றையோரும் கட்டுண்டனர். விபீடணன் பலவெண்ணி மனம்நைகிறான். இலக்குவனது நிலைகண்ட இராமன் வருந்தவே, விபீடணன் பலசொல்லி, இராமனைத் தேற்றுகின்றான். கருடன் வரவே, நாகபாசம் நீக்கி அழிகின்றது.

(10) தொடர்ந்து, படைத்தலவர் போருக்கு வருகின்றனர். புகைக் கண்ணன், மாபக்கன், வேள்விப்பகைஞன் முதலியோரை விபீடணன் தெரிந்து கூறுகிறான். படைத்தலைவர்கள் குரங்குப்படையால் அழிகின்றனர். கரன் மகன் மகரக்கண்ணன் தொடர்ந்து வஞ்சினம் கூறிப் போருக்கு வருகிறான். இராமன், மாயப்போர் புரிந்த மகரக்கண்ணன் தலையைக் கொய்கிறான். அரக்கர்பலர் மாண்டொழிகின்றனர். வருந்தும் தந்தையைத் தேற்றி, இந்திரசித்தன் போர்க்களம் வருகின்றான். பெரும்படை உடன் வருகிறது. இலக்குவன் தலைமையில் போர் நடக்கிறது. முடிவில், இந்திரசித்தன் பிம்மாத்திரத்திரத்தை இலக்குவன் மேல் விடுகிறான். போர்க்களத்தில் இராமனும் விபீடணனும் தவிர யாவரும் மூர்ச்சித்து வீழ்கின்றனர். பூசனை இயற்றித் திரும்பி வந்த இராமன், தம்பியின் நிலைக்கண்டு மூர்ச்சித்து விழுகிறான். போர்க்களம் கண்ட சீதை இவர்கள் நிலை கண்டு வருந்துகிறாள். திரிசடை உண்மையை உணர்த்துகிறாள். விபீடணன், துயர்தீர்க்கும் வழியை ஆராய்கிறான். உணர்வுபெற்ற அனுமனைச் சாம்பவன் அறிவுரைப்படி மருத்துமலை கொணரச்செய்கிறான். மருத்துமலைவரவே. யாவரும் உணர்வு பெறுகின்றனர்.

(11) இராவணன், பகை ஒழிந்தது என்று உவந்து மகனின் களியாட்டம் காண்கிறான். மாயாசீதை நிகழ்ச்சியின் பின், நிகும்பலை வேள்வி பற்றி விபீடணன் ஐயம் கொள்கிறான். இந்திரசித்தின் சூழ்ச்சியை உணர்கிறான். அவன் யாகம் சிதைகிறது. போர் நடக்கிறது. இலக்குவன் பிறைமுக அம்பு எய்து இந்திரசித்தின், தலையை அறுக்கிறான். இராமன், விபீடணனைப் புகழ்ந்து "ஈது வீடணன் தந்த வெற்றி" (VI:27:70) என்று கூறுகிறான். செய்தி அறிந்து இராவணன் சோகமுறுகிறான்.

(12) பின், மூலபலப்படை பற்றி விவரங்களை விபீடணன் இராமனிடம் கூறுகிறான். அக்கொடும்படையை எதிரிட வானரப்படையை அங்கதன் கொண்டு வருகின்றான். இராம பாணத்தால் அரக்கர் படை அழிகின்றது. இராவணன் போர்க்களம் செல்கின்றான். இருபடையும் கைகலக்கின்றன. விபீடணனால் படைவலி அழிய, இராவணன் அவன்மேல் வேல் எறிகிறான் "சயம்தனைப் பொரும் தம்பியை உயர் கொளா" விடுத்த வேலை, இலக்குவன் தன் மார்பில் ஏற்கின்றான். விபீடணன் இராவணன் தேர்க்குதிரையையும் சாரதியையும் அழிக்கிறான். "வீடணப்பசுவைக்கொன்று இனிப்பயன இல்லை" (VI:31:36) என்று இராவணன் இலங்கை அடைகிறான். வீடணன் இலக்குவன் நிலைகண்டு அரற்றுகிறான். அனுமன். மருந்து கொண்டுவந்து, இலக்குவனை உயிர்ப்பிக்கிறான்.

(13) வானரர் மூலப்பலப்படையின் அழிவுகாண்கிறனர். இராவணன் போர்க்களம் காணத்தயாராகின்றான். போர்கோலம் பூண்டு, எஞ்சிய படையுடன் களத்தில் குதிக்கிறான். தேர் ஏறி இராமனும் போர்க்களம் வருகின்றான். மகோதரனை இராமன் கொல்கிறான். இராமனுக்கும் இராவணனுக்கும் போர் நடக்கிறது. அயன் படையால் இராவணன் உயிர் இழக்கிறான். விபீடணன் வருந்தி அரற்றி இராவணன் மேனிமேல் வீழ்கிறான். "குலமகள் மேல் உடையகாதல் தீர் ஆசைபழி என்றேன்; எனை முனிந்த முனிவு ஆறித்தேறினாயோ?' (VI:36:281) "தெய்வ கற்பின் பேர்களைக் தழுவுவான் உயிர்கொடுத்துப் பழிகொண்ட பித்தா! பின்னைப் பார்மகளைத் தழுவினையோ?" (VI:33:224) எனப்பலபடக் கூறிப்புலம்புகிறான். சாம்பவன் விபீடணனைத் தேற்றுகிறான். விபீடணன் உரிய கடன்களை இயற்றி இராமனை அடைகின்றான்.

(14) இராமன் ஆணைப்படி, இலக்குவன் விபீடணனுக்கு முடிசூட்டுகிறான். வணங்கிய விபீடணனை இராமன் தழுவி, "மற்று உன்னுடைய தமரோடு மன்னி வாழ்க" என்று உரைக்கிறான். அனுமன் சீதையிடம் செய்தி கூறுகிறான். இராமன் ஆணைப்படி விபீடணன், "சீதையைக் கோலம்புனைந்துவர" ஏற்பாடு செய்கிறான். சீதையை இராமனிடம் அழைத்து வருகிறான். கற்பின் திண்மையைச் சீதை தீப்புகுந்து காட்டிய பின், விமானத்தில் இராமன் பரிவாரங்களுடன் விபீடணனும் செல்கின்றான். அயோத்தியில் இராமபிரான் முடிசூட்டுவிழாவில் பங்கு பெற்றபின், விடைபெறும் விபீடணனை, இராமன் "சராசரம் சுமந்த சால்பின் நின்னையே ஒப்பார் நின்னை அலதுஇலர்" (VI:39:39) எனப் புகழ்ந்து மணிக்கடகம், வன்திறல்களிறு, பொன்னணி - முதலியவற்றை ஈந்து வழியனுப்புகிறான்.

மேற்கூறியவற்றால், விபீடணன் அறிவுநூல்கள் உணர்ந்து அறநெறிவழுவாது, அடக்கமுடையவனாய்த் திகழ்ந்து, இராமன்பால் அடைக்கலமாகி, அறம் உணர்ந்து செயல்பட்டு, அரக்கர் பலரை அறிமுகப்படுத்தி, அறிவிழந்த தம் இனத்தவரை அழிக்க துணைநின்று, தம் தமையனுக்காக இரங்கிச் செய்கடன் செய்து இலங்கையில் அறவாழ்க்கையைத் துவக்குகின்றான் என்பன போதரும்.

## *எதிர்நிலைப் பாத்திரங்கள்*

### 5. *இராவணன்*

கம்பர் படைத்துக்காட்டும் பாத்திரங்களும் 'இராவணன்' - என்னும் பாத்திரம் தனி இயல்பும், சிறப்பும் வாய்ந்தது. காப்பியத்தலைவன் இராமனைப்போல, எதிர்நிலைப்பாத்திரமான இராவணனும் இன்றியமையாதவனே. இராவணன் தவமும், தெய்வபத்தியும், ஆண்மையும், ஆட்சித்திறனும், பேராற்றலுமுடையவன். அவனுடைய அருந்தவத்தின் பயனை அயன் உணர்ந்து, அவன் விரும்பிய வண்ணம் உயரிய வரங்களை இறைவன் உவந்தளித்தான். அவனுடைய தம்பி கும்பகர்ணன் தவவலிமையில் மிக்கவன்; அயன்பால் பலவரங்கள் பெற்றவன். இன்னொரு

இளவல் விபீடணன்; பேரறிஞன்; அறிநெறியைத்தன் உயிரினும் ஓம்புபவன் சிவனும் திருமாலும் அயனும் இராவணனை வருத்தச் செய்யும் வலிமையுடையவரல்லர் எனின், இவ்வுலகில் வேறு யார் வெல்ல வல்லவர்? இவன் மகன் இந்திரசித்து; சூரியனையும் சந்திரனையும் சிறைவைத்தவன் இப்பெருமகன். அடுத்தவன் அதிகாயன்; வன்றிறல் வலியோன். இந்த இருவருமின்றி தேவாந்தகன். நராந்தகன், திரிசூரன், என்னும் மூன்று மக்கள் உண்டு. அவர்கள் பெருவீரர்கள். அவன் தன் பேராற்றலால் மூவுலகும் அடக்கியாண்ட திறனுடையவன். அவனது நாடு, பல்லாற்றானும் செழித்தோங்கி விளங்கியது. இத்தகைய இராவணன், அயோத்தி அண்ணல் இராமனின் மனைவி சீதையை மாயத்தால் கவர்ந்து, அசோக வனத்தில் சிறைவைத்தான். இராமன் வானரவர்கள் புடைசூழ இலங்கையை முற்றுகை இடுகிறான். இவ்வளவில் நாம் யுத்த காண்டத்தில் இராவணனைக் காண்கிறோம். அவனது பண்பையும் போர் நெறியையும் பார்ப்போம்.

(1) இராவணன், தம் நகரத்தை அழித்த குரங்கினை நம்மால் அழிக்க முடியாமல் போய்விட்டதே, என்று தம் அமைச்சரையும் நெருங்கிய உறவினரையும் நோக்கி இரங்கி, வானரருடன் இராமர் குலத்தை அழிக்க மந்திராலோசனை நடத்துகிறான். "வஞ்சனையால் சீதையைக் கவர்ந்து வந்து அஞ்சுகின்ற தொழிலாகும்" என்று சேனைக் காவலன் மாலியவான் கூறுகின்றான். "அனுமனைக்கொன்று மனிதர்களாகிய இராம இலக்குவர்களை உயிருண்டு வருவேன்" என்று மகோதரன் சொல்கிறான். விச்சிரதத்தன், துன்முகன், பிசாகன் ஆகியோர் மகோதரன் கருத்தை ஏற்கின்றனர். கும்பகர்ணன், சீதையை நயந்து சிறைவைத்து மிகப்பெரிய பழிக்குரிய செயல் என்கிறான். எனினும், "சீதையை விட்டுவிட்டால் எளியவர்களாகி விடுவோம்" என்னும் உணர்வால் போர் தொடுத்து இறப்பதுவே நல்லது என முரண்பட்டும் உடன்பட்டும் கூறுகிறான். வீடணன் ஒருவனே உயர்நெறியினை எடுத்துக்கூறி "இலங்கை மாநகரம் வெந்து அழிந்தது உண்மையில் ஒரு குரங்கினால் அல்ல; உலகத்தாயாகிய கற்பினாலேயே என்று எடுத்துரைக்கிறான். சீதையை விடுத்து நாட்டைக் காக்க வேண்டுகின்றான். இந்திரசித்து, "இன்றே போரைத் தொடங்குக; நாளை விடியுமுன் இராமஇலக்குவர் சிரசுகளைக் கொணர்கிறேன்" என்று வீரவுரை கூறுகிறான். விபீடணன், மீண்டும் 'ஆணவத்தின் அழிவை' எடுத்துக் கூறுகிறான். சீற்றம் கொண்ட இராவணன், "எதிரில் நின்றால் நீ அழிவாய். உடனே இவ்விடத்தைவிட்டு நீங்குவாயாக" எனக் கடிந்துரைக்கிறான். விபீடணன் செயலற்று இராமன்பால் அடைக்கலம் புகுகிறான்.

(2) இலங்கையை முற்றுகையிட்ட வானரப்படையையும் இராம இலக்குவரையும் கோபுரத்தின் மீதிருந்து காண்கிறான் இராவணன். விபீடணன் இராவணனைக்காட்டி நிற்கின்றான். அப்போது சுக்கிரீவன் சீற்றமுற்று இராவணன் மேல் பாய்கிறான். இருவரும் போரிடுகின்றனர். இராவணனது மகுடமணிகளைப் பறித்துக் கொண்டு மீளுகிறான்

சுக்கிரீவன். அப்போது மாமன் மாலியவான், வானரன், வேல் வாள் இன்றிப்பொருது வெற்றிபெற்றத் திறனைக்கூறி, 'சீதையை விடுத்து அடைக்கலம்புக' வேண்டுகிறான். சீற்றமுற்ற இராவணன் அவ்வுரையை ஏற்க மறுக்கிறான்.

(3) இராமன் அங்கதனை இராவனிடம் தூதனுப்புகிறான். "துன்றிருங்குழலை (சீதை) விட்டுத் தொழுதுவாள் சுற்றத்தோடும்: போன்றுதியாகில், என்பின் வாயிலிற் புறப்படு" (VI:14:37) என்கின்றான் தூதன். சீற்றம் பொங்க அங்கதனைக் கொல்லுமாறு நான்கு அரக்கர்களை ஏவுகிறான். மீண்ட அங்கதன், "முற்ற ஓதி என்? மூர்க்கன், முடித்தலை அற்றபோது அன்றி, ஆசை அறான்" என்னும் பதிலைக் கூறுகிறான் (VI:4:43)

(4) இராமன் படைக்கும் இராவணன் படைக்கும் போர்தொடங்குகிறது. முதல் நாள் போரில் அரக்கர் தலைவர்கள் பலர் இறக்கின்றனர். வச்சிரமுட்டி, கும்பானு, சுபாரிசன், துன்முகன் ஆகிய திசைக்காவலர் இறந்து படுகின்றனர். செய்தி அறிந்த இராவணன் தும்பைப்பூசூடிப் போர்களத்துக்குப் புறப்படுகின்றான். சுக்கிரீவன், அனுமன், இலக்குவன் ஆகியோர் தனித்தனியாகப் பொருது மெலிகின்றனர். இராவணன், இலக்குவனது போர்த்திறனை வியந்து பாராட்டுகிறான். பிரம்பன் அளித்த வேலால் எறிய, இலக்குவன் சோர்ந்து வீழ்கின்றான். அவ்வமயம் இராவணன் அவனைத்தூக்க முயன்றும் முடியாமல் இளைக்கின்றான். அனுமன் விரைந்து பாய்ந்து அவனை எளிதில் தூக்கிச்சென்று இராமன்பால் சேர்க்கின்றான். அனுமன் தோளில் இராமன் ஏறிநின்று, இராவணனோடு கடும்போர் புரிகின்றான். அவனது தேர்சிதைகிறது; புரவியின் தலைகள் அறுபடுகின்றன. குடை துணிக்கப்படுகிறது; வில்முறிகின்றது; மணிமுடி தரையில் விழுந்து உருளுகின்றது. இராவணன் வலிமையற்று நாணிநிற்கின்றான். அப்போது இராமனால் ஓரம்பினால் கொல்லவியலும்; எனினும் அவன்பால் பேரிரக்கமுற்றுச் சில அறிவுரைகளைக் கூறி "இன்றுபோய் போருக்கு நாளை வா" (Vi:14:255) என்று அருளுரை கூறி அனுப்புகின்றான். இரங்கத்தக்க நிலையில் இராவணன் தன்னந்தனியாக அரண்மனை அடைகின்றான்.

(5) இராவணன் தனக்கு நேர்ந்த தோல்வியை எண்ணிப் பிறர் நகுவர் என்பதற்கு அவன் நாணமடையவில்லையாம். "சானகி நகுவாள் என்றே நாணத்தால் சாம்புகின்றான்" (vi : 15: 11) எனக்கம்பர் கூறுவார். அப்போது மாலியவான் உற்றது வினவுகிறான். இராமன் அம்பெய்யும் பேராற்றலை இராவணன் வியந்து கூறுகிறான். மாலியின் அறிவுரை இராவணனுக்குக் கசந்தது. இராவணனுடைய மனதைத் தளரவிடாது தாங்குபவனைப்போல மகோதரன் அங்கே வருகிறான். கும்பகர்ணனுடைய வல்லமையை நினைவூட்டுகிறான்.

(6) கும்பகர்ணனுக்கு அழைப்புப் போகிறது; உறக்கம் கலைந்து எழுந்த கும்பகர்ணன், கற்பின் செல்வியை விடுக்காததை எண்ணி அதிர்ச்சி

அடைகிறான். விதியின்வன்மையால் அவ்வாறு இராவணன் செய்தான் என்றே கருதுகிறான். “சானகி துயர் இனம் தவிர்ந்தது இலையோ” (vi :15:15) என வினவி மனம் ஊசலாட, இராவணன் உரையால் இறுதியில் மானம் ஒன்றையே கருதிப் போர்க்களம் செல்லுகின்றான். பொருகளத்தில் கும்பகர்ணன், அங்கதன், அனுமன், சுக்கிரீவன், இலக்குவன் ஆகியோர்களுடன் பொருது பேராற்றலை வெளிப்படுத்து கின்றான். முடிவில் இராமன் அவனை எதிர்த்துத் தன் அம்பால் இரண்டு கைகளையும் அறுக்கிறான். கையிழந்தும் வீரம் குறையாமல் போர் செய்கிறான். இறுதியில், அவனுடைய தலையை அறுத்துக்கடலில் செலுத்துகின்றான். செய்தி அறிந்த இராவணன், சோர்ந்து, பின் சீற்றமுற்று இராம இலக்குவரைக்கொன்று அவர்களுடைய இரத்தத்தைக் கொண்டு, தம்பி கும்பகர்ணனுக்கு மூன்றுமுறை நீர்க்கடன் ஆற்றுவதாக'(vi:16:91 ) வஞ்சினம் கூறுகிறான்.

(7) இராவணன் தன்னுடைய மகனாகிய அதிகாயனைப் போருக்கு அனுப்புகிறான். அதிகாயன் கடும்போர் புரிந்து இலக்குவன் அம்பினால் இறந்துபடுகிறான். இராவணனின் முதல் மகனாகிய இந்திரசித்து இதையறிந்து இலக்குவனைக் கொல்வதாக வஞ்சினம் கூறுகிறான்; போர்க்கோலம் பூண்டு, இராமனது படையை எதிர்த்துப்போரிடுகிறான். போரின் திறத்தால் வானரப்படை நிலைகுலைகிறது. இலக்குவனுக்கும் இந்திரசித்துக்கும் கடும்போர் நிகழ்கிறது. இந்திரசித்து விடுத்த நாகபாசம், பிரம்மாத்திரம் முதலிய அம்புகளால் இலக்குவன் முதலியோர் அயர்ந்து சோர்கின்றனர். அயர்ச்சி நீங்கிய இலக்குவன், இந்திரசித்துடன் கடும்போர் புரிகின்றான். இலக்குவனின் திறனைக் கண்டு இந்திரசித்து திகைப்புறுகிறான். அவன் வல்லமையை உணர்ந்து இராவணனிடம்

> **“தலம் செய்கு பாவத்தாலே கொடும்பகை தேடிக்கொண்டாய்**
> **சலம் செயின் உலகம் மூன்றும் இலக்குவன் முடிப்பன்தானே”**
> **(vi:27:4)**

என்கின்றான், இறுதியாக, “சீதைபால் கொண்ட ஆசையை விடுக; இராம இலக்குவர் சீற்றம் தணியும்; இலங்கையை விட்டகல்வர்; உன்னைமன்னிப்பர்” (Vi:27:6) என்று கூறுகிறான். அதற்குப்பதிலாக இராவணன், தன்முனைப்பால், இந்திரசித்திடம்

> **“நீ அவனை வென்று தருதி என்றுணர்ந்த மன்றால்**
> **என்னையே நோக்கியான் இந்நெடும்பகை**
> **தேடிக்கொண்டேன்”(Vi:27:8)**

என்று பதிலளிக்கிறான்.

(8) இந்திரசித்து தேரேறி மீண்டும் போர்க்களம் போகிறான். இலக்குவன் இந்திரசித்தின் தேரைச் சிதைக்கிறான். விண்ணில் மறைந்து மாயை செய்து கல்மழை பொழிந்த இந்திரசித்தைப் பிறைமுக அம்பால், அவனது தலையை வீழ்த்துகின்றான் இலக்குவன். இராவணனிடம் தூதர்கள் செய்தியைச் சொல்லுகின்றனர். செய்தி அறிந்த இராவணன்

பாசவுணர்வால் அழுது புலம்புகின்றான்.

"... நேரிழை ஒருத்தி நீரால்
எனக்கு நீ செய்யத்தக்க கடன்களெல்லாம் யேங்கி யேங்கி
உனக்கு நான்செய் வதானேன் எண்ணின் யார்
உலகத்துள்ளார்" (vi:28:39)

இவ்வாறு, அவன் கூறும் சொற்கள் நெஞ்சை நெகிழ்விப்பன. அத்தகைய துன்ப நிலையிலும், 'இது சீதையால் விளைந்தது என்று கருதி அவளை வாளால் வெட்டி வீழ்த்த முற்படுகிறான். மகோதரன், "கொல்வது பழிப்புக்குரிய செயல்" என்று தடுத்து நிறுத்துகின்றான்.

(9) இராவணன் பல இடங்களினின்றும் சேனையைத் தருவித்து போர்க்கோலம் கொண்டு இராமன் படையை எதிர்த்துச் செல்கின்றான். இராமனும் இராவணனும் தேரில் நின்று போர் செய்கின்றனர். மண்ணிலும் விண்ணிலும் போர் நடக்கிறது. இராவணன் சூலப்படையை விடுகிறான். இராமனது ஊங்காரம் அதனைப்பொடியாக்குகின்றது. 'இராமன் பரம்பொருள்' என்பதை இராவணன் உணருகின்றான். இராமன் இராவணன் தலைகளை அறுக்க, அவை மீண்டும் முளைக்கின்றன. அந்த உடம்பு முழுமையும், தன் அம்புகளால் துளைக்கின்றான் இராமன். இராவணன் சோர்ந்து மூர்ச்சித்துச் சாய்கிறான். இந்நிலையில் படைவிடக்கூடாது என்று இராமன் வாளா இருக்கின்றான். அவன் சாரதி தேரை விலகிச் செலுத்துகின்றான். உணர்வுபெற்ற இராவணன், தேரை விலக்கிய சாரதியைக் கொல்ல விரைகின்றான். பாகன் நிகழ்ந்தது கூறுகிறான். இராமனும் இராவணனும் தேர்மீது நின்றுகடும்போர் நிகழ்த்துகின்றனர். இராவணனது தெய்வப்படைகளை எல்லாம் இராமன் தன் அம்புகளால் வீழ்த்துகின்றான். பின்னர், பிரம்மாத்திரம் இராவணன் உடலில் நுழைந்து உலாவி அவனுடைய உயிரை மாய்த்துப்புறம்போந்து பார்க்கடலில் மூழ்கிவந்து இராமனது அம்பறாத்தூணியில் நுழைந்து தங்குகிறது. விபீடணன் வருந்துகின்றான். மனைவியர் புலம்புகின்றனர். மண்டோதரிப் புலம்பித்துயரத்தால் உயிர் நீக்குகின்றாள். இராமன் வேண்டியபடி, விபீடணன் ஈமக்கடன்களைச் செய்து முடிக்கின்றான்.

இராவணன், பெருவீரமும் பேராற்றலும், வள்ளண்மையும், தெய்வபக்தியும் உடையவனாயினும் தன்முனைப்பே மிக்கோங்கியிருக்க, அழிந்துபடுகிறான். காமமும் அகந்தையும் இணையற்ற வீரனை அழித்து விடுகிறது.

"என்னையோ என்னையோ இராவணனார்
முடித்த பரிசிதுவோ பாவம்" (vi:37:236)

என்று மண்டோதரி புலம்பும் குரலைக் கம்பன் வழி நாம் கேட்கிறோம்.

### *கும்பகர்ணன்*

இராவணனின் உடன்பிறந்தோர்களுள் கும்பகர்ணன் ஒருவன். பிறவியிலேயே மிக்கவன்மை உடையவன். ஆறுமாதம் உறக்கமும் ஒருநாள்

விழிப்புமாக வாழ்பவன். ஓங்கி உலகளந்த உத்தமனுக்கு இணையான உருவமுடையவன். அவனுடைய தோற்றத்தினைக் கண்ட எவரும் அஞ்சுவர். இராவணன் தம்பி என்பதற்கேற்ற ஆற்றல் பெற்றவன், இராமன் ஒருவனே இவனுடைய ஒப்பற்ற ஆற்றலுக்கு இணையாவான். இராமனுக்கு வில்போல, கும்பகர்ணனுக்குச் சூலமே போர்க்கருவியாகப் பயன்பட்டது. அவன் மலைகளையும் மரங்களையும் கையிலேந்தும் வலிமையுடையவன்; இலங்கை வேந்தன் தவறிழைத்த போது, தவறினைச் சுட்டிக்காட்டி, நெறிப்படுத்த முயன்றவன், இலங்கை வேந்தன் பிறன்மனை நயந்த செயலை, இடித்துரைத்தபோதிலும் அண்ணனுக்காகச் 'செஞ்சோற்றுக்கடன் கழிப்பதே' - வாழ்வின் நோக்கமாகக்கொண்டு உயிர்த்தியாகம் செய்பவன். இவனது இழப்பால் இராவணன் வேரற்றமரமானான். தன்னலம் பேணாத் தகைசால் கும்பகர்ணனின் போர்ச்செயலைக் கம்பன் வழிக்காண்போம்.

(1) சுந்தரகாண்ட ஊர்தேடு படலத்தில், அனுமன் வாயிலாக கும்பகர்ணனது நித்திரைநிலையை அறிகிறோம். அரம்பையர்கள் கால்பிடித்துக் கொண்டிருக்கிறார்கள். பன்னக - அரசுபோலவும், கருங்கடல் போலவும், இருளின் தொகுதிபோலவும், தீவினையின் உருவம் போலவும் அவன் படுத்திருக்கிறான். தேவதானவர்களும் அரக்கர்களும் வானரர்களும் வெருவியோடும்படியான பெருந்தோற்றமும் பெருஞ்சரீரமும் உடையவனாகக் கும்பகர்ணன் விளங்குகிறான்.

(2) அனுமனால் அழிக்கப்பட்ட இலங்கையை இராவணன், தெய்வத்தச்சனால் புதுப்பிக்கிறான். அனுமன் செயல்பற்றி வருந்திய இராவணன் தன் அமைச்சரோடு, மேல் நிகழ்த்த வேண்டியதை ஆராய்கின்றான். சேனைக்காவலன், மகோதரன், விச்சிரதந்தன், துன்முகன், மாபெரும்பக்கன், பிசாசன் முதலியோர், நேர்ந்தபழி துடைக்கும் நெறியாகச் சில சொல்லுகின்றனர். அவர்கள் கருத்து இராவணனுக்கு உடன்பாடாகிறது.

(3) கும்பகர்ணன், "தேவியை நயந்து, சிறைவைத்த செயல் நன்றோ? பாவியர் உறும்பழி இதின் பழியும் உண்டோ" (Vi:2:49) - முறையன்று; ஆயினும், இந்நிலையில் நாம் சீதையை இராமன்பால் விடுவது நமக்குப்பழி விளைக்கும்; பகைவரும் நம்மை மதியார்; பகைவருக்குத் துணைவலி மிகுமுன் நாம் அவரைப் பொருது அழித்தலேதக்கது; "வானவரை எல்லாம் வேரோடும் அடக்க நூறுவதுவே கருமம்" (vi:2:56) எனத் தம் கருத்தை உரைக்கிறான். இதனால், அறத்துக்கு மாறுபட்ட செயல் என்று அறிந்திருந்தும், கும்பகர்ணன், வீரத்திற்கு இழுக்கு ஏற்படாது போர் புரிவது ஒன்றே சிறந்தது என்னும் நெறியைப் போற்றுகிறான். இவற்றால், கும்பகர்ணன் இராவணனது மனநிலையிலேயே செயல்பட முனைகின்றான் என்பது புலப்படும்.

(4) முதல்நாள் போரில், இராவணன், வில்லிழந்து வாளிழந்து தோளிழந்து, படையிழந்து, தன் மணிமகுடம் இழந்து நிற்கிறான்; அவன் நின்ற நிலையில் அவனைக் கொல்லாமல் அருட்செயலால் "இன்று போய்

போர்க்கு நாளை வா" (vi :14:255) எனக்கூறுகிறான் இராமன். அரண்மனை புகுந்த இராவணன் மனம் வருந்துகிறான். மாலியவான் ஆறுதல் கூறுகிறான். மாலியவானைத் தடுத்து மகோதரன் என்னும் அமைச்சன் "கும்பகர்ணனைப் போர்க்கு அனுப்புதல் வேண்டும்; அவன் வென்றுவருவான்" என உறுதி கூறுகிறான்.

(5) கும்பகர்ணன், மந்திராலோசனையின் பின், மாளிகையில் நித்திரை செய்கிறான். இராவணன் ஆணை ஏற்ற அரக்கர்கள் அவனை எழுப்ப முனைகின்றனர். காதில், சங்கு தாரை, முதலியவாத்தியங்களை ஊதுகிறார்கள். அசையாது கிடப்பவனை தண்டு, சம்மட்டி, ஈட்டி முதலிய ஆயுதங்களால் தாக்குகிறார்கள்; பயனில்லை. அளவிறந்த குதிரைகளை அவன் மேல் செலுத்துகின்றனர்; தோல்வியுறுகின்றனர். பின்னர், இராவணன் ஆணைப்படி, அரக்கர் ஆயிரவர்கள் முசலங்களைக் கொண்டு கன்னத்தில் தாக்குகின்றனர். இறந்தவர் உயிர்பெற்று எழுந்தாற்போல கும்பகர்ணன் உறக்கத்திலிருந்து எழுகிறான்.

(6) விழித்தெழுந்த கும்பகர்ணன் மாமிசமும் மதுவும் உண்டு ஒருவிதம் பசியாறுகிறான். அண்ணன் இராவணன் ஆணை ஏற்று கும்பகர்ணன் போர்க்கால புனைந்து போருக்கு ஆயத்தமாகிறான். அப்போதே கும்பகர்ணனுக்கு இடம் துடிக்கிறது. சிந்தையில் சஞ்சலம்; மனம் விம்ம, கும்பகர்ணன்,

> **"ஆனதோ வெஞ்சமம்? அலகில் கற்புடைச்**
> **சானகி துயர்இனந் தவிர்ந்த தில்லையோ?**
> **வானமும் வையகமும் வளர்ந்த வான்புகழ்**
> **போனதோ? புகுந்ததோ பொன்றுங் காலமே"** (VI:15:79)

என்றும், "கல்லலாம், உலகினை வரம்புகட்டவும் சொல்லாம், பெருவலி இராமன் தோள்களை வெல்லாலாம், என்பது, சீதை மேனியைப் புல்லலாம் என்பது வோலுமால் - ஐயா!" (vi:15:89) என்றும் மொழிந்து இராவணனுக்கு அறிவுரை கூறுகிறான். அவன் த்ன் சொல்லைக் கேளாமையால், நேரவிருக்கும் கேட்டிற்கு வருந்துகிறான். கோபமுற்ற இராவணன் "மானிடர் இருவரை வணங்கி, குரங்கைக் கும்பிட்டு வாழ்தல் உனக்கும் உன் தம்பிக்குமே பொருந்தும்; நானது புரிகிலேன்" - எனக்கூறுகிறான். கும்பகர்ணன் அண்ணன் மீது அன்புமிக, போருக்கு உடன்படுகிறான். "வென்று இவண் வருவேன் என்று உரைக்கிலேன்; விதி நின்றது; பிடர்பிடித்து உந்த நின்றது" என்று கூறி கும்பகர்ணன், "இற்றைநாள் வரை, முதல் யான் முன் செய்தனைக் குற்றமும் உளவென் பொறுத்தி!" (vi:15:98) என மன்னிப்பை வேண்டி நிற்கிறான். கும்பகர்ணனோடு பெரும்படை செல்லுமாறு இராவணன் பணிக்கிறான். பல்லாயிரம் தேர், யானை, குதிரை, சிங்கங்கள், பூதங்கள், அரக்கர்கள், ஆயுதங்கள், உடன் செல்லக் கும்பகர்ணன் போர்க்களம் செல்லுகிறான்.

(7) போர்க்களத்தில் வானரப்படைகள் கும்பகர்ணன் தோற்றத்தைக்கண்டு வெருவி நடுநடுங்கி நானா பக்கங்களிலும் ஓடுகின்றன.

இராமன், வருபவன் யார் என வினவ, விபீடணன், வருபவன் இராவணனன் தம்பி கும்பகர்ணன் என்பதை உணர்த்துகிறான். அவனது பேராற்றலையும் நற்குணங்களையும் இராவணனுக்குத் தந்த சிறந்த அறிவுரைகளையும் எடுத்துரைக்கிறான். உடன் நின்ற சுக்கிரீவன், "இவனையும் நம்பக்கம் கூட்டிக்கொள்ளுவதே நலம்" என்று மொழிகின்றான். கும்பகர்ணனை அழைத்து வரச்சென்ற விபீடணனிடம் அவன், "நீர்க்கோல வாழ்வை நச்சி, நெடிது நாள் வளர்த்துப் பின்னைப் போர்க்கோலம் செய்து விட்டாற்கு உயிர்கொடாது அங்குப்போகேன்" (VI:15:154) எனக் கூறுகிறான். தன்குலம் முற்றும் அழிந்துவிடுவது உறுதியே என்று கருதினாலும், தன் தமையனுக்குத்தான் செய்ய வேண்டும் கடமைகளை வற்புறுத்திக்கூறும் உணர்வு போற்றுதற்குரியது. இதனால், கும்பகர்ணனின் நன்றியறிதலும் கடமையுணர்வும் பெறப்படும். இராமனைச் சரண்புகுமாறு கூறிய விபீடணனுக்கு இறுதியாக அவன் கூறும் "ஆகுவது ஆகும் காலத்து; அழிவது அழிந்து சிந்திப்போகுவது ... ஏகுதி, நம்மை நோக்கியிரங்கலை" (VI:15:166) போன்ற சொற்கள் அவனது உறுதிப்பாட்டினை வெளிப்படுத்துகின்றன.

(8) விபீடணன், கும்பகர்ணன் மனக்கருத்தை இராமனுக்குக் கூறுகிறான். போர் நிகழ்கிறது. கும்பகர்ணனுடன் நீலன், அங்கதன், முதலியோர் போர் செய்கின்றனர். குரங்குச்சேனை அழிவுறுகிறது; தோற்ற அங்கதனை வானரர்கள் எடுத்துச் செல்கின்றனர். அனுமன் வருகிறான். அனுமன் கும்பகர்ணனும் வீரவுரைபகர்ந்து போர் செய்கின்றனர். அனுமன் தான் எறிந்த மலையைக் கும்பகர்ணன் தள்ளி விட்டானானால், அவனோடு போர் செய்ய மாட்டேன் எனக்கூறுகிறான். அவன் எறிந்த பெருமலையைக் கும்பகர்ணன் பொருட்படுத்தாது தோள்மேல் ஏற்றமையின், சொற்படி அனுமன் போர் செய்யாது விலகிக் கொள்ளுகிறான். வானரச் சேனைகள் அழிகின்றன.

(9) இலக்குவன் கும்பகர்ணன் முன் தோன்றிப் போர் செய்கின்றனர். இருவரும் வீரவுரை பகர்ந்து கடும்போர் செய்கின்றனர். இலக்குவன், கும்பகர்ணனுடைய சேனை தேர், கொடி இவற்றை அழிக்கிறான். இராவணன் துணைப்படையை அனுப்புகிறான். இலக்குவன் போர் செய்து கொண்டிருக்கிறான். சுக்கிரீவன் மீண்டும் கும்பகர்ணனுடன் உடற்றுகின்றான். சுக்கிரீவன் மேல் ஒரு சூலத்தைவிட, அனுமன் தடுத்து முறிக்கிறான்; ஆனால், அவன் சொன்ன சொற்படி போர் செய்யவில்லை. கும்பகர்ணன் சுக்கிரீவனைத் தன்னுடைய இறுக்கியபிடியால் உணர்விழக்கச் செய்து இலங்கைக்குக் கொண்டு செல்லுகின்றான்.

(10) இச்செயலை வானரர்களால் அறிந்த இராமன், அம்புமாரி சொரிந்து திசைகள் எல்லாம் மறைத்து அம்பாலாக்கிய மதிலால் கும்பகர்ணன் இலங்கையினுள் நுழையாவண்ணம் தடுக்கிறான். கடக்கமுயன்றபோது, கும்பகர்ணன் இராமனைக் காண்கிறான். அவன் இராமனிடம் "சுக்கிரீவனை நீ என்னிடமிருந்து மீட்டாயானால்

சீதையையும் மீட்டனையாவாய்" (vi:15:130) என்று வீரவுரை பகர்கிறான். இராமன் முறுவலித்து,

" .... யானுடை,
**இன்துணை ஒருவனை எடுத்து தோள் எனும்**
**குன்றினை அரிந்து யான் குறைக்கிலேன் எனின்**
**பின்றினென் உனக்கு; வில் பிடிக்கிலேன்"** (Vi:15:286)

என்று கூறி, அம்பு ஒன்றைக் கும்பகர்ணன் நெற்றியில் செலுத்துகிறான். மயக்கமுற்ற கும்பகர்ணன் பிடிதளர்கிறது. அவன் குருதியினால் சுக்கிரீவன் மயக்கம் தெளிகிறான். அவனுடைய மூக்கையும் காதையும் கடித்து எடுத்துக்கொண்டு வானரப்படையிடையே போகிறான்.

(11) உணர்வு பெற்றெழுந்த கும்பகர்ணன் மூக்கும் காதும் இழந்ததைக் கண்டு, அவமானத்தால் வெகுண்டு, இராமனுடன் போருக்கு எழுகின்றான். இராவணன் அனுப்பிய பெரும்படை அவனுக்கு உதவுகிறது. நால்வகைப்படைகளும் பலபடியாக அழிகின்றன. கும்பகர்ணனது சூலப்படை அழியவே அவன் வாளேந்திப் போர் செய்கிறான். இராமன் அவனது வல இடக்கைகளை முறையே துணிக்கிறான். கைகளை இழந்த அவன், கால்களால் வானரச்சேனைகளைத் துகைக்கிறான். அச்செயல்கண்ட இராமன் அவன் வலக்காலையும் இடக்காலையும் துணிக்கிறான். உறுப்பு இழந்த நிலையில் அவன் செய்த போர் வீரங்கண்டு இராமன், "ஐயன் விற்றொழிற்கு ஆயிரம் இராவணன் அமைவிலர்" (vi:15:353) என்று வியந்துரைக்கிறான்.

(12) கும்பகர்ணன் இராமனைநோக்கி, "இவ்விராவணன் விபீடணனை வாய்ப்பு கிடைத்தபோது கொல்லத்தயங்கான்; அவனால், தம்பி விபீடணனுக்கு ஒரு துன்பமும் நேராவண்ணம் காக்கவேண்டும்" என வேண்டிநிற்கிறான். இறுதியாகத் தன் மூக்கிழந்த முகத்தை யாரும் காணாவண்ணம் தன் தலையை அறுத்துக் கடலினுள்ளே வீழ்த்துதல் வேண்டும் (VI:15:49) என வேண்டுகிறான். இராமன், அவன் வேண்டியவாறே தலையை அறுத்துக் கடலினுள் ஆழும்படிச் செய்கிறான். வானரர்களும் வானவரும் மகிழ்கின்றனர். அரக்கர்கள் குடல் கலங்க அத்துயரச் செய்தியை அறிவிக்க இலங்கை செல்கின்றனர்.

இவ்வாறு, கும்பகர்ணன் உடன்பிறப்புக்காகப் போர்க்களம் புகுந்தும், தம்பி விபீடணனைக் காக்கவேண்டியும், கடமையுணர்வோடு செயல்பட்டும் விளங்கிய திறன் போற்றுதற்குரியது. செஞ்சோற்றுக்கடன் கழித்த வீரத்தால் சாதலே மேல் என்று வாழ்ந்துகாட்டிய கும்பகர்ணனது பெருமை மாண்புடையது. அறம் திறம்பிய செயலில் ஈடுபட்டமையால் மாற்றாரால் போரில் மாண்டான் வீரமும் நீதியும் அன்பும் நிறைந்த அரும்பெரும் பாத்திரமான. கும்பகர்ணனை இராமகதையில் தன்னேரில்லாத் தலைவனாகக் கணிக்கலாம்.

### *அதிகாயன்*

அதிகாயன் இராவணன் மைந்தர்களுள் ஒருவன். இவன் தாய்

தானியமாலினி. மிகப்பெரிய உடம்பினை உடையனாதல் பற்றி அதிகாயன் என்னும் பெயரைப் பெற்றான். (காயம் உடம்பு : அதிகாயம் - மிகப்பெரிய உடம்பு). அரக்கர் தலைவர்களை இராமனுக்கு அறிமுகம் செய்யும் விபீடணன், இவன் இராவணன், அவன் தம்பி கும்பகர்ணன், இராவணன் மூத்த மகன் இந்திரசித்து, இளைய மகன் அதிகாயன் மற்றும் மக்களான தேவாந்தகன், நராந்தகன், திரிசிரன் ஆகியோரைத் தனித்தனியே சுட்டி இனம் காட்டும் போது, இந்திரசித்து என்பவன் இந்திரனை வென்று சூரியனையும் சந்திரனையும் சிறையாக வைத்தவன் என்றும், தம்பி அதிகாயனோ "இந்திரசித்துவையும் வெல்லக்கூடியவன்" (VI:5:49) என்றும் கூறுவான். இராவணன் புதல்வர்களுள் அதிகாயன் மானமுடையவனும் அறநெறியில் வழுவாது, தூய உள்ளத்தினாலும் செயலாலும் சிறந்த வீரனுமாவான். அதிகாயனது போர்த்திறனைக் கம்பன் வழிக்காண்போம்.

(1) ஆருயிர்த் தம்பி கும்பகர்ணன் இறந்ததைக்கேட்டு, ஆறாத்துயரனாகிய இராவணன், தன் தம்பியை இறவாது பாதுகாக்கத் தவறியமைக்குப் படைவீரரைக்கடிகிறான். அமரில் வெல்வோம் என்னும் உறுதியுடையவரை மட்டும் போர் மேற்செல்லப்பணிக்கிறான். அதுகேட்ட அதிகாயன், தன் உள்ளத்து மானமும் சீற்றமும் மேலிடத் தன் ஆண்மையும் வெற்றியும் விளங்கத் தன் தந்தையிடம் "உம் தம்பியைக் கொன்றவனது தம்பியைக் கொன்று, தம்பியை இழந்தையால் தாங்கள் அடைந்த பெருந்துயரத்தினை அவன் அடையும்படிச் செய்திலேனாயின் நான் உன்மகன் என்று சொல்லத் தக்கவன் அல்லேன்" (VI:17:11) என வஞ்சினம் கூறுகிறான். உரைகேட்டு மகிழ்ந்த இராவணன், "நீ இலக்குவன் உயிரைக்கொண்டு தந்தனையாயின், நான் அவன் தமையன் இராமனது அரிய உயிரினையும் கவர்ந்து முடிப்பேன். வீரக்கழலணிந்தவனே இப்பொழுதே செல்லுவாயாக!" (VI: 17 : 14) எனக்கூறுகிறான். துணையாக அரக்கர் மூவாயிரங்கோடியுடன், யானை, குதிரை தேர் ஆகிய எண்ணற்ற சேனைகளைடும் போருக்கு அனுப்புகிறான் அரக்கர்கோன்.

.(2) அதிகாயன் ஆயிரம் குதிரைகள் பூட்டப்பட்ட தேர்மீதமர்ந்து போர்க்களம் அடைகின்றான். போர்க்களத்தே அரக்கர் பெருஞ்சேனையின் அழிவையும் தன் சிறிய தந்தை கும்பகர்ணன் தலையறுபட்ட நிலையில் கிடத்தலையும் கண்டு மனங்கலங்கி சாம்புகின்றான். வெஞ்சினம் கொண்டு 'இதனைச்செய்த இராமன் தம்பி இலக்குவனைக் கொன்று, பிரிவால் இராமன் படுந்துயரைக்கண்டு என்மனத்துயரினைப் போக்கிக்கொள்வேன் (VI:17:29) என எண்ணி விம்முகின்றான். மயிடன் என்னும் அரக்கனைப் பகைவர்பால், தூதாக 'இலக்குவனைத் தனியே போர் செய்வதற்கு வருமாறு கூறுக - (VI:17:30) என விடுக்கிறான். தூதன் மயிடனைப்பற்ற முனைந்த வானர வீரரைத்தடுத்த இராமன், அவன் விழைந்தவாறு இலக்குவனிடம் விடுக்கிறான். மயிடன் இலக்குவனை நோக்கி, "அதிகாயன் உன்னுடன் தனியாகப் பொருதற்கு வந்துள்ளான்; அவனை எதிர்த்து நிற்கும் ஆற்றலுடையாய் ஆயின், என்னுடன் இப்பொழுதே புறப்படுக" (VI:17:49) எனக்கூறுகிறான். தூதன் கருத்தை உணர்ந்த இராமன் " இலக்குவன்

ஒருவனே அதிகாயனைத் தனிநின்று பொருதழிப்பான்" (VI:17: 80) என யாவரும் அறியச் சொல்கிறான்.

(3) இலக்குவன் அதிகாயனைப் போர்க்களத்தில் காண்கிறான். உடனிருந்த விபீடணன் முற்காலத்தில் திருமாலுடன் பொருது இறந்த மது, கைடபன் என்னும் அவுணர் இருவருமே இப்பிறப்பில் கும்பகர்ணனாகவும், அதிகாயனாகவும் பிறந்தனர் எனக்கூறுகிறான். மேலும், அதிகாயன் பிரமதேவரை நோக்கிப் பெருந்தவஞ்செய்து தேவர் யாவராலும் அழிவுறாத பெரும்வரத்தைப் பெற்றுள்ளான் எனவும், அறத்தொடு நிற்கும் போர்த்திறனையும் கூறுகின்றான். திட்டப்படி எல்லோரும் உடன் செல்ல, இலக்குவன் இராமனைத் தொழுது அதிகாயனுடன் போர் செய்யச் செல்லுகிறான். அரக்கர்சேனையும் வானரர் சேனையும் தம்முள் எதிரிடுகின்றன. வானர சேனை தளர்ச்சியுறுகிறது. இலக்குவன், வில்லில் நாணேற்றி அம்புகளை அரக்கர் மீது சொரிகிறான். தாருகனை அழித்த இலக்குவன் செயல்கண்டு காலன், குலிசன், காலசங்கன், மாலி, மருத்தன் என்னும் ஐவர் எதிர்த்துத் தாக்குகின்றனர். இலக்குவன் அவர்களையும் அழித்து, சேனைகளைச் சிதற அடிக்கிறான். அப்பொழுது எழுந்த யானைப்படையும் அழிகிறது. அங்குவந்த அனுமன், பெரும்போர் செய்து திரிசிரனைக் கொன்றழிக்கிறான். அதிகாயன், அனுமனது போர் வன்மையைக்கண்டு வியக்கிறான். இலக்குவனுடன் பொருதத் தன்தேர்ப்பாகனை அவன் முன்னே செலுத்தும்படிப் பணிக்கிறான். அங்கதன் தோள்மீது அமர்ந்து போருக்குத் தயாராகி அரக்கர் சேனைகளை அழிக்கிறான்.

(4) அதிகாயன், இலக்குவனை நோக்கி, "உடன் வந்த சேனைகள் யாவும் பொருதழித்தபின் என்னுடன் பொருதுகின்றாயா? அல்லது தனிநின்று இப்போதே பொருதுகின்றாயா" (VI:17:187) என வினவுகின்றான். எதிர்த்துள்ள யானும் நீயுமே யாவரும் காணப்போர் செய்யவேண்டும் என மறுமொழி கூறுகிறான் இலக்குவன். அதிகாயனோ சங்கம் முழங்கி, "உன்னைக் கொல்லாமல் போகமாட்டேன்" (VI:17:98) என்று இறுமாந்துரைக்கிறான். இருவரும் அரிய படைக்கலங்களைக் கொண்டு போர் புரிகின்றனர். அந்நிலையில் வாயுதேவன் இலக்குவன் அருகே தோன்றி, "அதிகாயன் பிரமாத்திரத்தாலன்றி இறக்கமாட்டான்" (VI:17:201) எனஅறிவுறுத்துகிறான். அதனைக்கேட்ட இலக்குவன், பிரம்மாத்திரத்தை மந்திரித்து அதிகாயன் மேல் ஏவுகிறான். அஃது அதிகாயனது தலையைத் துணிந்து எடுத்துக்கொண்டு வான் வழியாகச் செல்லுகிறது. தேவர்கள் அச்சம் நீங்கி மலர்மழை பொழிகின்றனர். இலக்குவன் ஆற்றலைக்கண்டு வியந்த விபீடணன், இவனால், இந்திரசித்து இறத்தல் உறுதி என்கிறான். தொடர்ந்து, நராந்தகன், போர் மத்தன், வயமத்தன் முதலியோர்களை அங்கதன், நீலன், இடபன், முறையே பொருது அழிகின்றனர். சுக்கிரீவன் கும்பனது நாவினைப் பறித்து அழிக்கிறான். அனுமன் நிகும்பனைக் கொல்லுகிறான். செய்தி அறிந்த இராவணன் எல்லையற்ற துயரடைகிறான். தன் மகன் இறந்த செய்திகேட்டு தானியமாலினி அவன் கால்களில்

விழுந்து பலவாறு புலம்பி அழுது அரற்றுகிறாள். இலங்கை நகரமே அம்மாவீரனின் இழவுக்கு வருந்துகின்றது.

இவற்றால், அதிகாயனது போர் நெறியும், மறனிழுக்கா மானமுடைய மாண்பும் புலனாகின்றது. அவனது மான உணர்வு, வஞ்சினவுரை, போரை நடத்திச்செல்லும் முறை, போரினால் எய்த பயன் இவை, அதிகாயன் ஒரு வெந்திறல் வீரன் என்பதை எடுத்துக்காட்டுகின்றன. மற்றைய அரக்கர்களினின்றும் இவன் வேறுபட்டு நிற்பதைக் காணமுடிகிறது.

கம்பன் படைப்புகளில் ஒப்புயர்வற்றுத் திகழும் பாத்திரங்களில் இந்திரசித்தும் ஒருவன். இராம இராவணப்போர் வந்துவிட்டது என்றவுடன் அது அறத்தின் அடிப்படையில் வந்தபோரா? இன்றித் தந்தையின் செயலால் வந்த போரா? என்பதை ஆராயாமால், தந்தைக்காக மகன் என்ற ஒரே காரணத்தால் போர்க்களம் புகும் ஒப்பற்ற வீரன் அவன். வீரமும் சகோதரபாசமும் மிக்கவன். கும்பகர்ணன், இராவணன் தம்பியாகலின், அண்ணன் தவற்றைத் தொடக்கத்திலேயே இடித்துரைத்தான். இந்திரசித்து மகன் ஆகையால் இறுதியில் கூறுகிறான். தன்னையொத்த மற்றோரு வீரன் இல்லாதவன் எனினும் பொருளில் கம்பன், இவனை, 'வீரத்தே நின்ற வீரன்! "வீரருள் வீரன்' எனச் சிறப்பித்துக் காட்டுவான். எனினும் களத்தில் இறந்துபட்டான். மாயச்செயல்களால் மறத்தின் வழி நின்றமையால் அது நேரிட்டது. யுத்தகாண்ட நிகழ்ச்சிகளின் வழி அவன் திறனை காண்போம்.

(1) மானிடர் இருவராலும் குரங்கு ஒன்றாலும் நேர்ந்த இழவுகள் இந்திரசித்தின் உள்ளத்தை வருத்துகின்றன. அனுமனை வெல்லப்போர்களம் செல்லுகிறான். அவன் வருவதைக்கண்ட அனுமன் மகிழ்கிறான். 'இவன் இறந்தால் இராவணனும் இறந்தது போலத்தான்', என்று நினைக்கிறான். களத்தில், அயன்தந்த படையால் அனுமனைக் கட்டித் தந்தையின் எதிரில் நிறுத்துகிறான் இந்திரசித்து. இங்ஙனம், அனுமன் இந்திரசித்தை நேரில் அறிந்திருந்தான். விபீடணன் இராமனிடம் சரண் அடைந்ததும், இலங்கையின் அந்தரங்கம், படைபலம், வீரர்திறம், அவர்தம் மாயை அனைத்தையும் இராமனும், இலக்குவனும் மற்ற வானரப் படைத்தலைவர்களுக்கும் அறிகின்றனர்.

(2) வானரப்படையுடன் சேதுகட்டி இலங்கைக்கு வருகின்றனர் இராம இலக்குவர் போர் தொடங்குகிறது. கும்பகர்ணனும் ஆயிரக்கணக்கான அரக்க வீரரும் அழிந்தனர். அதிகாயன் என்னும் பெருவீரனை இலக்குவன் கொன்றழிக்கிறான். இதை அறிந்த விபீடணன் ...ான்.

(3) "இந்திரசித்தனார்க்கும் இறுதியே இசைவது" (VI:17:206) எனவும் உறுதிசெய்கிறான். இந்திரசித்து அழிந்தால் இராவணன் அழிவான்; சீதை துயர்தீரும் என்பது விபீடணன் கருதுகோள்.

இலக்குவனால் அதிகாயன் மடிந்ததை இந்திரசித்து கேள்விப்பட்டவுடன் வருந்துந் தந்தையுடம் " கொன்றார் அவரோ? கொலை சூழ்க என நீ கொடுத்தாய்" (VI:18:7) என மனம் கொதித்து மனம்குமுறுகிறான். அவன்.

"எம்பியைக் கொன்றுளானை அந்நின்ற நிலத்தவனாக்கை
நீக்கியல்லால் மன்னின்ற நகர்க்கினி வாரலன்;
வாழ்வும் வேண்டேன்"

என வஞ்சினம் கூறிக் களம் (VI:18:9) செல்கின்றான். அவனது வீரமும் சகோதர பாசமும் இதனால், நன்றாகப் புலனாகின்றன. இந்திரசித்துடன் சென்ற படை எண்ணில் அடங்கா, விபீடணனின் உள்ளக்கருத்தின் வழியே இலக்குவனும் நாற்பது வெள்ளம் படையுடன் களம் செல்கின்றான். போர் தொடங்குகின்றது. இந்திரசித்து தனியாகப் போர் செய்து முதலில் வெற்றிகொள்கிறான். இலக்குவனுக்கும் இந்திரசித்தனுக்கும் கடும்போர் நிகழ்கின்றது. இந்திரசித்து தடுமாறுகின்றான்.

"ஆறிநின்றனன் - ஆற்றலின் தோற்றிலான்" (VI:18:126)

ஆகவே மீண்டும் போர் நடக்கிறது. அனுமனும் களத்தில் குதிக்கிறான். இரு தரத்தார்கள் படைகளும் மடிகின்றன. எண்பது வெள்ளம் வீரரும் அழிகின்றனர். 'இது சமமான போர்' என்றே யாவரும் கருதுகின்றனர்.

(4) போர் தொடர, இரவுவரப்போகிறது, இரவில் இந்திரசித்தை வெல்லவோ கொல்லவோ இயலாது என்பதை விபீடணன் நன்கு உணர்ந்து பகற்பொழுது கழிவதற்கு முன் அம்மாவீரனைக் கொன்று விடுமாறு இலக்குவனை வேண்டுகிறான். குறிப்பால் உணர்ந்த இந்திரசித்தன், இரவு நெருங்கவே, மாயையின் துணையால் விண்ணில் மறைக்கிறான். இலக்குவனையும் வானர வீரர்கள் அனைவரையும் நாக பாசத்தால் பிணிக்கிறான். நாகபாசம் அனைவரையும் வீழ்த்துகிறது. இந்திரசித்து மகிழ்ந்து, "சொற்றது முடித்தேன்! நாளை உன் உடற்சோர்வை நீக்கி மற்றது முடிப்பேன்" (VI:18:204) என்று கூறி இலங்கை செல்கிறான். தந்தையிடம் செய்திகூறிச் செல்கிறான். வீழ்த்த முடியாத இலக்குவனைப் பாசாத்தால் இந்தச் சித்தன் வீழ்த்தினான். இந்நிலையில் அவனுக்கு இறுமாப்பு இல்லை; வெற்றி ஆர்ப்பாட்டமில்லை.

(5) நாகபாசத்தின் ஆற்றலையும் அதைவிடுவிக்கும் வழியினையும் விபீடணன் கூற,. இறையருளால் இருளில் ஒளிபடரவிட்டு, கருடன் வரவால் அப்பாசம் விலகுகிறது. இலக்குவனும் வீரர்களும் மயக்கம் நீங்கி எழுகின்றனர். வானர முகாமிலிருந்து பெருத்த ஆரவாரம் கிளம்புகின்றது. இலக்குவன் ஒழிந்தான் என்று செம்மாந்திருந்த இராவணன் செவிகளில் இது ஒலிக்கிறது. ஒற்றர்கள் செய்தியைச் சொல்கின்றனர். கருடனை வைகிறான் இராவணன். இந்திரசித்து "நாளை மீண்டும் போர் புரிவேன்" எனத் தந்தையிடம் உறுதி கூறுகிறான். "நீயே இன்னும் ஆற்றுதி அருமைப்போர்கள்" (VI:18:294) என்று இராவணன் இங்கிதமுடன் கூறுகிறான்.

(6) மறுநாள் மீண்டும் போர்கள் தொடங்குகின்றன. இராம

இலக்குவரைப் போர்களத்திற் காண்கிறான் இந்திரசித்தன், அவர்களின் ஆற்றலையும் சிறப்பையும் தன்னுள் வியந்து போற்றுகிறான். ஒருவனே இருவரையும் எதிர்க்கிறான். இடையே இலக்குவனிடம் "அம்பினால் உடல் குறைந்த கும்பகர்ணன் அல்லன் நான். இராவணனின் ஒப்பற்ற மகன் நான், உங்கள் இருவரின் செங்குருதிகொண்டு என் தம்பியார்க்கும் சிறிய தந்தைக்கும் புனர்க்கடன் கழிப்பேன்" என்று சூளுரைக்கிறான் இந்திரசித்து, இலக்குவனும், பதிலாக "அரக்கர் அனைவருக்கும் ஆற்ற வேண்டிய கடன்களுக்காக எங்கள் பக்கம் விபீடணன் இருக்கின்றான். உன் தந்தைக்கு நீ செய்யவேண்டியவற்றை அவன் உனக்குச் செய்வான்" என்று சபதம் செய்கிறான். இருவரும் தனியே போர் செய்கின்றனர். கொடும்போரில் எதிர்பாராது தனக்குத்தோல்வி ஏற்படுவதை உணர்ந்த இந்திரசித்து, விண்ணில் மறைந்து இலங்கை செல்லுகிறான். பின்னர் பிரம்மதேவனால் பெற்ற பிரம்மாத்திரத்தைப் பயன்படுத்துகின்றான். அதன் விளைவாக இராம இலக்குவர் உட்பட அனைவரும் பேச்சு மூச்சின்றி மயங்கி விழுகின்றனர். இந்திரசித்து தந்தையிடம் வெற்றியை எடுத்துச் செல்கின்றான். இராமனும் வீடணனும் வருந்துகின்றனர். பின்னர், அனுமன் கொணர்ந்த சஞ்சீவிமலையில் காரணமாக மயங்கியோர் அனைவரும் தெளிந்து எழுகின்றனர். இங்ஙனம் இந்திரசித்தின் ஆற்றல் மிக்க நாகபாசமும் பிரமாத்திரமும் தோற்றுவிடுகின்றன. இராவணனோ அங்குக்களியாட்டத்தில் மூழ்கியிருக்கிறான். அப்போது, வானரப்படையின் ஆரவாரம் கேட்கிறது.

(7) இராவணன் சபையைக் கூட்டிக் சீறுகிறான். மாலியவான் புத்திமதி சொல்லுகிறான். வீடணனின் அந்தரங்கச் செயலே இப்படைகள் தோற்றமைக்குக் காரணம் என்பதை உணர்ந்த இந்திரசித்து, 'சூழ்ச்சி செய்தே இவர்களை வெல்லுதல் வேண்டும்' என்று முடிவு செய்கிறான். நிகும்பலையில் வேள்வியொன்று செய்து முடித்தால், இராம இலக்குவரை வென்று விடலாம் என்று எண்ணுகிறான். 'மாயா சீதையை உருவாக்கி அவளை அனுமன்காண வெட்டவேண்டும் அதன்பின் அயோத்தியை வெல்லப்போவதாக அவனிடம் கூறி ஏமாற்றிவிட்டு நிகும்பலை சென்று வேள்வி செய்ய வேண்டும்; உண்மைச் சீதை வெட்டப்பட்டாள்' என நினைந்து அனைவரும் சோகக்கடலில் மூழ்குவர். இதற்குள் யாகம் முடிய, அனைவரையும் வென்று விடலாம் எனத்திட்டம் தீட்டி நிகும்பலை சென்று, யாகத்தினைத் தொடங்குகிறான் இந்திரசித்து.

(8) சீதை இறந்து விட்டாள் என அனுமன் கூற, இராமன், இலக்குவன் அனைவரும் கதறி அழுகின்றனர். விபீடணன், இது மாயையாக இருக்கும் என ஐயுறுகிறான். உடனே வண்டின் உருக்கொண்டு, உயிரோடிருப்பதைக் கண்டு மீள்கிறான். உண்மையை உணர்த்துகிறான். நிகும்பலை வேள்வி செய்வதையும் கூறி, அது முற்றுப்பெற்றால் சிந்தனை வெல்லுதல் இயலாது என்பதையும் உணர்த்தி, அதனை, உடனே அழிக்கவேண்டும் என்று வலியுறுத்துகிறான். நிகும்பலை வேள்வியை இராம இலக்குவர் படையுடன் வியூகமாகச் சூழ்கின்றனர்.

வேள்வியை அழிக்க, விபீடணன் கூறுகிறான். எதிர்பாராத நிலையில் தன்னைச் சூழ்ந்த படையைக்கண்டு திகைக்கிறான். வேள்விக் களத்திலிருந்து எழுந்து வில்லினை எடுத்தான். இதைக்கண்ட விபீடணன் இப்போதே இந்திரசித்தினைக் கொன்றுவிடும்படித் தூண்டுகிறான். அனுமன் இந்திரசித்தினை எள்ளி நகைக்கிறான். இலக்குவனும் இந்திரசித்தும் பெரும்போர் செய்கின்றனர். விபீடணன் போக்கால் உளம் நொந்து, அதன் காரணமாக உடல் சோர்ந்து நின்றான். களத்தில் நிலைகுலைந்து, சிவன் படையும் பயனற்றுப்போகத், தன் தேரை இழந்து விடுகிறான். இரத்தம் சிந்திய வண்ணம் தன் தந்தைமுன் நிற்கிறான் இந்திரசித்து. தந்தையிடம் சீதையை விட்டுவிடும்படி மன்றாடுகிறான்.

> **"ஆதலால் அஞ்சினேன் என்**
> **றருளலை; ஆசைதானச்**
> **சீதைபால் விடுதி யாயின்**
> **அனையவர் சீற்றந்தீர்வர்;**
> **போதலும் புரிவர்; செய்த**
> **தீமையும் பொறுப்பர் உன்மேல்**
> **காதலால் உரைத்தேன் என்றான்**
> **உலகெலாம் கலக்கிவென்றான்"** **(Vi:27:6)**

எனக் கம்பர் கூறுவார்.

(9) மேலும், அவன் காரணகாரிய அடிப்படையில் தம்வலியையும் மாற்றார் வலியையும் எடுத்துக்கூறுகிறான். இராவணன் அவனைக்கடிந்துரைத்து,

> **"சீதையை விடுவதுண்டோ? இருபது திண்டோளுண்டால்!**
> **"இன்றுளோர் நாளை மாள்வர்; புகழுக்கும் இறுதியுண்டோ?"**
> (VI : 27 : 10)

என்று கூறிப் போருக்குப் புறப்படுகிறான். மறுத்த தனையன் மீண்டும் களம் நோக்கி விரைகின்றான். இறுதிப்போர் தொடங்குகின்றது. நிகும்பலைக்குச் செல்லும் முன்னர், இராமன் இலக்குவனுக்குப் 'பல்பெரும் போருஞ்செய்து வருந்தின அற்றம் பார்த்துக் கொல்லுதி' எனக் கூறுகிறான். இது இலக்குவன் மனதில் நிற்கிறது. மாயோன்படை, சிவன்படை எல்லாம் அழிக்கின்றன. வைணவ வில்லும் கவசமும் அம்பறாத்தூணியும் இலக்குவன்பால் இருக்கின்றன. அனுமன், சுக்கிரீவன், இத்தகையர் உடன் இருக்கின்றனர். போரில் இந்திரசித்தன் தளர்ந்து போகிறான். பகலில் அன்றி இரவில் அவனைக் கொல்ல முடியாது என்பதை விபீடணன் நினைவூட்டுகிறான். இலக்குவன் பிறைமுக அம்பு எய்து, இந்திரசித்தின் தலையை அறுக்கிறான். இந்திரசித்தின் தலையினை அங்கதன் இராமன் அடிகளில் வைக்கிறான். 'வீடணன் தந்த வெற்றி இது' (VI:27:71) என அனுமனை இராமன் புகழ்கிறான். இந்திர சித்தின் வீரமரணம் சோகத்தைத்தருகிறது. இராவணன் "நேரிழை ஒருத்தி நீரால் எனக்கு நீ செய்யத்தக்க கடனெல்லாம் ஏங்கி ஏங்கி உனக்கு நான் செய்வதானேன்;

என்னின் யார் உலகத்துள்ளார்? (VI 28 : 39) எனப்புலம்பி அழுகிறான். இந்திரசித்தின் உடலோடு இலங்கை புகுகிறான் இராவணன். மண்டோதரி அரற்றுகிறாள். இராவணன் இந்திரசித்தின் உடலைத் தைலத் தோணியில் இடப்பணிக்கிறான்.

இந்திரசித்தின் வீரவாழ்வு மறத்தில் துவங்கி அறத்தில் முடிகிறது; வீரம் தோல்வியடைகிறது. இந்திரனை ஆடல் கொண்ட வீரம், இலங்கை வாழ்வின் அச்சாணி, இராவணனுக்காக அழிந்தும் போகிறது. மறம் சுமந்த உடல், அறம் தெரிந்தும் மாய்ந்து போகிறது. பேரிரக்கத்திற்குரியவனாகிக், கம்பன் காவியத்தில் இந்திரசித்து என்றும் நிலைபெறுகிறான்.

## சீராமகவி கம்பனோடு மாறுபடும் இடங்கள்

(இயல் நான்கில் ஒப்பீடு செய்யப்பட்டவை இங்கும் கொள்ளத்தக்கன. போர்த்தலைமை ஏற்கும் முதன்மைப் பாத்திரங்களில், கம்பனை போல இடம் பெறுபவர் பற்றிய செய்திகள் மட்டுமே இராசரிதத்திலிருந்து இங்கே தரப்படுகின்றன)

### இராமன்:

1. இராமன் தென்கடல் காண அனுமன் தோளில் ஏறி ஆரவாரத்துடன் புறப்பட்டான் (4:5)

2. வானரப்படையின் அளவு ‘எழுபது வெள்ளம்” என்று குறிப்பு இராமசரிதத்தில் இல்லை.

3. இராமன், வருணன், கணபதி, சுப்பிரமணி, சிவன், வாயு, இவர்களுக்கும் மேலான வீரன் என்று விபீடணன் கூறுகிறான்(7:5)

4. இராமன், விபீடணனைத் தம்பியாக ஏற்றுக்கொணட உறவு நிலையைச் சீராமகவி கூறவில்லை.

5. இராமன், கடல்கடக்க வருணன் நோக்கித் தருப்பைப்புல்லின் மூன்று நாட்கள் தவம் கிடந்தான் (9:5)

6. வருணன், அபயம் என்று இராமன் திருவடிகளில் வீழ்ந்ததாக வரும் கம்பன் தரும் செய்தி சீராமனில் இல்லை.

7. இராமன் திருமுன் சேதுபந்தனம் ஐந்து நாட்களில் நடந்தது (9;9,10)

8. இராமன், இலக்குவன், விபீடணன் வானரப்படை சூழ, பெருமரங்கள், மலைக்குன்றுகள், சூலம், மகாகதை, அம்பு, வில், வால் போன்றவற்றைக் கையிலேந்திக் கடலைக்கடந்து சேது அணை வழி செல்கிறான் (9:11).

9. இரானுடன் வரும் வானரப்படையில், கம்பனுக்கும் மேலாக, தெம்பன் தன்னாதன், கிரதன், பிரம்மாதி, கந்தமாதனன், விவதன். கனிவரன், துழேணன், தும்மிரன், தெதிமுகன், வேகதரிசி முதலியோரை ஒற்றர்கள் இராவணனுக்குக் காட்டி நின்றதாக சீராமகவி படைப்பான் (11:1-6)

(10) இராமனும் இராவணனும் தும்பைப்பூச்சூடி, போர் செய்யும் நெறிமுறை சீராமனில் இல்லை.

(11) முதல்போரிலே, இராம இலக்குவர் இந்திரசித்தின் நாகபாசத்தால் கட்டுண்டதாகச் சீராமன் கூறுவான் (15 ; 9,10)

(12) இராமன் முகத்தழகு, விமானம் விதவைகளைத் தாங்காமை, இராமனின் முன்னைய வீரவரலாறு முதலியவற்றால் இராம இலக்குவர் நாக பாசத்தால் இறக்கவில்லை எனத்திரிசடை சீதையிடம் விளக்கித்தெளிவு படுத்துகிறாள். (16:1:10) இது சீராமனின் படைப்பு.

(13) முதல்போரில் நால்வகைப்படைகளும், ஒட்டகம், சிங்கம், கழுதை, போத்து (எருமை இனம்) முதலிய கலந்துகொள்கின்றன (19:4) கம்பனில் இச்செய்தி இல்லை.

(14) விபீடணன், இராமனுக்கு, அரக்கர்கள் போர்புரியத் தொடங்கும் முன், வீரர்களை அறிமுகப்படுத்தி, அவர் தம் இயல்புகூறுவான் (19,20).

(15) முதல்நாள் போரில், இராமன், போர்த்துவக்கத்தில் இராவணனிடம், ' எட்டுத்திசைகளில் போய் மறையினும், கடலில் புகுந்து ஒளியினும், முனிவர்க்கும் மூவுலக்கும் துன்பமில்லாமல் காக்க, உன் வாழ்க்கை இத்துடன் முடிக்காமல் விடேன், (27:1) என்று வஞ்சினம் கூறுவான்; இது கம்பனில் இல்லை.

(16) இராமன் பல அம்புகளைத் தொடுத்து, பின்பிறைச்சந்திர அம்பினால் இராவணன் மணிமுடியை வீழ்த்தினான் (27:4-6) எனச் சீராமகவி கூறுவான். ஐந்துவாளி தொடுத்து, பின்,'பேர் அம்பொன்றால்' வீழ்த்தினான் என்பான் கம்பன்

(17) 'போர்க்களத்தில் மரணம் அடைவது அழகல்ல; உன்போர்க்காயங்கள் மரணம் வரை நிலைத்து நிற்கும்' (27: 19) என இராமன் இராவணனுக்குக் கூறுகிறான். சிறையில் வைத்த சீதையை விடுதலை செய்வது பற்றிய அறிவுரையைக் கம்பனைப்போலக் கூறவில்லை.

(18) கும்பகர்ணன், உணர்விழந்த சுக்கிரீவனை எடுத்துச் செல்லவே, இராமன் அம்புமாரிபொழிந்து திசைகளை எல்லாம் மறைத்து அம்பாலாக்கிய மதிலால் இலங்கையில் நுழையாவண்ணம் செய்ததாகக் கம்பன் தரும் செய்தி சீராமனில் இல்லை.

(19) இராமன் இறுதியில் ' காற்றின் கடும்படையால் கும்பகர்ணன் தலையைக்கொய்து கடலில் வீழ்த்தினான்' (15:358) எனக் கம்பன் கூற, சீராமகவி, ' புரந்தரன் புகழ் அத்திரத்தால் வீழ்த்தினான்' எனக் கூறுவான். மேலும், வீழ்த்திய அம்பு, இராமன் காதில் வந்து வேண்டியனவெல்லாம் சொல்லி, அம்பறாத்தூணியில் புகுந்தது (35:9,10) என்றும் கூறுவான்.

(20) இந்திரசித்தின் மாயைப் போரால், இங்கினி நம்மால் ஒன்றும் செய்தவற்கில்லை' என இராமன் கூறிமுடிக்குமுன், இராம-இலக்குவர் பிரம்மாத்திரத்தால் வீழ்ந்தனர் (47:10) எனச் சீராமகவி கூறுவான். கம்பனில், இராமன் பிரமாத்திரத்தால் விழவில்லை.

(21) மகரக்கண்ணன் வதையின் போது, சீராமகவியின் இராமன், அறைகூவிய மகரக்கண்ணனிடம், நொய்யோரை வெல்வது நல்லாயுதங்களாலாகும்;' நூறாயிரம் வார்த்தைகளால் எவரும் ஓரிடத்தில் எளியவரை வென்றதில்லை' (58:2) என அறிவுரை கூறுகிறான். கம்பன் "நெடும்பகை நிமிரவந்தாய்; ஆயதுகடனே அன்றோ? ஆண்பிறந்து அமைந்தார்க்கு ஐய?" எனக்கூறுவான் (20:18)

(22) வேலேற்ற படலத்தில், இலக்குவனுக்கும் இராவணனுக்கும் இடையே நடக்கும் போரில் இராமனும் கலந்துகொள்கிறான் (87:8). கம்பனுடைய இராமன், அப்போது மூலபலவதையில் இலக்குவனுக்கும் இராவணனுக்கும் இடையே ஈடுபட்டிருக்கிறான்.

(23) இராவணன், விபீடணன் மேல் எறிந்த வேலை இலக்குவன் மார்பில் ஏந்த, இராமன், முழுவலியால் அதனைப்பறித்து, இராவணன் மேல் கடும்போர் செய்வான் (87:4,5) எனச் சீராமகவி கூறக்கம்பன், சாம்பவானே அதைச் செய்வித்தான் (31: 38) என்று கூறுவான்.

(24) இராம இராவணப்போரில் சீராமகவியின் இராமன், " பிழை செய்த நீ அதன் பலன் எய்துவான் சமயம் அது இன்றே" (93:2) எனக்கூறிப்போர் செய்கிறான்.

(25) இராமன், இராவணனது தலையை அறுக்க அறுக்க, மீண்டும் மீண்டும் முளைத்தமைகண்டு, உனக்கு தசமுகன் என்ற பெயர் கிடைத்துள்ளது (95:1) எனச் சீராமன் கூறுவான்.

(26) விண்ணிலிருந்து பார்த்த அகத்திய முனிவர், “சோர்ந்திருக்கும், இராவணனைக்கொல்ல ஆதித்திய இருதயம்' என்னும் மந்திரத்தை இராமனுக்கு உபதேசித்தான், அதனால் ஆற்றல் பெற்றான் (95 : 7,8) எனச் சீராமகவி கூறுவான். சூரியனை நோக்கி அவன் மந்திரத்தைச் சொல்லி ஆற்றல் பெற்றதாகக் கம்பன் மாற்றுவான்.

(27) விபீடணன். தன்தமையன் இராவணன் இறப்புக்கு வருந்திய காலை, இராமன், ஒன்றுகேள் எவர்தான் வாழ்நாள் முழுவதும் வாழ்ந்தார்? பிறக்கும்போதே இறப்பும் உண்டென்று அறிக' (102:7) ' காலத்தை அழுது வீணாக்குதல் ஆகாது (102:8) எனக்கூறித் தேற்றுவான். கம்பன் இதனை "முந்தை எய்தும் முறையை இது ஆம்" எனச் சுருங்கக்கூறுவான்.

(28) தயரதன், தன் மகன் திருமாலின் அவதாரம் என்றும், இராவணனைக் கொல்வதற்காகவே அவதரித்தான் என்றும், பூமகளின் மணவாளன் என்றும் கூறுவான் (120:1) சீராமன். கம்பன் அவதாரம் பற்றிக் கூறவில்லை.

(29) முடி சூட்டப்பெற்ற இராமபிரானிடம் பரதன், “அயோத்தி நகரத்தையும் நாட்டையும் எதிரிகளிடமிருந்து இதுவரைகாத்து நின்றேன்; இன்றுமுதல் என்தொழில் இதுவல்ல; எளிய தொழில் ஒன்றை எனக்கு அருளுக" (157:5) என்று சீராமகவியின் படைப்பில் கேட்கிறான். கம்பனில் இது இல்லை.

(30) இராமபிரான் பாற்கடலுள் செல்லப்புறப்படுகிறான். கருடன் வந்து அவரை எடுத்து மறைகிறது (164:8) இது இராம சரிதம்.

*இலக்குவன்:*

(1) வானரப்படைகள் சூழ்ந்து நிற்க இராமனுடன் தம்பி இலக்குவன் தென் கடற்கரையை அடைகிறான். அங்கதன் தோளில் இலக்குவன் செல்லுகிறான். (4:5)

(2) சுகசாரணர், இராவணனுக்கு, இராம - இலக்குவன் பற்றிக் கூறுமிடத்து, ' அவர்கள் குற்றமற்ற மனதுடன் இருப்பவர்கள்" நினது அழிவிற்கு வேண்டிவந்துள்ள அரசநாயகர்கள்" (11:5) என்று கூறுகின்றனர்.

(3) அங்கதனைத் தூதாகவிட இராமன் அறிவுறுத்தியபோது, இலக்குவன் எதுவும் கூறவில்லை (13)

(4) முதல் போரிலேயே, இந்திரசித்தின் நாகாத்திரத்தினால் இராம இலக்குவர் கட்டுண்டு தரையில் வீழ்கின்றனர் (16:1).

(5) இலக்குவன் வீரத்தைத் திரிசடை ' அன்று விசுவாமித்திர முனிவருடன் சென்ற இலக்குவன், (இராமருடன்) காட்டில் வில்லொலி எழுப்பித் தாடகையை வெளிக்கொணர்ந்தான் (16:2) என்று குறிப்பிடுவாள்.

(6) முதல்நாள் போரில் இராவணன் இலக்குவனது போர்த்திறமையைக் கூறும் பான்மை, கம்பன் தருவது போல் சீராமகவி தரவில்லை.

(7) இராமன், இந்திரனே இராவணனுடன் போர் செய்யின் தளர்வான் என்பதை மறவாதே' என இராவணன் பற்றி இலக்குவனுக்குக் குறிப்பாகக் கூறுவான் (25:6)

(8) இலக்குவன், இராவணனிடம் வில்லேந்தி அம்பெய்துப் போரிடுக; அதுதான் உத்தமருக்கு அழகு' என அறிவுறுத்துவான் (26:4)

(9) முதல்நாள் போரில், இராவணனது, கொடி வில்லை இலக்குவன் ஒடிக்கிறான் (26:5)

(10) கும்பகர்ணனுடன் பொருத இலக்குவன் இராமனின் அனுமதி வேண்டி நின்றான். (30:7) 'பொறுமை, கேடு உணர்ந்து போர் செய்க' என்று அறிவுரை கூறுவான்.

(11) கும்பகர்ணன் - இலக்குவன் போரில், கும்பகர்ணன் இலக்குவனை. "வீரனில் வீரன் நீ, உத்தமன் நீ, நின்று பேச நேரமில்லை, கொடுமைக்கு இருப்பிடமான இராமன் எங்கே?" (35:12) என்று கூறி, இராமனோடு போர்செய்ய விழைகின்றான்.

(12) அதிகாயன் போரில் இராவணன் மயிடனைத் தூதாக அனுப்பிய செய்தியை சீராமகவி கூறவில்லை.

(13) அதிகாயனை எதிர்த்த இலக்குவனிடம், ' நீ வெறும் பையன், நீ சென்று இராமனை அனுப்பு. சில அம்புகளால் உன் செங்குருதி எங்கணும் ஓட உயிரிழப்பாய்' (42l:,10) எனச் சபதம் செய்கிறான்.

(14) இலக்குவன் பிறைச்சந்திர அம்பினால் அதிகாயன் அம்பை முறித்து மற்றோர் அம்பால் அசுரன் நெற்றியைப் பிளந்து, குருதியுடன் அசைவின்றி தேரில் இருக்கச் செய்தான் (42:11)

(15) நடந்த போரில் சமீரணதேவன், பிரம்மகவசத்தை பிரம்மாத்திரத்தால் உடைக்குமாறு இலக்குவனிடம் கூறுகிறான். அதன்படி உடைக்கிறான். (43:8)

(16) இலக்குவன் பாவகாஸ்திரம் தொடுக்க, அதிகாயன் வாயவியாஸ்திரம் தொடுத்தான்: அது சாம்பலாயிற்று; 'ஐஷிகம்' என்ற அத்திரமும் ஐந்திராத்திரத்தால் அழிந்தது (43:4). இச்செய்தி கம்பனில் இல்லை.

(17) வீடணன் இலக்குவனைப் புகழும் "இந்திரசித்தனார்க்கும் இறுதியே இயைவது' (VI : 17: 207) என்பன போன்ற உரைகள் சீராமனில் இல்லை.

(18) அதிகாயன் வீழ்ந்தபின்னர், பிற அரக்கர்கள் ஓடுகின்றனர். பின்னர் நராந்தகன் போன்றோரை இலக்குவன் கொல்லும் செய்தி சீராமனில் இல்லை.

(19) அதிகாயனை வென்ற இலக்குவன், இராமன் திருவடிகளைத் தொழுது வணங்கினான் (44:6)

(20) இந்திரசித்து போரில், இராம இலக்குவர் உடலில் கூரம்புதைக்க, அவர்கள் வீழ்கின்றனர்; வானர வீரக்களும் வீழ்ந்தனர் (37.10)

(21) அனுமனது மூலிகைக்காற்றுப்பட்டு யாவரும் உயிர்த்தெழுந்தனர் (50:4). நாகபாச நிகழ்ச்சியைக்கம்பன் இங்கே கூறுவான்.

(22) மாயாசீதை வதத்தில் வருந்தும் இராமனுக்கும் இலக்குவன் பலவீர வரலாறு கூறித்தேற்றிப் போருக்குத் தயாராக்குகிறான். (61:1-10)

(23) நிகும்பலையில், இலக்குவன் அனுமனுடன், சூரியன், வருணன், அக்கினி, குபேரன், யமன், வாயு இந்திரன், சிவன், பிரம்மா ஆகியோர் படைத்தளித்த அம்புகளைக் தொடுக்கிறான் (64:4). நிகும்பலைப்போர் ஓரிரவும் இண்டு பகலும் நடக்கிறது. (67:6).

(24) இலக்குவன் ஐந்திராத்திரத்தை, மந்திரித்துவிட, அது, மேகநாதன் தலையை அறுக்கிறது (71:5)

(25) இலக்குவன், மூன்று இரவும், பகலும் செய்த போரில் ஏற்பட்ட தளர்ச்சி நீங்க, இராமன் ஏவலில் சுடேணன் மூலிகை மருந்தை மூக்கில் ஊற்றி புத்துயிர் பெறச் செய்கிறான் (72:3)

(26) இராமன், தம்பி இலக்குவனிடம் நீ துணையாக என்னுடனிருக்க இவ்வுலகிலுள்ள எதிரிகளையும் நான் வென்று விட்டவன் ஆவேன்' (72:5) என்பான்.

(27) இலக்குவன் இராமனுடன் சோந்து கடும்போர் செய்கிறான்.

இராமன், 'இருவரும் சேர்ந்து பொருதல் அழகல்ல' என்று கூறுகிறான் (84:11) அவ்வாறே, இலக்குவன் விலகிச் செல்லுகிறான்.

(28) இலக்குவன், இராவணன் கொடி, தேரோட்டியின் கழுத்து இவைகளை அறுப்பான் (86:4)

(29) பிறமனை இருந்த சீதையின் கற்பை ஐயுற்று, அதனைப் போக்குவதற்கு, இலக்குவன், இராமன் கட்டளைப்படித் தீக்குண்டம் தயாராக்க ஆணையிடுகிறான் (113:9)

(30) இலக்குவன், இராமன் முடிசூட்டுவிழாவில் இராமருக்குக் குடைப்பிடிக்கிறான் (160:7) கம்பனில், பரதன் குடைபிடிக்கிறான்.

*அனுமன்:*

(1) சீராமகவி காட்டும் அனுமன், இலங்கை நகர், அரண் போர்கிடங்குகள், காவல் - முதலியன பற்றி விளக்கிக் கூறுவான் (2:5:-11) அசோக வனத்தில் சிறையிருந்த சீதையின் இயல்பை விவரித்துக் கூறுவான் (3:1-11), இராமபிரானின் திருவாளி கொடுத்துச் சூடாமணி பெறுகிறான் (4:2) இச்செய்திகள் கம்பராமாயணத்தில் சுந்தரகாண்டத்தில் இறுதியில் இடம் பெறுகின்றன.

(2) தென்கரை அடைய, இராமன் அனுமன்தோளில் அமர்ந்து வருவான் (4:5)

(3) விபீடணன் அடைக்கலப்பகுதியில், இராமன். அடைக்கலச் சிறப்பைக் கூறுவான். அனுமன் போன்றோர்தம் கருத்தைத் தெரிவிக்கவில்லை.

(4) முதல் போரில் அரக்கர் வீரன் தூம்ராக்கனையும் அவன் படைகளையும் அனுமன் கல்லாலும் மலையாலும் எறிந்து அழிப்பான் (18:6-11)

(5) அகம்பன் - அனுமன் போரில், அனுமன் மார்பில் அம்பேற்க, வெகுண்டு பெருமரமொன்றால் அகம்பனை அழிப்பான் (21:2)

(6) முதல் போரில் அனுமன், இராவணைத் தாக்குவான், அவன் மயங்கிவிழுகிறான் (25:9)

(7) இராவணன், "நான்வீரனல்ல; நீ பெருமை பெற்றவன்" (25:10) என அனுமனிடம் கூறுவான்.

(8) கும்பகர்ணன் வதையில், அனுமன் ஒரு மலையால் அவனைத் தாக்கவே, அவன் பதிலாக ஒரு சூலத்தைவிட, பொங்குங்குருதியோடு அனுமன் தரையில் மயங்கி வீழ்வான் (32:11)

(9) வானரர்களுடன் சுக்கிரீவன் அரக்கரை எதிர்த்துப் போர் செய்த காலைப், பயந்து ஓடும் வானரர்களைத் தடுத்து, ஊறுராவண்ணம் அனுமன் காப்பான் (34:2)

(10) போரின் போது, சுக்கிரீவன் வானரப்படையை ஒழுங்குபடுத்த, அனுமன் அரக்கர்களுடன் போர் புரிந்து உதவுவான் (34:2)

(11) திரிசிரசு - அங்கதன் போரில், மகோதரன், தேவாந்தகன், பங்குபெற, அனுமனும், நீலனும் அங்கதனுக்கு உதவுவர். (40:7) அனுமன் தேவாந்தகனைக் கை முட்டியால் தாக்கிக் கொல்லுவனான் (40:10)

(12) திரிசிரசின் மகுடத்தைப் பிடித்து அவன் மூன்று தலைகளையும் அவன் வாளாலேயே அறுப்பான் அனுமன் (44:1)

(13) இந்திரசித்தின் பிரம்மாத்திரம் இராம இலக்குமணரையும் மற்ற வானரப்படையினரையும் வீழ்த்துகிறது (44:11)

(14) அனுமன் மருத்துமலையைத் தேடிப்பிடிக்கக் காலமாகுதலின், மலையைப் பெயர்த்து, குடைபோலப்பிடித்து, ஓராயிரம் யோசனை கடந்து, இலங்கையை அடைவான் (50:1-2)

(15)அனுமன் இராமன் தாள் பணிந்து, விபீடணன் கரம்பற்றி, அருகில் நிற்பான் (50:5).

(16) சுக்கிரீவன் மகிழ்ந்து அனுமன் இலங்கையில் களியாட்டம் போடச் செய்வான் (51:1).

(17) அனுமன் மார்பில் பாய்ந்த நிகும்பன், மார்பில் முட்டியால் தாக்குகிறான். (56:10) உணர்வுபெற்ற நிகும்பன் உதைக்க, அவனை அனுமன் வீழ்த்துவான் (51:7)

(18) மாயாசீதை நிகழ்ச்சியில் அனுமன், இந்திரசித்தைப் பழித்து தாசரதியின் மீது ஆணை' என்று கூறி, 'குயில் மொழியாளைக் கொன்றவர் நரகத்தில்வீழ்வர்' என்று சபித்துரைப்பான் (59:7-8), தொடர்ந்து, இந்திரசித்தின் தேரை அழிப்பான் (59:11)

(19) நிகும்பலையில், இந்திரசித்து, நீலன், அங்கதன், சாம்பவன், அனுமன், ஆகிய நால்வருடனும் போர் தொடுக்கிறான். அனுமன் மலைகளால், தாக்கவே, அசுரர்கள் மேகநாதனிடன் அடைக்கலம் புகுகின்றனர் (62:3,4,5)

(20) தேரில் வீழ்ந்த இந்திரசித்து மயக்கம் தீர்ந்து வெகுண்டு பத்து அம்புகளால் எய்வான் (67:1)

(21) இராமன் இராவணனைப் போரிலும் சுடேணன் கூறியபடி அனுமன் மருத்துமலை, கொணர்ந்து, வீழ்ந்த இலக்குவனைக் குணப்படுத்துவான் (87:9-11)

(22) இராமன் ஆணை ஏற்று விபீடணன் அனுமனைப் பணிக்க, அவன், சீதையை அடைந்து, "இன்றுமுதல் துன்பம் அழிந்தது; பதினான்கு உலகும் பயம் நீங்கி வாழும்; இராவணன் உயிரற்று வீழ்ந்தான் "(109:4) எனக்கூறுவான்.

(23) விபீடணன், அனுமனை, "ஆழ்கடல் கடந்தான், போருக்கென வந்தவரின் எமனாவான்; இந்திரனும் அஞ்சும் இலங்கையைப் பொடியாக்கினான். இராவணன் அழிவுக்குத் துணையாக எவரும் வழிபடும் வண்ணமானான் (116:8) எனப்புகழ்வான்.

(24) அனுமன், நந்திக்கிராமத்தில் பரதனைக்கண்டு, பஞ்சடி வரையுள்ள செய்திகளை இடைவிடாது விளக்கமாகக் கூறுவான் (129-155)

(25) அனுமன், காவாக்கன், ரிஷபன், நளன் ஆகியோருடன் தீர்த்தம் கொணரச் செய்து, விரைந்து முதலில் வந்து, இராமன் திருவடிகளில் குடத்தை வைத்துத்தொழுது நிற்பான் (159:7)

(26) சீதை அணிந்திருந்த முத்துமாலையை அனுமனுக்கு அளித்து "இராமசரிதம் நிலைத்து நிற்பதற்கு, மேலும் மரணமிலா வாழ்வு உண்டாகுக" (161:4) என வாழ்த்துவாள்.

*விபீடணன்*

(1) இராவணனுடைய மந்திர ஆலோசனையில் முதல்நாள் பிரகத்தன் விச்சிரதத்தன், நிகும்பன், வச்சிரவல்லன் முதலியோர்க்குப்பின், விபீடணன் தன் கருத்தைக் கூறுகிறான். "இராமன் வலியவன்; அவனிடம் வைராக்கியம் கொள்ளலாகாது; இலங்கைக்கு நன்மை சீதையை கொடுப்பதே" (5:8-10) எனக் கூறுவான்

2) இரண்டாம் நாள் கூட்டத்திலும், "அழிவைக்காக்க சீதையை விடுக்க" (6:1) வேண்டுகிறான். கும்பகர்ணன் உரைக்குப்பின்னும், இராமன் தோள்வலிக்கூறி சீதையை விடுக்க (6:4) வேண்டுகிறான்.

3) இந்திரசித்து விபீடணன் கருத்தை மறுக்கவே, மேலும் அறம்கூறி அவதாரச்சிறப்பு கூறுவான். இராவணனின் விபரீத மனநிலை அறிந்து அமைச்சர் நால்வர்களுடன் வீடு, மனைவிடுத்து, இராமனிடம் அடைக்கலம்புக, வானத்தில் உயர்வான் (6:9)

4) 'அடைக்கலம் கொடுப்பது அறிவோர்க்கு அழகு' என இராமன் சுக்கிரீவன், விபீடணனுக்குள்ள நல்லுறவுபற்றிக்கூறி, இராமனிடம் அடைக்கலமாகி, இலக்குவன், இலங்கை வேந்தனாக விபீடணனுக்கு முடிசூட்டுவான் (9:1-2)

5) இலங்கைப் படை பற்றி செய்திகளை விபீடணன் இராமனுக்குச் சொன்ன செய்தி சீராமனில் இல்லை. மாறாகப் போரின் நடுநடுவே செய்திகளைக் கூறுவான்.

6) பிரகத்தன் வானரர்மேல் படையெடுத்து வரவே, விபீடணன் இராமனுக்கு அறிமுகம் செய்யும் முகமாக இவன் மூன்றில் ஒரு பங்குப்படையின் தலைவன், சிவன்கூட இவனிடம் தோற்பான்; சாத்திரங்கள் வேதங்கள் கற்றவன்; வில்லாளி; இலங்கையின் இந்திரன் (22:6) எனப் பலபடக்கூறுவான்.

7) பிரகத்தன் நீலனால் இறந்துபட. இராவணனின் தேரேறிப்புறப்படுகிறான். இராமன் வினவ விபீடணன், இராவணனை 'உதயசூரியனுக்குச் சமமானவன், அகங்காரி, வாரணப்பறகள், சிங்கச்சின்னம் அணிந்தவன், இவன் மகன் இந்திரசித்து, பேருக்கு ஒத்தவன், அடுத்தவன் அதிகாயன் ( 24:1-4) எனத் தனித்தனியே அறிமுகப்படுத்துவான்.

(8) மேலும், விபீடணன், பத்துத்தலைகள், இருபது நீண்ட கைகள் பலவித அம்புகள் சிவந்த உடையும் சந்தனமும் இட்டு,கருத்த உடலுடன் வருபவன் இராவணன் (24:9)எனக் கூறுவான்

(9) கும்பகர்ணன் போரில், விபீடணன் இராமன் வேண்ட அவனை அறிமுகப்படுத்துவான். 'நீண்ட கரத்தில் சூலமொடு நிற்கும் இவன் பெரும்பாவியின் அன்புத்தம்பி; இளமையிலேயே உயிரினங்களை விழுங்கி நடத்தவன்; பிரம்மசாபத்தால் ஆறுமாதம் உறங்கி, ஒருநாள் விழித்திருப்பவன் (31:4-5) என மொழிவான்.

(10) பின்னர், தேவாந்தகன், நராந்தகன், போன்றோர்களை இராமனுக்கு விபீடணன் அறிமுகம் செய்வான் (37:5,6,7)

(11) விபீடணன் அதிகாயனை அறிமுகப்படுத்தும் போது, இவன் இராவணன் மைந்தன், ஏழு உலகும் பெயர் பெற்றவன். தேவருலகுக்கு நிரந்தர துன்பளிப்பவன்; பெரும்வரத்தான் அஜன் இவனுக்கு முறியாத கவசமொன்றினை அளித்தான்; போரில் இராவணனுக்கு ஒப்பாவான் (41:10,11) எனக்கூறுவான்.

12) மாயாசீதை வதத்தில் வருந்திய இராமனிடம் விபீடணன், அனுமன் சொன்ன சீதைச்செய்தியை மறுத்து, அரும்பெருஞ்செயல்களில் தர்மத்தைப் பின்பற்றி நடந்தால் துன்பமே வராது; இது ஞானிகள் கூற்று; சீதைபற்றிய செய்தி பொய், தர்மமே நல்லது; வெல்லும் (61:7,8) என ஆறுதல்மொழி கூறுவான்.

13) இந்திரசித்து போரில் பங்குபெற விபீடணன், இராமனிடம் வேண்டுகிறான். (62:4) அவன் நிகும்பலை சென்ற செய்தியைக் கூறுவான் (62:6) "இலக்குவனை நிகும்பலைக்கு அனுப்பவேண்டும் (62:7) துணையாக நானும் வருகிறேன்" (62:9,10) எனக்கூறுவான்.

14) இந்திரசித்துக்கும் விபீடணனுக்கும் சொற்போர் நடக்கிறது; இலக்குவனிடம், வேள்வி நடவாது செய்து, கொல்லுமாறு வேண்டுகிறான் (63:2)

15) விபீடணன், நாணொலி எழுப்பி இந்திரசித்தைப் போருக்கு அழைக்கிறான், இந்திரசித்து வெளியே வந்து, உன்னையன்றி வேறு யாரறிவார்? நீ இங்குப் பிறந்து வளர்ந்தும், எங்களுக்கும் உடன்பிறந்தோர்க்கும் இந்நகருக்கு உதவி கிடைக்கும் என்றிருந்தேன்; ஆனால், நீயோ எதிரிகளுக்கு உளவு சொல்ல உதவினாய் (68:8) எனப் பழித்துரைப்பான்.

16) மேலும், 'வம்சத்திற்குக் களங்கம் உள்ளவனே உனக்கு ஆயுள் முடிந்துவிட்டது எனக்கருதுக. அறிஞர், உற்றார், உறவினர், குருக்கள் மற்றுமெல்லாம் விடுத்து எதிரிகளோடு சேர்ந்த நீ கருணை அற்றவன் (63:9) என வைவான்.

17) விபீடணன் இந்திரசித்தனிடம் மேற்கூறியவற்றை மறுத்து, சதியால் அறிவுகெட்டு அலைவது ஒரு நாளும் உத்தமருக்குப்

பொருத்தமானது இல்லை; சரகுலத்தில் பிறந்தவர் இதனைக்கைவிடலாகாது[12] எனக் கூறி, மேலும் 'தர்மத்தோடும் தேவர்களோடும் முனிவர்களோடும் உற்றவர்களோடும் எதிரிகளோடும் கருணை பூண்டோன், மாற்றான் செல்வத்துக்கு ஆசைப்படான். இராவணன் ஆசைப்பட்டு செய்த தவறுகள் எண்ணிலாதன, ஆதலால் பிரிந்தேன் எனப்பதிலளிப்பான்.

18) விபீடணன், இந்திரசித்துப்பற்றிக் கூறும்போது, "தந்தையைவிடக் கொடூரமானவன்; சூழ்ச்சிக்காரன், தர்மம் இல்லாதவர்க்கு நல்லவன், மானமுடையவன், தீங்கு செய்தவன் அழிவான் (64:4,5) எனக்கூறுவான்.

19) இந்திரசித்து விபீடணன் மேல் பதினெட்டு அம்புகளை எய்தான். அவை அவன் உடலில் பதிந்தன; தளர்வுறுகிறான் (65:9)

20) இலக்குவன் அம்புபட்டு இந்திரசித்து தளர்வதைக்கண்டு, அவனைக் கொல்ல இதுதருணம் என விபீடணன் அறிவுறுத்துகிறான். அவ்வாறே இலக்குவன் செய்ய, இந்திரசித்து தேரில் உணர்வற்று வீழ்வான் (66:10)"

21) இந்திரசித்து இலக்குவன் கடும்போரில் விபீடணன், தேரோட்டியின் தலையை அறுத்து, குதிரையைப் பிளக்கிறான் (69:9)

22) நிலத்தில் குதித்து நின்ற இந்திரசித்து, விபீடணன் உடலைப் பொடிபடச் செய்ய வேலால் தாக்கவே, இலக்குவன் ஏற்கிறான் (69:11).

23) இராம - இராவணப்போரில் இலக்குவனை இராவணன் தாக்க, விபீடணன் பெருங்கதையேந்தி, அவன் குதிரைகளைக் கொன்று, தேரில் பாகங்களை உடைக்கிறான் (76:6)

24) போர்க்களத்தில் இராவணன் வீழ்ந்த போது, சகோதர பாசத்தால் விபீடணன் அவன் சிறப்பைக்கூறி வருந்துவான்; இராமன் அவனுக்கு ஆறுதல் கூறுவான் (102:1-6)

25) இராமன், விபீடணனை இராவணன் உடலை அடக்கம் செய்ய வேண்ட, 'அவன் நான் அதற்கு தகுதியற்றவன் (107:5,6) எனக்கூறுவான். இராமன் சிலகூற, விபீடணன், ஈமச்சடங்குகளை இராவணன் உடலுக்குச் செய்வான் (108:1)

26) சிறையிருக்கும் சீதையைக் குளிப்பாட்டி அலங்கரித்துக் கொணர விபீடணனுக்கு இராமன்கூற, அனுமனைக்கொண்டு அதனைச் செய்விப்பான் (110:4)

27) விபீடணன் சீதை அலங்கரித்து வருவதில் தவறில்லை என விளக்கிக்கூறுவான் (112:2-7)

28) அயோத்தி செல்ல விபீடணன், இராம - இலக்குவருக்குப் புட்பக விமானத்தை கொண்டு வருவான் (112:2-7)

29) விபீடணன், தன் கிரீடத்தை இராமன் திருப்பாதங்களில்

வைத்து வணங்குவான், வானர வீரர்களுக்குப் பரிசுகள் பல வழங்குவான் (112:8,9,10).

30) இராமன் முடிசூட்டுவிழாவுக்கு, புட்பக விமானத்தில் இராமன் இலக்குவன், சுக்கிரீவனுடன் செல்லுவான் (113:2)

31) முடிசூட்டுவிழாவில் பங்குபெற்று, இராமபிரானிடமிருந்து பரிசுபெற்று இலங்கைக்கு மீளுவான் (164:5)

## *இராவணன்*

(1) அசோகவனத்தில் காவலில் இருக்கும் சீதையை அனுமன் காண்கிறான். அந்நேரம், இராவணன் சீதையின் முன் ஆசைவார்த்தைகளை அள்ளி வீசுகிறான். சீதை அவனை நிந்திக்க, "உனது உடலைப்பிளந்து இரத்தம் குடித்து இனி என் துன்பம் தீர்ப்பேன்" என்று கூறி வாளை ஓங்குகிறான். மனைவி தானியமாலனி தடுக்க, விடுகிறான் (3:2-4) கம்பன் சுந்தரகாண்டத்துள் இதனைக், கூறுவான்.

(2) இராவணன் மந்திர ஆலோசனையில், "இராமனோடு போர் தொடுப்பதா? இரவு மறைந்து நின்று கூட்டத்தோடு பகவர்களை அழிப்பதா?" என்னும் பொருள் (4:9) ஆலோசிக்கப்படுகிறது.

(3) முதல் நாள் கூட்டத்தில் பிரகத்தன், துன்முகன், வச்சிரதத்தன், நிகும்பன், வச்சிரவில்லவன் - முதலியோர் போர் தொடுக்க (5:1-10) கூறுகிறான். விபீடணன் மறுக்கிறான்.

(4) இரண்டாம்நாள் கூட்டத்தில் கும்பகர்ணன் மறுத்தும் உடன்பட்டும் பேசுகிறான். அதிகாயன், மகாபார்ச்சுவன் ஆதரிக்கிறனர். விபீடணன் பல நீதிகளைச் சொல்லி எதிர்ப்பான் (6:1-8)

(5) இராவணன் 'அனுமதியின்றி பிறபெண்ணை அணைந்தால் தன் தலை வெடிக்கும் என்னும் சாபத்தைக்கூறுவான்(7:7) விபீடணன் இராம அவதார நோக்கத்தைக் கூறி, சீதையை விடுவிக்க வேண்டுகிறான் (7:48)

6) இந்திரசித்து விபீடணனை இகழ்ந்து கூற, பின் இராவணன் "நீ எனக்குத் தம்பியாய் இருந்தாய்; இந்த உறவு மூலம் இனியும் நீ பேசமுடியாது", (8:6) என்றுக்கூறுவான்; விபீடணன் தானே வெளியேறுவான்.

(7) இராவணன், சுகசாரணர்களை ஒற்றறியப்பகைப்புலம் அனுப்புகிறான் (10:1) அவர்கள் திரும்பிவந்து வானரவீரர்கள் பற்றிக் கூறுகின்றனர் (11:1-5).

(8) ஒற்றர்கள் உரைகேட்ட இராவணன், மாயையாகப் போர்ச்சிலையும் செங்குருதி நனைந்த பொய்த்தலையுமாக சீதையின் முன் வந்து "இது தாசரதியின் தலையும் சிலையுமாகும்" (11:9-11) என்று கூறுவான். மால்யவான் அறிவுரையைப் புறக்கணிக்கிறான் (12:8).

(9) அங்கதன் தூதின்போது "இராம இலக்குவரை இன்று இரவிலேயே கொல்வேன் (14:6)" என்று மறுமொழி கூறுவான்.

(10) முதல்நாள் போரில், இந்திரசித்தின் படையால் இராம இலக்குவர் விழவே, இராவணன் இலங்கையை அலங்கரித்துச் சீதையை விமானத்தில் ஏற்றிக்காட்டுகிறான் (16:1-2) திரிசடை இராமன் வீரவரலாறு கூறி உண்மையை உணர்த்துவாள்.

(11) உணர்வுபெற்ற இராம இலக்குவருடன் போர் செய்ய இராவணன், தும்ராக்கனை வேண்டிய அளவு படையுடன், அனுப்புகிறான் (18-1).

(12) வச்சிரதமிட்டிரன், இராவணன் ஆசிபெற்று போர் செய்வான் (18:1), அனுமன் அவனைக் கொன்றான் (18:2).

13) பெரும்படையுடன் இராவணன் வரவே, இராமனுக்கு விபீடணன் அறிமுகம் செய்கிறான். (24:1); "இவன் இராவணன், இலங்கையர்கோன், உதயசூரியனுக்கு சமமான முகமுடையவன். சிவனின் அன்புக்குப் பாத்திரமானவன், வாரணப்பற்கள், வெள்ளைநிற எகிறுபடைத்தவன், சிங்கச்சின்னத்தைத் தேரில் அணிந்தவன்; பெருவீரன்; இந்திரசித்து இவன்மகன்" (24: 1-3) என விபீடணன் கூறுவான்.

(14) இராவணன் இலக்குவனிடம் "எனக்கு இணையில்லாதவரோடு நான் பேசுவதில்லை. என்னோடு வருவதானால், கண்ணிமைக்கும் நேரத்தில் எமலோகம் அடைவாய்" என்பான் (26:2,3)

(15) இராமன் - இராவண முதல் போரில் தோற்றுப்படையிழந்து நின்ற இராவணன், தன் தலைவிதியை நினைந்து வருந்தி கோட்டைக்குள் புகுவான் (27:10)

(16) இராமனது பிரம்மாத்திரத்தால் வீழ்ந்த இராவணன் மெல்லமெல்ல உணர்வுபெற்று, தன் கைகளால் சிரங்களைத்தாங்கிப் புலம்புவான் (36:1 -2) திரிசிரசு பலபடச்சொல்லி அவனைத் தேற்றுவான் (36:10 -11)

(17) கும்பகர்ணன் வதைக்குப்பின், அதிகாயன் இலக்குவனது பிரம்மாத்திரத்தால் இறக்கிறான். போருக்குச் சென்று வீரமரணம் அடைந்த படைத்தலைவர்களை நினைந்து இலங்கை வேந்தன் வருந்துவான் (44)

(18) இந்திரசித்து இலக்குவன் படையால் அழிகிறான். செய்திகேட்ட இராவணன் மயங்கி வீழ்கிறான்; எழுந்து அவனது வீரவரலாற்றை கூறி அழுவான். (73:3)

(19) "முன்பு இலங்கை நகரில் துன்பம் சூழ்ந்ததாக நாம் அறிந்ததே இல்லை. இங்கு இருக்க உனக்கு விருப்பமில்லையா? மண்டோதரியையும் என்னையும் மறந்து காலபுரி சென்றனையோ?" (73:6,10) எனக்கூறி வருந்துவான்.

(20) அசோகவனத்தில் சீதையைக் கொல்லக்கருதி வாளேந்திய இராவணனை, சுபார்ச்சன் என்னும் அமைச்சன் பெண்பழி கூறித்தடுத்தான் (75:2,7)

(21) மண்டோதரி, "இந்தத்தயரதரன் மனைவிக்குத் துன்பம்

வந்ததால் தானே இப்பூமி இப்படியெல்லாம் இளகிமறிந்தது (74:9) எனினும் போர் செய்க" (74:10) எனக்கூறுவான்.

(22) இராவணன், ஆசராத்திரத்தால் இராமனின் ரௌத்திராத்திரத்தைத் தடுக்கிறான். பைசாகிசா அத்திரத்தை இராமன் காந்தர்வாத்திரத்தால் தடுக்கிறான் (85:2-4)

(23) இராவணன், பல்வேறு உயிரினமுகமுடைய அம்புகளால் இராமனைச்சுற்றும் அணிவகுத்து நிறுத்தி வானரப்படையைத் துன்புறச்செய்வான் (85;5) இராமன் பாவகாத்திரம் விட்டு அழிக்கிறான் (85:6)

(24) இராமன், உடலைப்பொடியாக்கி இராவணன், உலகை , ஆழி, வேல், மழு, ஈட்டி, சூலம் முதலிய பலவற்றை வில்லிருந்து புறப்படச்செய்கிறான். இராமன் காந்தர்வாத்திரத்தால் அவற்றை நெறிகெடச் செய்கிறான் (85:9, 10)

(25) இராமனின் பாசுபதத்திரத்தை இராவணன் ராக்சாத்திரம் அழிக்கிறது. வேறுபாணத்தால் இராமனின் தேர், கொடிக்கம்பு முறிகிறது. அவன் மேலும், கணையொன்றால் ரகு, ரோகிணி, புதன் இவற்றை நிலைகுலையச் செய்கிறான் (91:4,6)

(26) இராமன், இராவணனிடம், நீ செய்த கர்மபலத்தினை நீ அனுபவிப்பாய் முனிவர்க்கும் விண்ணவர்க்கும் அசுரர்க்கும் தவறிழைத்ததன் பலனை அனுபவிக்கிறாய் என்பான் (93:2,3)

(27) அகத்திய முனிவன் இராமனிடம் கூறிய ஆதித்ய இருதய மந்திரத்தை ஓதி, பள்ளியம்பொன்றால் இராவணன் கொடிமரத்தை அறுத்திடுவான்; அவனது தேர்குதிரைகள் அழிக்கின்றன (98: 8-9)

(28) இராமன், அஜநாமம் உருவிட்டு, இடக்கையில் வில்லேந்தி பைதாமகா அத்திரத்தை இராவணன் மார்பில் விடுவான். அது அவன் உயிரை எடுத்துப்பிணத்தோடு பொருத்தமாகப் புறப்பட்டு பூமியில் சென்று விரைவாக அம்பறாத்தூணியில் நுழைவதாயிற்று (100:11)

(29) இராவணன், உடலில் மேல் விழுந்து அசுரப்பெண்டிர் அழ, மண்டோதரி பலவாறு அழுதுஅரற்றி அப்பால் அகலுவாள் (107: 1,2)

(30) இராமன் வீடணனுக்கு பிறப்பு இறப்பு பற்றிய தத்துவம் கூறி, இராவணனுக்கு இறுதிக்கடன்களைச் செய்ய ஆணையிடுவான், அவனும் அவ்வாறே செய்வான் (107:11)

***கும்பகர்ணன்***

(1) தென்கரையடையும் இராமன் படையை எதிர்க்க இராவணன் மந்திராலோசனை நடத்துகிறான். அதில் கும்பகர்ணனும் இடம்பெறுகிறான் (5)

(2) கும்பகர்ணன் 'சீதையை விடுப்பது நலம்' எனக்கருத்துரைகூறக்

கேட்டு இராவணன் வெகுளவே, அவன் "பெரிய சூலம் ஏந்தி வானரப்படையை அழிப்பேன், கருங்குழலாள் சீதையுடன் நீங்கள் மகிழ்ந்திருக்க வேண்டிப் போர்செய்து இராமனின் தலையெடுப்பேன்" என அறிவிப்பான் (6:8,10)

(3) இராவணன், முதல் நாள் போரில் தோல்வுயுற்று மனத்துயரம் குறைய உறங்கும் கும்பகர்ணனை உணர்த்த ஆணையிடுகிறான் (27:11)

(4) கும்பகர்ணனை எழுப்ப, வாசனைப்பொருட்கள், போர்க்கருவிகள் முதலியவற்றைக் கையாண்டும் இயலாமையால், குதிரைகள், ஒட்டகங்கள், யானைகள் போன்ற விலங்குகளை அணிவகுத்து அவன் உடலில் நடக்கச் செய்வர் (28:8,9)

(5) விழிந்தெழுந்த கும்பகர்ணன், விரைவில் உரைப்பான்; நமக்குத் தீங்கு செய்தவர் எவர்? அசுரரோ? தேவரோ? என வினவுவான் (29:3)

(6) கைகதி என்னும் அரக்கன் நடந்தவற்றை உரைக்கக் கும்பகர்ணன், வானரங்களை உடலொடு விழுங்குவேன், இராம இலக்குவரின் குருதிகுடித்து அவர்கள் ஊனை வாயில் வைத்தபடித் தங்கள் தாள்பணிவேன் (29:7) என்று இராவணினிடம் வஞ்சினம் உரைப்பான்.

(7) மேலும், இராமன் வெற்றிபெறான்; அவனுக்கு மரணம் வந்துவிட்டது; நீங்கள் கோபமடையாதீர் என்று ஆறுதல் கூறுவான்

(8) கும்பகர்ணன், "இராம இலக்குவரும் வானரரும் எனக்கு உணவாவர், சீதைக்கு உன் மீது அன்பு வரும்; விரைவில் உன்னைச்சரணடைவாள்" (30:2) எனக் கூறுவான்.

(9) பின்னர் நயமாக, "நல்லவர் தீது செய்யார்; இராமனோடு போர் வேண்டாம்; தீங்குவரும் முன்பே சீதையை இராமனிடம் கொடுத்து விடுக" (30 : 4) என அறிவுரை கூறுவான்.

(10) மேலும், கும்பகர்ணன், சூர்ப்பனகையல்லவா? இலக்குவனை எடுத்து சென்றபின், நீ சீதையைக் கவர்ந்து இங்குவைத்ததால் என்ன நன்மை ஏற்பட்டது? என வினவுவான் (30:5)

(11) என் தவறுகளைச் சுட்டிப் புத்தி புகட்டவல்ல, உன்னை நான் உணர்த்தியது; தங்கை சூர்ப்பனகையின் பல்லை உதிர்த்து மூக்கும் மார்பும் அறுத்த பகையின் வளர்ச்சியே போர் என இராவணன் பதிலிறுப்பான் (30:6)

(12) போருக்கு எழுந்த இராவணனைத் தடுத்து அவன் தாள் வணங்கி, கும்பகர்ணன் சூலமுமேந்தி முழங்கி, "ஆயிரம் இராமர்கள் சூழ்ந்து எதிர்த்தாலும் என்னை அசைக்கமுடியாது; இந்திரன் கூட என்னெதிர் நிற்கமுடியாது; சீதையின் பொருட்டு எழுந்த இப்போரில் இராம - இலக்குவரின் குருதிவெள்ளம் குடித்து, ஈரலைத்தின்று விளையாடிய பின்னரே மற்று எல்லாம்", என வஞ்சினம் கூறுவான் (30:10, 11)

(13) போர்க்களத்தே நிற்கும் கும்பகர்ணனை இராமன்

வீடணனிடம் யாரென்று வினவ, "பாவிகளின் பெரும்பாவியான பன்முகன் தம்பி, இளமையிலேயே உயிர்கள் பலவற்றை விழுங்கி நடத்தவன்; பிரம்மனிடம், ஆறுமாதம் உறக்கமும் ஒரு நாள் விழிப்புமாக சாபம் பெற்றவன்' என-அறிமுகம் (31 : 4-6) செய்வான்.

(14) கும்பகர்ணன் போர்க்களம் வரவே, மேகம் கனல் மழைபொழிய நிலம் நடுங்க, காற்று ஓய, அவலக்குரல் கேட்கிறது. 'கும்பகர்ணன் போரில் இறப்பான்' என்னும் அறிவிப்பு உண்டாகிறது (31:9)

(15) கும்பகர்ணனது நீண்ட சூலத்தில் கழுகு வந்து அமர்கிறது; இடக்கண்ணும் புருவமும், கையும் படபடவெனத்துடிக்கின்றன. அவன் இச்சகுனங்களை பொருட்படுத்தாது போர்மேல் செல்வான் (31:10)

(16) கும்பகர்ணனின் ஆர்ப்புரை கேட்டு வானவர் நடுங்கினர், துவிதன் மலையொன்றை எடுத்து எறிவான்; தடியன் மார்பில் பட்டு அது பொடியாகிறது (31 : 11)

17) மாருதி 'ஒரு மலையால் கும்பகர்ணனை அழிப்பேன்' என கோபமுற்று எறிய, அவன் தடுத்து மாருதியின் மார்பில் சூலத்தை எய்வான். பொங்கும் குருதி தரையில் ஓட மயங்கி வீழ்வான் அவன். (32 : 10)

(18) போர்க்களத்தில் விழுந்த சுக்கிரீவனைக் கும்பகர்ணன் எடுத்துச் செல்லவே, அரண்மனைப் பெண்கள் வீசிய மலர், மாலை, தேன், களபம் இவற்றால் உணர்வு பெற்ற சுக்கிரீவன், கும்பகர்ணனின் இரு செவிகளைப் பறித்து மூக்கையும் கடித்து எடுத்துக் கொண்டு வானவீரன் வருவானாயினன் (34:4,5).

(19) கும்பகர்ணன் நாணி, இரும்பு உலக்கையால் வானர வீரர்களை நொறுக்குவான், வழியே சிலரை விழுங்கவே, அவர்கள் செவி வழி வேளியேறுவர் (34:8,9).

(20) இராமன்-கும்பகர்ணன் போரில் வானரர் அஞ்சியோடினர். உலக்கை ஏந்தி சுழற்றும் அவன் எமனைப்போலப் போரிடுகிறான். இராமன் கணையால் அசுரப்படை அழிகிறது. (35:1)

(21) இராமன் வில் ஏந்த, என்னை வென்று பார் என வினவ, கும்பகர்ணன், கரனும் வாலியும் விராதனுமல்ல; நான் கும்பகர்ணன் என்பதை நினைவில் கொள்ளவேண்டும் (35:2) என்கிறான்.

(22) இராமன் அம்பு தொடுக்க, கும்பகர்ணன் உலக்கை, மரம் இவற்றால் தாக்குவான். இராமனின் பாவகாத்திரம் அவற்றை முறித்தது. அரைப்பிறை வடிவிலான இரு அம்புகளால் அவன் இரு தொடைகளையும் அறுத்து இடுவான் இராமன். புரந்திரா அத்திரத்தால் எய்யவே, அது கும்பகர்ணது தலையை அறுக்கிறது. 35:9,10)

(23) கும்பகர்ணனின் உடலில் ஒரு பாகம் பூமியிலும், மறுபாகம் கடலிலும் வீழ்கிறது. இதனால், அசையும் ஆழி உயர்கிறது; பூமி தாழ்கிறது; விண்ணவர் மலர்மழை பொழிகின்றனர்; வானவர் தொழுது வணங்குவர் (25:11)

*அதிகாயன்*

(1) இராவணன் மந்திராலோசனையில் அதிகாயன், 'சீதையுடன் பொருந்தி வாழ, இராமனின் சிரம்களைவேன்' எனக் கூறுவான் (6:10).

(2) போர்க்களத்தே தோன்றிய அதிகாயனை விபீடணன், இவன் இராவணன் மைந்தன்; ஏழுலகும் பேர் பெற்றவன். தேவருலகுக்கு நிரந்தரமாகத் துன்பம் செய்பவன்; பெருவரத்தால் பிரமனிடத்தில் அழிதற்குரிய கவசம் பெற்றவன் என அறிமுகம் செய்வான் (41:10).

(3) மேலும் "போரில் இராவணனுக்கு ஒப்பாவான், திறமையான அம்புகளை இவனறிவது போலப் பிறர் அறியார்? எனக்கூறுவான் (41:11).

(4) அதிகாயன், இடியென அலறிப் பகைவரும் அஞ்சும் வண்ணம் வில்லொளி எழுப்பி போருக்கு வருவான்; அவனை எதிர்த்த மைந்தன், துவிதன், குமுதன், நீலன், சரபன் முதலியோரைத் தம் அம்புகளால் பொடி செய்வான் (42:1,2)

(5) அதிகாயன் வரவைக் கண்ட வானரர் 'இவன் வரவு கும்பகர்ணனது வரவு போன்றது' என்பார், அவன், எளியோரிடம் நான் போர் செய்வதில்லை: வில்வீரர் இருந்தால் போருக்கு வருக'என முழங்குவான் (42 : 3)

(6) போர்க்களத்தே தன்னை எதிர்த்து வந்த இலக்குவனை, அதிகாயன், 'நீ வெறும் சிறுபையன்; நீ சென்று இராமனை என்னோடு பொரவரச் சொல்; என் கொடுங்கணையால் காலபுரிக்கு அவனை அனுப்புவேன்' என வீரவுரை கூறுவான் (42:45)

(7) இலக்குவனும் அதிகாயனும் சொற்போர் புரிய, அதிகாயன் விற்போருக்குத் தயாராகின்றான் (42:6)

(8) அதிகாயன் விடுத்த கணையை இலக்குவன் பிறைச் சந்திர அம்பொன்றால் முறிப்பான், பின்னொரு அம்பை விடவே, அது அதிகாயன் நெற்றியைத் தாக்குகிறது: இரத்தம் கொட்ட, அசைவின்றித்தேரில் விழுகிறான் (42:11).

(9) அதிகாயன், கண்களில் வழிந்த குருதியைக் கையால் துடைக்கவே, இலக்குவன் திறமையை அதிகாயன் மெச்சி, 27 அம்புகளை விட, இலக்குவன் ஐந்துஅம்புகளால் அழித்தான், இவ்வாறே பதினாறுக்கு ஏழு, பதினைந்துக்கு இரண்டுமாக விடுத்த, அசுரப்படையை இலக்குவன் ஒட்டுவான் (43:1).

(10) அதிகாயன் விட்ட, அம்பு இலக்குவன் மார்பில் தைக்க, வெகுண்டு பாவகாந்திரம் விடவே, அவன் பதிலான வாயவியாத்திரம் விடுவான். இரண்டும் மோதிச் சாம்பலாகின்றன., (43 : 4)

(11) அதிகாயன் 'ஐசிகம்' என்ற வரம்பெற்ற அம்பைவிடவே இலக்குவன் ஐந்திராத்திரம் தொடுப்பான். இதனால், அது ஆற்றலிழக்கிறது. (43:5)

(12) அம்புமழை பொழிந்துக் களைத்துநின்ற இலக்குவனுக்கு வாயுபகவான், அதிகாயனின் இறப்பின் இரகசியம் கூறி, பிரம்மாத்திரத்தால் அவன் கவசத்தை அழிக்கச் செய்வான் (43:8)

(13) இராமன் திருவடிகளை வணங்கி, இலக்குவன் வெற்றிதரும் பிரம்மாத்திரத்தை அதிகாயன் மேல் தொடுப்பான். அது அதிகாயனின் கரங்களையும் கால்களையும் வேறு வேறாகத் துணித்தது. அதிகாயனின் தலை மேருமலையின் சிகரம்போல வேறுபட்டுக்கிடந்தது (44:5)

(14) இராவணன் அதிகாயனது இறப்பு அறிந்து, மனங்கலங்கினான் (44.11)

## *இந்திரசித்து*

(1) இராவணனது மந்திரலோசனையில் அமைச்சர்கள், 'தேவ அரசர்களை வென்று, தேவேந்திரனைப் பிடித்துக்கட்ட உன் மகன் இந்திரசித்தால் இயன்றது' என இராவணனுக்கு அவன் வீரத்தை நினைவுப்படுத்துவர் (4:10)

(2) 'சீதையை இராமனிடன் அளிக்க' என்று கூறிய விபீடணனிடம் இந்திரசித்து, "போரில் எதிரிகளைப் பின் தொடராதவர்களுக்குத் துக்கம் எப்போதும் வருவதில்லை; விபீடணன் என்ற பெயர் உனக்கு மிகப்பொருந்தும்" எனப் பழித்துக்கூறுவான் (8:2,3).

(3) முதல் நாள் போரில், இரவு இந்திரசித்தின் தேரை அங்கதன் அழிக்கிறான், மறைந்து நின்று இந்திரசித்து நாகாத்திரம் எய்யவே, அது வானரப்படையையும் இராம இலக்குவரையும் பிணிக்கிறது (15:7,8).

(4) சீதை நாயகன் அழிவைக் சீதைக்குக் காட்ட இந்திரசித்து இலங்கையை அலங்கரித்து விமானத்தில் பலவந்தமாக ஏற்றிப் போர்க்களத்துக்குக் கொண்டு வருகிறான். திரிசடை இராமனின் முன்னைய வீரவரலாறு கூறி அவளைத் தேற்றுவாள் (16:1,2)

(5) இறைருளால் கருடன் வரவே, அதன் நிழல் பட்ட இராம இலக்குவரும் வானரப்படையும் எழுந்த செய்தியை அறிந்த இராவணன், அரக்கர் பலரைப்போருக்கு அனுப்புவான். அவர்கள் வானரப்படையால் அழிக்கின்றனர் (20:24)

(6) போர்க்களத்தே திரிசிரசு, நராந்தகன், தேவாந்தகன், அதிகாயன் முதலியோர் இறந்துபடவே, இராவணனிடம் இந்திரசித்து "இராமலக்குவரை அம்பால் எய்து, வானரவீரர்களையும் கொன்றொழித்து எதிரிகளால் தொல்லையில்லாமல் செய்வேன்'[13] (46:2) என சூளுரைப்பான்.

(7) பெரும்படை சூழப்போர்க்களம் சென்ற இந்திரசித்து, அங்கு ஒரு யாகம் செய்தான், அதனால், அவன் தேர் அழியாதிருக்கும் வரமும் விரிஞ்சாத்திரமும் பெறுகிறான் (46:4-5).

(8) இந்திரசித்து, 'இராம'- இலக்குவரால் வந்த பெருந்துன்பம் இன்றே தீரும்' என வஞ்சினம் கூறிப்போர் செய்கிறான். தரை, கடல்,

பூமி, எட்டுத்திசை, பகல், இரவு, என்று தெரியாதபடி மாயப்போராற்றுவான். (46:10,11)

(9) இந்திரசித்தின் வாள், கதை, அம்பு, உலக்கை முதலியவற்றால் வானரப்படை துண்டுபடுகிறது. எண்பது, எழுபது என அம்புகளால், மாயத்தால். எய்வான் அவன் (47:2,3)

(10) வானரப்படைவீரர்கள் வீழ்ந்துபட, இராமன், 'இங்கினி நம்மால் ஒன்றும் செய்வதற்கில்லை; நம்மை காப்பாற்றிக் கொள்ள வேண்டும்' எனச் சொல்லிமுடிக்கும் முன் இந்திரசித்தின் அம்புளால் உயிர்ப்பின்றி இராம - இலக்குவர் வீழ்கின்றனர் (47:10-11)

(11) அனுமன் கொணர்ந்த மருந்துமலையால், உயிர்ப்புற்று வானரர் களியாடினர். அரக்கர்படையை அங்கதன் சுக்கிரீவன் முதலியோர் அழிக்கின்றனர் (53 -57)

(12) மகரக்கண்ணன் இறந்த செய்தி அறிந்து, இந்திரசித்து, இராவணன் அறிவுரையுடன் போருக்கு வருகிறான். அனுமன் எதிர்க்கிறான். அப்போது, உடல் தூசுபடிய, தவவேடம் பூண்டு உடல்தளர்ந்து மைதிலி அசுரனின் ரதத்தில் இருப்பதைக் காண்பான். (56:3,4)'

(13) இந்திரசித்து, வாளை எடுத்துச் சீதையை வெட்டமுயன்ற போது, அனுமன், "போரில் நீயின்றி யார் இது செய்வார்; அரக்கர் குலத்தில் பிறந்தது நன்று" எனக் கூறுவான் (56:6,7)

(14) போரில் இலக்குவன் வீழ்ந்த செய்தி கேட்டு வருந்தும் இராமனை, (அனுமன் மருத்துவமலையால் குணமடைந்தபின்) இலக்குவன் தேற்றுவான். நிகும்பலை வேள்விபற்றி அறிந்து விரைவாக வீடணனுடன் அவன் போருக்குப் போவான் எனப்பகர்வான். (62)

(15) நீலன், மாருதி, அங்கதன் முதலியோர் அசுரர்களுடன் போர்புரிகின்றனர், மாருதியும் விபீடணனும், நாணொலி எழுப்ப, இந்திரசித்து வெளியே வருகிறான்; 'எதிரிகளுக்கு உளவுகூறும் நீ அழிவாய்' எனச் சபிக்கிறான் (63:7) விபீடணன் தடுத்து, அறிவுரை பல கூறுவான் (63,64).

(16) இந்திரசித்து இலக்குவனுடன் பல்வேறு ஆயுதங்களால் போர் செய்கிறான் பகல் இரவு மயங்கும்படி போர் நடக்கிறது. இலக்குவன் கொடுங்கணையால் இந்திரசித்து தேரில் விழுகிறான் (66:9-11)

(17) தேரும் குதிரையும் இழந்த இந்திரசித்து, மாயையால் மீண்டும் தேரோடு களத்தில் தோன்றும் (69:1,2) இந்திரசித்து வருணாத்திரம், உருத்தாத்திரங்களை விட, இலக்குவன், திவ்வியாத்திரம் அக்கியாத்திரத்தால் அவற்றை அழிப்பான் (70:1-3)

(18) இலக்குவன் பரமனைத் தியானித்து அசுராத்திரம், சைவாத்திரம் இரண்டையும் விடுவான்; அவை வான் வெளியைத் தெளியவைத்து 'இலக்குவன் துன்பம் நீங்குவான்' எனக்கூறுகின்றன (70:7,8)

(19) இலக்குவன், முடிவில் வச்ரபாணி படைத்தளித்த ஐந்தாத்திரத்தை மந்திரித்து "ஏய் அத்திரமே, எக்காலத்தும் தர்மவழி நிற்கும் இராமனுக்கு உதவி, இந்திரர் இடுக்கண் தீர அசுரன் தலையை அறுத்து நிலைத்து இடுக" என்று ஓதி விடுவான். அது மூந்தரசாதநன் தலையை அறுத்துத் தரைமீது வீழ்த்தியது. பின் ஆழியில் நீராடி அது அம்பறாத்தூணியில் நுழைகிறது (79:3,4).

(20) செய்தி அறிந்த இராவணன் அழுது அரற்றினான். அரக்கமாதரும் மண்டோதரியும் அவன் வீர வரலாறு கூறிப்புலம்ப, இராவணன் ஈமக்கிரியைகளைச் செய்வான் (73).

*முடிவுரை*

கம்பனும் சீரமகவியும், இராமாயணப் போர்ப்பகுதியில் இடம்பெறும் பாத்திரங்களுள் போர்த்தலைமை ஏற்கும் பாத்திரங்களை மூலக்கதையை ஒட்டியே படைத்துக்காட்டுவர். சிறப்புப் பாத்திரங்கள், தேவர்கள் படைத்தளித்த அத்திரங்களைக் கையாளுவதில் இருவரிலும் மாற்றம் இல்லை. கையாளும் முறையில் சில மாற்றங்களைச் செய்துள்ளனர். கம்பனுக்கு வாய்ப்பாக அமைவது அவன் படைக்கும் விரிவான போர்ப்பகுதிப்பாடல்களாகும். சீராமகவி மிகச் சுருக்கமாகக் கூறினும், தன் தனித்திறமையையும் வெளிப்படுத்துவான். மேலே கண்ட பாத்திரப்படைப்புகளின் ஆய்வின் உண்மைகள்இங்கேச் சுருக்கமாகத் தரப்படுகின்றன. ஒப்பீட்டு அட்டவணை வேறுபாட்டைக் காட்டுகிறது.

இதுவரைக் கூறியவற்றால், கம்பருடைய பாத்திரங்கள் முரணில்லாமல் கதை முழுவதும் ஒருமைப்பண்புடையோராகப் படைக்கப்படுகின்றன. போர்த்தலைமை ஏற்கும் பாத்திரங்கள், தத்தம் இயல்புக்கேற்பச் செயல்படுகின்றன. ஒவ்வொரு பாத்திரமும் அதன் முழுமைப் பண்புக்கு உறுதுணையாகச் செயல்படுகின்றது. சீராமன் படைக்கும் பாத்திரங்களும் உயிர்த்துடிப்பும் தனித்துவமும் உடையதாக விளங்கும் முறையில் அமைந்துள்ளன. சீராமன் பெரிதும் வான்மீகியைப் பின்பற்றக், கம்பன் தனித்து நின்று தன் புனைவால் பாத்திரங்களை மேம்படுத்துவான்.

## அடிக்குறிப்புக்கள்

1. எஸ். வையாபுரிப்பிள்ளை, - 'தமிழர் பண்பாடு' - தமிழ்ப்புத்தகாலயம், மயிலாப்பூர், சென்னை, ப. 119. முதற்பதிப்பு, 1949.

2. " A good commander is one whose men will follow him willingly when even he want them to go, will gladly face death to bring victory nearer, Commander, must know (a) how to command (b) how to lead (c) how to administer and (d) how to train" - Brigadier Rajendra Singh op.cit., p.19

3. "In war; Resolution
In defeat; Defiance
Invictory : Magnaimity
In Peace : Good will
Peace is the last prize.
I Seek to win" - Field Marshal Montgomery. Op. City., p. 544.

## இவ்வியலில் பயின்று வந்த இராமசரிதப் பாடல்களில் சில:

4. **இராமன் வஞ்சினம்**

உள்ளில் எண் திசையிலும் புக்கு
ஒளிக்கிலும் உவரி தன்னில்
வெள்ளமாம் படத்தில் மூடி.
வெளிப்படா திரிக்கிலும் போய்
உள்ள மா முனிவர்க் குழு
வுலகுக்கும் இடர் கொடுப்பான்
உள்ளரின் வாணாள் இப்போள்
ஒடுக்கமது ஆகும் என்றான் (27:1)

5. **இலக்குவன் வீரவுரை**

செப்பினான் இளவேந்தன் இப்படி
செப்பு வில்லனல் லோர் எல்லாம்
சொல்ப் பெறாதவர்கட்கு காணிது
சோபியாது கேவலம்
வில்ப் பிடித்து சரம் பொழிந்து இகல்
மிக்கவர்க்கும் நினக்கு என்னோடு
இப்பறந்தது ஒழிந்தார் ஆயுதம்
ஏந்தி உள்ளடல் இல்லயோ (26:4)

6. **அனுமன் இராவணன் அடிதாங்கல்**

பெரிப்பம் உள்ளது நீ என்றும்
பின்பு போர் அரக்கன் சொல்ல
ஒரிக்கல் என்அடி ஏற்றும் நீ
உயிர் பிரிந்தில்ல என்னால்
கருத்தனே சால ஞான் என்
கையூக்கும் நன்று நன்று என்று
உரத்த மாருதி தன் நெஞ்சில் -
உடன் அடுத்து அவன் அடித்தான் (25:10)

7. **அனுமன் சபித்தல்**

'குயில்மொழி யாரெய் என்றும் ஒருத்தர்
கொன்றது இல் ஒன்று கொண்டும்
கொடும மிகுத்து எழும் நரகத்திலே
இடர்நீள்வர் எல்லாம்
நியதம் அது ஒன்றினால் இயலும்
நலம் பல பேச வேண்டா
நிசிசுரர்தம் குடிக் கறயே
யிருட்டு நின்னுள் ளிவிதே (59 : 9-4-8)

8. **வீடணன் இராவணனை அறிமுகஞ்செய்தல்**

அய்யிரண்டு சிரங்கள் தரம் சேர்ந்(து)
அம்பு அநேகம் விதங்கள் விளங்க
அய்யிரண்டு விலாவினும் நீளக்
காணை ரஞ்சுமுடன் பதினஞ்சும்
செய்ய கூறவும் மாலயச் சாறும்
சேர்த்த முத்துமடத் திரருளும் கார்
மெய்யுள்ள நிசாசரர் கோமான்
வெற்றி கொள்வரின்று அவன் வீரா (24:9)

9. **வீடணன் அறிவுரை**

அதில் அதிகம் சொல்லாம் இன்னும் ஒன்று
அடுத்தவர் கேள்க்கும் நல்லோர்

அறிவில்ல யாவது ஒன்றிலும் நல்லர் ஆவிது
சாலே மற்றோர்க்கு
அதிகம் விவேகியாயுள்ள வன்னு வைரிகளோடு அடுப்பான்
அருகு ஒருபோது உற்றவரோடு ஒரிக்கிலும்
இதம் இங்ஙனெ இராவணி சொன்னபோது மறித்து உரத்தான்
எதிரிடுவோர் குலோந்தகனாம் விபீழணன் என்றும் இங்ங
சதிமதி கெட்டோரிக்க மல்லொட்டும் உத்தமர்கள்க்கும் நத்தம்
சரகுல சாதனாயிவைன் இளக்கருதோ இதெல்லாம் (63:10)

**10. இராவணன் அவலம்**

எனக்கு நீ சடங்கினாலே
இயற்றும் ஒண் கருமம் எல்லாம்
நினக்கு ஞான் செய்யுமாறு
நிறுத்தி வைத்து உயிரோடு என்னெ
களத்து எழும் வென்றி நல்கிக்
கருதலர்க்கு இளமையும் வாழ்ந்து
இனிப்பமாய் இந்ததும் விட்டு
எங்குபோய் மறந்தோ வாலா (73:10)

**11. கும்பகருணன் வீரவுரை**

'உள்ள தோத்திரம் உரத்து இரிப்பதருது
ஒன்றுகோள் இன்னும் என்னால் மன்னா
புள்ளிமான் கண்ணி நிமித்தமாய். இதொரு
போர் துடங்கினது மூலமாய்
உள்ளா வானர குலத்தெயும் பொருது
ஒடுக்கி ஞான் அரசர் சோரியாய்
வெள்ளவும் கரனுமாய் நுகர்ந்து
விளயாடியாவுது இனிமற்று எல்லாம் (30:10)

**12. அதிகாயன் வீரவுரை**

'என்னால் நினக்கும் எழுது காலன் நகர்பூவான்
இப்போது அடுத்து அடல் கிடய்க்கில் அது வேண்டா
நின்னொடு வென்று கருமம் சுருங்ஙும் நன்றாய்
நின் வில்லும் வச்சவிலங்ஙுக் கடந்தது போநீ
மன்னோல் குத்தினு பிழய்க்குமதும் என்றால்
வந்தாலும் வன்றது பின் வாங்ஙருது என்மேடம்
தன்னே நினக்கு நினவாகில் எதிர்இதோவா
தந்தோழம் ஏந்தி அதிகாயன் இது சொன்னான் (42:6)

**13. இந்திரசித்தின் வீரவுரை**

இன்று ஒரிக்கல் இராகவன் மார்மேல்
எங்கும் அம்பிட கூடநடத்திக்
கொன்று ஒடுக்கி அடக்கும் முடித்தே
கூடவே அரிவீரரெ எல்லாம்
வென்றி வண்ணம் நமுக்க அடலாரால்
மேலிலுள்ள விரோதம் ஒழித்தே
வன்றிதுண்டு இனி என்றும் அரக்கன்
மைந்தன் இந்திரசித்து மொழிந்தான் (46:2)

**14. மகனை இழந்த இராவணன் நிலை**

தனிமரம் மூலம் அற்று
தரணியில் வீழ்ந்த போலெ
கனம் இழிந்து அவனி மீது
கமிழ்ந்த வீழ்ந்த வணர்ந்து
மனுகுல வீரன் அம்பால்
மறவிதன் புரம் புகுந்த
தனயன் தன் சரிதம் பேசச்
சமந்தனன் அரக்கர் கோமான் (73 : 3)

# 7. போர்நெறிகளும் படைக்கலங்களும்

## முகவுரை

பண்டைக்காலம் முதல் இக்காலம் வரை நாட்டில் அறம் காக்கவும், மறம் நீக்கவும் போர்கள் நடைபெறுகின்றன. 'பொரு' என்னும் சொல்லடியாகப் பிறந்தன பொருதல், போர் என்பன. பொரு, பொருதல், எனில் போர், சூதாடுதல் மாறுபடுதல், ஒப்பாதல், பொருந்துதல் எனும் பொருளது"[1] எனச் செந்தமிழ் அகராதி செப்புகிறது. பழந்தமிழ் இலக்கியங்கள், 'போர்', என்னும் சொல்லைப் பல்வேறு நிலையில் கூறுகின்றன. 'இகல், உறழ்வு, உடலுதல், உடன்றல், முரன், சினம், தெய்வு, திறல், மறல், மறம்[2] போன்ற சொற்கள் போரைக்குறிக்கும், பிங்கல நிகண்டு, போரை, யுத்தம், தும்பை, சமரம், செரு, இகல், எதிர், ஞாட்டி, பூசல், அடல், மலைதல்[3], போன்ற பதினாறு சொற்களால் உணர்த்துகின்றது.

(1) எல்லாப்போர்களுக்கும் அடிப்படைக்காரணங்கள் பற்றி அறிஞர் பல வகையாகப் பகுத்துக்காட்டுவர். தமிழறிஞர் தேவநேயப் பாவாணர், "அரசர் போர், ஆசை, பாதுகாப்பு, பகை, தண்டனை, மறம், அருள் என்னும் அறுவகைக் காரணத்தாற் பிறக்கும், மண்ணாசை, பொன்னாசை, பெண்ணாசை, புகழாசை, விண்ணாசை என்ற ஐவகை ஆசைகள், தற்காப்பு, நாட்டுக்காப்பு, மதக்காப்பு எனும் மூவகைப் பாதுகாப்பு, பழிதீர்ப்பு, பழம்பகைமை, பொறாமை எனும் மூவகை பகை, இகழ்ச்சி, திறையிறாமை, படையெடுப்பு ஆகிய மூன்று தண்டனை, கடுமறம், தன்குடிபிறர்குடிமேல் கொண்ட அருள் ஆகியவை காரணமாகப் போர்கள் தோன்றலாம்"[4] என்பார். இக்காலப்போரியல் வரலாற்று அறிஞர்கள் எல்லாப் போர்களுக்கும் அடிப்படைக் காரணங்கள் நான்கென வகைப்படுத்துவர். அவை : (1) அரசியல் காரணங்கள் (2) உணர்ச்சிக் காரணங்கள் (3) சமூகப் பொருளாதாரக் காரணங்கள் (4) கொள்கைக் கோட்பாட்டுக் காரணங்கள் என்பன.

சங்ககால அரசர்கள் மேற்கொண்ட போர்கள் பெரும்பாலும் மானம், பெருமை, மறப்புகள் போன்றவற்றை அடிப்படையாகக் கொண்டெழுந்த, கொள்கைக் கோட்பாட்டின் காரணமாக நடந்தன எனலாம். சேர, சோழ, பாண்டியர்கள் தனியாகவோ குழுக்களாகவோ போர்களை மேற்கொண்டனர். பண்டைத்தமிழ் வேந்தர்கள் போர் - கொள்கைக் கோட்பாட்டை உடையவர்கள் என்பதை 'மறம் வீங்கு பல்புகழ்', 'மறப்புகழ்' 'அடுதிறல் உயர்புகழ்', 'அடுபுகழ்', 'வென்றிப்பல்புகழ்', எனக்குறிக்கும் தொடர்களால் அறியலாம். ஆரியர் - தமிழர் போர்களை

இதற்கு எடுத்துக்காட்டாகக் கூறலாம். இராமாயண பாரதப்போர்கள் சமுதாயப் பொருளாதாரக் காரணங்களால் தோன்றியன எனக்கூறலாம்.

(2) போர்த்தொழிலில் பெரும்பங்கு வகிப்பன போர்ப்படைகளே. இப்படை அடுபடை எனப்பட்டது. கடமை, ஒழுக்கம், கட்டுப்பாடு, உயர்நெறி, துணை முதலியவற்றால் நற்பணியாற்றிச் சிறப்பது இதுவே. போரியல் கொள்கைகளை வகுக்கும் அமைச்சரவைப் பாதுகாப்புக்குழு வொன்று அமைந்தது. பண்டை இலக்கியங்கள், ஐம்பெருங்குழு, எண்பேராயம் என இதனைப் பகுத்துக்கூறும்.

**படை** : அரசர்க்குரிய அங்கங்களுள் தலைமையானது படையே. திருவள்ளுவர், படையை முதலாக்கொண்டு பேசுவார்.

**"படைகுடி கூழமைச்சு நட்பரண் ஆறும்**
**உடையான் அரசருள் ஏறு"**[6]

**"அரசர்க்குப் பீடு கெழு செல்வும் படை"**[7]

எனப் பதிற்றுப்பத்து குறிக்கிறது. இவற்றால் படையின் சிறப்பு விளங்கும். படை என்பது பகைவர்களைப் படுப்பது; 'படு' என்னும் சொல்லடியாகப் பிறந்தது[8]. எனவே 'போரில் விளங்கித்தோன்றி, அல்லன அழித்து நல்லன படை' எனக் கொள்ளலாம். படைகள் நல்லறம் நிறுத்தி அல்லறம் நீக்க வழிகோலின. இப்படையைப் பண்டையோர், 'மூலப்படை, கூலிப்படை, துணைப்படை, நாட்டுப்படை, காட்டுப்படை, பகைப்படை, என ஆறு வகையாகப் பகுப்பர்'[9]. வழிவழி வந்து நிலையாக இருக்கும் படை 'மூலப்படை' எனப்பட்டது. எஞ்சிய படைகள் அமைப்பற்று நெருக்கடி காலத்தில் உதவிவருவன. இவற்றைக் காவல் படை எனத் தொகுத்துக்கூறலாம்.

(3) போர்ச் செயல்களில் தலைமையேற்போர், அஞ்சாமை, ஈகை, அறிவு, ஊக்கம், இந்நான்கு பண்புகளும் நிறைந்தவராக இருப்பர். படையின் திறமை, அப்படைத்தலைவரின் அறிவாற்றல், மதிநுட்பம், அரும்பண்புகள், நற்றகுதி, குழுஉணர்வு, ஆகியவற்றைப் பொறுத்தே அமையும். சுருங்கச்சொன்னால், படைத்தலைவர்கள், எண்ணம், சொல், செயல்களில் சிறந்து விளங்கவேண்டும்.

(4) "போர் வீரர்கள், போர்ச் செயல்களில் பங்குபெற்றுப் பணிபல ஆற்றுபவர்கள். அவர்கள் ஆற்றும் தொழிலின் பான்மையால், சான்றோர், மறவர், மழவர், மள்ளர், மைந்தர், வயவர், பொருநர், இயவர், கூளியர், குறவர், போன்ற படைவீரர்கள் பண்டைநாட் போரில் பங்குபெற்றனர். சான்றோர்கள் அறம் போற்றுபவர்கள்; மறவர், மழவர், மன்னர் மைந்தர், வயவர், பொருநர், ஆகியோர், பொரு போர், வீரர்கள் ஆவர். இயவர், இசைக்கருவி இயக்கினர். கூளியர், குறவர் - என்போர் போர் முன்னிலைச் செயல்களில் ஈடுபட்டிருப்பர்"[10] என எடுத்துரைப்பார் டாக்டர் தங்கக்கந்தசாமி

(5) தேர்கள் பகைவர்களின் பல்வேறு அரண்களை அழிக்கவும் முற்றுகையிடவும் பயன்பட்டன. திறந்தவெளிப் போர்களுக்குத் தேர்கள்

பயன்பட்டன. அவை, குயவு, கொடிஞ்சி, திகிரி, இரதம் யந்திரம், சயந்தனம் வையம் என அவற்றின் பண்புகளால் பலபெயர் பெற்றன.

(6) நீர் வழிச் செல்ல நாவாய், புனை, ஓடம், தோணி, அம்பி, இவற்றையும், விண்வெளிச் செல்ல விண் ஊர்திகளையும் மேற்கொண்டனர் என்பதைப் பண்டை இலக்கியங்களால் அறியலாம்.

(7) நாட்டைப் பாதுகாத்தற்கு அரண்கள் பெரிதும் உதவின. பண்டைப் போரில் அரண்கள் சிறப்பிடம் பெற்றன. அவை நீர் அரண், நிலவரண், காட்டரண், மதிலரண் என நால் வகைப்படும். கடல், ஆறு, அகழி, கிடங்கு, இலஞ்சி ஆகியன நீரரண்கள், அகமதில், இடமதில், புறமதில் எனப்படுவன நிலவரண்கள்; மலை, குன்று போல்வன காட்டரண்கள்; நிலவரண் மதிலரணை ஒத்தது. மதிலரண், இஞ்சி, எயில், புரிசை, ஆரெயில், அற்று, அருப்பம் கோட்டை, வரை - எனப்பல பெயரில் அறியப்படுகின்றது. அரணின் சிறப்பைக் குறள்.

**“அறிவு அற்றங்காக்கும் கருவி செறுவார்க்கும்**
**உள்ளழிக்கல் ஆகா அரண்”[11]**

எனக்கூறும்.

(8) பல்வேறு போர்ச் செயல்களுக்குப் பல்வகைப் போர்கலங்களையும் பயன்படுத்தினர். வில், கவண், எறிகோல், அம்பு, வேல் ஈட்டி, சூலம் - என்னும் இலக்குக்கருவிகளும். குறுந்தடி, உலக்கை, கதை, வாள், கோடரி, தண்டாயுதம் - என்னும் நேர்தாக்குக் கருவிகளும் போருக்கு உதவின. போர் வீரர்களின் பாதுகாப்புக்குதவும் மெய்மறைக் கவசங்களும் கேடயங்களும் பயன்பட்டன.

(9) போர் நெறிகளில், பழந்தமிழர் மரபு வழிப்போற்றும் புறப்பொருள் ஒழுக்கங்கள் ஓம்பப்பட்டன. போரில் போற்றப்படும் ஒழுக்கங்களான வெட்சி, கரந்தை, வஞ்சி, தும்பை, உழிஞை, வாகை, காஞ்சி ஆகிய திணைகளுடன் பாடாண்திணை நெறிகளும் போரில் பெரிதும் இடம் பெற்றன. மந்திரம், தூது, செலவு, இகல், வென்றி' எனத் தண்டியலங்காரம் குறிப்பிடும் போர் நெறிகள், பின்பற்றப்பட்டன. சான்றோரைக் கலந்தாய்தல், கடவுளை வணங்கிப் போர் தொடங்கல், நிமித்தம் பார்த்தல், திணைப்பூச்சூடல், - ஆகிய நிகழ்ச்சிகளைப் பண்டைத் தமிழர்கள் மேற்கொண்டு ஒழுகினர். பகைநாடுகளை அழித்தல், பகைவீரர்களைப் புகழ்தல், இறந்தோரை வழிபடல், மங்கல நீராடல், முடிசூட்டல் முதலிய போர்பின்னிலை நெறிகளைப் போற்றிப் புகழ்ந்தனர்.

(10) பண்டைப்போரின் நுட்பங்களான, தன்வலி, மாற்றார் வலி, இடம், காலம், துணை அறிதல், வினைக்குரியாரைத் தெரிதல், படை அமைப்பு, செயல்திறன்கள் - முதலியவற்றைப் போர்த்தலைவர்கள் நுணுகி ஆய்ந்து செயல்பட்டனர். இவற்றால், போர்கள் அடிப்படைக் காரணங்களால் வெந்திறல் வீரர்கள் தலைமையில், நால்வகைப் படைகளை மேற்கொண்டு, போர் நெறிகளைப் போற்றி, பண்டை மரபை ஓம்பி, அறநெறிகாக்க நடந்தன என்று கூறலாம்.

(11) இராமாயணக் காப்பியத்தில், முக்கிய நிகழ்ச்சி போரே ஆகும். இராம - இராவணப் போரே இராமாயணக்கதை என்று தமிழ்ச் சான்றோர்கள் கருதி வந்துள்ளனர்"[12] என ஆய்வாளர் மு. இராகவையங்கார் குறிப்பிடுவார்.

(12) போர்க்களத்தில் போர் வீரர்கள் மேற்கொள்ளும் போர் நெறிகளும் படைக்கலங்களும் பற்றிய செய்திகளைக் குறிப்பிட்டு இரு நூற்களும் மாறுபடும் இடங்கள் அட்டவணை மூலம் ஒப்புமைப்படுத்தப்படுகின்றன. முக்கிய போர்களில் மேற்கொண்ட போர்க்கருவிகள் பிற்சேர்க்கையில் பட்டியலிட்டுத் தரப்பட்டுள்ளன.

**இராமாயணப் போர் நெறிகள்:**

இராமயணப் போர் நெறிகளில் மற்போரையும் படைக்கலப் போரையும் காணலாம். அவை, தனிப்போராகவோ குழுப் போராகவோ அமைகின்றன. தனிப்போரில் மறப்போரும் கருவிப்போரும் இடம்பெறுகின்றன. குழுப்போரில் படையணிகளும் படைத் தலைவர்களும் பெருங்கலங்களுடன் போர் புரியும் செயல்கள் இடம்பெறுகின்றன.

(1) போரில், படைவீரர்கள் ஒருவரோடு ஒருவர் கைகலந்து போரினைத் தொடங்குகின்றனர்; தொடர்ந்து சிறுபடைத்தலைவர்கள் போரிட, இறுதியில் தலைவரும் தலைவரும் போர் புரிகின்றனர். இராமனும் கும்பகர்ணனும் நிகழ்த்தும் போர் இம்முறையில் நடக்கிறது (VI :15). படைகளும் படைகளும் கைகலந்து போரினைத் தொடங்கி, படைகள் அழிந்ததும் தலைவர்கள் செய்யும் போர் நெறிகளையும் காணலாம். அனுமனுடன் இந்திரசித்து உடற்றும் போரும் (VI:27) வேலேற்றபடலத்தில் இலக்குவனும் இராவணனும் இயற்றும் போரும் (VI :37) இதற்கு எடுத்துக்காட்டுகளாகக் கொள்ளலாம். போர் அணிகளிடையே படைவீரர்கள் தங்களுக்குள் போரிட்டு அழிப்பின், படைத்தலைவரே பகைவரை எதிர்ப்பர்; அவரும் அழியின், சிறுதலைவர்கள் போர் மேற்கொள்வர். இலக்குவன் அதிகாயனோடு நடத்திய போரிலும் (VI:17) இந்திரசித்தின் பிரம்மாத்திரப் போரிலும் (VI:21) இந்நெறி மேற்கொள்ளப் படுகிறது. ஒத்த நிலையிலுள்ள சிறு படைத்தலைவர்கள் மட்டுமே பெருந்தலைவர்களின் துணையின்றிப் போரை நடத்தும் நெறியையும் காணலாம். படைத்தலைவர் வதைப்படல நிகழ்ச்சி (VI:30) இம் முறையிலானதாகும். போர்த் துவக்கத்திலேயே, இரு அணித்தலைவர்கள் போரிடும் நெறியும் உண்டு. மகரக்கண்ணன் வதைப்படலத்திலும் (VI:20) இந்திரசித்து வதைப்படத்திலும் (VI:27) இந்நெறியைக் காணலாம்.

(2) பொதுவாக, இப்போர் முறைகளை ஆராய்ந்தால், இராமாயணப் போரிலே, போர்ப்படைகளில் எவ்விதத் துணையுமின்றி நடத்தும் தனிப்போரையும் போர்ப்படைகளின் துணையோடு எதிர்த்து நின்று தலைவர்கள் நடத்தும் கூட்டப் போரையும் மேற்கூறிய போர் நெறிகளுள் அடக்கலாம். எனவே, இராமாயணப்போரைத் தனியாண்மைப் போர், கூட்டாண்மைப் போர் எனப்பாகுபடுத்தலாம்.

(3) போரில், மந்திரம், தூது, செலவு, இகல், வென்றி - என்னும் போர்நெறிகள் பின்பற்றப்படுகின்றன. மந்திரமென்பது ஆலோசனை என்னும் பொருளைத் தருகிறது. எரியுண்ட இலங்கையைப் புதிப்பித்த பின் கூடும் இராவணன் மந்திரப்படலம் (VI:2) இதற்குச் சான்று. அமைச்சர்கள், சகோதரர்கள், மக்கள் முதலியோர் இம்மந்திர நிகழ்ச்சியில் பங்கு பெறுகின்றனர். வீடணன் அடைக்கலப்பகுதியில் இராமன் மந்திராலோசனை (VI:2) நடத்துகிறான். போர் நெறிகளில் தூது அடுத்தப்படியாக நிகழ்வது. அங்கதன் இராவணன் பால் செல்லும் தூது இதற்குச் சான்றாகும். (VI:4) 'செலவு' என்பது தூதின் பின் நிகழும்; பகைமேல் போர்தொடுக்கப் படைகள் செல்லும் நெறியும்; வெற்றிபெற்ற வீரர்கள் தம் நாட்டை நோக்கிவரும் நெறியும் என்றும் கூறலாம். கடல் காண் படலமும் (VI:1) மீட்சிப் படலமும் (VI:37) இதற்குச் சில சான்றுகளைத் தருகின்றன. இகல்' என்பது பகை, போர் என்னும் பொருளைத்தரும். யுத்தகாண்டப் போர் நிகழ்ச்சிகள் அனைத்தும் இதற்குப் பொருந்தும். வென்றி' போரின் முடிவும் பின் நிகழ்வுகளும் இதனைத் தெளிவாக்கும். 'களியாட்டம்' (VI : 24) மீட்சிப்படல நிகழ்ச்சிகள் (VI:36) வெற்றிச் செயலை உணர்த்தும். இங்ஙனம் தண்டியாசிரியர் கூறும் ஐவகை நெறிகளும் இராமாயணப்போர் நெறிகளில் இடம் பெறுகின்றன.

(4) போர் நிகழ்ச்சியில் வேள்வி செய்தல், நிமித்தம் பார்த்தல், வஞ்சினம் கூறல், வீரரைப் புகழ்தல் முதலியன இடம் பெறுகின்றன. போர் மேற்செல்வோர் மாலைசூடிச் செல்லுதல், பூச்சூடுதல் முதலிய நெறிகளும் உண்டு. எடுத்துக்காட்டாக, இந்திரசித்து போரில் மெலிவடைய, நிகும்பலை வேள்வி செய்கிறான் (VI:26). போரில் வீரவாதம் செய்து வஞ்சினம் கூறல் மரபு. அதிகாயன் அனுமனிடமும் (VI:17) இந்திரசித்து அனுமனிடமும் (VI27) வீரவாதம் புரிகின்றனர். இலக்குவன் வில்லாற்றலை இராவணன் புகழ்கிறான் (VI:36) இந்திரசித்தும் (VI:27) புகழ்கின்றான். இராமன், ஆத்தி மாலையையும் தும்பையும் சூடிப்போருக்குப் புறப்படுகிறான். (VI:15). கோட்டையை வளைத்தகாலை, அனுமன் உழிஞைசூடி வருகிறான் (VI : 14). நிகும்பன், நொச்சி சூடி (VI:19), எதிர்த்த வானரப்படையை எதிர்க்கிறான். கும்பகர்ணன் தும்பைப்பூ சூடியதைப் பிரம்மாத்திரப் படலத்தில் (VI:21) கவிஞன் நினைவுபடுத்துகிறான். வாகைசூடும் நெறி பலவிடங்களில் இடம் பெறுகின்றது. இலக்குவன், கும்பகர்ணன் வாகைசூடிய செய்திகள் (VI:15) உள்ளன. மாற்றாரைக் கொல்லும் நூழிலாட்டு பல இடங்களில் இடம் பெறுகின்றது. இலக்குவன் அரக்கர்படையைக் கொன்று நூழிலாட்டுகின்றான் (VI:27), மூலப்படையைக் கொன்று இராமன் நூழிலாட்டுகின்றான். (VI:30) இங்ஙனம், பண்டைப் புறப்பொருள் இலக்கண நெறிகள் சில இராமாயணப் போர் நிகழ்ச்சிகளில், இலைமறைகாய்போலக் காணப்படுகின்றன.

(5) படைக்கலங்களைப் பல பெரியோர்கள் தவத்தின் பயனாக அளிக்கின்றனர். விசுவாமித்திரர், அகத்தியர் முதலியோர் படைக்கலங்களை

இராமனுக்கு அளிக்கின்றனர். அம்புகளை ஏவும்போது, மந்திரித்து ஏவும் நெறி போற்றப்படுகிறது. விசுவாமித்திரர், அகத்தியர் கற்றுக்கொடுத்த மந்திரங்கள் (VI:36) இதற்குச் சான்றுகளாம். அம்புகள், பண்பிற்கேற்ப நாகாத்திரம், அக்கினியாத்திரம் என்னும் பெயரைப் பெறுகின்றன. ஓர் அத்திரம் மற்றோர் அத்திரத்தைத் தடுக்கிறது. ஒன்று மற்றொன்றை விழுங்குகின்றது. இதில் சிவன்படை திருமால்படை இடம் பெறுகின்றன. அவை வலிமைமிக்கன. இராமபாணம் கும்பகர்ணன், இராவணன் ஆகியோரை அழிக்கிறது. அவ்வாளி நீராடித் தூய்மைபெற்று, அம்பறாத்தூணியில் புகுகிறது (VI : 15)

(6) இராம இலக்குவர் வில், அம்பு, அரைக்கத்தி, குறுவாள், பிரமதண்டம் இவற்றைப் பயன்படுத்தினர். வசிட்டர் பிரமதண்டத்தையும், விசுவாமித்திரர் அம்பையும் அளிக்கின்றனர். அரக்கர்கள், தண்டாயுதம், கதை, மரம், தோமரம் (உலக்கை), கைவேல், அம்பு, சத்தி, தடி, கல்வீசும் உறிகள், சூலம், இரும்புலக்கை, கோடரி, வாள், ஈட்டி, முதலியவற்றைப் பயன்படுத்துகின்றனர். வானரப்படை கல்லையும், மரத்தையுமே பயன்படுத்துகிறது. அரக்கர்களிடமிருந்து கிடைத்த படைக்கலத்தை அனுமன் சில சமயம் கையாளுகிறான். பிரமாத்திரப்படலத்தில் அனுமன் கதை' ஏந்தி அகம்பனைத் (VI:21) தாக்குகிறான்.

(7) இராமன், படை மேற்செல்லும் போது முன்னும் பின்னும் மறவர் காத்து நிற்கின்றனர். படை செல்லும் போது உணவு, நீர், முதலியன செல்லுகின்றன. வீடணன் இதனைச் செய்கிறான். (VI:21) படைகள் ஆடிப்பாடி ஆரவாரம் செய்து செல்கின்றன. ஒற்றர்கள் பகைப்புலத்தில் சென்று உளவறிகின்றனர். ஒற்றர்களைத் துன்புறுத்தல் மறச் செயலாகும் என்பது வலியுறுத்தப்படுகிறது. இராவணன் அனுப்பிய சுகசாரணர்கள் ஒற்றர்களே.

(8) போரில் அடைக்கலமாக வந்தவரை ஏற்றுக்கொளல் இராமாயணத்தில் சீரிய நெறியாகும். வீடணன் அடைக்கலம் இதற்குச் சான்று. (VI:4) தூதுவர்களைக் கொல்லலாகாது என்பது போர் நெறி, ஒத்த தலைவர்கள் தம்முள் உடற்றுவது போரின் முறையாகும். போர்ப்படை செல்லச் சங்கமும் பறையும் முழங்கப்பெறும். (VI:21) போர் தொடங்கும் முன் சிலர் நாணைத் தெறித்துப் பேரொலி (VI:2) செய்வர்.

(9) குதிரை பூட்டிய தேரில் வீரர் தலைவர், தோள்மேலிருந்தும் போர் செய்வர் என்பதனை அனுமன் தோளில் இராமனும், சுக்கிரீவன் தோள் மேல் இலக்குவனும் இருந்து போர் செய்தமை (VI:36) காட்டுகின்றன. வீரர் முதலில் தேரையும், பின் குதிரையையும் தொடர்ந்து சாரதியையும் அழிப்பர். (VI:36) கும்பகர்ணனையும் இராவணனையும் வதைக்கும் பாங்கு இதற்குச் சான்று. போரிடையே வீரமுழக்கம் நிகழ்வதுண்டு. அனுமன், நீலன், கும்பகர்ணன், இந்திரசித்து முதலியோர் வீரமுழக்கம் (VI:15:27) செய்கின்றனர்.

(10) போரில் கோட்டைமுற்றுகை நடக்கும். உள்ளிருந்து காக்கும் படை போர் செய்வதற்கு வெளியேவரும். இலங்கையில் இராவணப்படை உள்ளேயிருந்து காக்க, இராமன்படை முற்றுகை இடுகிறது. ஒவ்வொரு

போரிலும் போர்த் தலைவரே போரை முன் நடத்திச் செல்வர். இவ்வாறு கும்பகர்ணன், இந்திரசித்து, மகரக்கண்ணன், இராவணன் முதலியோர் தலைமை ஏற்றுப் போரைச் செய்கின்றனர். போரில் வீரர் தளரின், சாரதி தேரைப்பின் கொண்டு பாதுகாப்பான இடத்திற்குச் செலுத்துவதுண்டு. (VI:36). இச்செயலை இராவணன் தளர்ந்த போது சாரதி செய்யத் தளர்வு நீங்கி இராவணன் போர் செய்தமை விளங்கும்.

(11) போர் மேற்கொள்ளும் தலைவர்கள், தம் கொடிகளில் இலச்சனைகளைப் பொறித்திருந்தனர். இராவணன் வீணைக் கொடியை எழுதி அமைத்தான். அவன் விமானத்திலும் வீணைக்கொடி விளங்கிற்று. துகில், துவசம், பதாகை என்னும் பெயர்களில் அவை வருகின்றன. சிவபெருமான் விடை இலச்சனை பொறித்திருந்தான். திருமால் கருடக்கொடியையும், கும்பகர்ணன் சிங்கத்தை இலச்சனையாகவும், இந்திரசி_ _ _ டியை இலச்சனையாகவும் கொண்டிருந்தனர்.

(12) மீவியில் (Supernatural) புனைவும் யுத்த காண்டத்தில் இடம் பெறுகின்றன. நாகபாசத்தால் கட்டுண்டு கிடந்த இலக்குவனை விடுவிக்க வீடணன் இறையருளை வேண்டுகிறான். (VI:18) இராமனோ தம்பி நிலை கண்டு சோர்ந்து விழுந்து கிடக்கிறான். இறையருளால், கழுலன் வர, நாகபாசம் விடுகின்றது (VI :18). பிரமாத்திர நிகழ்ச்சியிலும், இராவணன் வேல் எறிந்த போதும், இலக்குவன் இருமுறை மூர்ச்சிக்கிறான். அனுமன் மருந்துமலையைக் கொணர இலக்குவன் இருமுறை உயிர்த்தெழுகின்றான். (VI:23) நல்லோர்க்கு உதவி அறத்தை நிலைநாட்ட உதவிடும் வகையில் மீவியல் புனைவும் இடம் பெறுகின்றது.

(13) தேவர்கள் அவ்வப்போது உதவிடும் செயல்களும் போர் நிகழ்ச்சிகளில் இடம் பெறுகின்றன. இராமன் வேண்டுகோளுக்கிணங்கி வருணன், இராமனுடைய எரியம்பால் உடலெல்லாம் வெந்து கரிய ஓலமிட்டுக்கொண்டு, இராமனிடம் அடைக்கலம் புகுகின்றான் (VI:7). அதிகாயனோடு இலக்குவன் போர் நடக்கும் பொழுது, காற்றுக்கடவுள் சதுமுகன் படையை ஏவி, அதிகாயனைக் கொல்லுமாறு இலக்குவனிடம் இரகசியமாகக் கூறுகின்றது (VL:18). சிவபெருமான் ஏவலால், இந்திரன் இராமனுக்குத் தன் தேரையனுப்புகிறான் (VI:36); மூலப்படை போரின்போது 'என்ன ஆகுமோ?' என வருந்திய தேவர்களுக்கு 'இராமன் வெல்வான் ' என்னும் உறுதியை அளிக்கின்றான் (VI:30). நெருப்பில் குளித்தெழுந்த சீதாபிராட்டியின் கற்பின் திண்மையைப் பிரமனும் சிவபெருமானும் இராமனுக்கு உணர்த்துகின்றனர். விண்ணகத் தயரதனைச் சிவபெருமான் பணிக்க, இராமன் முன் தோன்றிச் சீதையை ஏற்கச் செய்கின்றான். (VI:37). தேவர்கள் அருளால் போரில் மாண்ட வானரங்கள் உயிர்பெற்று எழுகின்றன (VI:37) பதினான்கு ஆண்டுகள் முடிந்தன என்று தேவர்கள் இராமனிடம் கூறிப் பரதனிடம் செல்லுமாறு கூறுகின்றனர் (VI:37). காப்பிய நன்னிகழ்வுகளில் தேவர்கள் ஆடிப்பாடி இன்புறுகின்றனர்; பூமழை பொழிந்து வாழ்த்துகின்றனர் (VI:37). தேவர்கள் மேற்கொள்ளும் செயல்கள் மீவியலினின் பால் படுமெனினும் மனிதர்களைப் போன்று நடந்து கொள்ளுமாறு செய்வது, போர்ச் செயல்களுக்குப் பொலிவூட்டுகின்றது.

இங்ஙனமாக, இராமாயணப் போர்கள், பண்டைத் தமிழ் மரபைப் பேணியும், காப்பிய நெறியை ஓம்பியும், இதிகாச மீத்திறவியலை ஆங்காங்கே சுட்டிக்காட்டியும், கம்பராலும் சீராமகவியாலும் பெரிதும் விளக்கப்படுகின்றண.

## கம்பராமாயணத்தில் இடம்பெறும் முக்கிய போர் நிகழ்ச்சிகள்:

(1) இராம இராவணப் பெரும்போருக்கு அறிமுகமென்ற நிலையில் ஓர் ஒத்திகை போராக - வருவதுரைக்கும் போராக நிகழும் போர்களாவன:

1. இராமன் X தாடகை
2. இராமன் X மாரீசன்
3. இராமன் X சுபாகு
4. இராமன் X பரசுராமன்
5. இராமன் X விராதன்
6. இராமன் X கவந்தன்
7. அனுமன் X கடற்பூதம்
8. அனுமன் X இலங்கைக்காவலன்
9. அனுமன் X சம்புமாலி - முதலியன.

இவை, வரவிருக்கும் பெரும்போர்களுக்கு முன்னோடியாகத் திகழ்வன. இவற்றை ஒருவரோடு ஒருவர் மோதும் தனிப் போராகக் கொள்ளலாம்.

### (2) *யுத்தகாண்டத்தில் நிகழும் தனிப்போர்களாவன:*

1. சுக்கிரீவன் X இராவணன்
2. அங்கதன் X இந்திரசித்து
3. நீலன் X நிகும்பன்
4. இலக்குவன் X விருபாக்கன்
5. சுசேணன் X வித்யுன்மாலி - முதலியன.

(3) இனி, அணிகளும் அணிகளும் போர் செய்யும் போது படைவீரர்கள், தலைவர்கள், இருவர் மூவரைத்தாக்கும் கூட்டப்போர்களாவன:

1. நீலன் — { பிரகத்தன், மகோதரன், இராவணன் }
2. இராவணன் — { அனுமன், இலக்குவன், இராமன் }
3. கும்பகர்ணன் — { அனுமன், இலக்குவன், இராமன் }
4. அனுமன் — { தேவாந்தகன் மற்றும் படைவீரர்கள் }

5. [illegible] — { [illegible] / [illegible] / நிகும்பன் }

6. இலக்குவன் — { அதிகாயன் மற்றும் படைவீரர்கள் }

7. இராமன் — { இந்திரசித்தன் மற்றும் படைவீரர்கள் }

8. இராமன் — { மகரக்கண்ணன் மற்றும் படைவீரர்கள் }

9. அங்கதன் — { மகோதரன் / இந்திரசித்து / நராந்தகன் }

(4) பெரும் போராகக் கருதத்தகும் போர்களான இலங்கை முற்றுகை, இராம இராவண முதற்போர், கும்பகர்ணன் வதை, அதிகாயன் வதை, இந்திரசித்தின் வதை (மூன்று நிலைகள்) மூலபலவதை, இராவணன் வதை முதலியன கூட்டப் போர்களாகும்.

***படைக்கலங்கள்:***

இராமாயணப்போரில் கம்பராமாயணம், இராமசரிதம் ஆகிய இரு நூற்களிலும், அரக்கர்கள் நால்வகைப் படைகளையும், ஏற்ற படைக்கலங்களையும் கையாள, வானரர் மரம், கல், மலை, உடலுறுப்புக்கள் முதலியவற்றைக் கையாளுகின்றனர். அவையாவன

1. வில்
2. அம்பு, கோல்
3. வாள்
4. வேல்
5. மழு, கோடரி
6. கிடுகு
7. பாசம்
8. கதை
9. தண்டு
10. சூலம்
11. தோமரம்
12. அயில், வேல்
13. சக்கரம்
14. வாலம், பிண்டிப்பாலம், வலாயம்
15. உலக்கை, மூலசம்
16. நாஞ்சில் (எந்திரம்)
17. கணையம்
18. குலிசம், வச்சிரப்படை
19. கேடயம்
20. ஈட்டி
21. முகண்டி. சம்மட்டி
22. கழு
23. கப்பணம்
24. கவண்கல்
25. கன்னகம்
26. பிறைச்சந்திரபாணம்
27. தோட்டி
28. வளையம்
29. முத்கரம்
30. முளை
31. கொழு
32. மூவிலைவேல்
33. அரம்

முதலியன

*அத்திரங்கள்:*

மீவியல் படைக்கலக் கருவிகளாக அத்திரங்கள் காவியங்களில் இடம்பெறக் காணலாம். இராமாயணப் படைக்கலங்களில் அத்திரங்கள் சிறப்பிடம் பெறுவன. மீத்திற இயல்பினதாகிய இவற்றை இராம - இலக்குவரும், அரக்கர் தலைவரும் கையாளுகின்றனர். கம்பர் இவற்றைப் படை என்று கூற. உரையாசிரியர், வான்மீகியைத் தழுவி, அத்திரமென்றே கூறுவார்.

(1) அத்திரங்கள் பற்றிய நிகழ்ச்சிகளைத் தருவதில் வான்மீகத்தில் கூறியபடியே கம்பரும் சீராமகவியும் பின்பற்றுகின்றனர். அத்திரமென்பது மந்திரவலிமை பெற்றது. அத்திரம் விடுவதில் அவ்வவ் அத்திரத்தில் அதிதேவதையை நினைந்து பூசை செய்து, மத்திரம் ஓதி வில்லில் தொடுப்பது வழக்கம். இராம இலக்குவர்களுக்கு விசுவாமித்திரர் அத்திரங்கள் வழங்குகின்றார். அவை அவர்களுக்கு ஏவல் புரிகின்றன. இராவணன் முதலிய அரக்கர்கள் அத்திரங்களைத் தவஞ்செய்து பெறுகின்றனர்.

(2) ஓர் அத்திரத்தை மற்றோர் அத்திரம் தடுக்கிறது; ஒன்றை மற்றொன்று விழுங்குகின்றது; மலைந்து தீய்கின்றது. ஓர் அத்திரத்தை அதனைவிட ஆற்றலுள்ள மற்றொரு அத்திரம் விழுங்குகின்றது. அம்புகளால் வெல்ல இயலாத நிலையில், இறுதியில் இருதரப்பினரும் அத்திரங்களை ஏவுகின்றனர். பிரமாத்திரம் பேராற்றல் வாய்ந்ததாகச் சில இடங்களில் விளங்குகின்றது. சிவன்படையும் நாராயணன் படையும் (படை - அத்திரம்) அதினினும் வலிமை மிக்கன என்றும் தெரியவருகின்றது. அத்திரங்களை முதலில் ஏவுவோர் அரக்கராகவும், அவற்றைத் தடுப்போர் இராம - இலக்குவருமாக அமைகின்றனர். இராமருக்குரிய இராமபாணம் அவருக்குப் பயன்படுகிறது. கும்பகர்ணனை இராமபாணத்தால் இராமன் அழிக்கிறான். இராம பாணம் பட்டவர் உயிரைப்பருகி, நீராடி தூய்மைபெற்று பின், அம்பறாத் தூணியில் புகுகின்றது. இராம அவதாரச்சிறப்புக்கு இது சிறந்த ஓர் எடுத்துக்காட்டாகும்.

***அத்திர வகைகள் :***

1) பிரம்மாத்திரம் - இராமனை வலம் வந்து திரும்புகின்றது. இராவணன் சங்கம் ஊத, திருமாலின் சங்கம் தானே முழங்குகிறது. திருமாலின் ஐம்படைகளும் இராமன் திருவடியை அடைகின்றன (VI:36:2,:30). இராவணன் விடுத்த வேலை இராமன் உங்காரத் தொனி பொடியாக்குகிறது.

2) வாயுவாத்திரம் - அக்கினியாத்திரம், வருணாத்திரம், ஆதித்யாத்திரம், பிரம்மாத்திரம், விட்டுணாத்திரம், சிவாத்திரம் - என்பனவற்றை இந்திரசித்து முதலில் ஏவ, இலக்குவன் அதே அத்திரங்களால் தடுக்கின்றான் (Vi:26:128-157)

3) நிகும்பலை யாகப்படலத்தில் இராவணன் விடுத்த

மோகனாத்திரத்தை நாராயண அத்திரத்தாலும், தாமதாத்திரத்தை சிவாத்திரத்தாலும், ஆசுராத்திரத்தை அக்கினியாத்திரத்தாலும், மயன்தனுதிராத்திரத்தைக் காந்தருவப்படையாலும் மாயாத்திரத்தை ஞானாத்திரத்தாலும், நிருதிப் படையைக்கருடப்படையாலும் இராமன் மாறச் செய்து, இராவணன் அத்திரங்களைச் செயலிழக்கச் செய்கிறான் (VI:36:77-128).

### (1) வானரப்படை மேற்கொண்ட படைக்கலங்கள்

1. மரம்
2. கல்
3. மலை
4. கம்பு } பகைப்புலத்தில்
5. கதை } கிடைத்தவை
6. பல்
7. புஜம்
8. நகங்கள்
9. கை, கால்

(6–9: உடலுறுப்புகள்)

### (2) இராம - இலக்குவர்

1. வில் 2. அம்பு
3. பகழி 4. வாளி 5. கணை

### (3) இராம இலக்குவர் பெற்ற அத்திரங்கள்

1. வாயுவாத்திரம்
2. அக்கினியாத்திரம்
3. வருணாத்திரம்
4. ஆதித்யாத்திரம்
5. பிரம்மாத்திரம்
6. விஷ்ணுவாத்திரம்
7. காந்தவாத்திரம்
8. கருடாத்திரம்
9. சிவாத்திரம்
10. ஞானாத்திரம்
11. ஆக்னேயாத்திரம் முதலின

### (4) அரக்கர் பெற்ற அத்திரங்கள்

1. நாகபாசம்
2. அக்னியாத்திரம்
3. வாயுவாத்திரம்
4. வருணாத்திரம்
5. யாமாத்திரம்
6. காந்தர்வாத்திரம்
7. மோகனாத்திரம்
8. தாமதாத்திரம்
9. ஆசுராத்திரம்
10. மயாத்திரம்
11. மாயாத்திரம்
12. நிருபதிபடை
13. பிரம்மாத்திரம் முதலியன

### (5) போர்க்களப் பேரிகைகள்

1. கும்பிகை
2. திமிலை
3. செண்டை
4. குறடு
5. மாப்பேரிகொடி
6. பம்பை
7. தார்முரசம்
16. துடி
17. வேய்
18. கண்டை
19. அம்பலி
20. கணுவை
21. ஊமை
22. சகடை

8. சங்கம்
9. பாண்டில்
10. போர்பணவம்
11. தூரி,
12. கம்பிலி
13. உறுமை
14. தக்கை
15. கரடிகை

23. பறை
24. வயிரி
25. ஆகுளி
26. காளம்
27. பல்லியம்
28. வீணை
29. யாழ்

முதலியன

படைகளை நிலையானது, நிலையற்றது என்றும், தானை வகைகள் என்றும் படைக்கல வகைகள் என்றும் வகைப்படுத்தலாம்.

**படைகள்**

- நிலையானது
  - வேளைப் படை
  - மூலப்படை
  - நாட்டுப் படை
- நிலையற்றது
  - துணைப் படை
  - கலிப் படை
  - காட்டுப் படை

மூலப்படை, நாட்டுப் படை → பகைப்படை

**தானைவகைகள்**

1) களிற்றுத் தானை
2) தேர்த்தானை
3) குதிரைத்தானை
4) காலாள் தானை
5) வில்தானை
6) வேல்தானை
7) வாள்தானை
8) திகிரித் தானை

படைக்கலங்களை, எய்கலம், எறிகலம், குத்துக்கலம், வெட்டுக்கலம், தடுகலம் என வகைப்படுத்தலாம்.

### படைக்கலங்கள் வகை

| எய்கலம் | எறிகலம் | குத்துக்கலம் | வெட்டுக்கலம் | தடுகலம் |
|---|---|---|---|---|
| வில் | எறிகோல் | வேல் | வாள் | கவசம் |
| சிலை | எறிகல் | அயில் | மழு | கிடுகு |
| சாபம் | கவண் | சூலம் | கோடாரி | தோல் |
| கொழு | சக்கரம் | ஈட்டி | தோட்டி | |
| கேடயம் | கணையம் | வச்சிரம் | | |
| மரம் | | கதை | | |
| பகழி | | தண்டு | | |
| கணை | | உலக்கை | | |
| அம்பு | | குலிசம் | | |
| வாளி | | முளை | | |
| தோமரம் | | கொழு | | |
| நாஞ்சில் | | | | |
| பானம் | | | | |

## *இராமசரிதம் தரும் போர் நெறிகள்*

இராமசரிதம், கம்பராமாயணத்தைப் போலவே, போர்ப்பகுதிகளில் இராமாயணக் கால மக்கள் வாழ்வில் அற மறப்பாங்கினைச் சுட்டிச் செல்கின்றது இராமாயண யுத்தகாண்டப் பகுதியில், இராமசரித அடிப்படையில், இராமன் இராவணன் முதல்போர், கும்பகர்ணன் போர் இராவணன் மக்கள் அதிகாயன், நராந்தகன், திரிசிரசு, தேவாந்தகன் போர், இந்திரசித்து போர், இராவணன் இறுதிப்போர் முதலியன குறிப்பிடத்தக்கன. இலங்கை முற்றுகையில் இராவணன் - சுக்கிரிவன் மற்போர் வரவர வளர்ந்து இறுதியில் பெரும்போராக முடிகின்றது.

(1) இத்தகைய போர் தொடர்ச்சியுள் சில தனிப்போராகவும், சில அணிப்போராகவும் நிகழ்கின்றன. சிலவேளை படைத்தலைவர்கள் தனிப்போரும் செய்கின்றனர்.

(2) போர் தொடங்கும் முன் மந்திராலோசனை செய்கின்றனர். இராவணன் தன் அமைச்சர்களுடன், வானரர்மேல் போர்தொடுக்க ஆலோசனை செய்கிறான். (ப:5,6): அவையில் அமைச்சர்களும், சகோதரர்களும் மக்களும் கலந்து கொள்கின்றனர். போரிடும்முறை பற்றி இருதரத்தாரும் ஆலோசனை நடத்துகின்றனர் (ப:10,11). போர் தொடங்கும் முன் தூதனுப்பி அதன் பயனை அறிந்து, போர் தொடங்கு கின்றனர். அங்கதன் இராவணன்பால் தூது செல்கிறான் (ப:13).

(3) போரில் முதல் நிலையாக, அரணை வளைத்தல் நடைபெறுகிறது. வானரர் படை, இலங்கையை முற்றுகையிடுகிறது. (ப:13). நகரம், கோட்டை மதிலாலும், அகழியாலும் சூழப்பட்டு வாயில்களை

உடையதாக இருக்கிறது. பல பொறிகள் பொருத்தப்பட்டு, வானளாவிய கோபுரங்களை உடையதாக இருக்கிறது (ப:2)

(4) போரை நேரிடுதற் பொருட்டு ஒவ்வோர் வாயிலும் ஒவ்வோர் தலைவர் பொறுப்பில் படையுடன் விடப்பெறுகிறது. உள்படை, உணவுப்படை இவற்றிற்கு ஒவ்வோர் தலைவர் இருக்கின்றனர் (ப.10,11).

போருக்கு ஓர் தலைவரே ஆணையிடுகின்றனர். ஆணை பெற்றபின் அணிவீரர் போர் செய்கின்றனர். அனுமன் - தூமராக்கன்போர் (ப.18) நீலன் - பிரகத்தன் போர் (ப:23) இவற்றை எடுத்துக்காட்டாகக் கொள்ளலாம்.

(5) தொடக்கத்திலிருந்து இறுதிவரை வானரப்படை தமக்கே உரிய மரம், மண் கல், பாறை இவற்றால் போர் செய்ய, அரக்கர்கள் கதை, மரம், தோமரம், வேல், வில் அம்பு, கத்தி, சூலம், தடி இரும்புலக்கை, கோடாரி, வாள், ஈட்டி, முதலியவற்றைப் பயன்படுத்துகின்றனர். இயற்கை இறந்த செய்திகளாக அத்திரங்கள் கையாளப்படுகின்றன. ஒவ்வொரு அத்திரமும் விடவேண்டிய விதிமுறை பற்றியும் பேசப்படுகிறது. இலக்குவன், இராமன், அதிகாயன், இந்திரசித்து, இராவணன் ஆகியோர் அத்திரங்களைக் கையாளுகின்றனர்.

(6) பகலும் இரவும் போர் நடக்கிறது. போர்ச் செல்ல சங்கமும் பறையும் முழங்குகின்றன. வீரர்கள் நாணைத் தெறித்துப் பேரொலி செய்வர். இருதரத்தலைவர்களிடமும் இதனைக் காணலாம்.

(7) போரில் நால்வகைப்படையுடன், கழுதை, ஒட்டகம், சிங்கம், போன்ற விலங்குகள் படைகளில் பங்குபெறுகின்றன. கும்பகர்ணன் வதையிலும், திரிசிரன் போரிலும் இதனைக் காணலாம். (ப:32,41) தேரில் இருந்து போர் செய்யும் நிலைக் கேற்ப, இராம இலக்குவர், அனுமன், அங்கதன் தோளிலிருந்து போர் செய்கின்றனர் (ப:64,72).

(8) போர்த் தலைவர்கள் ஒப்பாரோடு போர் செய்யும் நெறி கூறப்படுகிறது. கும்பகர்ணன் இலக்குவனை எதிரிடவும், மகரக்கண்ணன் இலக்குவனை எதிரிடவும் மறுக்கின்றனர் (ப:32,58).

(9) போரில் வெற்றி பெற்றோர் களியாட்டம் புரிகின்றனர். போரில் பலவகை வீரரையும் பாராட்டும் மரபும் உண்டு. இந்திரசித்து இலக்குவனைப் பாராட்டுகிறான். (ப:47)

(10) அரக்கர்கள் மாயப்போர் செய்ய, வானரப் படைவீரர்கள், பேரறிவால் அதனை வெல்லுகின்றனர். மகராக்கனை இராமன் பேரறிவால் வெல்லுகிறான் (ப:58).

(11) அரக்கர்கள் மாயப்போரில் ஒரு நெறியாகப் பகைவகரைத் திசை திருப்ப, மாயாதேவி, மாயா சனகன் வதை போன்றவற்றைக் காட்டி வெல்ல முயலுகின்றனர் (ப:11,743).

இயற்கை இகந்த செய்திகளாகக் கருடன் வருகை, மருத்துவமலையைக் கொணர்தல், தயரதன் வானில் தோன்றல்,

[illegible]ராமனுக்குத் [illegible] கூறுதல் முதலியன கதையில் ஆங்காங்கே இடம் பெறுகின்றன.

இங்ஙனம், இராமசரிகம் வழி இராமாயணப்போர் நெறிகளைக் காணமுடிகிறது.

*ஆய்வுமுடிவுரை:*

1) போர்த் தொடக்கத்தில், இலங்கையை முற்றுகையிட்டு அகழியைத் தூர்த்த பின், வடக்குவாயிலில் இந்திரசித்து அங்கதனைத் தாக்குகிறான். கம்பனில் சுக்கிரீவன் வச்சிரமுட்டியைத் தாக்குகிறான்.

2) கிழக்கு, மேற்கு, தெற்கு வடக்குவாயில் காவல், கம்பனை விடச் சீராமகவியில் மாறுபடுகிறது. முன்னர் அட்வணைப்படுத்தி இவை சுட்டப்பட்டுள்ளன.

3) போர் நெறியில், இலங்கைவாயில் முதலில் வானர வீரர்களுக்கும், பின்னர் தலைவர்களுக்கும் போரில் பங்குபெறும் பான்மை இரு ஆசிரியர்களும் போற்றுகின்றனர்.

4) முதல் நாள் போரிலேயே இந்திரசித்து மாயையால் பிரமாத்திரம் விடுகிறான். கம்பனில் இது இடம் பெறுகிறது.

5) சீராமகவி, மற்போருக்கு கம்பனைப் போல வாய்ப்பளிக்கவில்லை.

6) தூது விடுவதில், இரு கவிஞர்களும் ஒரே நெறியைப் பின் பற்றுகின்றனர்.

7) "சகுனங்கள்" சீராமனில் அரக்க வீரர்களுக்கும் போர்த்தலைமை ஏற்கும் பாத்திரங்களுக்கும் நிகழ்கின்றன. கம்பனில் தலைமைப் பாத்திரங்களுக்கு மட்டுமே நிகழ்கின்றன.

8) தமிழ்ப் போர் மரபுப்படியுள்ள புறத்திணைத் துறைகளோ, பூச்சூடல் போன்ற நிகழ்ச்சிகளோ சீராமனில் இல்லை.

9) அரக்கர், வானரர் - படைவீரர்கள் கையாளும் கருவிகள் பெரும்பாலும் ஒன்றாகவே அமைகின்றன.'

10) படைத்துணைக்குச் செல்லும் வீரர்கள் படைத்தலைவர்களை வணங்கி ஆணைபெற்றே செல்லும் நெறி, போர் நிகழ்ச்சிகள் முழுவதிலும் இடம் பெறுகிறது.

11) பகலும் போர் நிகழ்ந்ததாக இரு நூற்களும் கூறுகின்றன.

12) ஒப்பாரோடு போர் செய்யும் நெறி இருபடையிலும் போற்றப்படுகிறது.

13) போர் தொடங்கும் முன்னும், போரிடையேயும் வீரவுரை பகர்தல், வஞ்சினம் கூறல், முதலியன நெறிகளாகக் கொள்ளப்படுகின்றன.

14) கம்பனிலும், சீராமனிலும் தனிப்போர் நெறியும் கூட்டுப் போர் நெறியும் இடம் பெறுகின்றன.

15) அரக்கர்கள் மாயப்போர் செய்யும் முறை, இரு நூலிலும் இடம் பெறுகிறது.

16) நால்வகைப் படையுடன், கழுதை, ஒட்டகம், சிங்கம் முதலிய படைகளும் இடம் பெறுகின்றன. சீராமனில் இச்செய்தி ஆங்காங்கே வருகிறது.

17) அத்திரங்கள், கம்பன் - சீராமனில் ஒன்றுபோலவே அமையினும் கம்பன் தற்பவப்படுத்தியும், சீராமன் மூலநூலைத் தழுவியும் பெயர்களைத் தருகின்றனர்.

18) இயற்கையிகந்த போர் நிகழ்ச்சிகள் இரு நூற்களிலும் இடம் பெறுகின்றன.

19) ஒவ்வொரு முறையும் ஒவ்வொரு தலைவரே போரை நடத்திச் செல்லுகின்றனர்.

20) போர் முறைவைப்பில் சீராமகவி வான்மீகியின் நூலைப் பின்தொடர, கம்பன் வகைதொகை செய்து வளப்படுத்துவார்.

21) போரிட்டுச் சோர்வுற்ற காலத்தே, தனித்தோரை ஊக்க மூட்டலும் வெற்றிபெற்றகாலைக் களியாட்டலும் நிகழ்கின்றன.

22) போர்க்கள நிகழ்ச்சிகளாக ஆர்ப்பரித்தல், அணிவகுப்பு, கீதம் இசைத்தல், சங்கம் முழங்கல், முரசறைதல் முதலியன இருநூற்களிலும் இடம் பெறுகின்றன.

23) படைகளின் எண்ணிக்கை இயற்கையிகந்த செய்திகளாகவே இரு நூற்களிலும் அமைகின்றன.

24) வெற்றிகாரணமாக வீரர்களைப் பாராட்டல், முகமன் கூறிப்பரிசுகள் தருதல் முதலியன கம்பனில் ஏற்றம் பெறுகின்றன.

25) போரைத்தடுக்க. இராமனும் வீடணனும் கூறும் அறிவுரைகள் கம்பனில் மிகுதியாக இடம் பெறுகின்றன.

26) கம்பனில் சக்கரவியூகம், கிரவுஞ்சவியூகம் இடம் பெறச் சீராமனில் இவை இல்லை.

பொதுவாகக் கம்பனும். சீராமகவியும் படைகள், படை இயல்பு, போர்க்கருவிகள், படையமைப்பு, நிமித்தம் அறிதல், படைப்புறப்பாடு, படை மோதல், களநிகழ்ச்சிகள், வீரரைப் போற்றுதல் - இந்நெறிகளைத் தத்தம் திறனுக்கேற்ப மூலநூலை ஒட்டிச் சில மாற்றங்களுடன், போர்ப்பகுதிகளில் தந்துள்ளனர் எனலாம்.

## *படைக்கலங்கள் / அத்திரங்கள்*

## *ஒப்பீட்டு அட்டவணை* - 5

| கம்பன் சிறப்பு | கம்பன், சிராமன் பொது | சிராமன் சிறப்பு |
|---|---|---|
| படைக்கலங்கள்: | வில் | |
| | அம்பு | |
| | வாள் | |
| கிடுகு | வேல் | |
| | மழு | |
| | பாசம் | |
| | தண்டு | |
| | சூலம் | |
| அயில் | தோமரம் | |
| வாலம் | சக்கரம் | மாற்றமில்லை |
| | பிண்டிப்பாலம் | |
| | முசலம் | |
| | உலக்கை | |
| | நாஞ்சில் | |
| | குலிகம் | |
| | கேடயம் | |
| மூகண்டி | ஈட்டி | |
| கப்பணம் | கழு | |
| | கவண்கல் | |
| | பிறைப்பாணம் | |
| கன்னகம் | வளையம் | |
| தோட்டி | முளை | |
| முக்கரம் | மூவிலை வேல் | |
| கொழு | அரம் | |
| | குந்தம் | |

# அடிக்குறிப்புகள்

1. ந.சி. கந்தையா பிள்ளை - 'செந்தமிழ் அகராதி, தொகுப்பாசிரியர் ப. 568.
2. திவாகரமுனிவர் - சேந்தன் திவாகரம். ப.10.
3. பிங்கலமுனிவர் - பிங்கலநிகண்டு. ப.217.
4. ஞா. தேவநேயன் - பழந்தமிழ் ஆட்சி. ப. 101.
5. Military History pp.2-3 (operation of War. Volume 4 author unknown).
6. திருவள்ளுவர் - திருக்குறள், பொருள். பா.1.
7. பதிற்றுப்பத்து 51:26
8. கலைக்களஞ்சியம். தொகுதி 6, ப:683.
9. ரா.பி. சேதுபிள்ளை - தமிழர் படைத்திறம், ப.62.
10. டாக்டர் தங்கக் கந்தசாமி - போரில் அன்றும் இன்றும் ப.304.
11. திருவள்ளுவர் - திருக்குறள், பொருள், பா.7
12. மு. இராகவையங்காா் - ஆராய்ச்சித் தொகுதி, இராமாயணமும் தமிழ் வழக்கும்; பக். 35-36.
13. டாக்டர் அ. பாண்டுரங்கன் - காப்பிய நோக்கில் கம்பராமாயணம், ப. 204.

# முடிவுரை

கம்பராமாயணம் யுத்தகாண்டம் - மலையாள இராமசரிதம் பற்றிய ஒப்பாய்வில், முகவுரை, ஒப்பாய்வின் முன்னோடிகள், கம்பனும் சீராமனும், இராமகதையின் பரப்பு, கதை அமைப்பும் போக்கும், யாப்பமைதி, போர்த்தலைமைப் பாத்திரங்கள், போர் - நெறிகளும் படைக்கலன்களும் ஆகியவை இடம் பெற்றன. முடிவுரையுடன் ஆய்வு நிறைவுறுகிறது. ஆய்வில் கண்ட முடிவுகளும், இத்துறை தொடர்பான எதிர்கால ஆய்வுக்குப் பரிந்துரைகளும் இங்குக் கூறப்படுகின்றன. ஒப்பாய்வின் வாயிலாக அறியப்படும் உண்மைகள் தொகுக்கப்பட்டு, மிகச் சுருக்கமாக இங்குத் தரப்படுகின்றன.

(1) ஒப்பாய்வின் முன்னோடிகள் என்னும் தலைப்பில், ஆய்வில் உருவான நூற்களும், அவற்றில் அமைந்த பொருளும் தரப்பட்டன. இரு மொழி இராமயாண ஒப்பீட்டு ஆய்வு பரிணமித்து வரும் திறன் சுட்டப்பட்டுள்ளது. இவற்றால், ஒத்த இலக்கியத் தனித்திறன்களை அறிய முடிகிறது. ஒப்பாய்வுச் சிந்தனைக்கு இவ்வாய்வுகள் ஆர்வமூட்டுகின்றன.

(2) கம்பனும், சீராமனும் என்னும் சிற்றாய்வில் கம்பன் காலம் கி.பி.12 ஆம் நூற்றாண்டு என நிறுவப்பட்டது. இவ்வாய்வுக்கு அரணாக விருத்தப்பாவகையின் வளர்ச்சிநிலை, நூலில் அமைந்த சொல் நிலை, கவிஞன் சோழர்களைப் போற்றும் திறன்கள் முதலியன சுட்டப்பெறுகின்றன. தென்னகத்தில் பல்வேறு மொழிகளில் இராமாயணம் பரவிய காலகட்டமும் இதுவெனக் காணமுடிகிறது.

(3) கம்பன் காலச்சூழல் சோழர்களின் போர் எழுச்சிக் காலமாகும். ஆதலின், கம்பன் போர்த் திறனை வளப்படுத்தும் முகமாகத் தன் நூலைப்படைத்தான். நாட்டின் இயற்கைவளம் கற்பனைத் தேருக்கு வழித்தடமாக அமைந்துள்ளது.

(4) மலையாள இராமசரித ஆசிரியர் சீராமன், திருவிதாங்கூரை கி.பி. 1285 - 1370 ஆட்சி செய்த ஆதித்யவர்மா என்பவராவர் என்னும் உண்மை மலையாளப் பேராசிரியர்கள் மேற்கொண்ட ஆய்வுகளால் வெளியாகிறது. டாக்டர் கே. எம். ஜார்ஜ் அவர்களின் மொழிவழிச் சிந்தனைகளும், நூலின் அந்தாதிப்பாடல் அமைப்பும், சீராமன் கி.பி. 12. ஆம் நூற்றாண்டின் இறுதியில் வாழ்ந்தவன் என்னும் கொள்கைக்கு அரண் செய்கின்றன.

(5) சிதறுண்ட நாட்டை ஒன்றுபடுத்தி ஒரு வல்லரசாக்க, கி.பி. 12 ஆம் நூற்றாண்டில் வீரமார்த்தாண்ட வர்மா முனைந்தார். மன்னரான நூலாசிரியரும் சாதாரண மக்களிடையே போர் உணர்வைத் தூண்டுவதற்காக இராமாயணப்போர் நிகழ்ச்சிகளை மட்டும் பாடியருளினார். கருத்துக்களைச் சுருக்கி உரைக்கப் பெருமாள் திருமொழி நூலமைப்பையும், நினைவுகூர்ந்து மனப்பாடமாகப் படிப்பதற்காக அந்தாதிப் பாடல் அமைப்பையும் இராமசரிதம் மேற்கொண்டுள்ளது.

(6) இராமகதை அமைப்பு என்னும் இயலில் இராமகதை நெடுங்காலமாகப் பரதகண்டம் முழுவதும் வழங்கிவரும் பான்மையும், தமிழகத்திலும் இராண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே இக்கதை பரந்துள்ளமையும் விளக்கமுறுகின்றன. கம்பனுக்கு முன் தமிழில் சில இராமாயண நூற்கள் இருப்பினும், கம்பன் வால்மீகியைப் பின்பற்றித் தமிழ்நாட்டிற்கு ஒவ்வ இராமவதாரத்தைப்படைத்தான். கம்பன் தன் இராமாயணத்தை மலையாளக்கரையிலும் பரப்பினான். கம்பனுக்குப் பின் பிற தென்னிந்திய மொழிகளில் சிறந்த இராமாயணங்கள் தோன்றின..

(7) கம்பராமாயணம் போர்ப்பகுதிகள், இராம சரிதம் ஆகியவற்றின் கதைச்சுருக்கம் ஒப்பாய்வுக்கு முன்னோடிகளாகத் தரப்பட்டுள்ளன. ஒப்புநோக்குவதற்கு உதவிடும் வகையில் இவை சுருக்கிவுரைக்கப்பட்டன. இரு நூற்களும் ஒப்பிடப்பட்டு மாறுபடும் இடங்கள் தரப்படுகின்றன. ஒப்பாய்வில் வெளியான உண்மைகளின் சுருக்கம் வருமாறு :

(1) வால்மீகி, சீராமகவி தரும் போர்ப் பகுதியின் முதல் கம்பனின் சுந்தரகாண்டப் பிற்பகுதியாக அமைகிறது.

(2) கம்பனின் பாயிர அமைப்பையொட்டிச் சீராமகவியும் பாயிரம் படைக்கிறான். ஆனால், கம்பன் கடவுளரைப் பொதுவாகச் சுட்ட சீராமன் பலராகச் சுட்டுவான்.

(3) கம்பன், சீராமன் - இருவரும் வால்மீகியின் யுத்தகாண்ட நிகழ்ச்சிகளைத் தொகுத்தும் விரித்தும், நீக்கியும் மாற்றியும். கதைப் போக்குக்கு ஊறுவராதபடிப் படைத்துள்ளனர்.

(4) கம்பனும் சீராமனும் கதைச்சூழல்கள், காலம், இடம் இவற்றைச் சில இடங்களில் மாற்றுகின்றனர். கதைமாந்தர் செயல்களும் சில இடங்களில் மாறுபடுகின்றன.

(5) இரு கவிஞர்களும் இராமபிரானை அவதாரமாகவே போற்றுகின்றனர்.

(6) கம்பன் கருத்தின் சில சாயல் சீராமகவியிடம் காணப்படுகிறது.

(7) சீராமகவி, அனுமன் பரதனுக்குக் கூறும் சித்திரகூட நிகழ்ச்சிகளைக் கூறும் பான்மை, ஒரு மீள் பார்வையாக அமைந்துள்ளது. இது சீராமனின் சிறப்பாகும்.

(8) முடிசூட்டு விழாவில் நாரதன் வாழ்த்துரை, சீராமகவிக்கு ஏற்றத்தைத் தருகிறது.

(9) கம்பன் போரை மிகவும் விரிவாகத் தரச், சீராமன் சுருக்கித் தருகிறான்.

(10) வால்மீகியைப் பெரிதும் பின்பற்றுபவன் சீராமகவியே, கம்பன் தன் தனித்திறனை வெளிப்படுத்துகிறான்.

8 'யாப்பமைதி' என்னும் நான்காம் இயலில் கம்பராமாயணம் யுத்தகாண்டம், இராமசரிதம் இவற்றின் யாப்பமைதி ஆராயப்பட்டன. கம்பனும் சீராமனும் இராமகதையைப் பாடுவதற்கு விருத்தவகைகளையே கருவியாகக் கொண்டனர். அவற்றில் வெளிப்படும் உண்மைகளாவன:

(1) கம்பராமாயணம் யுத்தகாண்டம் 4358 விருத்தப்பாக்களையும், இராமசரிதம் 1814 விருத்தப்பாக்களையும் கொண்டது.

(2) கம்பன், வஞ்சிவிருத்தம், கலிவிருத்தம், கலித்துறை, அறுசீர் ஆசிரிய விருத்தம், எழுசீர் ஆசிரியவிருத்தம் ஆகியவற்றைக் கையாளுகிறான். கம்பனில் கலிவிருத்தம் மிகுதியாக இடம் பெறுகிறது. சீராமன் கலிவிருத்தம், அறுசீர் ஆசிரியவிருத்தம் எழுசீர், எண் சீர் பதின்சீர் விருத்தங்களைக் கையாளுகின்றான். சீராமனில் அறுசீர் விருத்தம் மிகுதியாக இடம் பெறுகிறது.

(3) கவிஞர்கள் தம் உணர்வு, பாத்திரப்பேச்சு, பொருள் இவற்றிற் கேற்ப விருத்தங்களின் அமைப்பை ஆங்காங்கே மாற்றுகின்றனர். சீராமன் ஒவ்வொரு படலத்திற்கும் ஒரேவிருத்த அமைப்பைக் கையாளுகிறான்; கம்பன் ஆங்காங்கே மாற்றுகிறான்.

(9) போர்த்தலைமைப் பாத்திரங்களால் சில உண்மைகள் வெளியாகின்றன. பாத்திங்களின் தலைமைப்பண்பு அவற்றின் மனம் மொழிமெய்களால் அமைகிறது. உயிர்நிலைப் பாத்திரங்களாக இராமன், இலக்குவன், வீடணன், அனுமன் ஆகிய அறநிலை போற்றுவோரும். இராவணன். கும்பகர்ணன், அதிகாயன். இந்திரசித்து ஆகிய மறநிலை ஒழுகுவோரும் இங்குத்தரப்பட்டு ஆராயப்பட்டன. கம்பனும் சீராமகவியும் பொதுவாக ஒன்றாகவும், சிறப்பாகத் தத்தம் தனித்திறன்களுக்கேற்பவும் பாத்திரங்களைப் படைக்கின்றனர்.

1) கம்பன் படைக்கும் இராமன், தன்னேரில்லாத தலைவன்: வீரர்களுக்குள் வீரன்; அவன் பரம்பொருளாயினும் மனிதனாக நடந்து கொள்ளுகிறான். பகைப் புலத்திலிருந்து வந்த வீடணனை அடைக்கலமாக ஏற்கிறான். சேதுபந்தனத த்தை மூன்றே நாட்களில் முடிக்கிறான். சுக்கிரீவன் பால் பேரன்புடையவன் என்பது 'உன்னிய கருமம் எல்லாம் உன்னோடு முடிந்தது' என்னும் தொடரால் விளக்கமாகிறது. தும்பைசூடி போர் மேற்செல்லும் இராமன், முதல்போரில் தோற்ற இராவணனை, 'இன்று போய் போர்க்கு நாளை வா' என்ற அருள்திறத்தால் பகைவரைப் பொறுக்கும் பெற்றியனாக விளங்குகிறான். இலக்குவன் போரில் மூர்ச்சித்தகாலை இராமன், 'தமியனான நான், தம்பிமாள இனி நான் வாழேன், உன்னுடன் வந்தேன்' என அரற்றுகின்றான். மனிதப் பண்புடன் சகோதர பாசத்துக்கும் அடிமையாகின்றான். பகைப்புலத்து ஒதுங்கும் சாரதிமேல் அம்பெய்யாது அருள்திறனாளராக விளங்குகின்றான். போரில் வீழ்ந்த இராவணனின் புறப்புண்கண்டு, 'தன் வெற்றியும் வீரமும் பழுதுபட்டன' என்று எண்ணி, வீரத்திற்கு எடை போடுகிறான். போரில் பெற்ற வெற்றியை 'வீடணன் தந்த வெற்றி' என்றே மதிப்பிடுகிறான்.

2) சீராமன் படைக்கும் இராமன், போர்த் துவக்கத்திலேயே இராவணனிடம், 'எட்டுத்திசைகளில் போய் மறையினும் கடலில் புகுந்து ஒளியினும் முனிவர்க்கும் மூவுலகுக்கும் துன்பமில்லாமல் காக்க, உன் வாழ்வை இத்துடன் முடிக்காமல் விடேன்' எனத் தன்

அவதார நோக்கத்தை வஞ்சினமாக வெளியிடுகிறான். போரில் பட்ட விழுப்புண்ணின் சிறப்பைப் "போர்க்களத்தில் மரணமடைவது அழகல்ல; உன் போர்க்காயங்கள் மரணம் வரை நிலைத்து நிற்கும்' எனப் பகைவனுக்கே உணர்த்துகின்றான். வீடணன், தன் தமையன் இராவணன் இறப்புக்கு வருந்தியகாலை, இராமன், 'ஒன்றுகேள் எவர்தான் வாழ்நாள் முழுவதும் வாழ்ந்தார்?" என வாழ்க்கை நிலையாமையை உணர்த்துகிறான். போர் முறைகளை இரு கவிஞர்களும் போர்த்தலைமை ஏற்கும் பாத்திரங்களின் போர்ச் செயல்களால் ஒத்த நிலையில் காட்டிப், படைப்பாற்றலால் தத்தம் திறன்களைக் காட்டி நிற்பதை அறிய முடிகிறது.

3) இராமனுடன் பிறந்தோருள், கருதியதை முன்னின்று முடிப்பதில் இலக்குவன் சிறந்தவன். உணர்ச்சி, அறிவு, தெளிவு, இவற்றால் சிறந்தவன். அண்ணன் சொல்லுக்கு அடிபணிந்து வீடணனுக்கு முடி சூட்டுகிறான். தன்னுடன் பொருதும் இராவணனை 'என் கைவாளிக்கு இலக்கு இவன்' - என வஞ்சினம் கூறுவான். இராவணன் இவன் போர்த்திறமையை, 'வில்லினால் இவனது வலிமையை 'எண்ணாயிரங் கோடி இராவணரும், விண் நாடரும் வேறு உலகத்து எவரும் நண்ணாத் தன்மையன்' எனக்கூறுவான். இவ்வாறு இராமனுக்குப் பேரன்பினனாகவும், அறங்காக்கும் பெருவீரனாகவும், கடமையில் சிறந்தோனாகவும் கம்பன் படைத்துக் காட்டுவான்.

4) இராம இலக்குவன் பற்றி 'சுகசாரன் வாயிலாக, குற்றமற்ற மனத்தினர், இராவணன் அழிவிற்கு வேண்டி வந்துள்ள அரசநாயகர்கள்' எனச் சீராமகவி கூறுவான். இலக்குவன் இராவணனிடம் வில்லேந்தி அம்பெய்துப் போரிடுக; அது தான் உத்தமர்க்கழகு, - என அறிவுறுத்துகிறான். கும்பகர்ணன் இலக்குவனை 'வீரத்தில் வீரன் நீ, உத்தமன் நீ' எனக்கூறுவான். நிகும்பலைப் போரில் இவன் திறன் கண்ட இராமன், 'நீ துணையாக என்னுடனிருக்க இவ்வுலகிலுள்ள எல்லா எதிரிகளையும் நான் வென்றுவிட்டவன் ஆவேன்' எனப் புகழ்ந்துரைக்கிறான் இவற்றால், கம்பனும் சீராமனும் இலக்குவனைப் படைப்பதில் வெவ்வேறு நிலையில் சிறந்து விளங்குகின்றனர்.

5) இராமகதையில் ஓர் இன்றியமையாத படைப்பு அனுமன் என்னும் பாத்திரம். வலிமைக்கு வரம்பான வாயுவின் மகன், சொல்லின் செல்வன். சுக்கிரீவனின் தொண்டன். வீடணனை அடைக்கலமாக ஏற்பதில் இராமன், 'மாருதிவடித்துச் சொன்ன பெற்றியே பெற்றி' எனப் போரில் முதல் கீர்த்தி முத்திரை பெற்றவன். இராவணனுடன் மற்போர் செய்யும் ஆற்றல் மிக்கவன். கும்பகர்ணனிடம் மலையெடுத்து எறிந்து 'இதனைத் தாங்கினால் அமர்புரியேன்' எனச் சபதம் கூறி அதன்படி நின்றவன். போரில் இடுக்கண் உற்றபோது மருந்துமலையால் அவற்றைப் போக்கியவன். தக்க சமயத்தில் பரதன்

முன்தோன்றி உயிர்காத்தவன். முடிசூட்டு விழாவில் அரியணை தாங்கும் பெருமை பெற்ற தொண்டன் இவ்வாறு கம்பன் அனுமனைப் படைத்துக்காட்டுகிறான்.

(6) சீராமன் படைக்கும் அனுமன், சீதையை அடைந்த காலை 'இன்று முதல் துன்பம் அழிந்தது; பதினான்கு உலகும் பயம் நீங்கி வாழும்; இராவணன் உயிரற்று வீழ்ந்தான்' எனக்கூறுவான். வீடணனோ அனுமனை "ஆழ்கடல் தந்தான், போருக்கென வந்தவரின் எமனானான்: இந்திரனும் அஞ்சும் இலங்கையைப் பொடியாக்கினான்; இராவணன் அழிவுக்குத் துணையாக எவரும் வழிபடும் வண்ணமானான்" எனப்புகழ்கிறான். சீதை அனுமனுக்கு முத்துமாலையளித்து, "இராமசரிதம் நிலைத்து நிற்பதற்கு மேலும் மரணமில்லா வாழ்வு உண்டாகுக" என வாழ்த்துகிறாள். இருவர் படைப்பும் அனுமனுக்குப் பல நிலைகளில் ஏற்றத்தைத் தருகிறது.

(7) இராவணன் உடன் பிறந்தோரில் அறநிலை போற்றும் பாத்திரப் படைப்பு வீடணனது. இராமனிடம் அடைக்கலம் புகுந்த வீடணன், இலங்கைக்கு வேந்தனாகிறான். இலங்கைப்போரில் வெற்றிக்கு வழிகோலிய இவன், தன் அண்ணனை "அழிவு எய்துவான் அறிவு நீங்கினான்" எனக்கூறுகிறான். மேலும், "புன்தொழில் இராவணன், அழகிற்றே; கொற்றவர்க்கு உற்றது" என்றும் கூறுவான். வீடணன் கும்பகர்ணனது தன்மையை "மாள்வது மெய் என்று துணிந்தே போர்க்களம் வந்துள்ளான்" என்பான். இலக்குவன் - அதிகாயன் போரின் நிலைகண்ட வீடணன், 'இந்திரசித்து இறப்பது உறுதியே' என எண்ணுகிறான்: வீடணன், இலக்குவன், அனுமன், சாம்பவன் முதலியோருக்கு வழிகாட்டும் நல்லோனாக விளங்குகிறான். தன் அண்ணன் இறந்தபோது, "தெய்வ கற்பின் பேர்களைத் தழுவினான் உயிர்கொடுத்துப்பழி கொண்ட பித்தா! பின்னைப் பார்மகளைத் தழுவினையோ?" என அவன் செயலுக்குக் கழிவிரக்கம் கொள்கிறான். இராமன் முடிசூட்டுவிழாவில் பங்குபெற்று விடைபெறும் வீடணன் "சராசரம் சுமந்த சால்பின் பின்னையே ஒப்பார் நின்னை அலது இலர்" எனப்புகழாரம் சூடி நிற்கின்றான். இவ்வாறு கம்பன் வீடணனது அற வாழ்க்கையைத் துவக்கம் முதல் இறுதிவரை ஒரே பெற்றியாகப் படைத்துக்காட்டுகிறான்.

(8) சீராமகவி படைக்கும் வீடணன், இராவணனது மந்திர ஆலோசனையில். 'இராமன் வலியன் சீதையைக் கொடுப்பதே நன்மை' எனக்கூறுகிறான். பகைப்புலத்தை வீடணன் ஒவ்வொரு போரிலும் விவரித்துக்கூறுவான். மாயாசீதை பற்றி ஆய்ந்த வீடணன். 'அரும்பெருஞ் செயல்களில் தர்மத்தைப் பின்பற்றி நடந்தால் துன்பமே வராது; இது ஞானிகள் கூற்று. சீதைபற்றிய சொல் பொய், தர்மமே நல்லது; அதுவெல்லும்,' எனக்கூறுவான். இந்திரசித்து மறம் போற்றும் மாண்பினனாக வீடணனை 'எதிரிகளுக்கு உளவு சொல்ல உதவினாய்' எனப் பழித்துரைப்பான். வீடணன், அவனிடம் 'சதியால் அறிவுகெட்டு

அலைவது ஒரு நாளும் உத்தமருக்குப் பொருத்தமானது இல்லை' எனப் பதிலுரைப்பான். இரு கவிஞர்களும் வீடணன் படைப்பில் ஒரே நெறியையே பின் பற்றுகின்றனர்.

(9) எதிர் நிலைப்பாத்திரங்களுள், இராவணன் முதலிடத்தைப் பெறுபவன். அவன் தவமும் பக்தியும் ஆண்மையும் ஆட்சித்திறனும் பேராற்றலும் உடையவன். வலிமைமிகு கும்பகர்ணனைத் தம்பியாகப் பெற்றவன். இந்திரசித்து, அதிகாயன் மற்று மூவரையும் மக்களாகப் பெற்று மறவாழ்க்கை மேற்கொள்ளுபவன். மந்திராலோசனையில் வீடணன் அறவுரையைத் துச்சமாக மதித்துப் போர்தொடுத்தவன். முதல் நாள் போரில் இராமனிடம் தோற்று வெறுங்கையனாக மீண்டவன். "என்னையே நோக்கி யான் நெடும்பகை தேடிக்கொண்டேன்" எனத் தன் மகனிடம் கூறியவன். இந்திரசித்தன் இறந்தபோது "எனக்கு நீ செய்யத் தக்க கடன்களெல்லாம் யேங்கி யேங்கி உனக்கு நான் செய்வதானேன்" என்று பேசுபவன். இந்த அழிவு சீதையால் விளைந்தது எனக் கருதுபவன். இராமன் 'பரம்பொருள்' என்று உணர்ந்த காலத்தும் மானம் ஒன்றையே கருதி, போர்தொடுத்துத் தன் சுற்றத்தோடு அழிந்தவன். இவ்வாறு பலபடக் கம்பன் அவல வீரனாக இராவணனைப் படைத்துக்காட்டுவான். பெருவீரமும் பேராற்றலும் உடையவனாயினும் தன்முனைப்பே மிக்கோங்க அழிந்து படும் இராவணனது பாத்திரப்படைப்பு இணையற்றதாக விளங்குகிறது.

(10) அறம் பேசிய வீடணனை இகழ்ந்த இராவணன், நீ எனக்குத் தம்பியாய் இருந்தாய்; இந்த உறவு மூலம் இனியும் பேசமுடியாது' என எச்சரிக்கிறான். வீடணன், இவனை இராமனுக்கு அறிமுகப்படுத்தும் பொழுது "உதய சூரியனுக்குச் சமமானவன், சிவனுக்கு அன்பன்; வாரணப்பற்கள், வெண்ணிற எகிறன், சிங்கச் சின்னத்தைத் தேரில் அணிந்தவன், பெருவீரன்" எனக்கூறுவான். இந்திரசித்து இறந்த போதுற்ற அவலத்தில், 'முன்பு இலங்கை நகரில் துன்பம் சூழ்ந்ததாக நான் அறிந்ததே இல்லை? - என இராவணன் கூறி வருந்துவான். இவன் இறப்பில் வருந்திய வீடணன், பிறப்பு இறப்பு பற்றிய தத்துவத்தை இராமன் வழி அறிகிறான். இவ்வாறு இராவணனின் தனித்திறன் சீராமனால் உணர்த்தப்பெறுகிறது.

(11) இராவணன் உடன் பிறந்தோர்களுள் கும்பகர்ணன் ஒருவன். ஓங்கி உலகளந்த உத்தமனுக்கு இணையான உருவமுடையவன். இராமனுக்கு வில்போலக் கும்பகர்ணனுக்குச் சூலமே போர்க்கருவியாகப் பயன்படுகிறது. இலங்கை வேந்தன் தவறிழைத்தபோது, தவறினைச் சுட்டிக்காட்டி நெறிப்படுத்த முயன்றவன். செஞ்சோற்றுக்கடன் கழிப்பதையே வாழ்வின் நோக்கமாகக் கொண்டு உயிர்த்தியாகம் செய்தவன். "ஆனதோ வெஞ்சமர்? அலகில் கற்புடைய சானகி துயர் இனந்தவிர்ந்த தில்லையோ?" என மொழிந்த கும்பகர்ணன், வென்று இவண் வருவேன் என்று உரைக்கிலேன், விதி நின்றது; பிடர்பிடித்து உந்தநின்றது" எனக்கூறிப், போர் மேல் செல்கிறான். தன்னை

அழைத்த வீடணனிடம் "நீர்க்கோல வாழ்வை நச்சி வாழேன்" எனப்போர்க்கோலம் பூண்டு போர் செய்கிறான். இராமன் இவனை, "ஐயன் விற்றொழிற்கு ஆயிரம் இராமன் அமைவிலர்" என வியந்துரைப்பான். இராவணனிடமிருந்து 'தன் தம்பி வீடணனைக் காக்குமாறு வேண்டி' போர்க்களத்தில் நெடும்போர் செய்து உயிர் துறக்கிறான். கம்பன், கும்பகர்ணனை இராமகதையில் தன்னேரில்லாத தலைவனாகப் படைத்துக் காட்டுவான்.

12) சீராமகவி படைக்கும் கும்பகர்ணன் படுக்கையிலிருந்து எழும் பொழுதே நமக்குத் தீங்குசெய்தவர் எவர்? அசுரரோ? தேவரோ? என வினவுவான். போர்க்களம் செல்லும் அவன், "இராம இலக்குவரும் வானரரும் உனக்கு உணவாவர்; சீதைக்கு உன்மீது அன்புவரும்; விரைவில் உன்னைச் சரணடைவாள்" எனக்கூறுகிறான். பின்னர் நியாயமாக, "நல்லவர் தீது செய்யார்; இராமனோடு போர் வேண்டாம்; தீங்குவரும் முன்பே சீதையை இராமனிடம் கொடுத்துவிடுக" என அறிவுரை கூறுவான். மாருதி, இலக்குவன், இராமன் முதலியோர்களுடன் போர் செய்து புரந்திராத்திரத்தால் அழிந்துபடுகிறான். கம்பனும் சீராமனும் கும்பகர்ணன் பாத்திரப்படைப்பில் ஒரே நெறியையே பின்பற்றுகின்றனர்.

13) மிகப் பெரிய உடம்பை உடைய அதிகாயன் இராவணன் மைந்தருள் ஒருவன், இந்திரனையும் வெல்லக்கூடிய ஆற்றல் பெற்றவன். மறப் போர் செய்பவன், தன் தந்தையிடம் "உன் தம்பியைக் கொன்றவனது தம்பியைக் கொன்று துயர் துடைப்பேன்" எனப்படை மேல் செல்வான். இலக்குவனுடன் தனிப்போர் செய்து உயிர் துறக்கிறான். அதிகாயனது போர் நெறி, மறவிழுக்கா மாண்பு, வஞ்சினம், போர்நெறி - இவற்றால் கம்பன் இவனை ஒரு வெந்திறல் வீரனாகப் படைத்துக் காட்டுகிறான்..

14) சீராமன் அதிகாயனை இராவணன் மக்கள் திரிசிரசு, நராந்தகன், தேவாந்தகன் போன்ற ஒருவனாகவே படைத்துள்ளான்.. இலக்குவனுடன் அதிகாயன் செய்யும் போர் மறப்போராகவே இராமசரிதத்திலும் இடம் பெறுகிறது. இரு கவிஞர்களும் மூலநூலை பின்பற்றுகின்றனர்.

15) கம்பன் படைப்புகளில் இந்திரத்து ஒப்புயர்வற்றவன். வீரமும் சகோதரபாசமும் மிக்கவன். "வீரத்தே நின்ற வீரன்; வீரருள் வீரன்" எனக் கம்பன் இவனைப்புகழ்வான். தம்பி அதிகாயன் இறந்தபோது தந்தையிடம், "கொன்றார் அவரோ? கொலை சூழ்க என நீ கொடுத்தாய்" எனக்குமுறுவான். "எம்பியைக் கொன்றவனைக் கொல்லாது வரேன்" என வஞ்சினம் கூறிப் போர்க்களம் செல்லுகிறான். நாகபாசம், பிரமாத்திரப் போர்களில் மாயை பல செய்கிறான். போர்க்களத்தில் இராமனிடம் "அம்பினால் உடல் குறைந்த கும்பகர்ணன் அல்லன் நான்: இராவணன் மகன்" எனச் சூளுரைக்கிறான். நிகும்பலையில் இலக்குவனுக்கும் இந்திர சித்துக்கும் நடக்கும் போரின் சிறப்பைக் கம்பன் விரித்துரைப்பான்..

இலக்குவன் பிறைமுக அம்பால் இந்திரசித்து அழிகிறான். இராவணன் மண்டோதரி இவர்களின் அவலம் இந்திரசித்தின்பால் இரக்க உணர்வைப் பெறச் செய்கிறது. மறம் சுமந்த உடல், அறம் தெரிந்தும் மாய்ந்து போகிறது. கம்பன் போரியக்கத்திற்குரியவனாக இவனைப்படைத்த பான்மையைக் காணமுடிகிறது.

16) சீராமன் படைக்கும் இந்திரசித்து தம் சகோதரர்கள் நால்வர் இறந்துபடவே, "இராமலக்குவரை அம்பால் எய்து, வானர வீரர்களைக் கொன்றொழிப்பேன்" என வஞ்சினம் கூறிப்போர் செய்கிறான். மாயப்போர் உடற்றும் இவன் செயல்கண்டு இராமன், "இங்கினி நம்மால் ஒன்றும் செய்வதற்கில்லை" எனக்கூறித் தளர்கிறான், வீடணனை, "எதிரிகளுக்கு உளவுகூறும் நீ அழிவாய்" எனச் சபிக்கிறான். இலக்குவன் ஐந்தாத்திரத்தால் இந்திரசித்து அழிகிறான் அரக்க மாதரும் மண்டோதரியும் இவன் வீரவரலாற்றைக் கூறிப்புலம்புகின்றனர். இராவணன் அழுது அரற்றுவான். சீராமகவி கம்பனிலிருந்து சிறிது மாறுபட்டு இவ்வீரனைப் படைத்துக்காட்டுவான்.

கம்பன், சீராமகவி ஆகியோர் போர்நெறிச் செய்திகளாகப் பல தந்து அக்கால மக்கள் வாழ்வின் அற மற மனப்பாங்கினைச் சுட்டிக்காட்டி, வருங்கால மக்களுக்கு வழிகாட்டுகின்றனர். யுத்த காண்டப் போர் நிகழ்ச்சிகள் அக்காலப் போர் நெறிகளையும் படைக்கலங்களையும் பற்றிச் சில உண்மைகளைத் தருகின்றன. அவையாவன:

1) போர்கள் தனிப்போராகவோ கூட்டப் போராகவோ நிகழ்கின்றன. சுக்கிரீவன் இராவணன் மற்போரைத் தனிப் போராகக் கொள்ளலாம். போர் நிகழ்ச்சிகளுக்கிடையே நிகழும் அங்கதன் இந்திரசித்து, நீலன் நிகும்பன் போன்றோர் போரும் இதில் அடங்கும். இராவணன், அனுமன், இலக்குவன், இராமன் ஆகியோர் உடற்றும் போர் கூட்டுப் போராகும்.
2) போருக்கு முன் மந்திராலோசனை, தூது முதலியன நடைபெறுகின்றன. இராவணன் மந்திராலோசனையும், அங்கதன் தூதும் இதற்குச் சான்றுகளாம்.
3) ஒப்பார் இருவர் எதிர்த்துப் போர் செய்யும் நெறி பேணப்பட்டது. இராமசரிதத்தில் விருபாக்கன் இலக்குவனோடு போர் செய்வதற்கு மறுக்கிறான். போரில் தோற்ற இராவணனை, "இன்று போய் நாளை வா" என இராமன் கூறுகிறான். இச் செய்தியை இருவரும் தருகின்றனர்.
4) போரில் வானரப்படை கல், மலை, மரம் இவற்றைப் படைக்கலன்களாகக் கொள்ள, அசுரப்படை, வில் அம்பு, கத்தி வேல், மழு, சூலம் போன்றவற்றைப் படைக்கலங்களாகக் கொள்ளுகிறது.
5) கம்பரும் சீராமகவியும் போர்க்களக் காட்சிகளை அமைப்பதில் சில நெறிகளைக் கையாளுகின்றனர். படைவீரர்கள் ஒருவரோடு ஒருவர் கைகலந்து போரினைத் தொடங்குகின்றனர். அதனைத் தொடர்ந்து சிறு படைத்தலைவர்கள் முன்னணிக்கு வந்து போரிடுகின்றனர்.

இந்நெறியில் முதல்போர் கும்பகர்ணன் போர் அமைந்தமை எடுத்துக்காட்டுகளாகச் சுட்டப்பெற்றுள்ளன.

6) படைகளும் படைகளும் முதலில் கைகலந்து போரினைத் தொடங்கும். - படைகள் அழிந்ததும் இரு தரப்பிலுமுள்ள தலைவர்கள் ஒருவரையொருவர் எதிர்த்துப் போர் செய்கின்றனர். இந்நெறியில் அனுமனுடன் இந்திரசித்து செய்யும் போரும், வேலேற்ற பகுதியில், இலக்குவனும், இராமனும் இராவணனும் உடற்றும் போரும் எடுத்துக்காட்டுகளாகத் தரப்பட்டுள்ளன.

7) படைவீரர்கள் தங்களுக்குள் போரிட்டு மடிவதைத் தொடர்ந்து, படைத்தலைவரே எதிரிகளைத் தாக்கவருகின்றனர். ஒரு பக்கத் தலைவர் கொல்லப்படின், அவருக்குத் துணையாக வந்த சிறுதலைவர்கள் போரைத் தொடர்ந்து நடத்துகின்றனர். இலக்குவன் அதிகாயனோடு நடத்திய போரிலும், இந்திரசித்து, மேற்கொண்ட பிரமாத்திரப் போரிலும் இந்நெறி போற்றப்பட்டது.

8) ஒத்த நிலையில் உள்ள சிறுபடைத் தலைவர்கள் மட்டுமே, பெருந்தலைவர்களின் துணையின்றி, நடத்தும் போர் நெறிகளும் அமைந்துள்ளன. படைத்தலைவர் வதைப்படலம் இந்நெறியால் ஆனது.

9) போர்த்துவக்கத்திலேயே தலைவனும் தலைவனும் போரிடத் துவங்கும் நெறியும் காணப்படுகிறது, மகரக்கண்ணன் வதை, இந்திரசித்து வதை இந்நெறியால் ஆனதாகும்.

10) புறப்பொருள் மரபான பூச்சூடல், நூழிலாட்டு முதலியன கம்பராமாயணப்போர் நிகழ்ச்சிகளில் இடம் பெறுகின்றன. கும்பகர்ணன் தும்பை சூடிச் சென்றான். இராவணன் நெடுந்தும்பை சூடினான், மூலப்பலப்படையைக் கொன்று இராமன் நூழிலாட்டுகிறான். இவை இவற்றிற்கு எடுத்துக்காட்டுகளாகும்.

11) வஞ்சினமுரைத்தல், வீரவாதம் புரிதல் முதலியன போர் நெறிகள் போற்றப்படுகின்றன. இந்திரசித்து இலக்குவனைக் கொல்லாது மீளேன் என வஞ்சினமுரைக்கிறான். அதிகாயன் அனுமனிடம் வீரவாதம் புரிகின்றான்.

12) பகைவரேயாயினும் போர்த்திறனைப் புகழ்துரைக்கும் நெறியும் காணப்படுகிறது. இலக்குவன் வில்லாற்றலை இராவணன் புகழ்கிறான். இலக்குவனின் வில்லாற்றலை இந்திரசித்தும், அதுபோலவே இந்திரசித்தின் வில்லாற்றலை இலக்குவனும், வியந்து பாராட்டுகின்றனர்.

13) இராக்காலங்களில் போர் நடக்கிறது. நாகபாசம், பிரமாத்திரம், இந்திரசித்து வதை ஆகியன மூன்று இரவில் நடக்கின்றன.

14) மீவியல் புனைவாக அத்திரங்கள் இரு காவியங்களிலும் இடம் பெறுகின்றன. கம்பன், அத்திரங்களைப் படை என்றே கூறுகின்றான். சீராமகவி மூலநூலையொட்டி அத்திரங்கள் என்றே கூறுகின்றான்.

15) நிகும்பலையில் காற்றுப்படை, அயன்படை, வருணப்படை, சூரியன்படை, அயன்படை, மாயோன்படை என்பனவற்றை இந்திரசித்து முதலில் ஏவ, இலக்குவன் அவற்றை அதே படைகளால் தடுத்த செய்திகளைக் காணமுடிகிறது.

16) இராவணன் விடுத்த மோகப்படையை நாராயணன் படையாலும், தாமதப்படையைச் சிவன் படையாலும், ஆசுரப்படையை அக்கினிப் படையாலும், மயன்படையைக் காத்தருவப்படையாலும் மாயப் படையை ஞானப்படையாலும், நிருதிப்படையைக் காருடைப் படையாலும், இராமன் மாற்றி, இராவணன் அத்திரங்களைச் செயலிழக்கச் செய்யும் நிகழ்ச்சிகளை இராவணன் வதையால் அறிய முடிகிறது.

17) அத்திரங்களை விடும்பொழுது அவ்வவ் அத்திரத்திற்குரிய தெய்வங்களை வழிபட்டு மந்திரம் ஓதி வில்லில் தொடுப்பது மரபாகப் போற்றப்படுகிறது. பொதுவாக, அத்திரங்களில் பிரம்மாத்திரம் பேராற்றல் வாய்ந்ததாகக் கூறப்படுகிறது. சிவன் படையும் நாராயணன் படையும் அதனினும் வலிமை மிக்கனவாக உணர்த்தப்படும் இடங்களும் உண்டு.

18) படைத்தலைவர்களால், போரை நடத்தவியலாதபோது தெய்வத்தின் துணை கைகூடுகிறது. இலக்குவனை நாகபாசத்தால் பிணித்தபொழுது இராமன் மயங்கி விழவே, இறையருளால் கலுழன் வருகிறான். அனுமன் மருத்துமலை கொணர்ந்து பிரமன்படையை விடுக்கிறான். பரம்பொருள் உதவும்பான்மை இவற்றால் விளங்குகிறது.

19) போர்க்களத்தில் இசைக்கருவிகளும் இடம்பெறுகின்றன. போர்ப்படை செல்லச் சங்கமும் பறையும் முழங்கப்படுகின்றன. கும்பகர்ணனை எழுப்பப் பல்வேறு இசைக்கருவிகள் பயன்படுத்தப்பட்டன. போர் தொடங்கும் முன் சிலர் நாணைத்தெறித்துப் பேரொலி செய்கின்றனர். இலக்குவனும் இந்திரசித்தும் நாணொலி செய்து போரைத் துவக்குகின்றனர்.

ஏறத்தாழ ஒரேகாலக் கவிஞர்களான கம்பன், சீராமன் ஆகிய இருவரும் காப்பியக்கதையை ஓரளவு ஒட்டியும், கவிபுனைவதில் விருத்தப்பாக்களைக் கையாண்டும், பாத்திரப்படைப்பை வீரமும் பெருமிதமும் தோன்றவும் காட்டுகின்றனர். மேலும், தத்தம் தனித்திறன்களை வெளிப்படுத்தியும், போர்நெறிகளையும் படைக்கலங்களையும் மூல நூலை ஒட்டியே படைத்தும் அளிக்கும் திறன், இராமகதைக்கு அந்தந்த மொழிகளின் வழக்காற்றுக்கு ஏற்பச் சிறப்பைத் தருகின்றது. நாடு, மொழி, சூழலுக்கேற்ப இருவரும் தம்மை இனம் காட்டிக் கொள்ளுகிறார்கள். காப்பியங்களை ஒப்பிடுவோர்க்கு இவ்வுண்மை தெரியவரும்.

## அடுத்துவரும் ஆய்வாளர்களுக்கு

கம்பராமாயணம் இராமசரிதம் பற்றிய ஒப்பாய்வுச் சிந்தனையில் தோன்றிய ஆய்வுக்குரிய கருத்துக்கள் சிலவற்றைப் பரிந்துரைக்கலாம்.

'யாப்பமைதி' என்னும் பகுதியில் பொதுவாக இரு நூற்களின் பாவமைப்பை வகைதொகை செய்து அதற்கான சில காரணங்களும் காணவியன்றது. அதற்கும் மேலாக, இருநூற்களிலும் அமைந்த பாவண்ணங்களையும், மாறுபடும் திறன்களையும் பாத்திரப்படைப்பு, வருணனை போன்ற நீர்மையால் ஒப்புமைப் படுத்தி ஆய்வு செய்யலாம். மொழியாக்கத்திறனை வளர்க்க இம்மாதிரியான ஆய்வு பயனுறும்.

இரு நூற்களிலும் மொழி நிலையில் தற்சமம் தற்பவம் ஆட்சியையும் ஆக்கத்தையும் வகைதொகை செய்து ஆய்வு செய்யலாம். வடமொழி, தென்மொழி, ஆய்வு இலக்கண மொழிநெறியில் புலப்படுத்த இது துணை செய்யும்.

போர்த்தலைமைப் பாத்திரங்களுக்கு அப்பால், பிற துணைப்பாத்திரங்களைய்ும் இரு காப்பியங்களையும், ஒப்பிட்டு ஆய்வு செய்யலாம்.

மேலும், கீழ்வரும் தலைப்பை அடியொற்றி ஆய்வு செய்வதானால், இரு மொழி இலக்கிய நேர்மையையும் கம்பனின் தனிச்சிறப்பையும் பல கோணங்களில் அறிய வாய்ப்பாகும்.

1) படிமப்படைப்பு (Symbolism) கம்பனிலும் இராமசரிதத்திலும்
2) காப்பிய நோக்கில் கம்பனும் எழுத்தச்சனும்
3) கம்பராமாயணமும் இராமகதாப்பாட்டும் (மலையாளம்) பாட்டும் பொருளும்.
4) கம்பராமாயணமும் திக்கணஇராம சரிதமும் (தெலுங்கு)
5) கம்பராமாயணமும் துவிபதி இராமாயணமும் (தெலுங்கு)
6) கம்பராமாயணமும் பாக்ர இராமாயணமும் (தெலுங்கு)
7) கம்பராமாயணமும் தோராவோ இராமாயணமும் (கன்னடம்)

❖ ❖ ❖

இராவணன் தன்னை வீட்டி இராமனாய் வந்து தோன்றி
தராதலம் முழுதும் காத்துத் தம்பியும் தானுமாக
பராபர மாகிநின்ற பண்பினைப் பகரு வார்கள்
நராபதி யாகிப்பின்னும் நமனையும் வெல்லுவாரே!

(வீட்டி - கொன்று; நராபதி - அரசன்; நமன் - யமன்)

சுபம்

## (i) சுருக்கக் குறியீட்டு விளக்கம்

| | | |
|---|---|---|
| அகம் | - | அகநானூறு |
| இ.ப. | - | இரண்டாம் பதிப்பு |
| இரா.ச. | - | இராமசரிதம் |
| இளம். உரை | - | இளம்பூரணர் உரை |
| உள்ளூர் | - | உள்ளூர் பரமேசுவர ஐயர் |
| எ.டு. | - | எடுத்துக்காட்டு |
| எச். | - | எச்சவியல் |
| எழு | - | எழுத்ததிகாரம் |
| கம்.யு. | - | கம்பராமாயணம் யுத்தகாண்டம் |
| கலி. | - | கலித்தொகை |
| சேனா. உரை | - | சேனாவரையர் உரை |
| சிலம்பு | - | சிலப்பதிகாரம் |
| சொல் | - | சொல்லதிகாரம் |
| த.அ. | - | தண்டியலங்காரம் |
| தொல் | - | தொல்காப்பியம் |
| நன் | - | நன்னூல் |
| நூ. ஆ. | - | நூற்றாண்டு |
| ப | - | பக்கம் |
| பக். | - | பக்கங்கள் |
| பத. | - | பதவியல் |
| பா. | - | பாடல் |
| பி.கு. | - | பிற்குறிப்பு |
| பொரு. | - | பொருளதிகாரம் |
| ம.மே. | - | மணிமேகலை |
| மே. கோ. | - | மேற்கோள் |
| மு. ப. | - | முதற்பதிப்பு |
| வெ. ர் | - | வெளியீட்டாளர் |
| 1 : 2 | - | ஒன்றாம் படலம், இரண்டாம் பாடல் |
| 2 : 3 | - | இரண்டாம் படலம், மூன்றாம் பாடல் |
| VI | - | ஆறாம் காணடம், யுத்தகாண்டம் |
| p. | - | Page |
| pp. | - | Pages |
| % | - | Percentage |
| Vol. | - | Volume |

## (ii) துணை நூற்பட்டியல்


### 1) இலக்கணம்

1. தொல்காப்பியம், எழுத்து (இளம்பூரணர் உரை) கழக வெளியீடு, சென்னை, 1973.
2. தொல்காப்பியம், சொல் (சேனாவரையர் உரை) கழக வெளியீடு, சென்னை, 1973.
3. தொல்காப்பியம், பொருள் (இளம்பூரணர் உரை) கழக வெளியீடு, சென்னை, 1973
4. நன்னூல், பவானந்தம் பிள்ளை உரையுடன், மாக்மில்லன் அண்டு கம்பெனி, லிட்., சென்னை. 1922
5. தண்டியலங்காரம், கழக வெளியீடு, திருநெல்வேலி, 1956.
6. யாப்பருங்கலக்காரிகை, கழகவெளியீடு, திருநெல்வேலி, 1952.

### 2) நிகண்டு நூற்கள்

1. சேந்தன் திவாகரன், கழகவெளியீடு, திருநெல்வேலி, 1958
2. பிங்கல நிகண்டு, கழக வெளியீடு, சென்னை, 1968.
3. அபிதான சிந்தாமணி, ஆ. சிங்காரவேலு முதலியார், ஏசியன் ஏசியுகேஷனல் சர்வீஸ், புதுடெல்லி, 1982.
4. தமிழ்மொழியகராதி, கதிர்வேற்பிள்ளை, பி.வி. நவசிவாய முதலியார் வெளியீடு, சென்னை, 1935.

### 3) இலக்கியம்

1. அகநானூறு, ராஜம் எஸ், (வெ.ர்) மர்ரே அண்டு கம்பெனி, சென்னை, 1958.
2. கலித்தொகை, மேலது சென்னை 1, 1957.
3. நற்றினை, மேலது, சென்னை 1, 1957
4. பத்துப்பாட்டு மூலமும் உரையும், (பெரும்பாணாற்றுப்படை) கழக வெளியீடு, சென்னை 1, 1966.
5. பதிற்றுப்பத்து, ராஜம் எஸ் (வெ.ர்) மர்ரே அண்டு கம்பெனி, சென்னை 1, 1957.
6. புறநானூறு மூலமும் உரையும் சாமிநாத ஐயர், டாக்டர் உ.வே சாமிநாதையர் நூல்நிலையம், சென்னை 41, 1931.
7. சிலப்பதிகாரம், வெங்கடசாமிநாட்டார் உரை, கழக வெளியீடு, சென்னை 1, 1968
8. திருக்குறள், பரிமேலழகர் உரையுடன், சக்தி காரியாலயம், சென்னை 6, 1957.

### சமய இலக்கியங்கள்

1. தேவாரம் (மூவர்) திருப்பனந்தாள் ஸ்ரீகாசிமட' ஆதீனவெளியீடு, (மூன்று தொகுதிகள்) 1957

2. நாலாயிரத்திவ்யப்பிரபந்தம், (பெரிய திரு .. மாழி, பெருமாள்திருமொழி) திருமாலி ஷேஷாத்திரி ஐயங்.. தாகுப்பு, வை. மு. கோ. வெளியீடு, திருவல்லிக்கேணி, செ.. 5, 1943

## இதிகாசங்கள்

### தமிழ்

1. ஸ்ரீகம்பராமாயணம் (பாலகாண்டம், யுத்தகாண்டம் (2 தொகுதிகள்) வை. மு. கோபால கிருஷ்ணமாச்சாரியார் உரையுடன், வை.மு.கோ கம்பெனி சென்னை 5, 1970, 1971.
2. கம்பராமாயணம் (பாலகாண்டம், மர்ரே எஸ். இராஜம் பதிப்பு, சென்னை 1971)
3. ஸ்ரீமத் வால்மீகி இராமாயணம் (தமிழ்) யுத்தகாண்டம், சி. ஆர். ஸ்ரீநிவாசஐயங்கார் (உரை நடை) லிட்டில் பிளவர் கம்பெனி, 1963.
4. வால்மீகி ராமாயணம் (உரைநடை) கந்தசாமி ஐயர் கணேசன் எம். ஏ. கிகின்பாதம்ஸ், சென்னை 5,
5. இராமசரிதம் 4 தொகுதிகள் (மலையாளம்) இளங்குளம் குஞ்சன்பிள்ளை, குறிப்புரைகளுடன், நேஷனல் புக் ஸ்டோர், கோட்டயம் 1962
6. இராமசரிதம் (மலையாளம்) பேராசிரியர் பி.வி. கிருஷ்ணன் நாயர் விளக்கங்களுடன், கேரளசாகித்ய அக்காதமி திருச்சூர், 1979.

## பிறநூற்கள்

1. இராசமாணிக்கனார் எம். டாக்டர், கம்பர் யார்? சாந்தி நூலகம், சென்னை 1, 1958
2. இராசமாணிக்கனார், எம். டாக்டர், 'சோழர் வரலாறு,' தொகுதி-III எடியுகேஷனல் புக் சொஸைட்டி, சென்னை, 1947.
3. இராமகிருஷ்ணன், எஸ். டாக்டர், 'கம்பனும் மில்டனும்' ஒரு புதிய பார்வை, மீனாட்சி புத்தக நிலையம், மதுரை 1, 1983.
4. இராமலிங்கம் பிள்ளை, நாமக்கல், 'கம்பரும் வால்மீகியும்,' 1956
5. இளையபெருமாள், மா. டாக்டர். 'கேரள பாணினியம்' தமிழாக்கம், கேரளப் பல்கலைக்கழக வெளியீடு, 1967
6. இஸ்மாயில், மு.மு. நீதிபதி, 'கவிச்சக்கரவர்த்தியும் கவியரசும்,' 1976.
7. 'கலைக்களஞ்சியம்,' தொகுதி 6; தமிழ் வெளியீட்டுக்கழகம், சென்னை, 1956.
8. கைலாசபதி க. டாக்டர், 'ஒப்பியல் இலக்கியம்,' சென்னை, 1969.
9. சங்கரராசு நாயுடு, எஸ். 'கம்பரும் துளசியும்,' சென்னைப் பல்கலைக்கழகம், 1973.
10. சாமி சரவணப்பிள்ளை, 'வால்மீகியும் கம்பரும்,' விவேகபானு தொகுதி 2, விவேகபானு, சென்னை 17, 1903.

11. சாமிச்சிதம்பரனார், 'கம்பன் கண்ட தமிழகம்,' ஸ்டார் பிரசுரம், திருவல்லிக்கேணி, சென்னை 5.

12. சேதுப்பிள்ளை, ரா. பி. பேராசிரியர், 'தமிழர் படைத்திறம்,' பழனியப்பா பிரதர்ஸ், திருச்சி, 1966.

13. சுப்பிரமணிய பாரதியார், மகாகவி 'பாரதியார் கவிதைகள்,' சக்தி காரியாலயம், சென்னை, 1987.

14. தங்கக்கந்தசாமி, டாக்டர், மேஜர். 'போரியல் அன்றும் இன்றும்,' சென்னைப்பல்கலைக்கழகம், சென்னை, 1987.

15. தமிழண்ணல், 'ஒப்பிலக்கிய அறிமுகம்,' மீனாட்சிப் புத்தக நிலைம், மதுரை, 1974.

16. திரு முருகன், இரா. புலவர் 'கம்பன்பாடிய வண்ணங்கள்,' வானதி பதிப்பகம், தி. நகர், சென்னை 17, 1987.

17. தேசிகவிநாயகம் பிள்ளை, சி. கவிமணி, 'மலரும் மாலையும்,' பாரி நிலையம், சென்னை, 1954.

18. தேவநேயம், ஞா 'பழந்தமிழாட்சி' கழக வெளியீடு, சென்னை, 1961.

19. நயினார், மா. 'பேரும்பெருமையும்,' சோபிதம் பதிப்பக வெளியீடு, நாகர்கோவில், 1982.

20. பொன்னப்பன் பா. பேராசிரியர், 'தமிழ்ப்பாடஞ் சொல்லும்முறை,' பகுதி 1, தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம் வெளியீடு, சென்னை, 1983.

21. மாணிக்க நாயக்கர், பா.வே. கம்பன் புளுகும் வால்மீக வாய்மையும், நியூ செஞ்சுவரி புக்கவுஸ், வெண்ணை, 1955.

22. வையாபுரிப்பிள்ளை, எஸ். 'காவியகாலம்,' தமிழ்ப்புத்தகாலயம், சென்னை, 1985.

23. வையாபுரிப்பிள்ளை, 'தமிழ்ச்சுடர்மணிகள்,' பாரி நிலையம், சென்னை, இ.ப., 1952.

24. வையாபுரிப்பிள்ளை, 'தமிழர் பண்பாடு,' தமிழ்ப்புத்தகாலயம், மயிலாப்பூர், சென்னை 5, 1949.

### *மலையாள நூற்கள்*

1. உண்ணிக்கிடாவு 'மலையாள பாஷா படனங்கள்,' மலையாளம் பாஷா சரிதம், லேங்குவேஜ் இன்ஸ்டிடியூட், 1980.

2. கிருஷ்ணன் நாயர், பி.வி. பேராசிரியர், 'இராமசரிதம் ஒரு விமர்சனபடனம்,' நேஷனல் புக்ஸ்டால், கோட்டயம், 1973.

3. கோவிந்தப்பிள்ளை, 'மலையாளபாஷா சரிதம்,' நேஷனல் புக் ஸ்டோர், கோட்டயம், 1980.

4. பரமேசுவர ஐயர் எஸ். உள்ளூர், 'கேரள சாகித்ய சரிதம்,' தொகுதி 1, கேரளப் பல்கலைக்கழக வெளியீடு, திருவனந்தபுரம், 1974.

5. இளங்குளம் குஞ்சன்பிள்ளை, லீலாதிலகம் - குறிப்புகளுடன், நேஷனல் புக் ஸ்டோர், கோட்டயம், 1962.
6. ராஜராஜவர்மா, எ. ஆர். 'விருத்தமஞ்சரி,' நேஷனல் புக் ஸ்டோர், கோட்டயம், 1974.

***ஆங்கில நூற்கள்:***

1. Aiyer, V.V.S. 'Kambaramayana A Study,' Higgin Bothams, Madras-5, 1970
2. Brigadier Rajendra sing, 'Soldiers and soldiering in India,' army Edl. Stores, Ambanad, Canu:, 1956
3. Cowell, J.B. 'The Jaraka,' Mac-Million co., Madras, 1957.
4. Dakshanyani, K.V.Dr., 'The Metres in Kambaramayanam,' Annamalai University Publications, Annamalai Nagar, 1979.
5. Herman Gundert Dr. Rev. Ph.D. 'Malayalam English Dictionary' Navasakthi Publications, Trivandrum, 1982.
Ramakatha (A Study)
6. Kamil Bulcke, S.J.M.A.,D. Phil. / National Book Stall, Kottayam, 1962.
7. Kunhan Raja, C. 'History of Sanskrit Literature' Madras Sanskrit Academy, Madras, 1958

## சீருறக் கற்போம்

நம்தம் இராமன் அறநெறி கோத்துக்
கம்பன் பாமலர் கவினுறத் தந்தான்,
அந்தம் இல்லா அவர்தம் பொருளைச்
சிந்தை செய்து சீருறக் கற்போம்!

ஒப்பரும் இராமன் போர்நெறிப் படலம்
முப்பத் தொன்பதும் உணர்ந்து கற்போர்
கப்பிய அறிவால் தத்துவம் கண்டு
இப்புவி வாழ்ந்திட இடர் பெறுவர்.

போர்முகம் நில்லா இராவணன் தம்பி
ஆர்வுறச் சொன்ன அறிவுரை மறுக்க,
கார்முக வண்ணன் ஆற்றிய போரில்
பார்முகம் பதித்த அரக்கர் கோடி.

உள்ளம் உணர்ந்து ஆணவம் போக்கி
வள்ளல் இராமன் காட்டிய நெறியில்
மெள்ள நடந்து வள்ளுவன் உரையை
உள்ள படியே காத்து நிற்போம்

ச. மீனாட்சிநாதன்
நூலாசிரியர்

ஸ்ரீராம் ஜெயம்!

சுபம்



இந்நூலாசிரியர் முனைவர் ச. மீனாட்சிநாத பிள்ளை கன்னியாகுமரி மாவட்டம், செண்பகராமன் புதூரைச் சார்ந்தவர். மொழிவழி மாகாணப் புனரமைப்பினால், குடும்பத்துடன் திருவனந்த புரத்தில் நிரந்தரமாக வாழ்ந்து வருபவர். மனைவி எஸ். பகவதியம்மாள் ஓய்வுபெற்ற தமிழாசிரியை, மகன் சண்முகம்பிள்ளை, மகள் சாந்தி விஜயா இவர்கள் மருத்துவத் துறையில் பணிபுரிகின்றனர். ராஜீவ், சங்கீதா, சிவராம் பேரக்குழந்தைகள். கேரளக் கல்வித் துறையில் 40 ஆண்டுகள் பணிபுரிந்த இவர், தொடக்கப்பள்ளி ஆசிரியராகப் பணியைத் துவங்கி, தன்சுய முயற்சியால் வித்துவான் எம்.ஏ.,பி.எட்.; பி.எச்டி. பட்டம் பெற்றவர். உயர்நிலைப் பள்ளி தமிழாசிரியர். ஆசிரியப் பயிற்சிக் கல்லூரி விரிவுரையாளர், பேராசிரியர் எனப் பல நிலைகளில் பணியாற்றியவர். ஓய்வு பெற்றபின் கேரள மாநிலக் காலடி ஸ்ரீசங்கராச்சாரியாப் பல்கலைக் கழகத்தில் பேராசிரியராகவும், தமிழ்த் துறை தலைவராகவும் செயல்பட்டு நன் மாணாக்கர் பலரை உருவாக்கியவர். இவரது வழிகாட்டலில் ஐவர் முனைவர் பட்டம் பெற்றனர். அவர்களுள் நானும் ஒருவன். கல்வி ஏற்பாடு மற்றும் பாடநூல் குழு உறுப்பினராகப் பலகாலம் அமர்ந்து மும்முறைப் பாடநூல்களை உருவாக்கியவர். பிற பாடநூல்களையும் தமிழில் மொழிபெயர்த்தவர். தமிழிலக்கணம், சில கவிதைகள், அறநெறிக் கதைகள் போன்றவை பள்ளி மாணவர்களுக்காக எழுதப்பட்டவை. ஆன்ம நலம், லளிதசகஸ்ரநாமம் ஆகியவை மொழி பெயர்ப்பு நூற்கள். கம்பராமாயணமும் இராமசரிதமும் ஓர் ஒப்பாய்வு இவரது முனைவர் பட்ட ஆய்வின் சுருக்கமாகும். தமிழ் கற்பிக்கும் நெறிமுறைகள் – சில குறிப்புகள் ஆசிரியர்ப் பயிற்சி மாணவருக்கானவை. கேரளமும் தமிழும் (அச்சில்) இவற்றால் ஆசிரியரின் பட்டறிவு புலப்படும்.

திருவனந்தபுரம் சைவப்பிரகாசபை, தமிழ்ச்சங்கம், திராவிட மொழியல் பள்ளி ஆகியவற்றில் ஆயுள் கால உறுப்பினராகி தமிழ்ப்பணி செய்து வருபவர். கேரள அரசும், பல்கலைக் கழகங்களும் இவரைப் பயன்படுத்தி வருவது குறிப்பிடத்தக்கது.

கேரளக் காவல்துறைப் பொது இயக்குநராகப் பணிபுரிந்த என்னை ஓர் ஆய்வு மாணவராக ஏற்று உற்ற நண்பராக முனைவர் பட்டத்துக்கு வழி காட்டியாக விளங்கி, அண்மையில் முனைவர் பட்டத்துக்கு ஆளாக்கியப் பெருமகனாரின் வாழ்க்கைக் குறிப்பை எழுதுவதில் பெருமகிழ்ச்சி அடைகிறேன். இந்நூல் வழி ஆசிரியரை மேலும் அறிந்து கொள்ள இயலும். அவர் பணி சிறக்கவும், நலமான பெருவாழ்வு வாழவும் திருவேங்கடமுடையானை – திருவரங்கநாதனை வணங்கி வேண்டுகிறேன்.

முனைவர் வை. கிருஷ்ணமூர்த்தி IPS (Retd)
இராகவேந்திரபுரம், திருவரங்கம்.

30.3.2002